# 8

# நிதியியல்துறை செயலாற்றம் மற்றும் முறைமை உறுதித்தன்மை

## 8.1 பொதுநோக்கு

*பன்னாட்டு மற்றும் உள்ளூர் சந்தை நிலவரங்கள் சவால்மிக்கதாக காணப்பட்ட போதிலும் பெரியளவிலான பேரண்ட முன்மதியுடைய கரிசனைகள் எதனையும் தோற்றுவிக்காதவாறு ஆண்டுக் காலப்பகுதியில் நிதியியல் துறை மிதமான விரிவாக்கத்தைத் தொடர்ந்தது. எவ்வாறாயினும் 2017 உடன் ஒப்பிடுகையில் செயற்படாக் கடன்கள் மற்றும் முற்பணங்களின் அதிகரிப்புடன் 2018இல் வங்கித்துறை மற்றும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் துறையின் கொடுகடன் தரங்கள் குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்துள்ளது. சவாலான பன்னாட்டு மற்றும் உள்நாட்டுச் சந்தை நிலவரங்கள், 2017இன் சாதகமற்ற காலநிலை நிலைமைகள் மற்றும் 2018இல் பொருளாதார நடவடிக்கைகள் மெதுவடைந்தமை என்பன கொடுகடன் தரங்கள் வீழ்ச்சியடைவதற்கு பாரியளவில் பங்களித்துள்ளது. மேலும், மெதுவான கொடுகடன் வளர்ச்சி, குறைவடையும் இலாபத்தன்மை மற்றும் அதிகரிக்கும் செயற்படாக் கடன்கள் போன்றன காரணமாக 2018 காலப்பகுதியில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் துறையின் ஒட்டுமொத்த செயலாற்றம் குறிப்பிடத்தக்களவில் மெதுவடைந்தது. பன்னாட்டு மற்றும் உள்நாட்டுச் சந்தைகளில் ஏற்பட்ட சாதகமற்ற விருத்திகள் காப்புறுதி மற்றும் முதன்மை வணிகர்கள் போன்ற ஏனைய உபதுறைகளால் பதிவுசெய்த மிதமான வளர்ச்சிகளிலும் பங்குசந்தை செயற்பாடுகளின் வீழ்ச்சிகளிலும் பிரதிபலித்தது.*

*மூலதனம் மற்றும் திரவத்தன்மை மட்டங்களினை ஆகக் குறைந்த ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளுக்கு மேலதிமாகப் பேணிக்கொண்டுள்ள அதேவேளை, ஆண்டுக்காலப்பகுதியில் வங்கித்தொழில் துறை ஒரு மிதமான விரிவாக்கத்தை வெளிக்காட்டியது. வங்கித்தொழில் துறையின் சொத்துத் தளத்தின் வளர்ச்சியானது ஆண்டின் முதலரைக் காலப்பகுதியில் மிதமாகக் காணப்பட்ட போதிலும் ரூபாய் பெறுமதி கணிசமானளவு தேய்வடைந்ததன் காரணமாக வெளிநாட்டு நாணயத்தினால் குறித்துரைக்கப்பட்ட கடன்பட்டியல்களின் ரூபாய் பெறுமதி அதிகரித்ததன் காரணமாக இரண்டாம் அரையாண்டுக் காலப்பகுதியில் வேகமாக வளர்ச்சி கண்டது. கொடுகடன் வளர்ச்சியின் விரிவாக்கமானது பொருளாதாரத்தின் முக்கியமான துறைகளுக்கிடையிலான பரவலாக்கப்பட்ட கடன் வழங்கலாக பரந்த அடிப்படையில் காணப்பட்டது. வரிகளின் அதிகரிப்பு, செயற்பாட்டு செலவினங்களின் உயர்வு மற்றும் சொத்துக்களின் தரங்களிலான வீழ்ச்சி என்பன காரணமாக ஆண்டுக் காலப்பகுதியில் சொத்துக்கள் மீதான வருவாய் வீதம் மற்றும் உரிமை மூலதனம் மீதான வருவாய் வீதம் என்பனவற்றால் பிரதிபலிக்கப்பட்டவாறு வங்கித்தொழில் துறையின் இலாபத்தன்மை வீழ்ச்சியடைந்தது. ஆண்டுக்காலப்பகுதியில் மத்திய வங்கியானது இலங்கை கணக்கீட்டு நியமம் 9 இனுடைய பின்பற்றல் மற்றும் பாசல் III தேவைப்பாடுகளின் அமுலாக்கம் உள்ளடங்கலாக முன்மதியுடைய கொள்கை நடவடிக்கைகள் மற்றும் ஒழுங்குபடுத்தல்களின் நடைமுறைப்படுத்தல்களின் மூலம் வங்கித்தொழில் துறையின் உறுதித்தன்மையினை தொடர்ச்சியாக பலப்படுத்தி வந்தது.*

*உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் துறையானது மெதுவான கொடுகடன் வளர்ச்சி மற்றும் இலாபத்தன்மை வளர்ச்சி என்பவற்றுடன் சொத்து தரங்களின் வீழ்ச்சியுடன் கூடிய மிதமான வளர்ச்சியினைப் பதிவுசெய்தது. கொடுகடன் வளர்ச்சியின் மிதமான தன்மைக்கு கடன் மூலம் நிதியிடப்படும் தனியார் நுகர்வுடன் தொடர்புடைய உந்து ஊர்திகளின் இறக்குமதியைக் குறைப்பதற்காக எடுக்கப்பட்ட இறை மற்றும் பேரண்ட முன்மதியுடைய கொள்கை நடவடிக்கைகள் பிரதான காரணமாக அமைந்தது. 2017இல் நிலவிவந்த சாதகமற்ற காலநிலைகள் காரணமாக செயற்படாக் கடன்கள் அதிகரித்ததன் விளைவாக*

அட்டவணை 8.1
**நிதியியல் முறைமையின் மொத்தச் சொத்துக்கள்**

| நிறுவனங்கள் | 2017 (அ) | | 2018 (ஆ) | |
|---|---|---|---|---|
| | ரூ. பில் | பங்கு (%) | ரூ. பில் | பங்கு (%) |
| **வங்கித்தொழில்துறை** | 11,897.4 | 69.7 | 13,708.3 | 72.5 |
| மத்திய வங்கி | 1,604.8 | 9.4 | 1,914.3 | 10.1 |
| உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் | 8,926.4 | 52.3 | 10,372.4 | 54.9 |
| உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் | 1,366.2 | 8.0 | 1,421.6 | 7.5 |
| **வைப்புக்களை ஏற்கும் ஏனைய நிதியியல் நிறுவனங்கள்** | 1,370.4 | 8.1 | 1542.7 | 8.1 |
| உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் | 1,227.5 | 7.2 | 1,383.7 | 7.3 |
| கூட்டுறவு கிராமிய வங்கிகள் | 132.7 | 0.8 | 147.7 | 0.7 |
| சிக்கன மற்றும் கொடுகடன் கூட்டுறவுச் சங்கம் | 10.2 | 0.1 | 11.3 | 0.1 |
| **சிறப்பியல்பு வாய்ந்த நிதியியல் நிறுவனங்கள்** | 388.9 | 2.3 | 240.0 | 1.4 |
| சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் | 127.5 | 0.7 | 47.6 | 0.3 |
| முதனிலை வணிகர்கள் (இ) | 77.3 | 0.5 | 83.6 | 0.4 |
| பங்குத்தரகர்கள் | 9.1 | 0.1 | 8.7 | 0.01 |
| நம்பிக்கைக் கூறுகள் / நம்பிக்கை கூறு முகாமைத்துவக் கம்பனிகள் | 131.7 | 0.7 | 67.0 | 0.4 |
| சந்தை இடையீட்டாளர்கள் (ஈ) | 28.7 | 0.2 | 16.4 | 0.1 |
| துணிகர மூலதனக் கம்பனிகள் | 14.6 | 0.1 | 16.8 | 0.1 |
| **ஒப்பந்த அடிப்படையிலான சேமிப்பு நிறுவனங்கள்** | 3,402.9 | 19.9 | 3,414.3 | 18.0 |
| காப்புறுதிக் கம்பனிகள் | 564.9 | 3.3 | 606.6 | 3.2 |
| ஊழியர் சேமலாப நிதியம் | 2,066.3 | 12.1 | 2,289.4 | 12.1 |
| ஊழியர் நம்பிக்கை நிதியம் | 279.0 | 1.6 | 312.1 | 1.7 |
| அனுமதியளிக்கப்பட்ட ஓய்வூதியம் மற்றும் சேமலாப நிதியங்கள் | 437.3 | 2.6 | 149.1 | 0.7 |
| அரச பணி சேமலாப நிதியம் | 55.4 | 0.3 | 57.2 | 0.3 |
| **மொத்தம்** | 17,059.7 | 100.0 | 18,905.3 | 100.0 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) உரிமம் பெற்ற வர்த்தகக் வங்கிகளில் உள்ளடக்கப்பட்ட வங்கி முதனிலை வணிகர் அலகுகளின் சொத்துகள் நீங்கலாக
(ஈ) முதலீட்டு முகாமையாளர்கள், கடன் வசதியளிப்போர், ஒப்புறுதியாளர்கள் மற்றும் கொடுகடன் தரமிடல் முகவர்கள் உள்ளடங்கலாக

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி
கூட்டுறவு அபிவிருத்தி திணைக்கலளம்
தொழில் திணைக்களம்
ஓய்வுதியத் திணைக்களம்
ஊழியர் நம்பிக்கை நிதியசபை
இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு
சணச கூட்டமைப்பு
இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு
இலங்கை கூறு நம்பிக்கை சங்கம்
துணிகர மூலதன கம்பனிகள்

*உரிமம் பெற்ற நிதியியல் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் துறையின் சொத்துத் தரம் வீழ்ச்சியடைந்தது. கடன் ஒதுக்கங்கள் மற்றும் நிதியிடல் கிரயங்களின் அதிகரிப்பால் துறைக்கான இலாபத்தன்மையானது காலப்பகுதியில் மெதுவடைந்தது. நிதியியல் முறைமை உறுதித்தன்மையினை பாதுகாக்கும் நோக்குடன் மத்திய வங்கியானது உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளினுடைய மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினை வலுப்படுத்தவும் அவசியமானவிடத்து பொருத்தமான முன்மதியுடை நடவடிக்கைகளை தொடர்ச்சியாக எடுத்து வந்ததுடன் பல பலயீனமான நிதிக் கம்பனிகளின் பிரச்சனைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுத்தது. அனுமதியளிக்கப்பட்ட ஓய்வூதியம் மற்றும் சேமலாப நிதியங்கள் தவிர்ந்த ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் நம்பிக்கை நிதியத்தினால் பிரதானமாகப் பிரதிபலிக்கப்படும் ஒப்பந்த சேமிப்பு நிறுவனங்கள் ஆண்டுக்காலப்பகுதியில் ஒரு மிதமான விரிவாக்கத்தினைப் பதிவுசெய்தது. காப்புறுதித் துறை மற்றும் அரச பிணையங்களின் முதன்மை வணிகர்கள் துறையானது உறுதித்தன்மை தொடர்பான பிரதான கரிசனைகளை வெளிப்படுத்தாதவாறு ஆண்டுக்காலப்பகுதியில் மிதமானளவில் விரிவடைந்துள்ளது. எவ்வாறாயினும், ஆண்டுக்காலப்பகுதியில் நம்பிக்கைக்கூறுகள் துறை ஓர் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியைப் பதிவுசெய்துள்ளது.*

*உந்து ஊர்திகளின் இறக்குமதிகள் மீதான நாணயக் கடிதங்களுக்கு விதிக்கப்பட்ட அளவுத் தொகைத் தேவைப்பாடுகள் மற்றும் மத்திய வங்கியால் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி தொடர்புடைய கொடுக்கல்வாங்கல்கள் காரணமாக ஆண்டின் இரண்டாம் அரையாண்டுக் காலப்பகுதியில் உள்ளூர் பணச்சந்தை ஓர் கடுமையான திரவத்தன்மை பற்றாக்குறையினை எதிர்நோக்கியிருந்தது. திரவத்தன்மைப் பற்றாக்குறையினை குறைவடையச் செய்யும் நோக்குடன் 16 நவெம்பர் 2018 இலிருந்து சட்டப்படியான ஒதுக்கு வீதம் 7.50 சதவீதத்திலிருந்து 6.00 சதவீதமாக 1.5 சதவீதத்தால் குறைத்த போதும் 2018 இறுதிவரை உள்ளூர் பணச் சந்தையானது குறிப்பிடத்தக்களவு குறைந்த மட்டத்திலான திரவத்தன்மையினை தொடர்ந்தும் கொண்டிருந்தது. இதற்குப்பதில் கூறும்வகையில் மத்திய வங்கி 2019 1 மாச்சிலிருந்து சட்ட ஒதுக்கு வீதத்தினை மேலும் 1.00 சதவீதத்தால் குறைத்தது. அதேவேளை, சில பட்டியல்படுத்தப்பட்ட முதலீடுகளின் மீளப்பெறுகை, இறக்குமதியாளர்களிடமிருந்தான வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைக்கான அதிகரித்த கேள்வி மற்றும் ஐக்கிய அமெரிக்காவின் பெடரல் றிசேவ் வங்கியால் தொடர்ச்சியாக நான்கு தடவைகள் வட்டி வீதங்களினை அதிகரிக்கப்பட்டமை என்பன காரணமாக ஆண்டுக்காலப்பகுதியில் ஐ.அ.டொலருக்கெதிராக இலங்கை ரூபாவின் பெறுமதி குறிப்பிடத்தக்களவால் தேய்மானமடைந்தது. கடந்த ஆண்டின் இறுதிக்காலப்பகுதியில் உருவாக்கப்பட்ட அரசியல் உறுதியின்மையினூடாக உருவாக்கப்பட்ட எதிர்மறையான மனோபாவமும் அதனைத் தொடர்ந்து பன்னாட்டு நாணய நிதியத்திடமிருந்து விரிவாக்கப்பட்ட நிதிய வசதி மூலமாக ஆண்டுகாலப்பகுதியில் கிடைக்கும் என எதிர்பார்க்கப்பட்ட ஆறாவதாக வரவிருந்த தொகைகள் நிறுத்தி வைக்கப்பட்டமையாலும் இலங்கை ரூபா மீதான அழுத்தம் மேலும் அதிகரித்தது. ஆண்டுக் காலப் பகுதியில் வெளிநாட்டு செலாவணிச் சந்தையில் நிலவிய மேலதிக ஏற்ற இறக்கங்களை கட்டுப்படுத்தும் முகமாக இலங்கை மத்திய வங்கி தேறிய அடிப்படையில் ஐ.அ.டொலர் 1,120 மில்லியனை வழங்கித் தலையிட்டது. உள்ளூர் மற்றும் பன்னாட்டு பொருளாதாரச் சூழ்நிலையில் ஏற்பட்ட பாதகமான விருத்தி காரணமாக இன்னும் ஓர் ஆண்டுக்காலப்பகுதியில் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை நிலையமானது பாதகமான செயற்றிறனைப் பதிவுசெய்தது. பங்கு விலைகளிலான*

*குறிப்பிடத்தக்க வீழ்ச்சி, சந்தைப் புரள்வு, சந்தை மூலதனமாக்கம் மற்றும் விலை வருவாய் வீதங்கள் போன்றவற்றின் எதிர்மறையான விருத்திகள் ஆண்டுக் காலப்பகுதியில் ஆதாரப்படுத்தப்பட்டன. நாட்டினுடைய கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமையின் செயற்பாடானது கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவினுடைய பாதுகாப்புத் தொடர்பில் பெரியளவிலான கரிசனை எதுவுமின்றி ஆண்டுக் காலப்பகுதியில் நன்றாகப் பேணப்பட்டதுடன் பிரதான தடங்கல்கள் ஏதுமின்றி வீட்டுத் துறை மற்றும் தொழில் துறையின் கொடுப்பனவுத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டன.*

*முன்னோக்கிச் செல்கையில், பாசல் IIIஇன் கீழான உயர் மூலதன நியமங்களுக்கான நிலைமாறல் மற்றும் இலங்கை நிதியியல் அறிக்கையிடும் நியமம் 9இனை பின்பற்றல் என்பவற்றின் காரணமாக நடுத்தர காலத்தில் வங்கித்தொழில் துறையின் செயற்பாட்டு நிலைமைகள் சவால் மிக்கதாகக் காணப்படும். எவ்வாறாயினும், நீண்டகாலத்தில் பாசல் III மற்றும் இலங்கை நிதியியல் அறிக்கையிடும் நியமத்தின் செயற்படுத்தலானது வங்கித்தொழில் துறையின் உறுதித்தன்மையினையும் தாங்குதிறனையும் விருத்திசெய்யும் அத்துடன் உயர்த்தப்பட்ட மூலதனத் தேவைப்பாடுகள் காரணமாக உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் மூலதன மட்டங்கள் வலுவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. நிதியியல் நிறுவனங்களின் இடர் நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பினை தொடர்ச்சியாக பலப்படுத்துவதானது நிதியியல் துறையின் தாங்குதிறனை அதிகரிக்க முக்கியமானதாகும்.*

## 8.2 வங்கித்தொழில் துறையின் செயலாற்றம்

**வங்கித்தொழில் துறையானது இவ்வாண்டின் போது தொடர்ந்தும் விரிவடைந்த அதேவேளை மூலதனம் மற்றும் திரவத்தன்மை என்பவற்றை குறைந்தபட்சத் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளுக்கு மிகவும் மேலாக பேணுவதன் மூலம் உலகளவிலும் உள்நாட்டு ரீதியாகவும் காணப்பட்ட சவால்மிக்க சந்தை நிலைமைகளுக்கு மத்தியில் தாக்குப்பிடிக்கக்கூடிய தன்மையினை எடுத்துக் காட்டியது.** மேலும், 2018இன் இறுதியிலுள்ளவாறு, வங்கித்தொழில்துறை நிதியியல் துறையின் மொத்தச் சொத்துக்களில் 62.4 சதவீதத்திற்கு (மத்திய வங்கி நீங்கலாக) கணக்கீட்டு நிதியியல் துறையில் தொடர்ந்தும் ஆதிக்கம் செலுத்தியிருந்தது. ஆண்டின் முதலரைப்பகுதியின் போது மிதமடைந்திருந்த வங்கித்தொழில் துறையின் சொத்துக்களின் வளர்ச்சியானது இரண்டாம் அரையாண்டின் போது அதிகரித்ததுடன் இது பிரதானமாக கடன் வளர்ச்சியின் மூலம் தூண்டப்பட்டிருந்தது. வங்கித்தொழில் துறைக்கான நிதியிடல் மூலமாக வைப்புகள் தொடர்ந்தும் ஆதிக்கம் செலுத்தியிருந்த அதேவேளை, கடன் பெறுதலில் காணப்பட்ட வீழ்ச்சிப்போக்கு ஆண்டுக்காலப்பகுதியில் மாற்றமடைந்தது.

அட்டவணை 8.2
வங்கிகள், வங்கிக் கிளைகள் மற்றும் ஏனைய வங்கி பணிநிலையங்களின் பரம்பல்கள்

| வகை | 2017 முடிவில் (அ) | 2018 முடிவில் (ஆ) |
|---|---|---|
| உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் | | |
| I. உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் மொத்த எண்ணிக்கை | 25 | 26 |
| உள்நாட்டு வங்கிகள் | 13 | 13 |
| வெளிநாட்டு வங்கிகள் | 12 | 13 |
| II. உரிமம்பெற்ற வர்த்தக வங்கிப்பணி நிலையங்களின் மொத்த எண்ணிக்கை | 5,494 | 6,185 |
| கிளைகள் | 2,855 | 2,876 |
| உள்நாட்டு வங்கிகள் | 2,803 | 2,825 |
| வெளிநாட்டு வங்கிகள் | 52 | 51 |
| மாணவர் சேமிப்பு பிரிவுகள் | 2,639 | 3,309 |
| தன்னியக்க கூற்றுப் பொறிகள் | 4,086 | 4,655 |
| உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் | | |
| I. உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் மொத்த எண்ணிக்கை | 7 | 7 |
| தேசிய மட்ட சேமிப்பு வங்கிகள் | 1 | 1 |
| வீடமைப்பு நிதி நிறுவனங்கள் | 2 | 2 |
| ஏனைய உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் | 4 | 4 |
| II. உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிப்பணி நிலையங்களின் மொத்த எண்ணிக்கை | 719 | 696 |
| கிளைகள் | 691 | 696 |
| தேசிய மட்ட சேமிப்பு வங்கி | 259 | 261 |
| வீடமைப்பு நிதி நிறுவனங்கள் | 64 | 64 |
| ஏனைய உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் | 368 | 371 |
| மாணவர் சேமிப்பு பிரிவுகள் | 28 | - |
| தன்னியக்க கூற்றுப் பொறிகள் | 333 | 376 |
| வங்கிக் கிளைகளினதும் ஏனைய பணி நிலையங்களினதும் மொத்த எண்ணிக்கை | 6,213 | 6,881 |
| தன்னியக்க கூற்றுப் பொறிகளின் மொத்த எண்ணிக்கை | 4,419 | 5,031 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது


*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

சொத்துத் தரத்தின் சீர்குலைவு, தொழிற்பாட்டுச் செலவுகளின் அதிகரிப்பு மற்றும் வரிகளின் அதிகரிப்பு என்பன காரணமாக வங்கித்தொழில் துறையின் இலாபத்தன்மை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், வீழ்ச்சியடைந்தது.

### வியாபார வளர்ச்சி

**(அ) விரிவாக்கம்: 2018இன் இறுதியில், வங்கித்தொழில் துறையானது, 26 உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளையும் 7 உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளையும் சேர்த்து 33 வங்கிகளை உள்ளடக்கியிருந்தது.** 26 உரிமம்பெற்ற வங்கிகளில் 13 வெளிநாட்டு வங்கிக் கிளைகளாகக் காணப்பட்டது. வங்கித்தொழில் துறையானது பொருளாதார வளர்ச்சிக்குத் தொடர்ந்தும் ஆதரவளித்ததுடன் மேம்பட்ட வங்கித்தொழில் பணிகளினால் ஏற்பட்ட அபிவிருத்தியும் வங்கித்தொழில் வலையமைப்பினால் ஏற்பட்ட விரிவும் நாட்டில் நிதியியல் உட்சேர்த்தலினை ஊக்கமளித்தது. 2018இல் நிதியியல் உட்சேர்த்தலினை வசதிப்படுத்துவதற்காக பல வங்கிகள் தொழில்நுட்பத்தினை அடிப்படையாகக் கொண்ட பொருட்கள்/ பணிகளை அறிமுகப்படுத்தின. மேலும், 2018இல் இறுதியிலுள்ளவாறு 34 புதிய வங்கிக் கிளைகளும் 801 புதிய தன்னியக்கக்கூற்றுப் பொறிகளும் நிறுவப்பட்டமையின் மூலம்

வரைபடம் 8.1 நிதியியல்துறை சொத்துக்களின் உள்ளடக்கம் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட குறிகாட்டிகள்




8

வங்கித்தொழில் நிலையங்களின் எண்ணிக்கை 6,881 இற்கும் தன்னியக்கக் கூற்றுப்பொறிகளின் எண்ணிக்கை 5,031 ஆகவும் உயர்வடைந்தன.

**(ஆ) சொத்துக்கள்: ஆண்டுக் காலப்பகுதியில் வங்கித்தொழில் துறையின் சொத்துத் தளம் ரூ.1.5 றில்லியனால் விரிவடைந்து 2018 இறுதியில் ரூ.11 றில்லியனை விஞ்சியது.** சொத்துத் தளத்தின் வளர்ச்சி 2017 இறுதியின் 13.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2018 இறுதியில் 14.6 சதவீத வளர்ச்சினைப் பதிவுசெய்தது. 2018இன் இரண்டாம் அரைப்பகுதியின்போது பதிவாகிய சொத்துக்களின் குறிப்பிடத்தக்க வளர்ச்சிக்கு 2018இன் போது ஐக்கிய அமெரிக்க டொலருக்கெதிராக இலங்கை ரூபா 16.4 சதவீதத்தினால் தேய்வடைந்ததன் தாக்கம் பிரதானமானதாகவிருந்ததுடன் இது வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட சொத்துக்கள் மற்றும் பெறுப்புக்களின் வளர்ச்சியில் அதிகரிப்பொன்றினைத் தோற்றுவித்தது. 2018இன் இரண்டாம் அரைப்பகுதியில் கடன் மற்றும் முற்பணங்கள் ரூ.1.3 றில்லியனால் அதிகரித்தன. 2018இன் போது சொத்துக்களின் அதிகரிப்பின் 84.1 சதவீதத்திற்கு கடன்களின் அதிகரிப்பு கணக்கிட்டிருந்ததுடன் 2017இன் 16.1 சதவீதத்திலிருந்து 2018இல் 19.6 சதவீதமாக கடன்களின் வளர்ச்சி அதிகரித்தது. வங்கித்தொழில் துறையின் கடன் சொத்துப்பட்டியலில் ஏறத்தாழ 72 சதவீத அதிகரிப்பிற்கு ரூபாக் கடன்களின் அதிகரிப்புக் காரணமாகயிருந்தது. கடன் வழங்கலில் அதிகரிப்பு நாட்டின் பிரதான துறைகள் முழுவதும் பெருமளவில் பரவலாக்கப்பட்டிருந்தது. உற்பத்திகளின் நியதிகளில், கடன் அட்டைகள் (24.3 சதவீதம்), மேலதிகப் பற்றுக்கள் (23.7 சதவீதம்) மற்றும் தவணைக் கடன்கள் (19.9 சதவீதம்) என முக்கிய உற்பத்திகள் காணப்பட்டதுடன் இவை 2018இன் போது உயர் வளர்ச்சி வீதங்களைப் பதிவுசெய்தன. எவ்வாறாயினும், மொத்தக் கடன்களில் கடன் அட்டைகளின் பங்கானது 1.2 சதவீதத்தில் மிகக்குறைவாகவிருந்தது. அதேவேளை, முதலீடுகளில் வளர்ச்சியானது 2017 இறுதியின் 12.5 சதவீதத்திலிருந்து 2018 இறுதியில் 4.6 சதவீதமாக ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் கணிசமாக வீழ்ச்சியடைந்தது. வியாபாரப் பட்டியலின் முதலீடுகள், திறைசேரி உண்டியல்கள் மற்றும் இலங்கை அபிவிருத்தி முறிகளில் உள்ள முதலீடுகள் முறையே ரூ.47.9 பில்லியன் அத்துடன் ரூ.2.3 பில்லியனில் குறைவுடன் 2018இன் போது 4.0 சதவீதத்தினால் சுருங்கிய அதேவேளை, திறைசேரி முறிகள் ரூ.18.9 பில்லியனால் அதிகரித்தது. எவ்வாறாயினும், 2018இன் போது முதிர்வுவரை வைக்கப்பட்ட பட்டியல் திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகள் மற்றும் இலங்கை அபிவிருத்தி முறிகள் என்பவற்றில் முறையே ரூ.89.4 பில்லியன், ரூ.35.2 பில்லியன் மற்றும் ரூ.26.3 பில்லியன் இனால் அதிகரித்து 2018இன் போது 7.5 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.

அட்டவணை 8.3
வங்கித் தொழில் துறையின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் உள்ளடக்கம்

| விடயம் | 2017 (அ) | | 2018 (ஆ) | | மாற்றம் (%) | |
|---|---|---|---|---|---|---|
| | ரூ.பில் | பங்கு (%) | ரூ.பில் | பங்கு (%) | 2017 (அ) | 2018 (ஆ) |
| சொத்துக்கள் | | | | | | |
| கடன்கள் மற்றும் முற்பணங்கள் | 6,430.9 | 62.5 | 7,693.4 | 65.2 | 16.1 | 19.6 |
| முதலீடுகள் | 2,554.4 | 24.8 | 2,671.6 | 22.7 | 12.5 | 4.6 |
| ஏனையவை (இ) | 1,307.1 | 12.7 | 1,429.0 | 12.1 | 5.8 | 9.3 |
| பொறுப்புக்கள் | | | | | | |
| வைப்புக்கள் | 7,399.0 | 71.9 | 8,492.4 | 72.0 | 17.5 | 14.8 |
| கடன் பெறுகைகள் | 1,607.1 | 15.6 | 1,763.4 | 15.0 | (5.3) | 9.7 |
| முதலீட்டு நிதிகள் | 866.7 | 8.4 | 1,030.4 | 8.7 | 22.5 | 18.9 |
| ஏனையவை | 419.6 | 4.1 | 507.8 | 4.3 | 20.8 | 21.0 |
| **மொத்த சொத்துக்கள்/ பொறுப்புக்கள்** | **10,292.4** | **100.0** | **11,794.0** | **100.0** | **13.8** | **14.6** |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) காசு மற்றும் வங்கி மீதிகள், வைப்புகள், நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கைகள் மற்றும் நிலையான சொத்துக்கள் உள்ளடங்கலாக

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

**(இ) பொறுப்புக்கள்: 2018 இறுதியில் உள்ளவாறு வங்கித்தொழில் துறையின் மொத்தப் பொறுப்புகளில் 72 சதவீதத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற முக்கிய நிதியியல் மூலமாக வைப்புகள் தொடர்ந்தும் விளங்கிய அதேவேளை கடன்பாடுகள் 15 சதவீதத்திற்கு கணக்கிட்டிருந்தது.** வங்கித்தொழில் துறையின் வைப்புத்தளம் ஆண்டுகாலப்பகுதியில் 1.1 றில்லியனால் அதிகரித்து 2018இன் இறுதியில் ரூ.8.5 றில்லியனை அடைந்து. வைப்புக்களின் ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சி 2017 இறுதியிலுள்ளவாறான 17.5 சதவீதத்திலிருந்து 2018 இறுதியில் 14.8 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. ஆண்டுகாலப்பகுதியில் தவணை வைப்புகளின் வளர்ச்சி வைப்புக்களின் அதிகரிப்பின் 78.7 சதவீதத்திற்கு கணக்கிட்ட அதேவேளை, 2018இன் இறுதியில் சேமிப்பு மற்றும் நடைமுறை வைப்புகள் முறையே 12.7 சதவீதத்திற்கும் 4.4 சதவீதத்திற்கும் கணக்கிட்டிருந்தன. இதன் விளைவாக, மொத்த வைப்புகளில் தவணை வைப்புகளின் பங்கு 2017இன் இறுதியிலுள்ளவாறான 63.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2018இன் இறுதியிலுள்ளவாறு 65.5 சதவீதமாக அதிகரித்திருந்த அதேவேளை, நடைமுறை மற்றும் சேமிப்பு கணக்கு விகிதம் தொடர்புடைய காலப்பகுதியின் போது 34.2 சதவீதத்திலிருந்து 32 சதவீதமாகக் குறைவடைந்திருந்தது. வங்கித்தொழில் துறையின் மொத்தக் கடன்படுதல்கள் 2017இன்

அட்டவணை 8.4
வங்கித்தொழில் துறையின் வைப்புக்களின் உள்ளடக்கம்

| விடயம் | 2017 (அ) | | 2018 (ஆ) | | மாற்றம் (%) | |
|---|---|---|---|---|---|---|
| | ரூ.பில் | பங்கு (%) | ரூ.பில் | பங்கு (%) | 2017 (அ) | 2018 (ஆ) |
| கேள்வி வைப்புக்கள் | 496.0 | 6.7 | 544.0 | 6.4 | 3.5 | 9.7 |
| சேமிப்பு வைப்புக்கள் | 2,032.3 | 27.5 | 2,170.8 | 25.6 | 9.4 | 6.8 |
| தவணை வைப்புக்கள் | 4,704.3 | 63.6 | 5,564.9 | 65.5 | 23.4 | 18.3 |
| ஏனைய வைப்புக்கள் | 166.3 | 2.2 | 212.7 | 2.5 | 14.1 | 27.9 |
| **மொத்த வைப்புக்கள்** | **7,399.0** | **100.0** | **8,492.4** | **100.0** | **17.5** | **14.8** |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி


ரூ.89.3 பில்லியன் வீழ்ச்சியுடன் (எதிர்மறை வளர்ச்சி 5.3 சதவீதம்) ஒப்பிடுகையில் 2018இல் ரூ.156.3 பில்லியனால் (9.7 சதவீதம்) குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது. இவ்வதிகரிப்புக்கு பிரதானமாக 2018இல் 23.7 சதவீதத்தினால் (ரூ.142.3 பில்லியன்) வளர்ச்சியடைந்த ரூபாக் கடன்படல்கள் காரணமாக இருந்தது. ரூபாக் கடன்களின் அதிகரிப்பானது வங்கித்தொழில் துறையின் கடன்படல்களின் மொத்த அதிகரிப்பின் 91 சதவீதத்திற்கு கணக்கிட்டிருந்தது. அதேவேளை, ஆண்டுகாலப்பகுதியில் இலங்கை ரூபா வீழ்ச்சியடைந்தமை காரணமாக வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகள் இலங்கை ரூபாக்களின் பிரகாரம் 1.4 சதவீதத்தினால் (ரூ.14.0 பில்லியன்) சிறிதளவு வளர்ச்சியடைந்தது.

**(ஈ) ஐந்தொகைக்கு வெளியேயான வெளிப்படுத்துகை: ஐந்தொகைக்கு வெளியேயான பொறுப்புக்கள், 2017இன் போதான 5.3 சதவீத (ரூ.194.6 பில்லியன்) வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2018இன் போது 14.7 சதவீதத்தினால் (ரூ.569.4 பில்லியன்) குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியடைந்தது.** எடுப்பனவு செய்யப்படாத கொடுகடன் தொடர்கள் 2018இன் இறுதியிலுள்ளவாறு 27.8 சதவீத பங்கொன்றுடன் ஐந்தொகைக்கு வெளியேயான பொறுப்புக்களில் பாரிய பங்கிற்கு கணக்கிட்டிருந்தது. வெளிநாட்டு நாணய பொறுப்புக்கள் 2018 இறுதியிலுள்ளவாறு ஐந்தொகைக்கு வெளியேயான பொறுப்புக்களின் 32.5 சதவீதத்திற்கு கணக்கிட்டிருந்ததுடன் தீர்ப்பனவு செய்யப்படாத வெளிநாட்டு நாணயக் கொள்வனவுகளும் (16.8 சதவீதம்) வெளிநாட்டு நாணய விற்பனைகளும் (15.7 சதவீதம்) பிரதானதான காரணமாக அமைந்தது. 2018இன் போது வெளிநாட்டு நாணயப் பொறுப்புக்கள் (39.2 சதவீதம்), எடுப்பனவு செய்யப்படாத கடன் தொடர்கள் (22.1 சதவீதம்), ஏற்றுக்கொள்ளல்கள் (19.3 சதவீதம்) மற்றும் உத்தரவாதங்களும் முறிகளும் (16.3 சதவீதம்) என்பன மொத்த ஐந்தொகைக்கு வெளியேயான பொறுப்புக்களின் அதிகரிப்பிற்கு பங்களித்த அதேவேளை பெறுதிகள் 2.3 சதவீதம் என்கின்ற (ரூ.13.1 பில்லியன்) சிறியளவு குறைவொன்றினைப் பதிவுசெய்த ஐந்தொகைக்கு வெளியேயான ஒரேயொரு விடயமாகவிருந்தது.

## வங்கித்தொழில் துறையிலுள்ள இடர்நேர்வுகள்


**(அ) கொடுகடன் இடர்நேர்வு: கடன் பட்டியல்களின் விரிவாக்கம் காரணமாக மூலதனப் போதுமாந்தன்மை கணிப்பீட்டின் கொடுகடன் இடர்நேர்வுக்கான இடர் நிறையேற்றப்பட்ட சொத்துக்கள், இவ்வாண்டின்போது அதிகரித்தது.** 2017இன் போதான 18.3 பில்லியன் அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் ரூ.102.5 பில்லியனினால் செயலாற்றமற்ற கடன்களின் அதிகரிப்புடன் 2018இன் போது வங்கித்தொழில் துறையின் கொடுகடன் தரமானது குறிப்பிடத்தக்களவு சீர்குலைந்தது. 2018இல் நிலவிய சவால்மிக்க பன்னாட்டு மற்றும் உள்நாட்டுச் சந்தை நிலவரங்கள் கொடுகடன் தரத்தின் வீழ்ச்சிக்கு பங்களித்தது. இதன் விளைவாக மொத்த தேறிய செயலாற்றமற்ற கடன் விகிதம் 2017இன் இறுதியில் காணப்பட்ட வரலாற்று ரீதியான 2.5 சதவீதம் என்கின்ற குறைந்த எண்ணிக்கையிலிருந்து 2018 இறுதியில் 3.4 சதவீதமாக அதிகரித்தது. 2018இன் போது மொத்த ஒதுக்கீடுகள் 38.9 பில்லியனால் அதிகரித்ததுடன் இவ்வதிகரிப்பில் குறிப்பான ஒதுக்கீடுகளின் அதிகரிப்பு 86.8 சதவீதத்திற்கு கணக்கிட்டிருந்தது. எனினும், செயலாற்றமற்ற கடன்களில் உயர்வான அதிகரிப்பானது குறித்த மற்றும் மொத்த ஏற்பாடுகளின் விகிதங்களில் 2017 இறுதியிலுள்ளவாறு 49.6 சதவீதம் மற்றும் 69.9 சதவீதத்திலிருந்து 2018 இறுதியில் 43.1 சதவீதமாகவும் 57.4 சதவீதமாகவும் வீழ்ச்சியொன்றினைத் தோற்றுவித்திருந்தது. 2018இன் போது செயற்பாடற்ற கடன் விகிதங்களின் அதிகரிப்பிற்கு மத்தியில் 2013இன் போது அவதானிக்கப்பட்ட 5.0 சதவீதத்திற்கு மேற்பட்ட உயர்வான மட்டத்துடன் ஒப்பிடுகையில் இது இன்னும் முகாமை செய்யத்தக்க மட்டத்திலுள்ளதுடன் வங்கித்தொழில் துறையானது ஏதேனும் பாதகமான தாக்கங்களைச் சமாளிப்பதற்கு போதிய ஒதுக்கீடுகளுடனும் மூலதன தாங்கிருப்புகளுடனும் தொழிற்பட்டது.

வரைபடம் 8.2
வங்கித்தொழில் துறையின் ஐந்தொகைக்கு வெளியேயான வெளிப்படுத்துகைகள் - (2018 இறுதியில் உள்ளவாறு)




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 8.3
வங்கித்தொழில் துறையின் செயற்படாக்கடன்கள்




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

8


அட்டவணை 8.5
வங்கித்தொழில் துறையின் கடன்கள் மற்றும் முற்பணங்களின் துறைசார் உள்ளடக்கம் (2018 இறுதியில் உள்ளவாறு)

| துறைகள் | தொகை ரூ.பில் (அ) | மொத்த கடன்களில் பங்கு (%) | செயற்படாக் கடன்களின் வீதம் (%) |
|---|---|---|---|
| நுகர்வு | 1,392.7 | 18.1 | 3.0 |
| கட்டவாக்கம் | 1,214.3 | 15.8 | 3.8 |
| மொத்த மற்றும் சில்லறை வாணிபம் | 1,154.8 | 15.0 | 4.7 |
| தயாரிப்பு | 810.5 | 10.5 | 5.2 |
| உட்கட்டமைப்பு அபிவிருத்திகள் | 627.7 | 8.2 | 1.5 |
| வேளாண்மை, காடாக்கம் மற்றும் மீன்பிடி | 625.6 | 8.1 | 5.3 |
| நிதியியல் சேவைகள் | 423.9 | 5.5 | 0.6 |
| சுகாதார நலன், சமூக சேவைகள் மற்றும் துணைச் சேவைகள் | 338.0 | 4.4 | 0.8 |
| சுற்றுலா | 302.0 | 3.9 | 4.7 |
| வெளிநாட்டு நிறுவனங்களுக்கான கடன் வழங்கல் | 280.3 | 3.6 | 2.0 |
| போக்குவரத்து மற்றும் களஞ்சியப்படுத்தல் | 197.4 | 2.6 | 2.1 |
| நிதி அமைச்சுக்கான கடன் வழங்கள் | 138.4 | 1.8 | - |
| தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொடர்பாடல் சேவைகள் | 64.1 | 0.8 | 4.6 |
| கல்வி | 58.0 | 0.8 | 1.5 |
| தொழில்சார், விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப செற்பாடுகள் | 56.5 | 0.7 | 2.3 |
| கலைகள், பொழுதுபோக்கு மற்றும் மனமகிழ்வு | 9.0 | 0.1 | 11.2 |
| **மொத்தக் கடன்கள்** | **7,693.4** | **100.0** | **3.4** |

(அ) தற்காலிகமானது *மூலம்:* இலங்கை மத்திய வங்கி

**கொடுகடனின் 75.7 சதவீதம் பிரதானமாக இவ் ஆறு பொருளாதாரத் துறைகளிலும் செறிவாக்கப்பட்டிருந்த போதிலும் தனிப்பட்ட வங்கிகள் தமது தொழிலை பொருளாரத்தின் பல்வேறு துறைகள் மத்தியில் பரவலாக்கியுள்ளன.** கொடுகடன் பட்டியலானது நுகர்வு (18.1 சதவீதம்), நிர்மாணம் (15.8 சதவீதம்), மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம் (15.0 சதவீதம்), தயாரிப்பு (10.5 சதவீதம்), உட்கட்டமைப்பு அபிவிருத்தி (8.2 சதவீதம்), வேளாண்மை, வனப்பரிபாலனம் மற்றும் கடற்றொழில் (8.1 சதவீதம்) போன்றவற்றை உள்ளடக்கப்பட்டிருந்தது.

வரைபடம் 8.4
வங்கித்தொழில் துறையின் செயற்படாக் கடன்களுக்கான ஏற்பாடுகள்




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

**(ஆ) சந்தை இடர்நேர்வு**

**வட்டி வீதங்கள்: வட்டி வீத உணர்திறன் விகிதம் (12 மாதங்களைவிட குறைவான முதிர்வுகளுடன் கூடிய வட்டியுடைய பொறுப்புகளின் பங்கொன்றாக வட்டியுடைய சொத்துகள்) 2017இன் இறுதியில் 76.5 சதவீதத்திலிருந்து 2018 இறுதியிலுள்ளவாறு 77.5 சதவீதமாக சிறிதளவு அதிகரித்தது.** 2018இன் போது பதிவாகிய திறைசேரி முறிகள் மீதான மூலதன வருமானம் ரூ.1.9 பில்லியனாகவிருந்ததுடன் 2017இன் போது அறிக்கையிடப்பட்ட ரூ.4.8 பில்லியன் தொகையினைவிடக் குறைவாகவிருந்தது. இதற்கு 2018இல் நிலவிய உயர்வான வட்டி வீதம் காரணமாகவிருந்தது.

**பங்கு விலைகள்: பங்குச் சந்தை மீது குறைவான வெளிப்பாடுகள் காரணமாக வங்கித்தொழில் துறையின் பங்கு மூலதன இடர்நேர்வானது ஆகக் குறைந்ததாகவிருந்தது.** வங்கிகளின் வர்த்தகச் சொத்துப்பட்டியல் 2018இன் இறுதியலுள்ளவாறு பங்குச் சந்தைக்கான வெளிப்பாடு ரூ.16.8 பில்லியனாகக் காணப்பட்டதுடன் இது வங்கித்தொழில் துறையின் வர்த்தகத்திற்காக வைக்கப்பட்ட மொத்தச் சொத்துக்கள் மற்றும் முதலீடுகளில் முறையே 0.1 சதவீதம் மற்றும் 2.7 சதவீதமாக மாத்திரம் இருந்தது.

**செலாவணி வீதங்கள்: வங்கித்தொழில் துறையின் தேறிய வெளிநாட்டு நாணய இடர்நேர்வு 2017இன் இறுதியுடன் ஒப்பிடுகையில் 2018இன் இறுதியளவில் வெளிநாட்டு நாணயத்தில் மாற்றப்பட்ட சொத்துகளுடன் ஒப்பிடுகையில் வெளிநாட்டு நாணயத்தில் மாற்றப்பட்ட பொறுப்புகளில் உயர்வான அதிகரிப்புடன் குறைவடைந்திருந்தது.** 2018இன் போது வெளிநாட்டு நாணயத்தில் மாற்றப்பட்ட ஐந்தொகை மீதான சொத்துக்கள் பிரதானமாக வங்கிகளினுடனான இருப்புகள் மற்றும் முதலீடுகளில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக அதிகரித்த அதேவேளை ஐந்தொகைக்கு வெளியேயான வெளிநாட்டு நாணயப் பொறுப்புகள் பிரதானமாக முன்னோக்கிய விற்பனைகள் மற்றும் ஏனைய ஐந்தொகைக்கு வெளியேயான பொறுப்புகளின் காரணமாக அதிகரித்தன. வங்கிகளின் ஐந்தொகை மீதான வெளிநாட்டு நாணயச் சொத்துக்களின் சதவீதமொன்றாக தேறிய வெளிநாட்டு நாணய இடர்நேர்வு 2018 இறுதியில் 0.8 சதவீதமாகக் காணப்பட்டது. வங்கித்தொழில் துறையானது 2017இன் இறுதியிலுள்ளவாறு ரூ.19.9 பில்லியன் கொண்ட நீண்ட நிலையொன்றுடன் ஒப்பிடுகையில் 2018இன் இறுதியில் ரூ.11.7 பில்லியன் கொண்ட நீண்ட வெளிநாட்டு நாணய நிலையொன்றை அறிக்கையிட்டது. ஐக்கிய அமெரிக்க டொலருக்கெதிராக இலங்கை ரூபா 2017இன் 2.0 சதவீத தேய்வுடன் ஒப்பிடும்போது 2018இன் போது 16.4 சதவீதத்தினால் தேய்வடைந்ததன் விளைவாக வங்கித்தொழில் துறையானது 2017இன் போதிருந்த ரூபா 8.6 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2018இன் போது ரூபா 31.8 பில்லியன் கொண்ட தேறிய வெளிநாட்டு நாணய மீள் மதிப்பீட்டு வருவாயொன்றினைப் பதிவுசெய்தது.

அட்டவணை 8.6
வங்கித்தொழில் துறையின் திரவச் சொத்துக்களின் உள்ளடக்கம்


| விடயம் | 2017 (அ) | | 2018 (ஆ) | | மாற்றம் (ரூ.பில்) | |
|---|---|---|---|---|---|---|
| | ரூ.பில் | பங்கு (%) | ரூ.பில் | பங்கு (%) | 2017 | 2018 (ஆ) |
| திறைசேரி உண்டியல்கள் | 744.7 | 25.1 | 685.0 | 22.6 | 238.1 | -59.7 |
| திறைசேரி முறிகள் | 960.4 | 32.4 | 941.3 | 31.0 | 117.3 | -19.0 |
| இலங்கை அபிவிருத்தி முறிகள் | 524.7 | 17.7 | 543.0 | 17.9 | 73.0 | 18.2 |
| காசு | 165.5 | 5.6 | 184.0 | 6.1 | 43.5 | 18.5 |
| அழைப்புப் பணம் | 110.6 | 3.7 | 120.7 | 4.0 | -4.1 | 10.1 |
| வெளிநாட்டிலுள்ள வங்கிகளுடனான மீதிகள் | 327.4 | 11.1 | 386.0 | 12.7 | 5.2 | 58.6 |
| ஏனையவை | 129.3 | 4.4 | 175.9 | 5.8 | 23.7 | 46.6 |
| **மொத்த திரவச் சொத்துக்கள்** | **2,962.6** | **100.0** | **3,035.9** | **100.0** | **496.8** | **73.3** |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

**(இ) திரவத்தன்மை இடர்நேர்வு: 2018இன் போது கொடுகடன் வளர்ச்சியடைந்த போதிலும் வங்கித்தொழில் துறையானது போதிய திரவத்தன்மை மட்டமொன்றுடன் தொழிற்பட்டது.** உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளின் உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவுகள் குறைந்தபட்ச நியதிச்சட்ட திரவத்தன்மை சொத்து விகிதாசாரமாக 20 சதவீதத்தைப் பேணுவதற்கு வேண்டப்பட்டன. உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவுகளின் குறைந்தபட்ச நியதிச் சட்ட திரவச் சொத்து விகிதாசாரம் 2017இன் இறுதியிலுள்ளவாறு 31.3 சதவீதத்திலிருந்து 2018 இறுதியிலுள்ளவாறு 27.6 சதவீதமாக குறைவடைந்ததாயினும், 20 சதவீதம் கொண்ட குறைந்தபட்ச ஒழுங்குமுறைப்படுத்தலுக்கு மிகவும்மேலாக காணப்பட்டது. அதேவேளை, கரைகடந்த வங்கிப் பிரிவுகளின் குறைந்தபட்ச நியதிச்சட்ட திரவச் சொத்து விகிதாசாரம் 2017 இலுள்ளவாறான 35.5 சதவீதத்திலிருந்து 2018இன் இறுதியில் 45.4 சதவீதமாக அதிகரித்திருந்தது. மேலும், 2018இன் போது வைப்புகளுக்கு கொடுகடன்கள் மற்றும் கடன்பாடுகளுக்கான வீதம் 361 அடிப்படைப் புள்ளிகளால் அதிகரித்ததன் காரணமாக கொடுகடன் விரிவாக்கம் காணப்பட்ட அதேவேளை,

வரைபடம் 8.5
வங்கித்தொழில் துறையின் திரவத்தன்மை விகிதங்கள்





*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

மொத்தச் சொத்துகளுக்கான திரவச் சொத்துகள் மற்றும் வைப்புகளுக்கான திரவச் சொத்துக்கள் விகிதாசாரங்கள் முறையே 304 அடிப்படைப் புள்ளியினாலும் 429 அடிப்படைப் புள்ளிகளாலும் வீழ்ச்சியடைந்திருந்தன.

**வங்கித்தொழில் துறையின் ரூபா மற்றும் அனைத்து நாணயத் திரவத்தன்மை உள்ளடக்க விகிதங்கள் 2018இன் இறுதியளவில் முறையே 176.5 சதவீதமாகவும் 152.1 சதவீதமாகவும் 90 சதவீத குறைந்தபட்ச ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்படுத்தலுக்கு மேலதிகமாகக் காணப்பட்டன.** திரவத்தன்மை அழுக்கச் சூழ்நிலையொன்றில் 30 நாட்கள் காலப்பகுதியொன்றுக்காக வங்கியின் திரவத்தன்மை தேவைகளை நிறைவுசெய்வதற்கு இரண்டாந்தரச் சந்தையில் இலகுவாகவும் உடனடியாகவும் காசாக மாற்றப்படக்கூடிய பொறுப்புச் சாட்டப்படாத உயர்தர திரவச் சொத்துக்களின் கையிருப்பாகக் காணப்படுகின்ற திரவத்தன்மை உள்ளடக்க விகிதமொன்றினைப் பேணுவதற்கும் வங்கிகள் வேண்டப்பட்டுள்ளன. மொத்த திரவச் சொத்துகள் 2017 உடன் ஒப்பிடுகையில் 2018இன் போது கொடுகடனின் உயர்வான வளர்ச்சியின் காரணமாக 2017இன் போதிருந்த ரூ.496.8 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2018இன் போது ரூ.73.3 பில்லியனால் மாத்திரம் அதிகரித்தன. மொத்த திரவச் சொத்துக்கள், 2018 இறுதியிலுள்ளவாறு ரூ.3,035.9 பில்லியனாக இருந்ததுடன் இதில் அரசாங்கப் பிணையங்களிலுள்ள முதலீடுகள் 71.5 சதவீதத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தியது. இதற்கு மேலதிகமாக, போதியளவு நிலையான நிதியளித்தல் மூலங்களை பேணுவதற்கு வங்கிகளை தேவைப்படுத்துகின்ற 2019இல் நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்படும் தேறிய நிலையான நிதியளித்தல் விகிதாசாரத்தின் மூலம் வங்கிகளின் திரவத்தன்மை இடர்நேர்வு மதிப்பீடு மேலும் வலுப்படுத்தப்படவுள்ளது. முப்பது நாட்களுக்கு மேற்பட்டதும் 3 வருடங்களுக்கு உட்பட்டதுமான முதிர்வுக்கூடைகளுக்கான வங்கித்தொழில் துறையின் ஒன்றுதிரட்ட பொறுப்புக்களின் சதவீதமாக ஒன்று திரண்ட முதிர்வின் இடைவெளியானது 2017 உடன் ஒப்பிடுகையில் 2018இல் குறைந்தளவில் ஒடுங்கியதுடன்

வரைபடம் 8.6
**வங்கித்தொழில் துறையின் திரண்ட பொறுப்புகளின் சதவீதமாக திரண்ட முதிர்ச்சி இடைவெளி**




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

இது நடுத்தரகாலத்தில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் சிறந்த முகாமைத்துவத்தை குறித்துக்காட்டுகிறது. போதுமானளவு திரவத்தன்மை தாங்கியிருப்புக்கள் பேணப்படுவதன் காரணமாக தொழில் குறைவின் திரவத்தன்மை இடர்நேர்வு வெளிப்படுத்தல்கள் குறைவானதாகக் கருதப்படுகிறது.

## மூலவளங்கள்

**(அ) இலாபத்தன்மை: வங்கித் தொழில்துறையின் வட்டி வருமானம் 2018இன் போதான வட்டிச் செலவுகளுடன் (12.8 சதவீதம்) ஒப்பிடுகையில் உயர்வான வீதத்தில் (14.0 சதவீதம்), வளர்ச்சியடைந்து வங்கித்தொழில் துறையின் தேறிய வட்டி வருவாய் 2017இல் 3.5 சதவீதத்திலிருந்து 2018இல் 3.6 சதவீதமாக அதிகரிப்பினைத் தோற்றுவித்தது.** தேறிய வட்டி வருமானம், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2018இன் போது ரூ.55.7 பில்லியனால் அதிகரித்த அதேவேளை வட்டியல்லா வருமானம் பாரியளவில் வெளிநாட்டு நாணயத்தின்


அட்டவணை 8.7
**வங்கித்தொழில் துறையின் இலாபம்**

| விடயம் | 2017 (அ) | | 2018 (ஆ) | |
|---|---|---|---|---|
| | தொகை (ரூ.பில்) | சராசரி சொத்தின் % ஆக | தொகை (ரூ.பில்) | சராசரி சொத்தின் % ஆக |
| தேறிய வட்டி வருமானம் | 341.9 | 3.5 | 397.6 | 3.6 |
| வட்டி வருமானம் | 972.5 | 10.0 | 1,108.7 | 10.1 |
| வட்டிச் செலவினம் | 630.6 | 6.5 | 711.1 | 6.5 |
| வட்டியல்லா வருமானம் | 122.0 | 1.2 | 147.7 | 1.3 |
| வெளிநாட்டு செலாவணி வருமானம் | 23.4 | 0.2 | 48.5 | 0.4 |
| வட்டியல்லா செலவினம் | 204.7 | 2.1 | 254.2 | 2.3 |
| ஊழியர் செலவுகள் | 103.0 | 1.1 | 121.4 | 1.1 |
| கடன் இழப்பீட்டு ஏற்பாடுகள் | 20.2 | 0.2 | 41.3 | 0.4 |
| வரிக்கு முன்னரான இலாபம் (பெறுமதி சேர் வரிக்குப் பின்னரான) | 194.4 | 2.0 | 194.7 | 1.8 |
| வரிக்கு பின்னரான இலாபம் | 138.5 | 1.4 | 125.9 | 1.1 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 8.7
**வங்கித்தொழில் துறையின் இலாபக் குறிகாட்டிகள்**





*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

மீள்மதிப்பீட்டின் காரணமாக ரூ.25.7 பில்லியனால் அதிகரித்தது. எவ்வாறாயினும், கடன் இழப்பு ஏற்பாடுகளில் ரூ.21.1 பில்லியனால் அதிகரிப்புடன் ஒன்றிணைந்து ஊழியர் செலவில் ரூ.18.3 பில்லியனின் அதிகரிப்பின் பிரதான காரணமாக ரூ.49.6 பில்லியனால் வட்டியல்லாச் செலவுகள் அதிகரித்தமையானது 2018இல் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூ.194.7 பில்லியன் கொண்ட நிறுவன வரிக்கு முந்திய குறைந்தளவிலான இலாபத்தினை தோற்றுவித்தது.

**வங்கித்தொழில் துறையின் வரிக்குப் பிந்திய இலாபம் 2018இன் போது ரூ.125.9 பில்லியனாக இருந்ததுடன் வங்கித்தொழில் துறையில் தேறிய வட்டிவருமானத்தில் குறைந்த வளர்ச்சி காரணமாக ஒதுக்கீடுகளை மேற்கொள்ளுதலின் அதிகரிப்பு மற்றும் உயர்வான வரி விதிப்பு என்பன காரணமாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 9.1 சதவீதத்தினால் சுருக்கமடைந்தது.** வரிக்கு முந்திய சொத்துகள் மீதான வருவாய் 2017இன் 2.0 சதவீதத்திலிருந்து 2018இல் 1.8 சதவீதமாக வீழ்ச்சியடைந்த அதேவேளை வரிக்குப் பின்னரான பங்கு மூலதனம் மீதான வருவாய் அதேகாலப்பகுதியின் போது 17.6 சதவீதத்திலிருந்து 13.2 சதவீதமாக வீழ்ச்சியடைந்திருந்தது. செயற்பாட்டு செலவுகளின் அதிகரிப்பின் காரணமாக வினைத்திறன் விகிதம் 2017இன் 45.7 சதவீதத்திலிருந்து 2018இல் 50.0 சதவீதமாக வீழ்ச்சிகண்டது.

**(ஆ) மூலதனம்: வங்கித்தொழில் துறையானது 2018 காலப்பகுதி முழுவதும் பாசல் III மூலதனத் தேவைப்பாடுகளுடன் இணங்கியிருந்தது.** ஆண்டின் போது பிரதானமாக அதிகரித்த கொடுகடன் வளர்ச்சியின் காரணமாக வங்கித்தொழில் துறையின் இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்கள் 2018இன் போது 20.4 சதவீதத்தினால் வளர்ச்சி கண்டது. இதன் விளைவாக, வங்கித்தொழில் துறையின் மைய மூலதன விகிதாசாரமும் மொத்த மூலதன விகிதாசாரமும் 2017 இறுதியில் முறையே 12.4 சதவீதம் மற்றும் 15.2 சதவீதத்திலிருந்து 2018இன் இறுதியில் முறையே 12 சதவீதமாகவும் 15.1 சதவீதமாகவும்

வரைபடம் 8.8
வங்கித்தொழில் துறையின் மூலதனப் போதுமாந்தன்மை



*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

வீழ்ச்சி கண்டது. நான்கு ஆண்டு காலப்பகுதியொன்றுக்கு தொடரொழுங்கிலான அடிப்படையில் மூலதனத்திற்காகக் கருத்திற்கொள்ளப்படுகின்ற இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 9இன் நடைமுறைப்படுத்தலிலிருந்தான முதல்நாள் தாக்கம், 2020இன் இறுதியளவில் வங்கிகள் இணங்கியொழுக வேண்டிய அதிகரிக்கப்பட்ட குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடுகள் மற்றும் பாசல் III மூலதனத் தேவைப்பாடுகள் என்பன வங்கிகளை உயர்தர மூலதனத்தினை அதிகரிப்பதற்கு ஊக்கப்படுத்தியிருந்தன. வங்கித்தொழில் துறையின் ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனம் ஆண்டின் போது 19.3 சதவீத வளர்ச்சியினைப் பதிவுசெய்தது இதில் அடுக்கு ஐ மூலதனம் 71.6 சதவீதத்திற்குப் பங்களித்தது. வங்கித்தொழில் துறையின் மொத்த ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனத் தளமானது 2018 இறுதியிலுள்ளவாறு ரூ.1,038.2 பில்லியனாகவிருந்ததுடன் இதில் அடுக்கு ஐ மூலதனம் 79.6 சதவீதத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தியது.

அட்டவணை 8.8
வங்கித்தொழில் துறையின் ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனத்தின் உள்ளடக்கம்

| விடயம் | தொகை (ரூ.பில்) | | உள்ளடக்கம் (%) | |
|---|---|---|---|---|
| | 2017 (அ) | 2018 (ஆ) | 2017 (அ) | 2018 (ஆ) |
| **அடுக்கு I மூலதனம்** | **706.2** | **826.3** | **100.0** | **100.0** |
| பங்கு மூலதனம் | 246.0 | 299.8 | 34.8 | 36.3 |
| நியதி ஒதுக்கு நிதிகள் | 41.7 | 49.7 | 5.9 | 6.0 |
| பிடித்து வைத்திருக்கப்பட்ட இலாபம் | 270.0 | 310.8 | 38.2 | 37.6 |
| பொது மற்றும் ஏனைய ஒதுக்குகள் | 176.9 | 203.3 | 25.1 | 24.6 |
| ஏனையவை | 8.6 | 7.1 | 1.2 | 0.9 |
| ஒழுங்குமுறைப்படுத்தல் சீராக்கங்கள் | -37.0 | -44.4 | -5.2 | -5.4 |
| **அடுக்கு II மூலதனம்** | **164.3** | **211.9** | **100.0** | **100.0** |
| மீள் மதிப்பீட்டு ஒதுக்குகள் | 15.2 | 27.8 | 9.2 | 13.1 |
| கீழ்மட்ட தவணை படுகடன் | 126.6 | 155.3 | 77.0 | 73.3 |
| பொது ஏற்பாடு மற்றும் ஏனையவை | 27.8 | 33.9 | 16.9 | 16.0 |
| ஒழுங்குமுறைப்படுத்தல் சீராக்கங்கள் | -5.3 | -5.1 | -3.2 | -2.4 |
| **மொத்த ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனத் தளம்** | **870.6** | **1,038.2** | | |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

## மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்துதல் அபிவிருத்திகள்

**2018இன் போது மத்திய வங்கியானது வங்கித்தொழில் துறையின் பாதுகாப்பினையும் ஆற்றல்வாய்ந்த தன்மையினையும் மேலும் வலுப்படுத்துவதற்காக முன்மதியுடைய கொள்கை வழிமுறைகளையும் ஒழுங்குவிதிகளையும் தொடர்ந்தும் அறிமுகப்படுத்தியது.** 2018 வரவுசெலவுத் திட்டத்தின் கீழ், பாராளுமன்றத்தினால் ஒப்புதலளிக்கப்பட்டவாறு, 2018 சனவரி 01ஆம் திகதி தொடக்கம் உந்து ஊர்திகளின் இறக்குமதிக்காக, நாணயக் கடித வசதிகளை வழங்குவதிலிருந்தும் விலகியிருக்குமாறு உரிமம்பெற்ற வங்கிகளுக்கு அறிவிக்கப்பட்டது.

**2018 சனவரி 01 தொடக்கம் மின்னியல், கலப்பின மற்றும் ஏனைய பதிவுசெய்யப்பட்ட மற்றும் பதிவுசெய்யப்படாத ஊர்திகளைக் கொள்வனவு செய்வதற்காக அல்லது பயன்படுத்துவதற்காக கொடுகடன் வசதிகளை வழங்குகின்ற போது (இது நிதிக் குத்தகைகள், தவணைக் கொள்வனவு வசதிகள் அத்துடன் அனைத்து வேறு வசதிகளையும் உள்ளடக்குகின்றது) பெறுமதிக்கான கடன் விகிதங்களை அறிவிக்கின்ற வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளுக்கும் வழங்கப்பட்டன.** எனினும், தமது மைய வியாபாரத் தொழிற்பாடுகளுக்காகப் பயன்படுத்தப்படுவதற்கு ஊர்தித்தொகுதிகளைக் கொள்வனவு செய்வதற்காக சுற்றுலாத் துறையில் அத்துடன்/அல்லது போக்குவரத்தில் ஈடுபட்டுள்ள ஏதேனும் கம்பனிக்கு வழங்கப்படும் கொடுகடன் வசதிகளுக்கு பெறுமதிக்கான கடன் விகிதங்கள் ஏற்புடையதாகவிருக்கவில்லை ஆயினும், அவ்வாறு நிதியளிக்கப்பட்ட வாகனங்கள் முதல் பதிவுத் திகதியிலிருந்து ஒரு வருடத்தினுள் எவரேனும் ஆளுக்கு அல்லது நிறுவனத்திற்கு கைமாற்றல் செய்யப்படலாகாது என்பதுடன் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சினால் குறித்துரைக்கப்பட்ட நிதிக் குத்தகை முறையின் கீழ் அரசாங்க நிறுவனங்களுக்கான வாகனக் கொள்வனவிற்கு வழங்கப்படும் கடன் வசதிகளுக்காகவும் ஏற்புடையதாகாது. மேலும், அரசாங்கத்தினால் வழங்கப்படும் முன்மொழியப்பட்ட சலுகைக் குத்தகை வசதியின் கீழ் அரசாங்க சேவையிலுள்ள கள உத்தியோகத்தர்களினால் அத்துடன் கஷ்டப் பிரதேசங்களில் பணியாற்றுகின்ற ஆசிரியர்களின் உந்து உருளி கொள்வனவு செய்வதற்காக வழங்கப்படும் கடன் வசதிகளுக்கும் பெறுமதிக்கான கடன் விகிதங்கள் ஏற்புடையதாகவிருக்கவில்லை. அத்தகைய விலக்களிக்கப்பட்ட வகைகளுக்கு கடன் வசதிகளை வழங்குகின்ற போது உள்ளக வரையறைகளைப் பேணுவதற்கும் போதிய இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறைகளை பின்பற்றுவதற்கும் உரிமம்பெற்ற வங்கிகள் வேண்டப்பட்டிருந்தன. மோட்டார் ஊர்தி இறக்குமதிகளைக் குறைப்பதற்கும் செலாவணி வீதம் மீதான பாதகமான தாக்கத்தினைக் குறைக்கும் நோக்குடனும் முதல் பதிவின் பின்னர் ஒரு ஆண்டினைவிடக் குறைந்த இலங்கையில் பயன்படுத்தப்பட்ட பதிவுசெய்யப்பட்ட மற்றும்

### சிறப்புக்குறிப்பு 10
### ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினை வலுப்படுத்துவதன் மூலம் வங்கிகளின் உறுதித்தன்மையினையும் நீடித்துநிலைத்திருக்கும் தன்மையினையும் உருவாக்குதல்

**1. பின்னணி**

இலங்கையில் வங்கித்தொழில் துறை 2018 இறுதியில் 33 வங்கிகளை உள்ளடக்கி மொத்தமாக ரூ.11.8 றில்லியன் சொத்துக்களைப் பேணி வருகிறது. நிதியியல் முறைமையானது வங்கித்தொழில் துறையினால் ஆதிக்கம் செலுத்தப்பட்டு வருவதுடன் நிதியியல் முறைமையின் மொத்தச் சொத்துக்களில் ஏறத்தாழ 60 சதவீதத்திற்கும் அது வகைகூறுகிறது. தற்பொழுது வங்கித்தொழில் துறை முக்கியமாக வைப்புக்களினால் நிதியிடப்பட்டு வருவதுடன் மொத்தச் சொத்துக்களில் இது 70 சதவீதத்திற்கும் கூடுதலான பங்கிற்கு வகைகூறுகின்ற வேளையில் பங்குடமையாளர்கள் மொத்தச் சொத்துக்களில் ஏறத்தாழ 8.7 சதவீதத்திற்குப் பங்களித்திருக்கின்றனர். ஐக்கிய இராச்சியத்தின் வங்கியாளர் சஞ்சிகையின்படி தற்பொழுது உலகின் முதல் ஆயிரம் வங்கிகளுக்குள் நான்கு இலங்கை வங்கிகள் இடம்பிடித்திருக்கின்றன.

நிதியியல் முறைமையிலும் நாட்டின் பொருளாதாரத்திலும் வங்கித்தொழில் துறை ஆற்றி வரும் முக்கியமான பங்கினைப் பரிசீலனையில் கொண்டு, இலங்கை மத்திய வங்கி வங்கித்தொழில் துறையிலுள்ள ஏதேனும் அழுத்தம் பொருளாதாரத்தின் மீது மோசமான தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடுமாகையால் வங்கித்தொழில் துறையின் உறுதித்தன்மையினையும் நீடித்துநிலைத்திருக்கும் தன்மையினையும் மேலும் வலுப்படுத்துவதற்காக பன்னாட்டு ரீதியாகப் பின்பற்றப்பட்டு வரும் ஒழுங்குவிதிகள் மற்றும் மிகச் சிறந்த நடைமுறைகளின் அடிப்படையில் முன்மதியுடைய கொள்கை வழிமுறைகளையும் ஒழுங்குவிதிகளையும் தொடர்ந்தும் அறிமுகப்படுத்தி வருகிறது.

**2. வங்கித்தொழில் முறைமையின் உறுதித்தன்மையினை உயர்த்துதல்**

**2.1 பாசல் III கட்டமைப்பினை நிறைவு செய்தல்**

உலகளாவிய நிதியியல் நெருக்கடி முடிவடைந்தமையினை உடனடுத்து வங்கித்தொழில் மேற்பார்வை மீதான பாசல் குழு, நெருக்கடிக்கு முன்னரான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பில் காணப்பட்ட பல்வேறு குறைபாடுகளைக் கட்டுப்படுத்தும் பொருட்டும் முறையியல் சார்ந்த பலயீனங்கள் கட்டியெழுப்பப்படுவதனைத் தவிர்ப்பதற்கு உதவும் விதத்தில் வங்கித்தொழில் முறைமையின் மீளெழுச்சிக்கான அத்திவாரமொன்றினை இடும் விதத்திலும் பாசல் III கட்டமைப்பின் கீழ் மூலதன மற்றும் திரவத்தன்மைத் தேவைப்பாடுகளை மேலும் வலுப்படுத்தியது.

**2.1.1 மூலதன நியமங்களை உயர்த்துதல்**

பாசல், இரண்டு முக்கிய மூலதன நியமங்களை அறிமுகப்படுத்தியிருக்கிறது. அவையாவன இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட மூலதனப் போதுமை விகிதம்[1] மற்றும் இடர்நேர்வல்லாதவற்றை அடிப்படையாகக் கொண்ட முடுக்கி விகிதம்[2].

பாசல் III மூலதன நியமங்கள், குறைந்தபட்ச மூலதனப் போதுமை விகிதத்தினைக் கணிக்கும் பொழுது பொதுவான பங்குரிமை மூலதன அடுக்கு 1 மூலதனத்தின் வடிவத்தில் எதிர்கால இழப்புக்களை ஈர்த்துக்கொள்ளும் மூலதனத்தின் மீது பெருமளவு கவனத்தினைச் செலுத்துவதன் மூலம் மூலதன வங்கிகளின் மூலதனத்தினது தரத்தினையும் அளவினையும் மேம்படுத்துவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டது. வங்கிகள் அழுத்த நேரங்களில் ஏற்படும் இழப்புக்களை எதிர்த்து நிற்கக்கூடியளவிற்கு போதியளவிற்கு தாக்குப்பிடிக்கும் தன்மையினைக் கொண்டிருக்கின்றன என்பதனை உறுதிப்படுத்துகின்ற உயர்ந்த குறைந்தபட்ச மூலதனப் போதுமை விகிதத்திற்குப் புறம்பாக, மூலதனப் பாதுகாப்பு தாங்கிருப்பு, இணை சுழற்சிமுறை மூலதனத் தாங்கிருப்பு மற்றும் உள்நாட்டு முறையியல் சார்ந்த முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகளுக்கான மூலதனத் தாங்கிருப்பு போன்ற தாங்கிருப்புக்கள் அறிமுகப்படுத்தப்படுகின்றன.

உலகளாவிய நிதியியல் நெருக்கடிக்கான அடிப்படைக் காரணிகளிலொன்றாக வங்கித்தொழில் முறைமையிலுள்ள முடுக்கியின் ஐந்தொகைக்கு உள்ளேயும் வெளியேயும் கட்டியெழுப்பப்படும் மிகை காணப்படுகிறது. பாசல் III இன் கீழான முடுக்கி விகிதம் இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட மூலதனத் தேவைப்பாட்டினை அளவிடுவதற்கான இலகுவான, வெளிப்படையான இடைநேர்வற்ற துணைநிரப்பு அளவு முறையொன்றாகும். முடுக்கி விகிதம் வங்கிகள் அவற்றின் சொத்துக்களை நிதியிடுவதற்கு மிகையான படுகடன்களைப் பயன்படுத்துவதற்கு வங்கிகளைக் கட்டுப்படுத்துகின்றவிடத்து, உயர்ந்த முடுக்கி விகிதம் இதன் ஐந்தொகைக்கு ஏற்படும் மோசமான அதிர்வுகளை எதிர்த்து நிற்கக்கூடிய வங்கிகளின் இயலாற்றலைப் பிரதிபலிக்கிறது.

**2.1.2 திரவத்தன்மை நியமங்கள்**

உலகளாவிய நிதியியல் நெருக்கடிக் காலப்பகுதியின் போது வங்கிகளின் திரவத்தன்மை இடர்நேர்வு முகாமைத்துவத்தில் காணப்பட்ட குறைபாடுகள் வங்கித்தொழில் மேற்பார்வை மீதான பாசல் குழுவினை வங்கிகளிலுள்ள திரவத்தன்மை இடர்நேர்வின் அளவு முறைகள் மற்றும் முகாமைத்துவத்திற்கான உலகளாவிய கோட்பாடுகளையும் நியமங்களையும் வலுப்படுத்துவதற்கு தூண்டியது. பாசல் III திரவத்தன்மைக் கட்டமைப்பு இரண்டு நியமங்களை அதாவது திரவத்தன்மை உள்ளடக்க விகிதம்[3] மற்றும் தேறிய உறுதியான நிதியிடல் விகிதம்[4] ஆகியவற்றை மையப்படுத்தியிருந்ததுடன் இவை துணைநிரப்பு குறிக்கோளுக்காகவன்றி இரண்டு வேறுபட்ட பணிகளை ஆற்றுவதற்காக விருத்தி செய்யப்பட்டுள்ளன.

திரவத்தன்மை உள்ளடக்க விகிதத்தின் நோக்கம்

1 மூலதனப் போதுமை விகிதம் = மொத்த இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களின் சதவீதமாக மொத்த ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனம்

2 முடுக்கி விகிதம் = வெளிப்படுத்துகை அளவொன்றின் சதவீதமாக மூலதன அளவு

3 திரவ உள்ளடக்க விகிதம் ஸ்ரீ அடுத்த 30 கலண்டர் நாட்களில் மொத்தத் தேறிய காசு வெளிப்பாய்ச்சலின் சதவீதமாக உயர்தர திரவச் சொத்துக்களின் பங்கு

4 நிகர நிலையான நிதியிடல் விகிதம் = உறுதியான நிதியிடலின் தேவையான தொகையின் சதவீதமாக உறுதியான நிதியிடலின் கிடைக்கத்தக்க தொகை

8

வங்கியொன்று அடுத்த 30 நாட்களுக்குள் காசாக உடனடியாக மாற்றக்கூடிய விதத்தில் பங்கமில்லாத உயர்ந்த தர திரவத்தன்மை சொத்துக்களைப் போதுமானளவிற்கு இருப்பில் வைத்திருக்கின்றது என்பதனை உறுதிப்படுத்துகின்றமையின் மூலம் வங்கியின் திரவத்தன்மை இடர்நேர்வு தோற்றப்பாட்டின் தாக்குப்பிடிக்கக்கூடிய தன்மையினை குறுங்காலத்தில் மேம்படுத்துவதாக இருந்தவிடத்து, தேறிய உறுதியான நிதியிடல் விகிதமானது தற்போது இடம்பெற்று வருகின்ற அடிப்படையில் மிக உறுதியான மூலவளங்களுடன் அவற்றின் நடவடிக்கைகளுக்கு நிதியிடுவதற்காக, வங்கிகளுக்கு கூடியளவு ஊக்குவிப்புக்களை உருவாக்குவதன் மூலம் நீண்ட காலப்பகுதியில் தாக்குப்பிடிக்கும் தன்மையினை ஊக்குவிக்கிறது. தேறிய உறுதி வாய்ந்த நிதியிடல் விகிதம் நீண்ட கால அடிப்படையில் வங்கியின் நிதியிடல் தோற்றப்பாட்டிற்கு அமைப்பியல் மாற்றத்திற்கான ஊக்குவிப்புக்களை உருவாக்குவதன் மூலம் திரவத்தன்மை உள்ளடக்க விகிதத்திற்கு உதவியளிப்பதனை நோக்கமாகக் கொண்டிருந்தமையின் மூலம் அமைப்பியல் ரீதியில் ஆற்றல் வாய்ந்த வங்கித்தொழில் முறைமை ஊக்குவிக்கப்படுகிறது. ஆகவே தேறிய உறுதி வாய்ந்த நிதியிடல் விகிதம் மொத்த விற்பனை குறுங்கால நிதியிடலின் மீது தேவையற்ற விதத்தில் தங்கியிருப்பதனைக் குறைப்பதனையும் வங்கிகளின் மிகச் சிறந்த திரவத்தன்மை இடர்நேர்வு முகாமைத்துவத்தினை ஊக்குவிப்பதனையும் இலக்காகக் கொண்டுள்ளது.

### 2.1.3 இலங்கையில் பாசல் III இனை நடைமுறைப்படுத்தல்

இலங்கை மத்திய வங்கி பாசல் ஐஐஐ கட்டமைப்பின் கீழ் மேலே குறிப்பிடப்பட்ட மூலதனம் மற்றும் திரவத்தன்மை நியமங்கள் என்பனவற்றை உள்ளடக்கிய வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளை இலங்கையிலுள்ள உரிமம் பெற்ற வங்கிகளுக்கு விடுத்ததுடன் இது தொடர்பில் அவற்றின் இணங்குவிப்புக்களையும் மிக நெருக்கமாகக் கண்காணித்து வருகிறது.

அட்டவணை சி.கு. 10.1

இலங்கையில் பாசல் III கட்டமைப்பினை நடைமுறைப்படுத்தல்

| 2019.01.01 இலிருந்து நடைமுறைக்குவரும் மூலதன நியமங்கள் | ஏற்புடைத்தான விகிதம் | |
|---|---|---|
| மொத்த மூலதன போதுமை விகிதம் | | |
| • ரூ.500 பில்லியனுக்குக் குறைவான சொத்துக்களைக் கொண்ட வங்கிகளுக்கு | 12.50% | |
| • ரூ.500 பில்லியனுக்கு மேற்பட்ட சொத்துக்களைக் கொண்ட வங்கிகளுக்கு (உ.மு.மு. வங்கிகள்) | 14.00% | |
| முடுக்கி விகிதம் | 3.00% | |
| **2019.01.01 இலிருந்து நடைமுறைக்குவரும் திரவத்தன்மை நியமங்கள்** | | |
| திரவத்தன்மை உள்ளடக்க விகிதம் | 100% | |
| நிகர நிலையான நிதியிடல் விகிதம் | 2019.01.01 | 2019.07.01 |
| | 90% | 100% |

பாசல் III கட்டமைப்பு போன்ற பன்னாட்டு ஒழுங்குமுறைப்படுத்தல் நியமங்களுடன் இணைக்கப்படுவது மேலே குறிப்பிடப்பட்டவாறு மூலதனப் போதுமை முடுக்கி மற்றும் திரவத்தன்மை என்பனவற்றை மேம்படுத்துகின்ற நியமங்களில் மாத்திரமின்றி, சிறந்த கொடுகடன் தரமிடலைப் பெற்றுக் கொள்வதிலும் வங்கிகளுக்கு உதவுகிறது. இது பன்னாட்டுச் சந்தைகளிலிருந்து மூலவள நிதிகளைப் பெற்றுக் கொள்வதற்கும் தொடர்புபடுத்தல் வங்கித்தொழில் உறவுகளைப் பேணுவதற்கும் அநுகூலமளிப்பதாகவுள்ளது.

### 2.2 கம்பனி ஆளுகைக் கட்டமைப்பினை வலுப்படுத்தல்

பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்திக்கான அமைப்பு, கம்பனி ஆளுகை என்பது கம்பனியொன்றின் முகாமைத்துவத்திற்கும் அதன் சபை அதன் பங்குடமையாளர் மற்றும் ஏனைய ஆர்வலர்களுக்கிடையிலான உறவுமுறைகளின் ஒரு தொகுப்பு என வரைவிலக்கணம் செய்கிறது. இது அமைப்பியல் தன்மையொன்றினைத் தருவதுடன் இதனூடாக கம்பனியின் குறிக்கோள்கள் அக்குறிக்கோள்களை அடையும் வழிமுறைகள் மற்றும் கண்காணிப்புச் செயலாற்றம் என்பனவும் நிர்ணயிக்கப்படுகின்றன. இது அதிகாரமும் பொறுப்புக்களும் எவ்வாறு ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்பது பற்றியும் கம்பனித் தீர்மானங்கள் எவ்வாறு மேற்கொள்ளப்பட வேண்டுமென்பது பற்றியும் வரைவிலக்கணம் செய்ய உதவுகிறது.

வங்கிகளிலுள்ள கம்பனி ஆளுகைக் கட்டமைப்பின் குறிக்கோள் உத்தேவகம் மிக்கதும் வெளிப்படையானதுமான இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் காத்திரமான தீர்மானங்களை மேற்கொள்வதில் உதவுவதாக இருந்த வேளையில் பணிப்பாளர் சபையினதும் முகாமைத்துவத்தினதும் பொறுப்பையும் பொறுப்புக்கூறும் தன்மையினையும் உறுதிப்படுத்துவதுடன் அவ்வாறு செய்யும் போது பொதுமக்களின் நம்பகத்தன்மை ஊக்குவிக்கப்படுவதுடன் வங்கித்தொழில் முறைமையின் பாதுகாப்பு ஆற்றல் வாய்ந்த தன்மையும் நிலைநிறுத்தப்படுகிறது.

இலங்கை மத்திய வங்கி, வங்கியின் பணிப்பாளர் சபையின் பொறுப்புக்கள், சபையின் உள்ளடமைப்பு, பணிப்பாளர்களின் பொருத்தம் மற்றும் தகுதிகளை மதிப்பிடுவதற்கான பிரமாணம், சபையினால் ஒப்படைக்கப்பட்ட முகாமைத்துவத் தொழிற்பாடுகள் வங்கியினது தலைவர் மற்றும் முதன்மை நிறைவேற்று அலுவலர்களின் வகிபாகம் மற்றும் பொறுப்புக்கள், சபையினால் நியமிக்கப்பட்ட குழுக்கள் மற்றும் தொடர்பான தரப்பினரின் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் வெளிப்படுத்துகைகள் என்பனவற்றைப் பரந்தளவிற்கு உள்ளடக்கியிருந்தன. வங்கிகளின் கம்பனி ஆளுகை கலாச்சாரத்தினை வலுப்படுத்துகின்றமைக்கானதொரு முயற்சியாக இப்பணிப்புரைகளுடன் வங்கிகள் இணங்கியொழுகுகின்றனவா என்பதனை இலங்கை மத்திய வங்கி கடுமையாகக் கண்காணித்தது. மேலும், வங்கிகளுக்கான கம்பனி ஆளுகையின் கீழ் பொருத்தம் மற்றும் தகுதியை மதிப்பிடுவது தொடர்பான தற்போதுள்ள கட்டமைப்பின் பொறுதிக்காலம் போன்ற உத்வேகம் மிக்க மதிப்பீட்டுப் பிரமாணம் மற்றும் வழிமுறைகளின் மூலம் மேலும் வலுப்படுத்தப்படும்.

கம்பனி ஆளுகையினைப் பலப்படுத்துவதற்காகவும் சொத்துடமை ஒரு இடத்தில் குவிவதனைத் தவிர்ப்பதற்காகவும் வங்கிச் சபைகளில் ஆதிக்கம், அக்கறைகளின் முரண்பாடு, தொடர்பான தரப்பினரின் கொடுக்கல்வாங்கல் தொடர்பாக இடர்நேர்வு, வங்கிகளிலுள்ள பங்கு சொத்துடமை என்பனவற்றைப் பரந்த

8

அடிப்படையிலமைப்பது அவசியமாகும். ஆகவே பங்குடமை மீது தற்போதுள்ள தேவைப்பாடுகள் மீளாய்வு செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன் புகழ்பெற்ற பன்னாட்டு பங்குடமையாளர்களை ஊக்குவிக்கும் கொள்கைகளையும் வங்கிகளில் பங்குகளை வைத்திருப்பதற்கு வங்கித்தொழில் துறையின் தேர்ச்சியைப் பன்முகப்படுத்துவதனை ஊக்குவிக்கும் கொள்கையினையும் ஊக்குவித்தல் வேண்டும்.

### 2.3 பன்னாட்டு கணக்கீட்டு நியமங்களுடன் இணைத்தல்

இலங்கை கணக்கீட்டு நியமம் - இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9: நிதியியல் சாதனங்கள், இதனை நடைமுறைப்படுத்துவதன் காரணமாக 2018 சனவரி 01ஆம் நாளன்று அல்லது அதன் பின்னர் ஆரம்பமாகின்ற ஆண்டு காலப்பகுதிக்காக அனைத்து நிறுவனங்களினதும் நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் நிதியியல் அறிக்கையிடல் புதிய கணக்கீட்டு நியமத்துடன் இசைந்து செல்வதாக இருத்தல் வேண்டும். இதன்படி, உரிமம் பெற்ற வங்கிகள், முன்னைய உறப்பட்ட கடன் இழப்பு அணுகுமுறைக்குப் பதிலாக, எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு அணுகுமுறையின் கீழ் கடன் இழப்புக்களைக் காட்டுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டன. இலங்கை மத்திய வங்கி, வங்கித்தொழில் துறையில் இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9 உடன் இசைந்து செல்லக்கூடியதும் முன்மதியுடையதுமான பிரயோகங்களை ஊக்குவிப்பதுடன் இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9இனைப் பின்பற்றுவது தொடர்பில் உரிமம் பெற்ற வங்கிகளுக்கு வழிகாட்டல்களையும் விடுத்தது. இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9இனைப் பின்பற்றுவது வங்கிகளின் மீது குறிப்பிடத்தக்க தாக்கத்தினைக் கொண்டிருக்கும் என்பதுடன், மூலதனத்தின் மீதான அழுத்தத்தினை தவிர்க்கும் பொருட்டும் வங்கித்தொழில் மேற்பார்வைக்கான பாசல் குழுவினால் வழங்கப்பட்ட வழிகாட்டல்களுடன் இசைந்து செல்லும் விதத்திலும் பாசல் III இன் உரிமம் பெற்ற வங்கிகள் கீழ் நான்கு ஆண்டுகளைக் கொண்ட நிலைமாற்றுக் காலம் முழுவதும் மூலதனப் போதுமை விகிதம் மீதான முதல் நாள் தாக்கத்தினை ஒழுங்குமுறைமையின் அடிப்படையில் படிப்படியாகக் கணக்காய்வு செய்ய அனுமதிக்கப்பட்டன.

### 2.4 சந்தை நடத்தை மற்றும் திறைசேரி தொழிற்பாடுகள் மீதான ஒழுங்குவிதிகள்

வங்கிகளின் சந்தை நடத்தை மற்றும் திறைசேரி தொழிற்பாடுகள் தொடர்பில் காணப்பட்ட ஒழுக்கவியலற்ற பலயீனமான நடைமுறைகள் வாடிக்கையாளர் மீது எதிர்மறையான நிதியியல் தாக்கத்தினையும் சந்தையின் நாணயத் தன்மைக்கு சேதத்தினையும் தோற்றுவிக்கும் என்பதற்கு உலகம் முழுவதிலுமுள்ள வங்கித்தொழில் தொழில் துறையில் அநேக சம்பவங்களைக் காணமுடியும். இது வங்கிகளுக்கு அதிகளவு ஒழுங்குவிதிகளை எதிர்நோக்கவும் கணிசமான தண்டப் பணம், மீள் இடையேற்பாட்டுச் செலவுகள் அதேபோன்று வைப்பாளர்கள் மற்றும் பொதுமக்களிடையேயான நம்பிக்கைப் பொறுப்புக்கள் தொடர்பில் கணிசமான இழப்புக்களையும் ஏற்படுத்துகின்றது. ஆகவே, இலங்கை மத்திய வங்கி, வங்கிகளின் சந்தை நடத்தை மற்றும் திறைசேரி தொழிற்பாடுகளை தொடர்ச்சியாகக் கண்காணித்து வருவதுடன் இது தொடர்பில் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினை மீளாய்வு செய்யும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருக்கிறது.

### 2.5 தொழில்நுட்பவியல் இடர்நேர்வு, கிளவுட் கணிப்பிடல் மற்றும் சைபர் பாதுகாப்பு

கிளவுட் கணிப்பிடல், பகிர்ந்தளிக்கப்பட்ட பேரேட்டுத் தொழில்நுட்பம் செயற்கை நுண்ணறிவினைப் பயன்படுத்தி நிதியியல் தொழில்நுட்பங்களில் ஏற்பட்ட அபிவிருத்தியூடாக வங்கித்தொழில் துறையில் டிஜிட்டல் பரிமாற்றங்கள் புதிய உற்பத்திகளையும் பணிகளையும் உருவாக்குவதற்கான பாதையைத் திறந்திருப்பதுடன் வாடிக்கையாளர்கள் வங்கியை அணுகும் தன்மையினை அதிகரித்து, வங்கியின் கட்டுப்பாட்டினை வலுப்படுத்தி செலவுகளைக் குறைக்கிறது. எனினும், புதிய தொழில்நுட்பங்கள் புதிய இடர்நேர்வுகளை உருவாக்குவதுடன் அண்மையில் நிதியியல் நிறுவனங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட உயர்ந்த தோற்றப்பாட்டினைக் கொண்ட சைபர் தாக்குதலும், வங்கிகள் சைபர் தாக்குதலுக்குப் பெருமளவில் பாதிக்கப்படக்கூடிய தன்மையினைக் கொண்டிருப்பதனால் சைபர் தாக்குதல், சைபர் பாதுகாப்பினை வலுப்படுத்துவதற்கான தேவையின் மீது கவனம் செலுத்துவது மிக அவசியமாகும். ஆகவே, இலங்கை மத்திய வங்கி ஒழுங்குமுறைப்படுத்துநர் என்ற முறையில், ஒழுங்குவிதிகள், புத்தாக்கம் மற்றும் டிஜிட்டல் பரிமாற்றம் என்பனவற்றிடையே சமநிலையொன்றினைப் பேணுவதற்கான கடப்பாட்டினைக் கொண்டிருக்கும் வேளையில் தொழில்நுட்பவியல் இடர்நேர்வுகளைக் குறைப்பதற்கான வழிமுறைகளையும் எடுத்து வருகின்றது.

இதற்கமைய, இலங்கை மத்திய வங்கி, 2018 இலிருந்து 2020 வரையான காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்படுவதற்காக நேரக் கட்டமைப்புடன் கூடிய தொழில்நுட்பவியல் இடர்நேர்விற்கு தாக்குப்பிடிக்கும் தன்மையினை மேம்படுத்துவதற்காக உரிமம் பெற்ற வங்கிகளுக்கு வழிகாட்டலொன்றினை விடுத்தது. தகவல் பாதுகாப்பு ஆளுகை, தகவல் பாதுகாப்புப் பயிற்சி மற்றும் சபைப் பணிப்பாளர்கள் மற்றும் வங்கி அலுவலர்களுக்கான விழிப்புணர்வு, கைத்தொழில் நியமப்பயன்படுத்துநர் அணுகும் தன்மையினை நடைமுறைப்படுத்தல் மற்றும் முகாமைத்துவ முறைமையின் அடையாளம், தகவல் பாதுகாப்பு உணர்திறனை அடிப்படையாகக் கொண்ட தரவுப் பாதுகாப்பு மற்றும் தரவுப் புகுபதிகை, வங்கிகளுக்கான பாதுகாப்பு தொழிற்பாட்டு மையங்களை நிறுவுதல் (உ-ம்: குறிப்பாக உள்நாட்டு முறையியல் சார்ந்த முக்கியத்துவம் மிக்க வங்கிகளுக்காக) தகவல் பாதுகாப்பு பரீட்சிப்பு, முறைமைக் கிடைப்பனவு, அலுவலர் தகைமைத் தேவைப்பாடுகள், தகவல் முறைமை உட்கட்டமைப்புச் சொத்துரிமையின் வேறுபட்ட வகைகள் மீதான வேறுபட்ட வகைகள் மீதான பன்னாட்டு நியமங்கள் மற்றும் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுதல், முகாமைத்துவம் மற்றும் இடஅமைவு என்பனவும் வழிகாட்டலை பூரணப்படுத்துவதற்காக இனிவரும் காலத்தில் விடுக்கப்படும்.

### 2.6 பேரண்ட முன்மதியுடைய வழிமுறைகள்

தனிப்பட்ட நிதியியல் நிறுவனங்களின் மீது வெறுமனே கவனம் செலுத்துவதற்கு மாறாக, நிதியியல் துறைக்கும் உண்மைத் துறைக்குமிடையிலான உள்ளக தொடர்புகளை பொதுவாகப் பரிசீலனையில் கொண்டு நிதியியல் முறைமையில் காணப்படும்

முறைமையியல் சார்ந்த இடர்நேர்வுகளைக் கையாள்வதற்குப் பேரண்ட முன்மதியுடைய கொள்கை வழிமுறைகள் வங்கித்தொழில் துறையில் தற்பொழுது காணப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் பேரண்ட முன்மதியுடைய ஒழுங்குமுறைப்படுத்தல் வழிமுறைகள் வங்கித்தொழில் துறையில் தற்பொழுது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

- உந்து ஊர்திகளின் கொள்வனவு/ பயன்பாடு தொடர்பில் வழங்கப்படும் கொடுகடன்களைக் கட்டுப்படுத்துவதற்காக பெறுமதிப்படியான கடன் விகிதம்[5] அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.
- உரிமம் பெற்ற வங்கிகளின் வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகள் தொடர்பில் விடுக்கப்பட்ட வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் வங்கிகளின் வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகள் தொடர்பான குறுங்கால மற்றும் நீண்ட கால வரையறைகளுக்கான கட்டமைப்பினை வழங்குகின்றன. வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகள் மீதான வரையறைகள் வங்கியின் வெளிவாரி நீண்ட கால கொடுகடன் தரமிடல் மற்றும் மூலதனப் போதுமை விகிதம் என்பனவற்றைப் பரிசீலனையில் கொண்டு கணிக்கப்பட்ட புள்ளிகளை அடிப்படையாகக் கொண்டிருப்பதுடன் இது மொத்தச் சொத்துக்களின் சதவீதமாகவும் கணிக்கப்படுகிறது.
- பாசல் III இன் கட்டமைப்பின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட மூலதனம் மற்றும் திரவத்தன்மை மீதான பேரண்ட முன்மதியுடைய ஒழுங்குமுறைப்படுத்தல் வழிமுறைகள் வருமாறு:
- முறைமையியல் சார்ந்த இடர்நேர்விற்கெதிரான உள்நாட்டு முறையியல் சார்ந்த முக்கியத்துவம் மிக்க வங்கிகளுக்கான மூலதனத் தாங்கிருப்பு
- மூலதனப் பாதுகாப்பு தாங்கிருப்பொன்றினை விதித்தல். அழுத்தச் சூழ்நிலையொன்றினைக் குறைப்பதற்காக சிறந்த நேரமொன்றின் போது இதனைக் கட்டியெழுப்ப வேண்டுமென தேவைப்படுத்தப்படுகிறது.
- நிதியிடல் மூலங்களைக் கட்டுப்படுத்துவதற்கு பேரண்ட முன்மதியுடைய கருவியொன்றாக குறைந்தபட்ச இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட முடுக்கி விகிதம்.
- இணை சுழற்சி வட்ட திரவத்தன்மை வழிமுறைகளாக திரவத்தன்மை உள்ளடக்க விகிதம் மற்றும் தேறிய உறுதித்தன்மை நிதியிடல் விகிதம் என்பனவற்றை விதித்தல்.

### 2.7 வங்கித்தொழில் பணிகளை வழங்குவதற்கு மாற்று வழிப்படுத்தல்களுக்கு வசதியளித்தல்

வங்கித்தொழில் பணிகள், தொழில்நுட்ப புத்தாக்கங்கள் மற்றும் வாடிக்கையாளர் முன்னுரிமைகளில் ஏற்படும் மாற்றங்கள் என்பனவற்றிற்கு வசதியளிப்பதற்கு பௌதீக பிரசன்னம் கொண்ட அமைப்பொன்றினைப் பேணுவதற்கு ஏற்படும் உயர்ந்த செலவினைப் பரிசீலனையில் கொண்டு, பாரம்பரியமாக வழங்கப்பட்டுவரும் வழிப்படுத்தல்களுக்கு அப்பாலும் வங்கித்தொழில் பணிகள் சென்றடையும் விதத்தில் அதனை விரிவாக்கும் வேளையில் வாடிக்கையாளர்களுக்கான வசதிகளை உயர்த்தும் நோக்குடன் வங்கிகள் மாற்று விநியோக வழிப்படுத்தல்களை நோக்கி நகரத் தொடங்கியுள்ளன. இது வங்கித்தொழில் துறையில் புரட்சிகரமான மாற்றமொன்றிற்கு வழிவகுத்திருப்பதுடன் வங்கிகள் பின்டெக்ஸ், தொலைத்தொடர்பூட்டல் கம்பனிகள் மற்றும் ஏனைய சில்லறை விற்பனையாளர்கள் போன்ற நிறுவனங்களுடனான பங்குடமைகளூடாக முகவர் வங்கித்தொழில் முயற்சிகளுக்குள் நுழையும் ஆர்வத்தினைக் காட்டி வருகின்றன.

நிதியியல் முறைமையின் பாதுகாப்பினையும் ஆற்றல் வாய்ந்த தன்மையினையும் அதேவேளையில் வாடிக்கையாளரின் பாதுகாப்பினையும் உறுதிப்படுத்தும் பொருட்டு முகவர் வங்கித்தொழில் வியாபாரத்தினை மேற்பார்வை செய்வதற்காக ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பின் மீது மத்திய வங்கி பணிப்புரைகளை விடுத்திருக்கிறது. பணிப்புரைகள் அனுமதிக்கப்பட்ட முகவர் வங்கித்தொழில் வியாபாரங்களை எடுத்துக்காட்டியிருப்பதுடன் இடர்நேர்வு முகாமைத்துவம், துணை முகவர்கள் உட்பட முகவர்களின் தெரிவு, நுகர்வோர் பாதுகாப்பு, இணங்குவிப்பு வழிமுறைகள் மற்றும் நிவாரண பொறிமுறை ஆகிய நியதிகள் தொடர்பில் உரிமம் பெற்ற வங்கிகளினால் பூர்த்தி செய்யப்பட வேண்டிய தேவைப்பாடுகளையும் குறிப்பிட்டிருக்கிறது.

### 2.8 புரிந்துணர்வு ஒப்பந்தம் மற்றும் உள்ளக ஒழுங்குமுறைப்படுத்தல் முன்னெடுப்புக்கள்

காத்திரமான வங்கித்தொழில் மேற்பார்வைக்காக, பன்னாட்டுத் தீர்ப்பனவுகளுக்காக விடுக்கப்பட்ட மையக் கோட்பாடுகள் வங்கிகளின் இடர்நேர்வு முகாமைத்துவத்தின் மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்புக்களைப் பலப்படுத்தியிருப்பதுடன் வங்கிகளின் முன்மதியுடைய ஒழுங்குவிதிகள் மற்றும் மேற்பார்வைக்கான குறைந்தபட்ச நியமங்களையும் நிர்ணயித்திருக்கின்றன. இதற்கமைய, "ஒத்துழைப்பு மற்றும் கூட்டுமுயற்சி" தொடர்பான பாசல் மையக் கோட்பாடு 3 மற்றும் "வீட்டு விருந்தோம்பல் உறவுமுறை" மீதான மையக் கோட்பாடு 13, என்பன தொடர்பான உள்நாட்டு அதிகாரிகள் மற்றும் வெளிநாட்டு மேற்பார்வையாளர்களிடையேயான ஒத்துழைப்பு மற்றும் கூட்டுமுயற்சிக்கான கட்டமைப்பொன்று நடைமுறையிலிருக்க வேண்டியதன் அவசியத்தினை எடுத்துக்காட்டிய வேளையில் தகவல்களின் இரகசியத்தன்மையினைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தினையும் பிரதிபலித்தது.

ஆகவே, இலங்கை வங்கித்தொழில் துறையின் பன்னாட்டு மயப்படுத்தப்பட்டுள்ள தன்மையினையும் எல்லை கடந்த அதன் பிரசன்னத்தையும் பரிசீலனையில் கொண்டு, இலங்கை மத்திய வங்கி தகவல்களைப் பரிமாறிக் கொள்வதற்கும் மற்றும் மேற்பார்வை ஒத்துழைப்பிற்குமாக ஆசியப் பிராந்தியத்திலுள்ள ஏனைய மேற்பார்வை அதிகாரசபைகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்திருக்கிறது. தற்பொழுது, எல்லை கடந்த மேற்பார்வை

5 பெறுமதிப்படியான கடன் விகிதம் என்பது சொத்தொன்றின் சந்தைப் பெறுமதி தொடர்பில் வழங்கப்படக்கூடிய கடனொன்றின் உயர்ந்தபட்சக் கடன் தொகையாகும்.

ஒத்துழைப்பு மற்றும் ஒழுங்குமுறைப்படுத்துநர்களிடையே தகவல்களைப் பகிர்ந்து கொள்வது தொடர்பில் இலங்கை மத்திய வங்கி பாகிஸ்தான் ஸ்டேட் வங்கி, இந்திய றிசேர்வ் வங்கி மற்றும் வங்காளதேச வங்கி என்பனவற்றுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களைச் செய்து கொண்டிருக்கிறது. மேலும், இலங்கை மத்திய வங்கி உள்நாட்டு ஒழுங்குமுறைப்படுத்துநர்களான இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு மற்றும் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு என்பனவற்றுடன் தகவல்களைப் பரிமாற்றிக் கொள்வதற்காக புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொண்டிருக்கிறது.

## 2.9 முன்னோக்கிச் செல்வதற்கான வழி

### 2.9.1 புதிய வங்கித்தொழில் சட்டம்

வங்கித்தொழில் துறை விரைவாகப் பரிணாம வளர்ச்சி கண்டு வருவதுடன் அதிகளவிற்குச் சிக்கல் வாய்ந்ததொன்றாகவும் மாறி வருகின்றது. நிதியியல் துறையில் வங்கித்தொழில் துறை ஆதிக்கம் பெற்று காணப்படுகின்றமை மற்றும் குறிப்பிட்ட வங்கிகள் முறையியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்தவையாகக் காணப்படுகின்றமை என்பனவற்றைப் பரிசீலனையில் கொள்கையில் உரிமம் பெற்ற வங்கிகள் தொடர்பான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினை வலுப்படுத்துவது வலுவான பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவளிக்கின்ற இயக்கவாற்றல் மிக்க தாக்குப்பிடிக்கக்கூடிய வங்கித்தொழில் துறையினைப் பேணுவதற்கு முக்கியமானதாகும். ஆகவே, இலங்கை மத்திய வங்கி, உரிமம் பெற்ற வங்கிகளின் மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல்களை மேலும் வலுப்படுத்தும் நோக்குடன் புதிய வங்கித்தொழில் சட்டத்தினை வரையும் நடவடிக்கைகளை முன்னெடுத்திருக்கிறது. உத்தேச புதிய சட்டத்தில் சேர்க்கப்பட வேண்டிய முக்கிய துறைகள், மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தலுக்கான ஒட்டுமொத்த அதிகாரம், கம்பனி ஆளுகையினைப் பலப்படுத்தல், டிஜிட்டல் வங்கித்தொழில், ஒன்றுதிரட்டப்பட்ட மேற்பார்வை, தீர்மானங்கள், நாணயத் தண்டப் பணம்/ அபராதங்களை விதித்தல், பரவக்கூடிய இடர்நேர்வுகளைத் தணிப்பதற்கு வெவ்வேறாகப் பிரித்தல், ஒன்றுடனொன்று இணைந்து கொள்வதற்கான ஏற்பாடுகளைப் பலப்படுத்தல், கையேற்பு மற்றும் திரட்சிப்படுத்தல், பாரிய வெளிநாட்டு வங்கிகளை துணை நிறுவனங்களாக்குதல் மற்றும் வங்கிகளுக்கான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினை வேறுபடுத்துதல் என்பனவற்றை உள்ளடக்குகிறது.

### 2.9.2 உள்நாட்டு முறையியல் சார்ந்த முக்கியத்துவம் மிக்க வங்கிகளைத் தீர்மானித்தல்

நிதியியல் உறுதிப்பாட்டுச்சபை, முறையியல் ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த நிதியியல் நிறுவனங்கள் என்பது, அவற்றின் அளவு சிக்கலான தன்மை, முறையியல் ரீதியில் ஒன்றாகத் தொழிற்படும் கட்டமைப்பு என்பனவற்றின் காரணமாக அவற்றின் கட்டுக்கோப்பு முறிவடைந்து போவதனால் பரந்தளவு நிதியியல் முறைமைக்கும் பொருளாதார நடவடிக்கைகளுக்கும் கணிசமான இடையூறுகளை ஏற்படுத்தக்கூடிய நிறுவனங்கள் என வரைவிலக்கணம் செய்கிறது. 2012 ஒத்தோபரில் வங்கித்தொழில் மேற்பார்வை மீதான பாசல் குழு, உள்நாட்டு முறையியல் சார்ந்த முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகளுடனான தொடர்புகளுக்கான அதன் கட்டமைப்பினை இறுதிப்படுத்தியதுடன் இக்கட்டமைப்பானது உள்நாட்டு முறையியல் சார்ந்த முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகள் என அடையாளம் காணப்பட்ட வங்கிகளுக்கான மதிப்பீட்டு முறையியல் தொடர்பான கோட்பாட்டு நிர்ணயங்களுடனும் உயர்ந்த இழப்பு ஈர்ப்புத் தேவைப்பாடுகளுடனும் தொடர்புபட்டதாகக் காணப்படுகிறது.

தற்பொழுது, இலங்கையில் உள்நாட்டு முறையியல் சார்ந்த முக்கியத்துவம் மிக்க வங்கிகள் ரூ.500 பில்லியன் அல்லது அதற்கு மேற்பட்ட சொத்துக்களைக் கொண்ட வங்கிகள் என அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் மூலதனப் போதுமை விகிதத்தினை கணிப்பது தொடர்பில் 2019 சனவரியிலிருந்து 1.5 சதவீதம் கொண்ட மூலதன மேலதிகக் கட்டணத்திற்கும் ஏற்புடைத்தாக இருக்கும். வங்கித்தொழில் துறையிலும் பொருளாதாரத்திலும் உள்நாட்டு முறையியல் சார்ந்த முக்கியத்துவம் மிக்க வங்கிகள் கொண்டிருக்கும் முக்கியத்துவத்தினையும் தாக்கத்தினையும் பரிசீலனையில் கொண்டு, இலங்கை மத்திய வங்கி, வங்கி மேற்பார்வை மீதான பாசல் குழுவினால் விடுக்கப்பட்ட கோட்பாட்டினை அடிப்படையாகக் கொண்ட கட்டமைப்பிற்கிணங்க உள்நாட்டு முறையியல் சார்ந்த முக்கியத்துவம் மிக்க வங்கிகளின் தீர்மானத்திற்காக அனைத்தையுமுள்ளடக்கிய கட்டமைப்பினை உருவாக்க எண்ணியிருக்கிறது.

### 2.9.3 பாரிய வெளிநாட்டு வங்கிகளை துணை நிறுவனமயப்படுத்தல்

தற்பொழுது உள்நாட்டுச் சந்தையில், பாரியளவில் தொழிற்படுகின்ற குறிப்பிட்ட வெளிநாட்டு வங்கிகள் நடுத்தரளவில் காணப்படும் உள்நாட்டு வங்கிகளை ஒத்தனவாகக் காணப்படுகின்றன. ஆகவே, நடுத்தர காலத்தில் தற்பொழுது கிளைகளாகத் தொழிற்படுகின்ற பாரிய வெளிநாட்டு வங்கிகள் முறையியல் சார்ந்த முக்கியத்துவம் மிக்க வங்கிகளாகக் கருதப்படுமிடத்து தொடர்பான வெளிநாட்டு வங்கிகளுக்கு முழுமையாகச் சொந்தமான துணை நிறுவனங்களாக மாறுமாறு கேட்டுக் கொள்ளப்படும். இலங்கை மத்திய வங்கியின் உத்தேசக் கட்டமைப்பு அத்தகைய வங்கிகள் தனியான சட்ட ரீதியான நிறுவனங்களை உருவாக்கிக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளும். இவ்வங்கிகள் அவற்றிற்கென சொந்தமான மூலதனத்தளத்தினையும் உள்நாட்டு பணிப்பாளர் சபையினையும் கொண்டிருக்குமாறும் அதன் தாய் வங்கியிலிருந்தும் தனியாக அதன் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் தெளிவாக வரையறுத்துக் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளும். மேலும், பாரிய வெளிநாட்டு வங்கிகளை துணை நிறுவனங்களாவதற்கு வசதியளிக்கும் விதத்தில் புதிய வங்கித்தொழில் சட்டத்திற்கு திருத்தங்கள் கொண்டு வரப்படும்.

### 2.9.4 ஒன்றுதிரட்டப்பட்ட மேற்பார்வை

உலகளாவிய நிதியியல் நெருக்கடிகள், உலகளாவிய மற்றும் உள்நாட்டு பொருளாதாரங்களின் உறுதிப்பாட்டில் நிதியியல் பாரிய பல்கூட்டுக் குழுமங்களின் தொழிற்பாடு உட்பட நிதியியல் குழுமங்களின் குறிப்பிடத்தக்க வகிபாகத்தினை எடுத்துக்காட்டுகின்றன. ஆகவே, பரவுகின்ற இடர்நேர்வுகளிலிருந்து வங்கிகளைப் பாதுகாத்துக் கொள்வதனையும் வங்கித்தொழில்

8

துறையினதும் நிதியியல் முறைமையினதும் உறுதிப்பாட்டினையும் ஆற்றல் வாய்ந்த தன்மையினையும் உறுதிப்படுத்திக் கொள்வதனையும் பரிசீலனையில் கொள்கையில் வங்கித்தொழில் குழுமங்களைத் தனித்தனியாகவும் ஒன்றுதிரட்டப்பட்ட அடிப்படையிலும் மேற்பார்வை செய்யும் அவசியம் காணப்படுகின்றது. ஆகவே, மேற்பார்வையாளர் உரிமம் பெற்ற வங்கிகளின் உடைமைக் கம்பனிகள், துணைக் கம்பனிகள் மற்றும் ஏனைய இணைந்த நிறுவனங்களைப் பரீட்சிப்பதற்கான மற்றும் வங்கிக் குழுமங்களை முழுமையாக அணுகுவதற்கான அதிகாரங்கள் உட்பட, உரிமம் பெற்ற வங்கிகளின் ஒன்றுதிரட்டப்பட்ட மேற்பார்வையினை மேற்கொள்வதற்குத் தேவையான அதிகாரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும். இச்செயன்முறைக்கு வசதியளிக்கும் பொருட்டு, இலங்கை மத்திய வங்கி புதிய வங்கித்தொழில் சட்டத்திற்கு வங்கித்தொழில் குழுமங்களின் ஒன்றுதிரட்டப்பட்ட மேற்பார்வையினை இயலுமைப்படுத்தக்கூடிய ஏற்பாடுகளைக் கொண்டு வருவதற்கும் அதேபோன்று ஒன்றுதிரட்டப்பட்ட மேற்பார்வை தொடர்பில் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினை உருவாக்குவதற்கும் எண்ணுகிறது. மேலும், இது தொடர்பில் உள்ளக ஒழுங்குமுறைப்படுத்தல் ஒத்துழைப்பு மற்றும் கூட்டு ஒத்துழைப்பினை வலுப்படுத்தும் பொருட்டு இலங்கை மத்திய வங்கி, பங்குகள் பரிவர்த்தனை ஆணைக்குழு மற்றும் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு என்பன இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட ஒன்றுதிரட்டப்பட்ட மேற்பார்வை மீது முத்தரப்பு புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றினை செய்து கொண்டன. இதில் இலங்கை மத்திய வங்கி தலைமை ஒழுங்குமுறைப்படுத்துநராக இருக்கும்.

மேலும், அறவிடல் திட்டமிடல், சைபர் பாதுகாப்பு மற்றும் வங்கிகள் மற்றும் உறுதித்தன்மை வாய்ந்த நிதிக்காக டிஜிட்டல் மயப்படுத்தல் என்பன உட்பட வங்கித்தொழில் துறையிலுள்ள மற்றைய ஒழுங்குமுறைப்படுத்தல் துறைகளைப் பலப்படுத்த முன்முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

### 3. முடிவுரை

நிதியியல் துறையின் உச்ச நிறுவனம் என்ற ரீதியில், இலங்கை மத்திய வங்கி நிதியியல் முறைமையினை நிருவகிக்கவும் ஒழுங்குமுறைப்படுத்துவதற்குமான அதிகாரத்தினைக் கொண்டிருக்கிறது. ஆகவே ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் சந்தை அபிவிருத்தி மற்றும் பன்னாட்டுச் சிறந்த நடைமுறைகள் என்பனவற்றுடன் இசைந்து செல்லும் விதத்தில் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்காக முன்மதியுடைய கொள்கை வழிமுறைகளைச் சரியான நேரத்தில் அறிமுகப்படுத்துவதனூடாக வங்கித்தொழில் துறையின் இயக்கவாற்றலையும் தாக்குப்பிடிக்கும் தன்மையினையும் ஊக்குவிப்பது மத்திய வங்கியின் கடப்பாடாகும். இது வங்கித்தொழில் முறைமையின் உறுதித்தன்மையினைப் பேணுவதற்கு உதவுகின்ற வேளையில் வைப்பாளர்களின் நலவுரித்துக்களைப் பாதுகாத்து பொதுமக்களின் நம்பிக்கையினைப் பாதுகாக்கின்றது.

பதிவுசெய்யப்படாத ஊர்திகளுக்காக கலப்பு மோட்டார் ஊர்திகளின் கொள்வனவு அல்லது பயன்பாட்டு நோக்கத்திற்காக பயன்படுத்தப்படும் கடன் வசதிகளுக்கு பெறுமதிக்கான கடன் விகிதத்தினைக் 50 சதவீதத்திற்கு குறைக்கின்ற மோட்டார் ஊர்திகளின் இறக்குமதிகளைக் குறைப்பதற்கான வழிமுறைகள் மீதான வங்கிச் சட்டப் பணிப்புரைகள் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு வழங்கப்பட்டன. மேலும், 2018 ஒத்தோபர் 01ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் மறு அறிவித்தல் வரை இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்படும் சலுகை நியதிகள் மீதான மோட்டார் ஊர்திகளின் அனுமதிப் பத்திரங்கள் வழங்குவதற்கான திட்டத்தின் கீழ் மோட்டார் ஊர்திகளின் இறக்குமதிக்காக நாணயக் கடிதங்களைத் திறப்பதிலிருந்து தவிர்ந்திருக்குமாறு உரிமம்பெற்ற வங்கிகள் அறிவுறுத்தப்பட்டன.

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டு செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அனுமதிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்களை கரைகடந்த வங்கித்தொழில் பிரிவொன்றில் ஏதேனும் குறித்தரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில், வதிவற்றவர் ஒருவரினால் பேணப்படும் கணக்கொன்றிற்கு வரவு வைப்பதற்கும் பற்று வைப்பதற்கும் அத்துடன் உரிமம்பெற்ற வங்கிகள் மூலமான வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகள் மீது 2018இன் 11ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளிலுள்ள நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டு வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகளைப் பொறுப்பேற்பதற்கும், அத்துடன் வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகளில் வதிபவர் ஒருவருடன் ஈடுபடுவதற்கும் அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளையும் அனுமதிக்கின்ற வங்கித்தொழில் சட்டக் கட்டளைகள் கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டன.**

**உரிமம்பெற்ற வங்கிகளின் முகவர்களை நியமித்தல் மீதான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினை அறிவித்து அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளுக்கும் முகவர்களை நியமிப்பது தொடர்பில் வங்கித்தொழில் சட்ட பணிப்புரைகள் வழங்கப்பட்டன.** செயற்றிறன்மிக்க முகவர் மேற்பார்வை, இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் வாடிக்கையாளர் பாதுகாப்பு போன்ற விடயங்களை உறுதிசெய்யும் பொருட்டு வங்கிகளின் பொறுப்புகள் உள்ளடங்கலாக முகவர்களை மற்றும் துணை முகவர்களை அனுமதித்தல் மற்றும் தெரிவுச்செயன்முறை அத்துடன் அவர்களது அனுமதிக்கப்பட்ட நடவடிக்கைகள், இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வை, வாடிக்கையாளர் பாதுகாப்பு போன்றவற்றை மையப்படுத்தி இப்பணிப்புரை காணப்பட்டது. இதனைத்தொடர்ந்து ஏற்கனவே உள்ள வாடிக்கையாளர் தவிர்ந்த ஆட்களுக்கு உள்முக பணவனுப்பல் சேவைகளை வழங்குவதற்கு உரிமம்பெற்ற வங்கிகளை அனுமதிக்கின்ற பணிப்புரைகளுக்கான திருத்தமொன்று வழங்கப்பட்டது.

**இலங்கை மத்திய வங்கியானது, வங்கித்தொழில் சட்டத்தின் கீழ் உரிமம்பெற்ற வங்கிகளின் கணக்காய்வுகளை நடாத்துவதற்காக தகைமைபெற்ற கணக்காய்வாளர்களின் தற்போதுள்ள அட்டவணையினை மீளாய்வு செய்யும் செயன்முறையினை முன்னெடுக்கின்றது.** அதற்கமைய, 2020 சனவரி 01 இல் ஆரம்பிக்கின்ற நிதியாண்டிற்கான கணக்காய்வுகளை நடாத்துவதற்கு மதிப்பீடு செய்து தெரிவுசெய்வதற்காக கணக்காய்வு நிறுவனங்களிடமிருந்து ஆர்வத்தை வெளிப்படுத்தல் கோரப்பட்டது. மதிப்பீடானது பல்வேறு காரணிகளை அடிப்படையாகக் கொண்டிருக்கும். இது பங்காளர்களின் தகைமை, பணியாட்தொகுதி, நிறுவனத்தின் அனுபவம் மற்றும் நிபுணத்துவம் அத்துடன் தொழில்நுட்பத் தகைமைகள் கிடைக்கப்பெறும்தன்மை போன்றனவற்றை உள்ளடக்குகின்றது.

**உரிமம்பெற்ற வங்கிகளின் இடர்நேர்வு முகாமைத் துவத்தினை வலுப்படுத்தும் நோக்குடன், நிதியியல் பெறுதிகள் மீதான வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு வழங்கப்பட்டன.** அதற்கமைய, பெறுதிக் கொடுக்கல்வாங்கல்கள் மீதான சபை அனுமதித்த கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை செயற்படுத்துதற்கும் பெறுமதிக் கொடுக்கல்வாங்கல்களுடன் தொடர்புபட்ட பொறுப்புக்களை இனங்கண்டு, அளவிட்டு, மதிப்பிட்டு, இடர்நேர்வினை முகாமைசெய்வதற்கும் செயலாற்றுகையினைக் கண்காணிப்பதற்கும் இடர் முகாமைத்துவக் கட்டமைப்பினைக் கொண்டிருப்பதற்கும் அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளும் தேவைப்படுத்தப்பட்டன. புதிய பணிப்புரைகள் உரிமம்பெற்ற வங்கிகளுக்கான நிதியியல் பெறுதிக் கொடுக்கல்வாங்கல்கள் மீதான 2017 நவெம்பர் 29ஆம் திகதியிடப்பட்ட 2017இன் 06ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளை இரத்துச்செய்தது.

**ஏற்றுக்கொள்ளல் நியதிகளுக்கெதிரான ஆவணங்கள் மீதான இறக்குமதிகளுக்கெதிரான எல்லைத் தேவைப்பாடு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்பட்டன.** அதற்கமைய, ஏற்றுக்கொள்ளல் நியதிகளின் கீழ் அத்தியாவசியமற்ற நுகர்வுப் பொருட்கள் இறக்குமதிகளின் விலைப் பட்டியலிடப்பட்ட பெறுமதியின் மீது 100 சதவீத காசு எல்லையொன்றினை வைப்பதற்கு இறக்குமதியாளர்களைக் கோருவதற்கு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு அறிவிக்கப்பட்டது. காசு எல்லைத் தேவைப்பாடானது எல்லைத் தேவைப்பாட்டிற்குட்படாத பொருட்களை அதே விலைப்பட்டியல் உள்ளடக்குகின்றது என்பதைக் கருத்திற் கொள்ளாது விலைப் பட்டியலின் மொத்தப் பெறுமதியின் மீது இருத்தல் வேண்டும். மேலும், எல்லை வைப்பு பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்றும் வைப்பானது இலங்கையிலுள்ள வங்கித்தொழில் வழிகளூடாக ஆவணம் சார்ந்த சான்றுகளினது அல்லது கொடுப்பனவுகளினது சமர்ப்பணத்தின் மீதும் பொருட்களை அப்புறப்படுத்தவதற்கான சுங்க ஆவணங்களைச் சமர்ப்பித்திலின் மீது விடுவிக்கப்படும் என்றும் விலைப் பட்டியலில் புறக்குறிப்பீடு செய்வதற்கு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் அறிவுறுத்தப்பட்டன. இவ் இறக்குமதிகள் தொடர்பில் எல்லை வைப்புக்களை வைப்பதற்கு ஏற்றுமதியாளர்களை இயலச்செய்கின்ற கடன் வசதிகளை வழங்கக்கூடாது எனவும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு அறிவிக்கப்பட்டது. உந்து ஊர்திகள் மற்றும் அத்தியாவசியமற்ற நுகர்வோர் பொருட்களின் இறக்குமதிகளை வசதிப்படுத்துவது தொடர்பில் தேசிய சேமிப்பு வங்கிக்கு வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் வழங்கப்பட்டன. மறு அறிவித்தல் வரை நாணயக் கடிதங்களைத் திறத்தல் அல்லது வேறு கொடுப்பனவு வாயில்கள் ஊடாக குறித்துரைக்கப்பட்ட சில பொருட்கள் மற்றும் அத்தியாவசியமற்ற நுகர்வுப் பொருட்கள் (குறித்துரைக்கப்பட்டவை) தவிர உந்து ஊர்திகளின் இறக்குமதிக்கு வசதியளிப்பதிலிருந்து தவிர்ந்திருக்குமாறு தேசிய சேமிப்பு வங்கிக்கு அறிவிக்கப்பட்டது.

**முன்னைய ஆண்டின் இறுதியிலுள்ளவாறு உரிமம்பெற்ற வங்கிகளின் மொத்தச் சொத்துக்களை அடிப்படையாகக் கொண்டு 2019 மற்றும் 2020ஆம் கலண்டர் ஆண்டுகளுக்காக உரிமம்பெற்ற வங்கிகளின் வருடாந்த உரிமக் கட்டணங்களை வங்கிகளுக்கு அறிவிக்கின்ற வங்கித்தொழில் சட்டத் தீர்மானம் வழங்கப்பட்டது.**

**உரிமம்பெற்ற வங்கிகளின் தொழில்நுட்ப இடர்நேர்வுக்கு தாக்குப்பிடிக்கும் தன்மை தொடர்பில் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு ஆலோசனைப் பத்திரமொன்று வழங்கப்பட்டது.** இதன் கீழ் வழங்கப்படவுள்ள பணிப்புரைகள் தகவல் பாதுகாப்பு ஆளுகை, பயிற்சி மற்றும் சான்றுபடுத்தல், பயன்பாட்டாளர் அணுகுவழி முகாமைத்துவம், தரவு குறிமுறையாக்கம், பாதுகாப்பு தொழிற்பாட்டு மையங்களைத் தாபித்தல், பதவியினர் திறன் தேவைப்பாடு போன்ற சில துறைகள் மீது உரிமம்பெற்ற வங்கிகளுக்கென தொழில்நுட்ப இடர்நேர்வு தாக்குப்பிடிக்கும் தன்மை மீது குறைந்தபட்ச ஒழுங்குமுறைப்படுத்தல் எதிர்பார்க்கைகளை நிர்ணயிக்கும். முன்மொழியப்பட்ட பணிப்புரைகள் தகவல் தொழில்நுட்ப மற்றும் தகவல் பாதுகாப்பு தொடர்பான ஏற்கனவேயுள்ள இலங்கை மத்திய வங்கி பணிப்புரைகளை பதிலீடு செய்யும்.

**உரிமம்பெற்ற வங்கிகளுக்கு பாசல் III திரவத்தன்மை நியமங்களின் கீழ் தேறிய நிதியளித்தல் விகிதம் தொடர்பான வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் வழங்கப்பட்டன.** உரிமம்பெற்ற வங்கிகளின் சொத்து உள்ளமைப்பு மற்றும் ஐந்தொகைக்கு வெளியேயான நடவடிக்கைகள் தொடர்பில் உறுதியான நிதியளித்தல் திட்ட எல்லையினை உறுதிசெய்யும் பொருட்டு இப்பணிப்புரைகள் வழங்கப்பட்டன. அதற்கமைய, 2019 சனவரி 01 இலிருந்து ஆரம்பித்து ஒவ்வொரு உரிமம்பெற்ற வங்கியும் அனைத்து வேளைகளிலும் 90 சதவீத தேறிய நிலையான நிதியளித்தல் விகிதத்தினைப் பேணுதல் வேண்டும் இது, 2019 யூலை 01 தொடக்கம் 100

சதவீதத்திற்கு அதிகரிக்கப்படவுள்ளது. மேலும், அரசாங்கம் மீதான வெளிநாட்டுக் கோரிக்கைகளுக்கு குறித்தொதுக்கப்பட்ட இடர்நிறையுடன் கூடிய பணிப்புரைகளை ஒழுங்கமைக்கும் பொருட்டும் வாடிக்கையாளர் தள வகைப்படுத்தலினை சீரமைப்பதற்கும் என பாசல் III திரவத்தன்மை நியமங்களின் கீழ் திரவத்தன்மை உள்ளடக்கம் மீதான 2015இன் 01ஆம் இலக்க வங்கிச் சட்டப் பணிப்புரைகளுக்கான திருத்தங்கள் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு வழங்கப்பட்டன.

**உரிமம்பெற்ற வங்கிகள் மூலமான வெளிநாட்டு நாணய கடன்பாடுகளுக்கான புதிய கொள்கைக் கட்டமைப்பொன்றினை அறிமுகப்படுத்துகின்ற வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகள் மீதான வங்கித்தொழில் பணிப்புரைகள் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு வழங்கப்பட்டன.** புதிய கொள்கைக் கட்டமைப்பு நியதிகளின்படி, வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகள் மீதான குறுகிய கால மற்றும் நீண்டகால வரையறைகள் வங்கியின் வெளிநாட்டு கடன் தரப்படுத்தல் மற்றும் மூலதனப் போதுமை விகிதாசாரம் என்பவற்றைக் கருத்திற்கொண்டு கணிக்கப்படுகின்ற புள்ளியொன்றின் அடிப்படையில் சொத்துகளின் குறித்த சதவீதமொன்றினை அடிப்படையாகக் கொண்டிருக்கும். புதிய பணிப்புரைகள், உரிமம்பெற்ற வங்கிகள் மூலமான வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகள் மீதான 2017இன் 07ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளையும் முதன்மைக் கணக்காளரினால் வழங்கப்பட்ட 1997 சனவரி 13ஆம் திகதியிடப்பட்ட பீடி/எவ்எக்ஸ்/196 ஆம் இலக்க சுற்றறிக்கையினையும் இரத்துச்செய்தது.

**வங்கிகளின் திறைசேரித் தொழிற்பாடுகளின் சந்தை நடத்தை மற்றும் நடைமுறைகளை மேலும் வலுப்படுத்தும் நோக்குடனும் உரிமம்பெற்ற வங்கிகளின் திறைசேரித் தொழிற்பாடுகள் முன்மதியுடனும் சர்வதேச சிறந்த நடத்தைகளுக்கமைவாகவும் கொண்டு நடாத்தப்படுகின்றன என்பதனை உறுதிசெய்வதற்கும் உரிமம்பெற்ற வங்கிகளின் சந்தை நடத்தை மற்றும் திறைசேரித் தொழிற்பாடுகள் தொடர்பான ஆலோசனைப் பத்திரமொன்று உரிமம்பெற்ற வங்கிகளுக்கு வழங்கப்பட்டது.** முன்மொழியப்பட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பானது ஏனையவற்றிற்கு மத்தியில் சந்தை நடத்தை மற்றும் ஒழுக்கம்சார்ந்த நடைமுறைகள், இரகசியத்தன்மைத் தேவைப்பாடுகள், வணிக உரையாடல்களைப் பதிவுசெய்வதற்கான நடைமுறை, இடர்நேர்வு முகாமைத்துவக் கோட்பாடுகள், தொழில்வாண்மை மற்றும் அறிவு மட்டம் அத்துடன் பணிப்புரைகளுடன் இணங்காமை மீதான தடைகள் என்பனவற்றை உள்ளடக்குகின்றது.

**இடர்நேர்வு அடிப்படையிலான மூலதனத் தேவைப் பாட்டிற்கான நம்பகமான பதிலிட்டு வழிமுறையொன்றாகச் செயற்படுவதற்கு எளிமையான, வெளிப்படையான, இடர்நேர்வற்ற அடிப்படையிலமைந்த முடுக்கி விகிதமொன்றுடன் கூடிய கட்டமைப்பொன்றினை அறிமுகப்படுத்தும் நோக்குடன் பாசல் III இன் கீழ் முடுக்கி விகிதம் தொடர்பான வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு வழங்கப்பட்டன.** இது, வங்கித்தொழில் துறையில் முடுக்கு திரள்வதானது அதிகரிக்கப்படுவதை மட்டுப்படுத்துவதற்கும் பரந்த நிதியியல் முறைமை மற்றும் பொருளாதாரத்தினை சேதப்படுத்தக்கூடிய ஏதேனும் உறுதியிழத்தல் செயன்முறையினை தவிர்க்கும் பொருட்டுமாகும். அதற்கமைய 2019 சனவரி 01ஆம் திகதியில் ஆரம்பித்து 3 சதவீதம் கொண்ட குறைந்தபட்ச முடுக்கி விகிதம் அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளுக்கும் ஏற்புடையதாகவிருக்கும். மேலும், தேசிய சேமிப்பு வங்கிச் சட்டம் வங்கியின் சேமிப்புகள் மற்றும் வைப்புகள் கணக்குகளிலுள்ள வைப்புகளின் 60 சதவீதத்தினை அரசாங்கப் பிணையங்களில் முதலிட வேண்டுமென்ற பொறுப்பாணையின் காரணமாக தேசிய சேமிப்பு வங்கிக்கான முடுக்கி விகித அளவீட்டு கணிப்பிலிருந்து வங்கியின் சேமிப்பு மற்றும் வைப்புக் கணக்குகளில் வைப்பிலிடப்பட்ட பணத்திலிருந்து அரசாங்கப் பிணையங்களில் முதலிடப்பட்ட 60 சதவீத பிரதிநிதித்துவத்தினை நீக்குமாறு அனுமதி வழங்கி தேசிய சேமிப்பு வங்கிக்கு சுற்றறிக்கையொன்று வழங்கப்பட்டது.

**உரிமம்பெற்ற வங்கிகளின் பணிப்பாளர்கள், முதன்மை நிறைவேற்று அலுவலர்கள் மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணி போன்றோரின் பொருத்தம் மற்றும் தகுதி மதிப்பீட்டினை வலுப்படுத்தும் நோக்குடன் கூட்டாண்மை ஆளுகை மீதான வங்கித்தொழில் பணிப்புரைகளில் திருத்தங்கள் மீதான ஆலோசனைப் பத்திரமொன்று உரிமம்பெற்ற வங்கிகளுக்கு வழங்கப்பட்டது.** அதற்கமைய, மேற்குறித்த பதவிகளுக்கு பெயர் குறிக்கப்பட்ட/ நியமிக்கப்பட்ட ஆட்களின் தகைமைகள் மற்றும் பொருத்தம் தொடர்பான மேலதிகத் தகவல்கள் உரிமம்பெற்ற வங்கிகளின் பணிப்பாளர் சபை மற்றும் முகாமைத்துவ பதவிகளுக்கு மிகப் பொருத்தமான ஆட்களை நியமிப்பதனை வசதிப்படுத்துவதற்கு பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். மேலும், பெறுதிக்காலத்தினை விதித்தலானது, அக்கறை முரண்பாடுகளைத் தவிர்ப்பதற்கும் இப்பதவிகளின் பொறுப்புக்கூறும் தன்மையினை அதிகரிப்பதற்கும் கருத்திற் கொள்ளப்படும்.

**உரிமம்பெற்ற வங்கிகளினால் இலங்கை நிதியியல் அறிக்கையிடும் நியமம் - 9: நிதியியல் சாதனங்களினைப் பின்பற்றுதல் மீது ஒத்திசைவான மற்றும் முன்மதியான நடைமுறைகளை நிறுவும் நோக்குடன் அவற்றைப் பின்பற்றுதல் தொடர்பாக உரிமம்பெற்ற வங்கிகளுக்கு இலங்கை மத்திய வங்கியின் வழிகாட்டல்கள் வழங்கப்பட்டன.** இவ்வழிகாட்டல்கள் 2015 திசெம்பரில் வங்கி மேற்பார்வை தொடர்பான பாசல் குழுவினால் வழங்கப்பட்ட "எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்புகளுக்கான கொடுகடன் இடர்நேர்வு மற்றும் கணக்கீடு மீதான வழிகாட்டல்", சர்வதேச நிதியியல் அறிக்கையிடல் நியமங்கள் 9: நிதியியல் சாதனங்கள் என்பவற்றின் அடிப்படையிலும் இது தொடர்பில் இலங்கை பட்டயக்

8

கணக்காளர் நிறுவனம், கணக்காய்வாளர்கள் குழாம் அத்துடன் உரிமம்பெற்ற வங்கிகள் என்பவற்றிடமிருந்து கிடைக்கப்பெற்ற பரிசீலனைகள் மற்றும் கருத்துரைகளைக் கருத்திற்கொண்டும் தயாரிக்கப்பட்டன. அதற்கமைய, உரிமம்பெற்ற வங்கிகள் நிதியியல் கூற்றுக்களைத் தயாரித்து எடுத்துரைத்து வெளியிடுகின்றபோது குறைந்தபட்சமாக நிதியியல் சொத்துக்கள் மற்றும் நிதியியல் பொறுப்புகளின் வகைப்படுத்தல் மற்றும் அளவீடு, கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவம், நிதியியல் சொத்துக்களின் மதிப்பிழப்பு, பிணைய உறுதிகளின் பெறுமதி மதிப்பீடு, உள்ளகக் கணக்காய்வாளரின் வகிபாகம், ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் அறிக்கையிடல் தேவைப்பாடுகள் என்பன மீது இவ்வழிகாட்டல்களை கடைப்பிடிப்பதற்கு (ஏற்கனவே ஏற்புடைய ஒழுங்குவிதிகளுக்கு மேலதிகமாக) வேண்டப்பட்டுள்ளன.

**இடர்நேர்வு மேற்பார்வைக் கட்டமைப்பினை வசதிப் படுத்தும் முகமாகவும் உரிமம் பெற்ற வங்கிகளுக்கான முன்கூட்டிய தலையீடு மற்றும் நேரகாலத்துடனான சீர்ப்படுத்தும் செயற்பாடுகளை இயலச்செய்யும் நோக்குடனும் ஓர் புதிய மேற்பார்வை தரமிடல் மாதிரி (வங்கி நிலைத்திருக்கும் தரமிடல் குறிகாட்டி) மத்திய வங்கியால் உருவாக்கப்பட்டது.** இதன் பிரகாரம் வங்கி நிலைத்திருக்கம் தரமிடல் குறிகாட்டியை அடிப்படையாகக் கொண்டு இடர்நேர்வு அடிப்படையிலான பரீட்சிப்பு 2019 சனவரி 01 தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டது. எதிர்காலத்தில், இலங்கை மத்திய வங்கியானது, நிதியியல் துறையின் உறுதிப்பாட்டினையும் நிலைபெறு தன்மையினையும் உறுதிசெய்கின்ற அதேவேளை, உலக மற்றும் உள்நாட்டு அதிர்வுகளுக்கான நிதியியல் முறைமையின் தாக்குப்பிடிக்கும் தன்மையினை அதிகரிக்கின்ற அதேவேளை வைப்பாளர்களின் நலன்களைப் பாதுகாக்கும் பொருட்டு சர்வதேச தர நியமங்களுக்கும் சிறந்த நடத்தைகளுக்கமைவாக வங்கித் தொழில் துறை ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் மீளாய்வு செய்து வலுப்படுத்தும்.

## 8.3 வங்கித்தொழில் அல்லாத நிதியியல் நிறுவனங்களின் செயலாற்றம்

### உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் துறை

**இவ்வாண்டுப்பகுதியில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் செயலாற்றம் கொடுகடன் வளர்ச்சி, இலாபத்தன்மை மற்றும் செயற்படாக் கடன்களின் நியதிகளில் மிதமானதொன்றாகக் காணப்பட்டது.** இறக்குமதிகளையும் உந்து ஊர்திகளுக்கான கடன் வழங்கலையும் கட்டுப்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட இறை மற்றும் பேரண்டமுன்மதியுடைய கொள்கை வழிமுறைகள் இத்துறையின் மையக் கடன் வழங்கல் சாதனங்களுக்கான கேள்வியை எதிர்மறையாகப் பாதித்தன. மேலும், உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளும் அவற்றின் மைய வியாபாரமான ஊர்திகளுக்கு நிதியிடலிலிருந்தும் ஏனைய பாதுகாப்பான கடன் வழங்கல் நடவடிக்கைகளுக்கு படிப்படியாக நகர்வதனை அவதானிக்க முடிந்திருக்கிறது. எனினும், 2018இல் இத்துறையானது 5.6 சதவீதம் கொண்ட சொத்துக்களின் வளர்ச்சியுடன் விரிவடைந்து 2018இன் இறுதியில் இலங்கையின் நிதியியல் முறைமையில் 7.6 சதவீதத்தைப் பிரசன்னப்படுத்தியது. ஒட்டுமொத்தமாக இத்துறை குறைந்தபட்ச ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளுக்கு மேலாக திரவத்தன்மைத் தாங்கிருப்பை போதுமானளவில் பேணியதுடன் மூலதனம் ஆரோக்கியமான மட்டமொன்றில் பேணப்பட்டது. அதிகரித்த சொத்துக்கள் முக்கியமாக கடன்பாடுகளினூடாக நிதியிடப்பட்ட வேளையில் துறையின் வைப்புக்கள் முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட உயர்ந்த வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் சிறிதளவில் அதிகரித்தமையின் காரணமாக இத்துறை நிதியிடல் கலப்பில் பெயர்ச்சியொன்றைக் காட்டுகின்றது. இலங்கை மத்திய வங்கி பலயீனமாக நிதியியல் நிலைமைகளைக் கொண்ட கம்பனிகளை மீளெழுச்சிப்படுத்துவதனை மிகக்கூடிய அளவிற்கு பரிசீலனையில் கொண்டு இத்துறையின் உறுதிப்பாட்டினைப் பேணுவதற்கான முன்மதியுடைய வழிமுறைகளை தொடர்ந்தும் எடுத்து வந்திருக்கிறது.

### வியாபார வளர்ச்சி

**(அ) விரிவாக்கம்: 2018 இறுதியில் இத்துறையானது, 43 உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளையும் 5 சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளையும் உள்ளடக்கியிருந்தது.** உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளும் வாடிக்கையாளர்களுக்கு அதிகரித்த பணிகளை வழங்கியதன் மூலமும் கிளை வலையமைப்பினை விரிவாக்கியதன் மூலமும் பொருளாதாரத்திற்கு பங்களித்திருக்கின்றன. 2018 இறுதியில் உள்ளவாறு, உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் துறையில் 1,373 கிளைகளும் 658 ஏனைய கிளைகளும் காணப்பட்டன. இவற்றில் 927 கிளைகள் (68 சதவீதம்) மேல் மாகாணத்திற்கு வெளியே பரந்து காணப்பட்டன.

அட்டவணை 8.9
உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் / சிறப்பியல்பு வாய்ந்த குத்தகை கம்பனிகளின் மாகாண ரீதியான கிளைப் பரம்பல்

| மாகாணம் | 2017 முடிவில் | 2018 முடிவில் (அ) |
|---|---|---|
| மத்திய | 152 | 158 |
| கிழக்கு | 110 | 110 |
| வட மத்திய | 100 | 98 |
| வட மேல் | 147 | 148 |
| வடக்கு | 84 | 84 |
| சப்ரகமுவ | 111 | 110 |
| தென் | 148 | 151 |
| ஊவா | 68 | 68 |
| மேல் | 442 | 446 |
| மொத்தம் | 1,362 | 1,373 |

(அ) தற்காலிகமானது *மூலம்:* இலங்கை மத்திய வங்கி

8

**(ஆ) சொத்துக்கள்: இவ்வாண்டுப்பகுதியில் மொத்தச் சொத்துக்களின் விரிவாக்கம் மெதுவடைந்து 2017இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 11.8 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் ரூ.1,431.3 பில்லியனை அடைந்து 5.6 சதவீதம் கொண்ட (ரூ.76.3 பில்லியன்) வளர்ச்சி வீதத்தைப் பதிவுசெய்திருக்கிறது. துறையின் சொத்துத் தளம் முக்கியமாகக் கடன்களையும் முற்பணங்களையும் உள்ளடக்கி மொத்தச் சொத்துக்களில் 79.4 சதவீதத்திற்கு கணக்கிட்டிருந்தது.** நிதிக் குத்தகைகள் முக்கிய பகுதியொன்றிற்கு வகைகூறி கடன்கள் மற்றும் முற்பணங்களில் 52.8 சதவீதத்தினை பிரசன்னப்படுத்தியதுடன் அதனைத் தொடர்ந்து ஏனைய பிணையிடப்பட்ட கடன்கள் (38 சதவீதம்) காணப்பட்டன.

**துறையின் கடன் வழங்கல் நடவடிக்கைகள், உந்து ஊர்திகளின் இறக்குமதிகள் மற்றும் ஊர்திகளுக்கான கடன் வழங்கல் என்பனவற்றைக் கட்டுப்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட இறை மற்றும் பேரண்டமுன்மதியுடைய கொள்கை வழிமுறைகள், மற்றும் மெதுவான பொருளாதார நடவடிக்கைகள் என்பன மெதுவடைந்த போக்கொன்றிற்கான சமிக்ஞைகளை எடுத்துக்காட்டின.** உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் துறையினால் வழங்கப்பட்ட கொடுகடன் 2017இன் தொடர்பான காலப்பகுதியில் 9.8 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் ரூ.1,137.0 பில்லியனுக்கு 7.6 சதவீதத்தினால் (ரூ.79.9 பில்லியன்) சிறிதளவில் வளர்ச்சியடைந்தன. எனினும், ஏறத்தாழ 84.5 சதவீதமான கொடுகடன் வளர்ச்சி நிதி குத்தகைகளினூடாக இடம்பெற்ற வேளையில் 16.1 சதவீதம் பிணையிடப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்களினூடாகப் பெறப்பட்டன. இவ்வாண்டுப்பகுதியில் தவணை கொள்வனவு சொத்துப்பட்டியல் ரூ.8 பில்லியனினால் (29.7 சதவீதம்) சுருக்கமடைந்தது. எனினும், 2018ஆம் ஆண்டிற்கான நிதிக் குத்தகை சொத்துப்பட்டியலின் வளர்ச்சி 2017ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 13 சதவீதமான வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 14.7 சதவீதமாகக் காணப்பட்டது.

அட்டவணை 8.10

உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் /சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் துறையின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் உள்ளடக்கம்


| விடயம் | 2017 | | 2018 (அ) | | மாற்றம் (%) | |
|---|---|---|---|---|---|---|
| | ரூ.பில் | பங்கு (%) | ரூ.பில் | பங்கு (%) | 2017 | 2018 (அ) |
| **சொத்துக்கள்** | | | | | | |
| கடன் மற்றும் முற்பணங்கள் (தேறிய) | 1,057.1 | 78.0 | 1,137.0 | 79.4 | 9.8 | 7.6 |
| முதலீடுகள் | 118.1 | 8.7 | 109.7 | 7.7 | 5.7 | -7.1 |
| ஏனையவை | 179.8 | 13.3 | 184.6 | 12.9 | 30.8 | 2.7 |
| **பொறுப்புக்கள்** | | | | | | |
| மொத்த வைப்புக்கள் | 686.7 | 50.7 | 716.8 | 50.1 | 29.4 | 4.4 |
| மொத்த கடன் பெறுகைகள் | 396.0 | 29.2 | 463.8 | 32.4 | -9.7 | 17.1 |
| மூலதன கூறுகள் | 169.7 | 12.5 | 183.7 | 12.8 | 16.1 | 8.2 |
| ஏனையவை | 102.6 | 7.6 | 67.0 | 4.7 | 6.4 | -34.7 |
| **மொத்த சொத்துக்கள்/ பொறுப்புக்கள்** | **1,355.0** | **100.0** | **1,431.3** | **100.0** | **11.8** | **5.6** |

(அ) தற்காலிகமானது

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 8.9

உரிமம் பெற்ற நிதிக்கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் துறையின் உற்பத்தி வாரியான மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்கள்




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

**பங்குரிமை மூலதனத்திலுள்ள முதலீடுகள், மூலதனச் சந்தைப் படுகடன் சாதனங்கள், அரச பிணையங்கள் மற்றும் முதலீட்டுச் சொத்துப்பட்டியல்கள் என்பனவற்றை உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக் கம்பனிகள் துறை உள்ளடக்கியிருந்தது.** முதலீட்டுச் சொத்துப்பட்டியல்கள் 2017ஆம் ஆண்டின் ரூ.118.1 பில்லியனுக்கு அல்லது 5.7 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2018இல் ரூ.109.7 பில்லியனுக்கு அல்லது 7.1 சதவீதம் கொண்ட எதிர்மறையான வளர்ச்சியை பதிவுசெய்தமைக்கு துணைக் கம்பனிகள் மற்றும் இணைக் கம்பனிகள், கூறுநம்பிக்கைப் பொறுப்புக்கள் என்பனவற்றில் காணப்பட்ட பங்கு முதலீடுகள் வீழ்ச்சியடைந்தமையே முக்கிய காரணமாகும். வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள், வர்த்தக இருப்புக்கள் மற்றும் நிலையான சொத்துக்களில் காசு, நிலுவைகள் வடிவில் முக்கியமாகப் பேணப்பட்ட ஏனைய சொத்துக்கள் 2018இல் 2.7 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைக் காட்டியமைக்கு வங்கிகளிலும் நிதியியல் நிறுவனங்களிலும் செய்யப்பட்ட அதிகரித்த வைப்புக்களே பெருமளவிற்குக் காரணமாகும்.

**(இ) பொறுப்புக்கள்: வாடிக்கையாளர் வைப்புக்கள், பொறுப்புக்களின் முக்கியபாகமொன்றாக இன்னமும் விளங்கி, இத்துறையின் மொத்தப் பொறுப்புக்களில் 50.1 சதவீதத்திற்கு கணக்கிட்டன.** இத்துறையின் கடன்பாடுகள் 2017ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட எதிர்மறையான வளர்ச்சியிலிருந்தும் மாற்றமடைந்து 2018இல் 17.1 சதவீதம் (ரூ.67.8 பில்லியன்) கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்திருக்கின்றன.

அட்டவணை 8.11

உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் துறையின் வைப்புக்களின் உள்ளடக்கம்

| விடயம் | தொகை (ரூ.பில்) | | உள்ளடக்கம் % | |
|---|---|---|---|---|
| | 2017 | 2018 (அ) | 2017 | 2018 (அ) |
| தவணை வைப்புக்கள் | 655.7 | 681.3 | 95.4 | 95.1 |
| சேமிப்பு வைப்புக்கள் | 30.0 | 34.6 | 4.4 | 4.8 |
| வைப்புச் சான்றிதல்கள் | 1.0 | 0.9 | 0.2 | 0.1 |
| **மொத்த வைப்புக்கள்** | **686.7** | **716.8** | **100.0** | **100.0** |

(அ) தற்காலிகமானது

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

வைப்புக்களின் வளர்ச்சி 2017இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 29.4 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 4.4 சதவீதத்திற்கு மெதுவான போக்கினைக் காட்டியது. நெகிழ்ச்சித்தன்மை மற்றும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் தொடர்பில் பொதுமக்களின் எதிர்மறையான நோக்கு என்பன வைப்புக்கள் ஊடாக நிதிகள் திரட்டப்படுவதனைக் குறைத்துவிட்டது. வைப்புக்களின் மீதான வளர்ச்சிக்கு வைப்பு வட்டி வீதங்களின் வீழ்ச்சியடைந்து செல்லும்போக்கு முக்கிய காரணமாக அமைந்தது.

**துறையின் மூலதனக் கூறுகள் 2018 இறுதியிலுள்ளவாறு ரூ.183.7 பில்லியனுக்கு 8.2 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு 2019 சனவரி 01 அளவில் ரூ.1.5 பில்லியன் தேவைப்பாட்டினைப் பூர்த்திசெய்யும் விதத்தில் குறைந்தபட்ச மைய மூலதனத்தினை அதிகரிப்பதற்குக் கம்பனிகளினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் காரணமாக மூலதனத்தில் ஏற்பட்ட அதிகரிப்பும் அதேபோன்று 2017/2018 நிதியாண்டில் உள்ளக ரீதியாக உருவாக்கப்பட்ட இலாபமும் முக்கிய காரணங்களாக அமைந்தன.**

## உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் துறையின் இடர்நேர்வுகள்


**(அ) கொடுகடன் இடர்நேர்வு: மொத்த செயலாற்றமற்ற முற்பணங்களின் விகிதம் 2017இல் பதிவுசெய்யப்பட்ட 5.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2018இல் 7.7 சதவீதத்திற்கு அதிகரித்தது. இது 2015 பெப்புருவரிக்குப் பின்னர் பதிவுசெய்யப்பட்ட மிக உயர்ந்த விகிதமாகும்.** இவ்வதிகரிப்பிற்கு பங்களித்த முக்கிய காரணிகளாக 2017இல் காணப்பட்ட சாதகமற்ற காலநிலைகள் என்பனவும் 2018இல் காணப்பட்ட பொருளாதார நடவடிக்கைகளின் மெதுவான போக்குமே ஆகும். மேலும், ஒதுக்கு உள்ளடக்க விகிதம் 2017இல் பதிவுசெய்யப்பட்ட 64 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2018இல் 57 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இதன்விளைவாக, தேறிய செயலாற்றமற்ற முற்பணங்களின் விகிதமும் 2017இல் பதிவுசெய்யப்பட்ட 1.6 சதவீதத்திலிருந்து 2018இல் 2.4 சதவீதத்திற்கு அதிகரித்து இத்துறையின் சொத்துக்களின் தரம் மோசமடைந்தமைக்கான சமிக்ஞைகளைக் காட்டியது. கடுமையான வானிலை நிலைமைகள் நீடித்தால் மற்றும் 2018 ஒகத்தில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சினால் அறிமுகப்படுத்தப்பட்ட படுகடன் நிவாரண நிகழ்ச்சித்திட்டங்களின் கசியும் தாக்கங்கள் என்பனவற்றின் காரணமாக செயலாற்றமற்ற முற்பணங்கள் மேலும் உயர்வடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9 இன் நடைமுறைப்படுத்தலும் கூட இத்துறைக்கு சவாலாக அமையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

**(ஆ) சந்தை இடர்நேர்வு: உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளும் தொடர்ந்தும் குறைந்தபட்ச சந்தை இடர்நேர்வுகளைக் கொண்டிருந்தமைக்கு வர்த்தகச் சொத்துப்பட்டியல் மற்றும் வெளிநாட்டு நாணயக் கொடுக்கல்வாங்கல்களின் குறைந்தளவு வெளிப்படுத்துகைகளுக்குள்ளாகும் தன்மை காணப்பட்டமையே காரணமாகும்.**

**வட்டி வீத இடர்நேர்வு: இவ்வாண்டுப்பகுதியில் வட்டி வீதங்களில் ஏற்பட்ட படிப்படியான அதிகரிப்புடன் சேர்ந்து இத்துறையின் வட்டிவீத இடர்நேர்வு சிறிதளவு அதிகரித்தது.** இத்துறையின் வட்டி உழைக்கும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் முதிர்ச்சித் தோற்றப்பாட்டில் காணப்பட்ட எதிர்க்கணியமான பொருத்தப்பாடின்மை இத்துறை நேர்க்கணியமான தேறிய வட்டி இலாபத்தினைப் பேணுவதனை இயலுமைப்படுத்தியது.

**பங்கு விலைகள்: இத்துறையில் பங்குரிமை மூலதன இடர்நேர்வு இவ்வாண்டுப்பகுதியில் தொடர்ந்தும் குறைவாக இருந்தமைக்கு பட்டியலிடப்பட்ட பங்குகளில் காணப்பட்ட முதலீட்டு வடிவத்தில் பங்குரிமை மூலதனச் சந்தைக்கான**

வரைபடம் 8.10
உரிமம் பெற்ற நிதிக்கம்பனிகள் / சிறப்பியல்பு வாய்ந்த குத்தகை கம்பனிகள் துறையின் செயற்படா கடன்கள் மற்றும் ஏற்பாட்டு உள்ளடக்கம்




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி


வெளிப்படுத்துகை ரூ.14.3 பில்லியனாக குறைவாக காணப் பட்டமையே காரணமாகும். இவை இத்துறையின் மொத்தச் சொத்துக்களில் 1.0 சதவீதமாக மாத்திரமே காணப்பட்டது.

(இ) திரவத்தன்மை இடர்நேர்வு: 2018இல் இத்துறையில் ஒட்டுமொத்த நியம திரவச் சொத்துக் கிடைப்பனவு குறித்துரைக்கப்பட்ட குறைந்தபட்சத் தேவைப்பாடான ரூ.88.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.25.6 பில்லியன் கொண்ட மிகையுடன் காணப்பட்டது. மிகையான திரவச் சொத்துக்கள் 2017இன் ரூ.35.5 பில்லியன் கொண்ட மிகையான திரவச்சொத்து மட்டங்களுடன் ஒப்பிடுகையில் 2018ஆம் ஆண்டுப்பகுதியில் வீழ்ச்சியடைந்தது. மேலும், மொத்தச் சொத்துக்களுக்கான திரவச் சொத்துக்களின் விகிதம் 2017இன் 8.9 சதவீதத்திலிருந்து 7.6 சதவீதத்திற்கு குறைவடைந்தது. 2018 திசெம்பர் இறுதியிலுள்ளவாறு, வைப்புக்களுக்கான திரவச் சொத்துக்களின் விகிதம் தவணை வைப்புக்கள் மற்றும் கடன்பாடுகளின் 10.0 சதவீதத்தினையும் சேமிப்பு வைப்புக்களின் 15.0 சதவீதத்தினையும் கொண்ட குறைந்தபட்ச நியம தேவைப்பாடுகளைவிட மிக உயர்வாகக் காணப்பட்டது.

## இலாபத்தன்மை மற்றும் மூலதன மூலவளங்கள்

(அ) இலாபத்தன்மை: துறையின் தேறிய வட்டி வருமானம் 2017இலும் பார்க்க மெதுவான வீதத்தில் அதிகரித்து, ரூ.108.8 பில்லியனுக்கு 6 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தது. இதற்கு வட்டி வருமானம் 4.3 சதவீதத்தினாலும் வட்டிச் செலவினங்கள் 2.9 சதவீதத்தினாலும் அதிகரித்தமையே முக்கிய காரணமாகும். இதன் விளைவாக, துறையின் தேறிய வட்டி இலாபம் (சராசரிச் சொத்துக்களின் சதவீதமாக தேறிய வட்டி வருமானம்) 2017இன் 7.7 சதவீதத்திலிருந்து 2018இல் 7.4 சதவீதத்திற்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. வட்டியல்லா வருமானம் 11.9 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு செலுத்தத் தவறிய கட்டணங்களிலும் ஏனைய பணிக் கட்டணங்களிலும் ஏற்பட்ட அதிகரிப்புக்கள் முக்கிய காரணமாக இருந்த வேளையில்

வரைபடம் 8.11
உரிமம் பெற்ற நிதிக்கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் துறையின் ஒழுங்குமுறைப்படுத்தல் திரவச்சொத்துக்கள்





அட்டவணை 8.12
உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் / சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் துறையின் வருமானம் மற்றும் செலவுகளின் உள்ளடக்கம்

| விடயம் | 2017 | | 2018 (அ) | |
|---|---|---|---|---|
| | தொகை (ரூ.பில்) | சராசரிச் சொத்துக்களின் சதவீதமாக | தொகை (ரூ.பில்) | சராசரிச் சொத்துக்களின் சதவீதமாக |
| வட்டி வருமானம் | 231.5 | 17.3 | 241.5 | 16.5 |
| வட்டிச் செலவினம் | 128.9 | 9.6 | 132.6 | 9.1 |
| தேறிய வட்டி வருமானம் | 102.7 | 7.7 | 108.8 | 7.4 |
| வட்டியல்லா வருமானம் | 34.0 | 2.5 | 38.1 | 2.6 |
| வட்டியல்லா செலவினம் | 80.0 | 6.0 | 81.2 | 5.5 |
| கடன் இழப்பீட்டு ஏற்பாடுகள் (தேறிய)) | 13.5 | 1.0 | 25.9 | 1.8 |
| **வரிக்கு முன்னதான இலாபம்** | **43.2** | **3.2** | **39.7** | **2.7** |
| **வரிக்குப் பின்னரான இலாபம்** | **25.8** | **1.9** | **21.4** | **1.5** |

(அ) தற்காலிகமானது
மூலம் : இலங்கை மத்திய வங்கி

வட்டியல்லா செலவினங்கள் 1.5 சதவீதத்தினால் அதிகரித்து துறையின் இலாபத்தன்மையினை மோசமாகப் பாதித்தமைக்கு அலுவலர் செலவுகளில் ஏற்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாகும். செயற்படாக் கடன்களுக்கெதிரான கடன் இழப்பிற்காக செய்யப்பட்ட ஒதுக்குகள் 2017இல் செய்யப்பட்ட ரூ.13.5 பில்லியன் கொண்ட ஒதுக்கத்துடன் ஒப்பிடுகையில் 2018ஆம் ஆண்டுப்பகுதியில் ரூ.12.4 பில்லியனுக்கு அதிகரித்தன. இத்துறையானது, 2017ஆம் ஆண்டுப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட இலாபத்துடன் ஒப்பிடுகையில் வரிக்குப் பின்னரான இலாபம் 21.4 பில்லியனாக விளங்கி 17.2 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைக் காட்டியமைக்கு அதிகரித்த நிதியிடல் செலவும் உயர்ந்த கடன் இழப்பு ஒதுக்கங்களுமே முக்கிய காரணங்களாகும். இவ்வாண்டுப்பகுதியில் சொத்துக்கள் மீதான வருவாய் 51 அடிப்படைப் புள்ளிகளினால் வீழ்ச்சியடைந்து 2.7 சதவீதமான விகிதமொன்றினைப் பதிவுசெய்துடன் உரிமை மூலதனம் மீதான வருவாய் விதமானது, ஏறத்தாழ 400 அடிப்படைப் புள்ளிகளினால் வீழ்ச்சியடைந்து 12.1 சதவீதம் கொண்ட வீதமொன்றினைப் பதிவுசெய்தது. இது துறையின் இலாபத்தன்மை தொடர்பில் அழுத்தமொன்றிற்கான சமிக்ஞைகளைக் காட்டியது.

வரைபடம் 8.12
உரிமம் பெற்ற நிதிக்கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் துறையின் இலாபக் குறிகாட்டிகள்





*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

**(ஆ) மூலதனம்: இவ்வாண்டுப்பகுதியில் துறையானது அதன் ஒட்டுமொத்த மூலதன மட்டத்தினைக் குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடுகளுக்கும் மிக மேலே பேணியதுடன் உணரப்படக்கூடிய எந்தவொரு மோசமான அதிர்வுகளுக்கும் தாக்குப்பிடிக்கக்கூடிய தன்மையினையும் அதிகரித்துக்கொண்டது.** மொத்த ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனமட்டங்கள் 2017இல் பதிவுசெய்யப்பட்ட எண்தொகைகளுடன் ஒப்பிடுகையில் 2018இல் ரூ.15.5 பில்லியனால் மேம்பட்டமைக்கு இலங்கை மத்திய வங்கியின் குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடுகள் 2018 சனவரி 01 இலிருந்து ரூ. 1 பில்லியனுக்கும் 2019 சனவரி 01 இலிருந்து ரூ.1.5 பில்லியனுக்கும் உயர்த்தப்பட்டமையே முக்கிய காரணமாகும்.

**எனினும், துறையின் மைய மூலதனம் மற்றும் மொத்த இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதன விகிதமும் 2017இல் பதிவுசெய்யப்பட்ட மட்டங்களான 12.4 சதவீதம் மற்றும் 13.1 சதவீதத்திலிருந்து 2018இல் 9.9 சதவீதத்திற்கும் 11.2 சதவீதத்திற்கும் வீழ்ச்சியடைந்தமைக்கு புதிய மூலதன போதுமாந்தன்மைக் கட்டமைப்பின் கீழ் கொடுகடன் இடர்நேர்வு மற்றும் தொழிற்பாட்டு இடர்நேர்வுகளை உள்ளடக்குகின்ற விதத்தில் கம்பனிகள் கூடுதலான இடர்நேர்வு உணர்வுகளைக் கொண்ட இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களை அறிக்கையிடவேண்டியிருந்தமையே காரணமாகும்.** புதிய மூலதன போதுமைக் கட்டமைப்பின் கீழ், 2018 யூலை 01 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் குறைந்தபட்சம் 6 சதவீதம் கொண்ட அடுக்கு I மூலதனப் போதுமாந்தன்மை விகிதத்தினையும் 10 சதவீதம் கொண்ட மொத்த மூலதன விகிதத்தினையும் பேணவேண்டுமென தேவைப்படுத்தப்பட்டன. ஒழுங்கு முறைப்படுத்தல் மூலதனமானது அடுக்கு I மற்றும் அடுக்கு II மூலனத்தினை உள்ளடக்கியிருப்பதுடன் இதில் அடுக்கு I மூலதனம் மொத்த ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனத்தில் 97 சதவீதத்திற்குப் பங்களித்தது. அடுக்கு I மூலதனம் முக்கியமாக

வரைபடம் 8.13

உரிமம் பெற்ற நிதிக்கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் துறையின் இடர்நேர் நிறையேற்றப்பட்ட சொத்துக்கள் மற்றும் மூலதனப் போதுமாந்தன்மை




* 2018 யூலையிலிருந்து மைய மூமூலதன வீதத்தின் ஆகக் குறைந்த தேவைப்பாடு 5%இல் இருந்து 6%ஆக அதிகரிக்கப்பட்டது.

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 8.13

உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் / சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் துறையின் ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனத்தின் உள்ளடக்கம்

| விடயம் | தொகை (ரூ.பில்) | | உள்ளடக்கம் (%) | |
|---|---|---|---|---|
| | 2017 (அ) | 2018 (ஆ) | 2017 (அ) | 2018 (ஆ) |
| **அடுக்கு I : மைய மூலதனம்** | **139.3** | **156.0** | **100.0** | **100.0** |
| குறித்துரைக்கப்பட்ட மூலதனம் | 66.4 | 71.8 | 47.7 | 46.0 |
| திரளாத மற்றும் மீட்க முடியாத முன்னுரிமைப் பங்குகள் | 0.1 | 0.1 | 0.1 | 0.1 |
| நியதி ஒதுக்கு நிதிகள் | 19.1 | 22.3 | 13.7 | 14.3 |
| பொது மற்றும் ஏனைய கட்டற்ற ஒதுக்குகள் | 28.0 | 31.0 | 20.1 | 19.9 |
| ஏனையவை | 25.7 | 30.7 | 18.5 | 19.7 |
| **அடுக்கு II : துணை மூலதனம்** | **17.1** | **22.6** | **100.0** | **100.0** |
| தகுதியுடைய மீள்மதிப்பீட்டு ஒதுக்குகள் | 2.3 | 2.3 | 13.4 | 10.3 |
| பொது ஏற்பாடுகள் | 0.5 | 5.7 | 2.9 | 25.4 |
| அடுக்கு 2 மூலதனமாக தகுதியுடைய சாதனங்கள் | 14.6 | 14.4 | 85.1 | 63.9 |
| ஏனையவை | -0.2 | 0.0 | -1.4 | 0.0 |
| **ஒழுங்குமுறைப்படுத்தல் சீராக்கங்கள்** | **-11.1** | **-17.6** | | |
| **மொத்த ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனத் தளம்** | **145.3** | **160.8** | | |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

குறிப்பு: 2017 இற்கான ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனமானது 2006இன் 2ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் பணிப்புரை (இடர்நேர் நிறையேற்றப்பட்ட மூலதனப் போதுமான தன்மை விகிதம்) மற்றும் 2011இன் 1ஆம் இலக்க நிதிக் குத்தகைப் பணிப்புரையை (இடர்நேர் நிறையேற்றப்பட்ட மூலதனப் போதுமான தன்மை விகிதம்) அடிப்படையாகக் கொண்டது. 2018இற்கான ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனமானது 2018இன் 3ஆம் இலக்க நிதி வியாபார சட்டப் பணிப்பரை (மூலதன போதுமை தேவைப்பாடுகள்) மற்றும் 2018இன் 3ஆம் இலக்க நிதிக் குத்தகைச் சட்டப் பணிப்புரையை (மூலதன போதுமை தேவைப்பாடுகள்) அடிப்படையாகக் கொண்டது.

வழங்கப்பட்ட பங்கு மூலதனம், நியதி ஒதுக்கு நிதியம் மற்றும் வெளியிடப்பட்ட பிடித்துவைக்கப்பட்ட இலாபம் என்பனவற்றை உள்ளடக்கியுள்ளது. அடுக்கு II மூலதனத்தின் 63.9 சதவீதம் கீழ் நிலைப்படுத்தப்பட்ட காலப் படுகடனை உள்ளடக்கியிருந்த வேளையில், மீள்மதிப்பீட்டு ஒதுக்குகள் 10.3 சதவீதத்தினை பிரசன்னப்படுத்தின. எனினும், ஒரு சில கம்பனிகள் 2019 சனவரி 01 அளவில் ரூ.1.5 பில்லியன் கொண்ட குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடுகளுக்குக் கீழே காணப்பட்டமைக்கு பலயீனமான நிதியியல் நிலைமைகள் பேணப்பட்டமையும் பணிப்புரைகளுக்கு அவை இணங்கியொழுகும்வரை அக்கம்பனிகளுக்கெதிராக எடுக்கப்பட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கைகளுமே காரணமாகும்.

## மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் அபிவிருத்திகள்

**2018ஆம் ஆண்டு முழுவதும் இலங்கை மத்திய வங்கி இத்துறையின் உறுதிப்பாட்டினையும் ஆற்றல் வாய்ந்த தன்மையினையும் அதிகரிக்கும் நோக்குடனும் இத்துறையில் வாடிக்கையாளர் நம்பிக்கையினை அதிகரிக்கும் விதத்திலும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளினதும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளினதும் மேற்பார்வையினையும் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினையும் வலுப்படுத்துவதற்காக பல கொள்கை வழிமுறைகளை முன்னெடுத்தது.** நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்பானது பணிப்புரையொன்றின் வடிவில் விடுக்கப்பட்டது. இது வெளிப்படுத்துகை மற்றும் வெளிப்படைத்தன்மை, நிதியியல் அறிவு மற்றும் விழிப்புணர்வு, பொறுப்புவாய்ந்த வியாபார நடத்தை முறைப்பாடுகளைக் கையாளல் மற்றும் நிவாரணம் வழங்கல்,

சமத்துவமாகவும் நீதியான முறையிலும் நடாத்துதல் மற்றும் வாடிக்கையாளர் தரவுகளையும் இரகசியங்களையும் பாதுகாத்தல் ஆகிய துறைகளில் வாடிக்கையாளர் பாதுகாப்பிற்கான குறைந்தபட்ச நியமங்களை வலியுறுத்துகின்றது. அசையா சொத்துக்கள் தொடர்பில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளினதும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளினதும் மதிப்பீட்டு நடவடிக்கைகளை ஒழுங்குமுறைப்படுத்துவதற்காக பணிப்புரையொன்று விடுக்கப்பட்டது. மேலும், இடர்நேர்வு முகாமைத்துவத்தின் மீது வலுவான வலியுறுத்தல்களை பேணும் நோக்குடனும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறிப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் இடர்நேர்வு மதிப்பீட்டு இயலாற்றல்களில் தற்பொழுது இடம்பெற்றுவரும் முன்னேற்றங்களை ஊக்குவிக்கும்பொருட்டும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்காக புதிய மூலதன போதுமைக் கட்டமைப்பொன்று நடைமுறைப்படுத்தப்பட்டது. மைய வியாபாரச் செயற்பாடுகளை/ தொழிற்பாடுகளை மற்றும் நடவடிக்கைகளை வெளியிலிருந்து பெற்றுக்கொள்வது தொடர்பில் எழக்கூடிய இடர்நேர்வுகளை முகாமைப்படுத்துவதற்கும் அவற்றின் மீதான கட்டுப்பாடுகளை விதிப்பதற்கும் இடர்நேர்வு முகாமைத்துவ வழிகாட்டலொன்றினை அறிமுகப்படுத்துவதன் மூலம் வெளியிலிருந்து பணிகளைப் பெற்றுக்கொள்ளும் ஒழுங்குகளை நியமப்படுத்துவதற்கும் வெளியிலிருந்து வியாபாரத் தொழிற்பாடுகளைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் புதிய பணிப்புரையொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. நுண்பாக நிதிக் கடன்களுக்காக மிகையான வட்டி வீதங்களை விதிப்பதிலிருந்தும் வாடிக்கையாளர்களை பாதுகாத்துக்கொள்ளும் குறிக்கோளுடன் நுண்பாக நிதிக் கடன்கள் மீது உயர்ந்தபட்ச வட்டி வீதங்களை விதிப்பது தொடர்பில் புதிய பணிப்புரையொன்று உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கும் அறிமுகப்படுத்தப்பட்டது. இறக்குமதிகளையும் அதன் விளைவாக செலாவணி வீதத்தின் மீது ஏற்படக்கூடிய மோசமான தாக்கங்களையும் கட்டுப்படுத்துவதற்காக பெறுமதிக்கான கடன் விகிதம் மேலும் திருத்தப்பட்டதுடன் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் 2018 ஒத்தோபர் 01ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் புதிய விகிதமொன்றினை பின்பற்ற வேண்டுமெனவும் கேட்டுக்கொள்ளப்பட்டன. 2018 மாச்சில் விடுக்கப்பட்ட சுற்றறிக்கையொன்று, உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் இலங்கை மத்திய வங்கியினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொடுகடன் தரமிடல் முகவரொருவரிடமிருந்து கொடுகடன் தரமிடலை பெற்றுக்கொள்ள வேண்டுமெனவும் 2018 ஒத்தோபர் 01இல் இருந்து அத்தகைய தரமிடலை வெளியிடவேண்டுமெனவும் கேட்டுக்கொண்டது.

## அரச பிணையங்களின் முதனிலை வணிகர்கள்

**2018இன் இறுதியில் 7 உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளும் 8 கம்பனிகளும் முதனிலை வணிகர்களாக நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.** அவர்களுள் பேர்பெட்சுவல் றெசரீஸ் லிமிடெட் மற்றும் பான் ஏசியா பாங்கிங் கோப்பரேசன் என்பன முதனிலை வணிகர் வியாபாரத்தினையும் நடவடிக்கைகளையும் மேற்கொள்வதிலிருந்தும் (பேர்பெட்சுவல் 2017.07.06 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்திலும் பான் ஏசியா பாங்கிங் கோப்பிரேசன் 2017.08.15 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்திலும்) இடை நிறுத்தப்பட்டுள்ளன. என்றஸ்ட் செக்குறிட்டீஸ் பிஎல்சி 2017.07.24 இலிருந்து அரச பிணையங்கள் முதலாந்தர ஏலங்களில் பங்கேற்பதிலிருந்தும் தடைசெய்யப்பட்டிருக்கிறது. (என்றஸ்ட் செக்குறிட்டீஸ் பிஎல்சி மீதான தீர்மான நடவடிக்கையும் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது) ஆகவே, தற்பொழுது 6 உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளும் 6 முதனிலை வணிகர் கம்பனிகளும் அரச பிணையங்கள் சந்தையில் முதனிலை வணிகர் தொழில்துறையில் ஈடுபட்டு வருகின்றன.

## சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்

**2018இல் முதனிலை வணிகர் கம்பனிகளின் மொத்தச் சொத்துக்கள் ரூ.83.6 பில்லியனுக்கு அதிகரித்து சொத்துக்களின் வளர்ச்சி 2017இன் 0.3 சதவீதத்திலிருந்து 2018இல் 8.1 சதவீதத்திற்கு உயர்த்தியது.** வர்த்தகப்படுத்தல் விற்பனைக்கு கிடைக்கத்தக்கவை மற்றும் முதிர்ச்சிக்காக வைத்திருக்கப்படுபவை என்பனவற்றை உள்ளடக்கிய அரச பிணையங்களின் மொத்த முதலீட்டு சொத்துப்பட்டியல் 2018 இறுதியில் ரூ.76.7 பில்லியனாக விளங்கி, 2017இனைவிட 22.6 சதவீதம் கொண்ட அதிகரிப்பினை பதிவுசெய்தது. இம்மாற்றத்திற்கு அரச பிணையங்களின் வர்த்தகப்படுத்தல் சொத்துப்பட்டியலிலும் விற்பனைக்காக கிடைக்கத்தக்க சொத்துப்பட்டியலிலும் ஏற்பட்ட அதிகரிப்பே காரணமாகும். வர்த்தகப்படுத்தல் சொத்துப்பட்டியல் 2017 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.50.9 பில்லியனிலிருந்து 2018 இறுதியளவில் ரூ.62.8 பில்லியனுக்கும் விற்பனைக்கு கிடைக்கத்தக்க சொத்துப்பட்டியல் 2017 இறுதியில் ரூ.3.0 பில்லயனுடன் ஒப்பிடுகையில் 2018ஆம் ஆண்டுப்பகுதியில் ரூ.5.2 பில்லியனுக்கு அதிகரித்தன. முதிர்ச்சிவரை வைத்திருக்கப்படும் சொத்துப்பட்டியல் 2017 இறுதியில் 0.7 சதவீதத்தால் ரூ.8.6 பில்லியனிலிருந்து 2018 இறுதியில் ரூ.8.7 பில்லியனுக்கு சிறிதளவால் அதிகரித்துள்ளது.

**இலாபத்தன்மை: 2018 காலப்பகுதியில் முதனிலை வணிகர் கம்பனிகளின் வரிக்குப் பின்னரான இலாபம் 2017ஆம் ஆண்டுப்பகுதியின் ரூ.2.8 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.0.2 பில்லியனாக விளங்கி, சந்தை வீழ்ச்சியொன்றினை பதிவுசெய்தது.** அரச பிணையங்களிலிருந்து தோன்றிய குறிப்பிடத்தக்க மீள் மதிப்பீட்டு இழப்புக்களே இவ்விலாபத்தின் வீழ்ச்சிக்குப் பங்களித்தன. இதன் விளைவாக, முதனிலை வணிகர்களுக்கான சொத்துக்கள் மீதான வருவாயும் பங்குரிமை மூலதனத்தின் மீதான வருவாயும் 2017இல் பதிவுசெய்யப்பட்ட 4.2 சதவீதத்திலிருந்தும் 12.9 சதவீதத்திலிருந்தும் 2018 இறுதியில் முறையே 0.02 சதவீதத்திற்கும் 2.0 சதவீதத்திற்கும் வீழ்ச்சியடைந்தன.

அட்டவணை 8.14
முதனிலை வணிகர் கம்பனிகளின் செயலாற்றம்

| விடயம் | 2017 | 2018 (அ) | ரூபா பில்லியன் ஆண்டு வளர்ச்சி வீதம் (%) 2017 | 2018 (அ) |
|---|---|---|---|---|
| மொத்தச் சொத்துக்கள் | 77.3 | 83.6 | 0.3 | 8.1 |
| **மொத்தச் முதலீட்டுப்பட்டியல்** | 62.6 | 76.7 | 33.4 | 22.6 |
| வணிகப்படுத்துகின்ற பிணையங்கள் | 50.9 | 62.8 | 34.0 | 23.3 |
| முதிர்ச்சி வரை வைத்திருக்கப்படுபவை | 8.6 | 8.7 | 45.8 | 0.7 |
| விற்பனைக்கு கிடைக்கக்கூடியவை | 3.0 | 5.2 | 0.6 | 74.2 |
| நேர்மாற்று மீள்கொள்வனவு | 13.4 | 4.3 | -31.9 | -67.6 |
| பங்குரிமை மூலதனம் மற்றும் பொறுப்புக்கள் | 77.3 | 83.6 | 0.3 | 8.1 |
| மொத்த மூலதனம் | 23.1 | 11.5 | 10.2 | -50.1 |
| மீள்கொள்வனவு | 52.5 | 68.7 | -3.8 | 30.7 |
| வரிக்கு முன்னரான இலாபம் | 3.2 | -0.1 | -62.7 | -100.4 |
| வரிக்கு பின்னரான இலாபம் | 2.8 | 0.2 | -66.7 | -92.2 |
| சொத்துக்கள் மீதான வருவாய் (%) | 4.2 | 0.02 | 4.2 | -4.2 |
| பங்குரிமை மூலதனம் மீதான வருவாய் (%) | 12.9 | 2.0 | 39.2 | 10.9 |
| இடர்தேர்வு நிறையேற்றப்பட்ட மூலதனப் போதுமாந்தன்மை விகிதம் (%) | 55.9 | 21.3 | -5.6 | -34.6 |
| முடுக்கி தடவைகள் | 2.3 | 6.0 | -12.7 | 161.9 |
| வணிகப்படுத்தல்கள் | 8,897.1 | 9,965.5 | -20.9 | -10.9 |
| முதலாந்தரச் சந்தை வணிகப்படுத்தல்கள் | 485.6 | 436.3 | 13.1 | 10.2 |
| இரண்டாந்தரச் சந்தை வணிகப்படுத்தல்கள் | 8,411.5 | 7,529.2 | -22.3 | -10.5 |
| உடனடிக் கொள்வனவுகள் | 443.9 | 456.9 | -38.4 | 2.9 |
| உடனடி விற்பனைகள் | 806.6 | 826.0 | -30.2 | 2.4 |
| மீள் கொள்வனவு, நேர்மாற்று மீள் கொள்வனவு | 7,160.9 | 6,246.3 | -19.9 | -12.8 |

(அ) தற்காலிகமானது *மூலம்:* இலங்கை மத்திய வங்கி

குறிப்பு : 1. அனுமதியளிக்கப்பட்ட வணிகவங்கிகளின் முதன்மை வணிகர் அலகுகளின் செயலாற்றம் வங்கித்தொழில் துறையின் செயலாற்றத்தினுள் உள்ளடக்கப்பட்டு உள்ளமையால் அவை நீங்கலாக
2. என்றஸ்ட் செக்குறிட்டீஸ் (பிஎ்ரி) இனது நிதியில்கள் நீங்கலாக
3. பெப்பசுவல் டொரரில் லிமிட் இனது 2018ற்கான நிதிதரகர் நீங்கலாக

**மூலதனம்: முதனிலை வணிகர் கம்பனிகளின் பங்குரிமை மூலதனம் 50.1 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு முதனிலை வணிகர் கம்பனியொன்று இடைநிறுத்தப்பட்டமையும் மொத்தச் சொத்து வளர்ச்சிக்கு நிதியிட மீள்கொள்வனவு கடன்பாடுகளில் கவனம் செலுத்தப்பட்டமையே பெருமளவிற்குக் காரணமாகும்.** முதனிலை வணிகர்களின் இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதனப் போதுமை விகிதம் 10 சதவீதம் கொண்ட குறைந்தபட்ச இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதனப் போதுமை விகிதத்திற்கு மேலாக காணப்பட்ட போதும் 2017 இறுதியின் 55.9 சதவீதத்திலிருந்து 2018 இறுதியில் 21.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

## இடர்நேர்விற்கான வெளிப்படுத்துகை

**சந்தை இடர்நேர்வு: முதனிலை வணிகர் கம்பனிகளின் மொத்த முதலீட்டுச் சொத்துப்பட்டியலுக்கான வர்த்தகப்படுத்தல் சொத்துப்பட்டியலின் விகிதம் குறிப்பிடத்தக்களவிற்கு மாற்றமடையாமல் இருந்ததுடன் 2017 இறுதியின் 81.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2018 இறுதியில் 81.9 சதவீதத்தில் பதிவுசெய்யப்பட்டு இத்தொழில் துறையின் சந்தை இடர்நேர்வு வெளிப்படுத்துகையில் சிறிதளவு அதிகரிப்பினைப் பிரதிபலித்தது.**

**திரவத்தன்மை இடர்நேர்வு: முதனிலை வணிகர் கம்பனிகளின் ஒட்டுமொத்த திரவத்தன்மை இடர்நேர்வு வெளிப்படுத்துகை அதிகரித்தமைக்கு, 2018 இறுதியில் இத்தொழில் துறையின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் முதிர்ச்சிச் சொத்துப்பட்டியலில் காணப்பட்ட ஓரிரவு எதிர்க்கணிய பொருத்தப்பாடின்மையில் ஏற்பட்ட அதிகரிப்பே காரணமாகும். ஓரிரவு எதிர்க்கணிய பொருத்தப்பாடின்மை 2017 இறுதியில் ரூ.1.08 பில்லியன் அல்லது 9.5 சதவீதத்திலிருந்து 2018 இறுதியில் ஓரிரவுப் பொறுப்புக்களின் ரூ.41.3 பில்லியனுக்கு அல்லது 92.8 சதவீதத்திற்கு குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தது.** முதனிலை வணிகர் கம்பனிகளின் வசமிருந்த இடர்நேர்வற்ற அரச பிணையங்களின் பெருமளவில் இருந்தமையினையும் எதிர்பார்க்கப்படாத ஏதேனும் திரவத்தன்மை இடைவெளிகளை நிரப்புவதற்கு நிதிகளைப் பெற்றுக்கொள்ள அதனை பிணையமாகப் பயன்படுத்த முடிவதனையும் கருத்திற்கொள்கையில் திரவத்தன்மை பிரச்சனையினை எதிர்நோக்குகின்ற ஒரு முதனிலை வணிகர் தவிர மற்றைய முதனிலை வணிகர் கம்பனிகளின் திரவத்தன்மை இடர்நேர்வுத் தோற்றப்பாடு ஆண்டு முழுவதும் குறைவாகவே காணப்பட்டது. பெரும்பாலான முதனிலை வணிகர் கம்பனிகளின் ஏதேனும் திரவத்தன்மை இடைவெளியினை நிரப்புவதற்கு எதிர்பாராத துணைநில் நிதியிடல் ஒழுங்குகளை கொண்டிருக்கின்றனர்.


## சந்தைப் பங்கேற்பு

**முதலாந்தரச் சந்தை நடவடிக்கைகள்: திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகள் தொடர்பில் முதலாந்தரச் சந்தை ஏலங்களில் முதனிலை வணிகர்களின் பங்கேற்பு கலப்பான செயலாற்றத்தினைக் காட்டியது.** 2018இல் நடத்தப் பெற்ற மொத்தத் திறைசேரி உண்டியல் ஏலங்களிலிருந்து ஏற்றுக்கொள்ளப்பட்ட (51) மொத்த விலைக் குறிப்பீட்டில் வங்கி, முதனிலை வணிகர் கம்பனிகள் தனியான முதனிலை வணிகர்கள் மற்றும் ஊழியர் சேம நிதியம் என்பனவற்றின் பங்கேற்பு முறையே 70.5 சதவீதமாகவும் 25.6 சதவீதமாகவும் 3.8 சதவீதமாகவும் காணப்பட்டன. எனினும், 2018இல் திறைசேரி முறிகளின் ஏலங்களின் பங்கேற்பில் ஊழியர் சேம நிதியம் ஆதிக்கத்தினைப் பெற்றுக் காணப்பட்டதுடன் 2018இல் நடத்தப்பட்ட 11 ஏலங்களூடாக ஏற்றுக்கொள்ளப்பட்ட மொத்த முறிகளில் 46.3 சதவீதப் பங்கினைக் கொண்டிருந்தது.

**இரண்டாந்தரச் சந்தை நடவடிக்கைகள்: அரச பிணையங்களில் இரண்டாந்தரச் சந்தைக் கொடுக்கல் வாங்கல்கள் 2017 உடன் ஒப்பிடுகையில் 2018ஆம் ஆண்டுப் பகுதியில் ரூ.7,529.2 பில்லியனுக்கு 10.5 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தது.** இதில் மீள் கொள்வனவு கொடுக்கல் வாங்கல்கள் 2018இன் இரண்டாந்தரச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்களின் மொத்த அளவில் 82.9 சதவீதத்திற்கு வகைகூறின. 2018ஆம் ஆண்டுப்பகுதியில் உடனடிக் கொள்வனவுகள் மற்றும் உடனடி விற்பனைகள்

8

வரைபடம் 8.14
தேறிய சொத்து பெறுமதி அடிப்படையில் நம்பிக்கை பொறுப்புகள் துறையின் வகைப்படுத்தல்கள்




ஏனையவை : சறியா நிதியங்கள் 0.7%, குறிகாட்டி நிதியங்கள் 0.1%, ஆரம்ப பொதுவழங்கல் நிதியங்கள் மற்றும் டொலர் நிதியங்கள்

*மூலம்:* இலங்கை கூறு நம்பிக்கைகளின் சங்கம்

2017ஆம் ஆண்டின் பெறுமதியுடன் ஒப்பிடுகையில் முறையே 2.9 சதவீதத்தினாலும் 2.4 சதவீதத்தினாலும் அதிகரித்தன.

## கூறுநம்பிக்கைகள்

**ஆண்டுகாலப்பகுதியில் 4 நிதியங்களால் குறைந்து 2018இன் இறுதியில் 75 கூறுநம்பிக்கைகள் நடவடிக்கையிலிருந்தன.** 2018இல் கூறுநம்பிக்கை முகாமைத்துவக் கம்பனிகள் 14 ஆகவே இருந்தது. இந்த 75 மொத்த கூறுநம்பிக்கைகளில் 16 வருமான நிதியங்களாகவும் 15 பணச் சந்தை நிதியங்களாகவும் 14 உயர் பாதுகாப்பு நிதியங்களாகவும் 11 சமநிலை நிதியங்களாகவும் 8 பங்கு வளர்ச்சி நிதியங்களாகவும் 4 சுட்டெண் நிதியங்களாகவும் 4 சறியா நிதியங்களாகவும் 2 ஆரம்ப பொதுமக்களுக்கான வழங்கல் நிதியங்களாகவும் மற்றும் 1 டொலர் முறி நிதியமாகவும் தொழிற்பட்டன.

## வியாபார வளர்ச்சி

**2018 ஆண்டு காலப்பகுதியில் கூறுநம்பிக்கைத் துறையின் சொத்துக்கள் குறைவடைந்தது அவதானிக்கப்பட்டதுடன் 2018இன் இறுதியில் 101 சதவீதத்தால் குறைவடைந்து ரூ.64.2 மில்லியனாகியது.** அதேவேளையில், 2017இன் 7,683 கூறுவழங்கல்களுடன் ஒப்பிடுகையில் 2018இல் கூறுவழங்கல்கள் 3,368 இற்குக் குறைவடைந்தது. எவ்வாறாயிலும், கூறுநம்பிக்கை உடமையாளர்கள் 2017இன் 41,037 இலிருந்து 2018இல் 42,093 இற்கு சிறிதாக அதிகரித்துள்ளது. தேறிய சொத்துப் பெறுமதியானது 2017இன் ரூ.128.8 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2018இல் இறுதியில் ரூ.64.2 பில்லியனுக்கு குறிப்பிடத்தக்களவில் குறைவடைந்தது.

## முதலீடுகள்

8

**2018 ஆண்டு காலப்பகுதியில் அரச பிணையங்களின் மீதான முதலீடு குறிப்பிடத்தக்களவு குறைவடைந்தமை அவதானிக்கப்பட்டுள்ளது.** அரச பிணையங்களின் மீதான முதலீட்டுப் பங்கு 2017 இறுதியின் 17.7 சதவீதத்திலிருந்து 2018இல் 3.8 சதவீதத்திற்கு குறைவடைந்தது. அரச பிணையங்களின் மீதான முதலீடு 2017 இறுதியின் ரூ.22.5 பில்லியனிலிருந்து 2018இன் இறுதியில் ரூ.2.5 பில்லியனாக 88.9 சதவீதத்தால் கணிசமானளவு குறைவடைந்தது. 2018 இறுதியில் பங்கு மூலதனத்தின் மீதான முதலீடும்கூட 27.0 சதவீதத்தால் குறைவடைந்தது.

அட்டவணை 8.15
கூறு நம்பிக்கைகள் துறையின் செயலாற்றம்

| விபரம் | 2017(அ) | 2018(ஆ) |
|---|---|---|
| கூறு நம்பிக்கைகளின் எண்ணிக்கை | 79 | 75 |
| கூறு உடைமையாளர்களின் மொத்த எண்ணிக்கை | 41,037 | 42,093 |
| வழங்கலில் உள்ள கூறுகளின் எண்ணிக்கை (பில்) | 7,638 | 3,368 |
| மொத்தச் சொத்துக்கள் (ரூ. பில்) | 128.8 | 64.2 |
| தேறிய சொத்து பெறுமதி (ரூ. பில்) | 127.6 | 64.2 |
| பங்குரிமை மூலதனத்திலான முதலீடுகள் (ரூ. பில்) | 13.0 | 9.5 |
| மொத்த தேறிய சொத்துக்களின் பங்கு (%) | 10.2 | 14.7 |
| அரச பிணையங்களிலான முதலீடுகள் (ரூ.பில்) | 22.5 | 2.5 |
| மொத்தச் சொத்துக்களின் பங்கு (%) | 17.7 | 3.8 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

*மூலம்:* இலங்கை கூறு நம்பிக்கைகளின் சங்கம்

## காப்புறுதித் துறை

**2018 காலப்பகுதியில் காப்புறுதித் துறையானது சொத்துக்களின் அடிப்படையில் சிறிதளவு வளர்ச்சியைப் பதிவுசெய்துள்ளது.** 2018 இறுதியில், மொத்தமாக 26 காப்புறுதிக் கம்பனிகள் இயங்கியிருக்கின்றன. இவற்றுள் 12 கம்பனிகள் பிரத்தியேக பொதுக் காப்புறுதி வியாபாரத்தை மேற்கொள்கின்ற கம்பனிகளாக இயங்கியுள்ளதுடன் 12 கம்பனிகள் பிரத்தியேக நீண்டகால காப்புறுதி வியாபாரத்தை மேற்கொள்கின்ற கம்பனிகளாகவும் 2 கம்பனிகள் நீண்டகாலம் மற்றும் பொதுக் காப்புறுதி ஆகிய இரண்டு வியாபாரங்களையும் மேற்கொள்கின்ற கம்பனிகளாக இயங்கியுள்ளன. 2018இல் 9 காப்புறுதிக் கம்பனிகள் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் தொடர்ந்தும் பட்டியலிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. மேலும், 2018இல் 2 புதிய கம்பனிகள் இத்துறையில் இணைந்த அதேநேரம் 2018இல் 63 காப்புறுதித் தரகுக் கம்பனிகள் இருந்தன. இக்காப்புறுதித் தரகுக் கம்பனிகள் பிரத்தியேகமாக பொதுக் காப்புறுதி வியாபாரத்தை மேற்கொள்பவையாகவோ அல்லது நீண்ட மற்றும் பொதுக் காப்புறுதி ஆகிய இரண்டு வியாபாரத்தையும் மேற்கொள்பவையாகவோ உள்ளன.

## வியாபார வளர்ச்சி

**2018 இறுதியில் காப்புறுதித் துறையின் சொத்து 7.4 சதவீதத்தால் 2017 இறுதியின் ரூ.564.9 பில்லியனிலிருந்து ரூ.606.6 பில்லியனிற்கு சிறிதளவால் அதிகரித்தது. 2018 இறுதியில் நீண்டகால உபகாப்புறுதித் துறை 9.4 சதவீத வளர்சிடையந்ததுடன் சொத்துத் தளம் ரூ.429.4 பில்லியனை அடைந்துள்ளதுடன் பொதுக்காப்புறுதி உபதுறை 2.7 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்ததுடன் 2018 இறுதியில் ரூ.177.1 பில்லியன் சொத்துத்தளத்தை அடைந்தது.**

அட்டவணை 8.16
**காப்புறுதித்துறையின் செயலாற்றம்**

ரூபா பில்லியன்

| விடயம் | 2017 (அ) | 2018 (ஆ) |
|---|---|---|
| மொத்தச் சொத்துக்கள் | 564.9 | 606.6 |
| அரச பிணையங்கள் | 218.6 | 217.6 |
| பங்குரிமை மூலதனம் | 49.2 | 42.6 |
| காசு மற்றும் வைப்புக்கள் | 64.8 | 94.3 |
| மொத்த வருமானம் | 201.9 | 221.2 |
| கட்டுப்பண வருமானம் | 160.4 | 176.2 |
| முதலீட்டு வருமானம் | 41.5 | 45.0 |
| வரிக்கு முன்னரான இலாபம் | 47.8 | 29.5 |
| மூலதன போதுமாந்தன்மை விகிதம் (இ)(%) - ஆயுட்காப்புறுதி | 302.0 | 312.0 |
| - பொதுக் காப்புறுதி | 177.0 | 204.0 |
| பிடித்து வைத்தல் விகிதம் (%) - ஆயுட் காப்புறுதி | 96.0 | 95.8 |
| - பொதுக் காப்புறுதி | 77.8 | 77.9 |
| கோரல் வீதம் (%) - ஆயுட் காப்புறுதி | 24.3 | 46.2 |
| - பொதுக் காப்புறுதி | 64.3 | 63.7 |
| இணைந்த தொழிற்பாட்டு விகிதம் (%) - ஆயுட் காப்புறுதி | 85.2 | 101.0 |
| - பொதுக் காப்புறுதி | 100.7 | 102.9 |
| சொத்துக்கள் மீதான வருவாய் (%) - ஆயுட் காப்புறுதி | 10.6 | 4.9 |
| - பொதுக் காப்புறுதி | 5.4 | 5.9 |
| பங்குரிமை மூலதனம் மீதான வருவாய்(%) - ஆயுட்காப்புறுதி | 44.4 | 25.0 |
| - பொதுக்காப்புறுதி | 10.5 | 11.2 |
| ஒப்புறுதி விகிதம் (%) - பொதுக் காப்புறுதி | 19.3 | 18.1 |


(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) 2016ல் அறிமுகப்படுத்தப்பட்ட

*மூலம்:* இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு

நீண்டகால காப்புறுதித் துறையான உபதுறையின் பங்கு மொத்தச் சொத்தின் அடிப்படையில் 2017 இறுதியின் 69.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2018 இறுதியில் உயர்வான 70.8 சதவீதமாக இருந்தது. அதற்கமைவாக, பொதுக் காப்புறுதித் துறை4உபதுறையின் பங்கு மொத்தச் சொத்து அடிப்படையில் மேலும் குறைவடைந்து 2017 இறுதியின் 30.5 சதவீதத்திற்கெதிராக 2018 இறுதியில் 29.2 சதவீதமாக மேலும் குறைவடைந்தது.

**காப்புறுதித் துறையின் மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணம் 2018 இறுதியில் 12.6 சதவீத வளர்ச்சியை பதிவுசெய்துள்ளது.** 2018 இறுதியில் உபதுறையான நீண்டகால காப்புறுதித் துறையின் மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணத்தின் வளர்ச்சி 12.7 சதவீதமாக இருந்ததுடன் பொதுக் காப்புறுதித் துறையின் மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணத்தின் வளர்ச்சி 12.5

வரைபடம் 8.15
**காப்புறுதித் துறையின் மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணம்**




*மூலம்:* இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு

சதவீதமாக இருந்தது. இருப்பினும், உபதுறையான பொதுக் காப்புறுதித் துறையானது காப்புறுதித் துறையின் மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணத்திற்கு முக்கிய பங்களிப்பாளராக இருப்பதுடன் இதன் பங்கு 54.3 சதவீதமாகவும் இருக்கிறது. கருத்தில்கொள்ளப்பட்ட காலப்பகுதியில் பொதுக் காப்புறுதி உபதுறையின் முக்கியமாக குறிப்பிடத்தக்க வகையான வாகன காப்புறுதி வகையின் மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணம் 12.9 சதவீதத்தால் அதிகரித்தது. தீக்காப்புறுதி வகை 3.7 சதவீதமாக வளர்ச்சியடைந்துள்ளதுடன் கடல் காப்புறுதி வகை 8.3 சதவீத வளர்ச்சியடைந்துள்ளது. இருந்தபோதிலும், சுகாதாரக் காப்புறுதி வகையின் மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணத்தில் குறைவு அவதானிக்கப்பட்டதுடன் 11.6 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.

## வருவாய்கள்

**காப்புறுதித் துறையின் மொத்த இலாபம் 2018 காலப்பகுதியில் 38.4 சதவீதத்தால் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியை பதிவு செய்தது. இவை பிரதானமாக 3 நீண்டகாலக் காப்புறுதிக் கம்பனிகளின் இலாபம் வீழ்ச்சியடைந்தமையால் ஆகும்.** 2017இல் பதிவுசெய்யப்பட்ட அசாதாரண இலாபத்திற்கு இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் ஒழுங்குமுறைப்படுத்தலுக்கிணங்கும் முகமாக கொள்கை வைத்திருப்போரின் பொறுப்பு மதிப்பீட்டு முறை மாற்றத்தின் விளைவாக சில காப்புறுதிக் கம்பனிகளின் ஒரு முறையான மேலதிக பரிமாற்றம் காரணங்களாகும். அதன்பிரகாரம் 2018இல் நீண்டகால காப்புறுதி உபதுறை 48.5 சதவீத வளர்ச்சியைக் காட்டியது. அதேவேளை, பொதுக்காப்புறுதித் துறையின் இலாபம் 2018 காலப்பகுதியில் 8.3 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்துள்ளது. காப்புறுதித் துறையின் ஒப்புறுதி இலாபம் 2018 ஆண்டுகாலப்பகுதியில் 2017இன் ரூ.12.7 பில்லியனிலிருந்து ரூ.13.1 பில்லியனிற்கு அதிகரித்தது.

**2018 ஆண்டுக் காலப்பகுதியில் காப்புறுதித் துறைக்கான மொத்தக் கோரல்கள் ரூ.68.1 பில்லியனிலிருந்து ரூ.81.6 பில்லியனாக 19.9 சதவீத வளர்ச்சியை பதிவுசெய்துள்ளது. 2018 காலப்பகுதியில் நீண்டகாலக் காப்புறுதித் துறையின் கோரல்கள் 37.5 சதவீதத்தால் குறிப்பிட்டளவில் அதிகரித்திருக்கையில் பொதுக் காப்புறுதித் துறையின் கோரல்கள் மிதமாக 9.1 சதவீதத்தால் அதிகரித்தது.**

**2018 காலப்பகுதியில் காப்புறுதித் துறையின் மொத்த முதலீட்டு வருமானமும் 8.4 சதவீத வளர்ச்சியை குறித்துக்காட்டியிருந்தது. குறித்த காலப்பகுதியில் நீண்டகாலக் காப்புறுதியின் சொத்துக்கள் மீதான வருவாய் 4.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.** இந்தப் போக்கு உரிமை மூலதனங்கள் மீதான வருவாய் வீதத்திலும் பிரதிபலித்து 2017இன் 44.4 சதவீதத்தோடு ஒப்பிடுமிடத்து 2018 காலப்பகுதியில் 25 சதவீத வீழ்ச்சியைப் பதிவுசெய்தது. பொதுக் காப்புறுதித் துறையின் சொத்துக்கள் மீதான வருவாய் ஏறத்தாழ அதே அளவில்

5.4 சதவீதமாகக் காணப்பட்டதுடன், பொதுக் காப்புறுதித் துறையின் பங்குரிமை மூலதனம் மீதான வருவாய் 2017இல் 10.5 சதவீதத்திலிருந்து 2018 இறுதியில் 11.2 சதவீதத்திற்கு அதிகரித்தது.

## மூலதனம் மற்றும் முதலீடு

**2018 இறுதியில், நீண்டகாலக் காப்புறுதித் துறையின் மொத்தச் சொத்துக்களிற்கான மூலதன விகிதம் 2017இன் சதவீதத்திலிருந்து 22.0 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்ததுடன் பொதுக் காப்புறுதித் துறையின் மொத்தச் சொத்துக்களிற்கான மூலதன விகிதம் 2017இன் 47 சதவீதத்திலிருந்து 2018இல் 48 சதவீதத்திற்கு அதிகரித்தது. நீண்டகால காப்புறுதி உபதுறையில் மூலதனத்தின் வீழ்ச்சி இலாபத்தின் வீழ்ச்சிக்கு வகைகூறின.** மேலும், ஓர் காப்புறுதிக் கம்பனி இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவால் 2018இல் விதிக்கப்பட்ட மூலதன விதத்தைக் கடைப்பிடிக்கத் தவறியிருந்தது.

**காப்புறுதித் துறையினால் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் தொடர்ந்தும் அரச பிணையங்களில் குவிந்திருந்தது.** இருப்பினும், 2018 இறுதியில் நீண்ட காலக் காப்புறுதித் துறையின் அரச பிணையங்கள் மீதான முதலீடு 2017 இறுதியின் 32.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 29 சதவீதத்திற்கு குறைவடைந்தது. இருந்தபோதிலும், பொதுக் காப்புறுதித் துறையின் அரச பிணையங்கள் மீதான முதலீடு 2017 இறுதியில் 6.2 சதவீதத்திலிருந்து 2018இல் சிறிதளவால் 7.0 சதவீதத்திற்கு அதிகரித்தது. பங்குரிமை மீதான முதலீட்டுப்பங்கை கருதும்போது, 2018 இறுதியில் நீண்டகால காப்புறுதித் துறையின் பங்கு 2017 இன் 6.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 4.9 சதவீதத்திற்குக் குறைவடைந்தது. பொதுக் காப்புறுதித் துறையின் பங்கு மீதான முதலீடு 2017 காலப்பகுதியில் 3.2 இலிருந்து 2018 செத்தெம்பரில் 2.1 சதவீதத்திற்கு குறைவடைந்தது.

## மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் அபிவிருத்திகள்

**2018இன் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவால் பல ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை அபிவிருத்திகள் ஆரம்பிக்கப்பட்டது.** காப்புறுதி வியாபாரத்தின் கூடிய வெளிப்படைத்தன்மையை உறுதிப்படுத்துவதற்காக கூட்டாண்மை ஆளுகை மீது பணிப்புரை வழங்கப்பட்டது. மேலும், நீண்டகால காப்புறுதிக் கம்பனிகளிற்கு காப்புறுதி நிதியத்தின் முகாமைத்துவம் மற்றும் ஒருமுறை மிகைக்கான கையாளுகை போன்ற நடவடிக்கைகள் சம்பந்தமாக பணிப்புரைகள் வழங்கப்பட்டுள்ளன. இதற்கு மேலாக, காப்புறுதித் துறையின் புதிய அபிவிருத்திகளை பிரதிபலிக்கத்தக்கதாக சில ஒழுங்குமுறைப்படுத்தல்கள் திருத்தப்பட்டது. மேற்பார்வை நடவடிக்கைகள் தொடர்பாக, இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவினால் அறிக்கையிடல் தேவைப்பாடு ஏற்பாட்டிற்கிணங்கி ஒழுகாமைக்கெதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகளின் நடைமுறைச் செயல்முறை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

## ஓய்வுகால நிதியங்கள்

**2018 இறுதியில் ஓய்வுகால நிதியங்களின் சொத்துக்கள் ரூ.2,807.7 பில்லியனாக இருந்ததுடன் நிதியிடல் துறைச் சொத்துக்களின் 14.8 சதவீதத்திற்கு வகைகூறுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.** இத்துறை ஊழியர் சேம நிதியத்தால் ஆதிக்கம் செலுத்தப்படுகிறது, இது ஓய்வுகால நிதியங்களின் சொத்துக்களில் 81.5 சதவீதத்திற்கு வகைகூறுகின்றது. ஊழியர் சேம நிதியத்திற்கு மேலாக, இருவேறு பகிரங்கமாக முகாமைப்படுத்தப்படும் நிதியங்கள் உள்ளன. அவையாவன ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும் அரச பணிகள் சேம நிதியம் ஆகும். மேலும், 2018 இறுதியில் இலங்கையில் 123 தனிப்பட்ட முறையில் முகாமைப்படுத்தப்படும் அனுமதிக்கப்பட்ட சேம மற்றும் ஓய்வூதிய நிதியங்கள் தொழிற்படுகின்றன.

## ஊழியர் சேம நிதியம்

**1958ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஊழியர் சேம நிதியச் (ஊ.சே.நி) சட்டத்திற்கமைய, நிதியத்தின் கட்டுக்காப்பு இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள அதேவேளையில் நிதியத்தின் பொது நிர்வாகம் தொழில் ஆணையாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.** ஊ.சே. நிதியச் சட்டத்தின் நியதிகளுக்கமைய நாணயச் சபை அதன் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் தொழிற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு ஊ.சே. நிதியத் திணைக்களம் உதவி வருகின்றது.

**(அ) உறுப்புரிமை, உறுப்பினர் மீதிகள் மற்றும் மீளளிப்புக்கள்: நிதியத்தின் மொத்தப் பெறுமதி 2017ஆம் ஆண்டின் இறுதியில் பதிவு செய்யப்பட்ட ரூ.2,066.3 பில்லியனிலிருந்து 2018ஆம் ஆண்டின் இறுதியில் ரூ.2,289.4 பில்லியனுக்கு ரூ.223.1 பில்லியனால் அதிகரித்து 10.8 சதவீத வளர்ச்சியைக்**

அட்டவணை 8.17
ஊழியர் சேம நிதியத்தின் ஐந்து ஆண்டு சுருக்கம்

ரூ.பில்லியன்


| விடயம் | 2014 | 2015 | 2016 | 2017 | 2018(அ) |
|---|---|---|---|---|---|
| நிதியத்தின் மொத்தப் பெறுமதி (ரூ.பில்) | 1,486.9 | 1,664.9 | 1,841.5 | 2,066.3 | 2,289.4 |
| உறுப்பினர்களுக்கான மொத்த பொறுப்பு (ரூ.பில்) | 1,445.5 | 1,625.5 | 1,810.6 | 2,020.8 | 2,254.2 |
| மொத்த பங்களிப்புக்கள் (ரூ.பில்) | 90.0 | 102.5 | 118.3 | 133.3 | 145.0 |
| மொத்த மீளளிப்புக்கள் (ரூ.பில்) | 65.1 | 77.8 | 108.4 | 117.5 | 108.0 |
| தேறிய பங்களிப்பு (ரூ.பில்) | 24.9 | 24.7 | 9.9 | 15.8 | 37.0 |
| வட்டி வீதம் (%) | 10.50 | 10.50 | 10.50 | 10.50 | 9.50 |

(அ) தற்காலிகமானது

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

8


வரைபடம் 8.16
ஊழியர் சேம நிதிய முதலீட்டுச் சொத்துப் பட்டியலின் வளர்ச்சி (புத்தக பெறுமதியில்)



*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

**காட்டுகின்றது.** இவ்வதிகரிப்பிற்கு உறுப்பினர்களின் தேறிய பங்களிப்புக்கள் (மீளளிப்புக் கொடுப்பனவுகளைக் கழித்த பங்களிப்புக்கள்) மற்றும் நிதியத்தின் முதலீடுகளால் உழைக்கப்பட்ட வருமானம் என்பவற்றின் இணைந்த தாக்கமே காரணமாகும். உறுப்பினர்களுக்கான மொத்தப் பொறுப்பு 2018 இறுதியில் ரூ.2,254.2 பில்லியனாக விளங்கி 2017இன் ரூ. 2,020.8 பில்லியனிலிருந்து 11.6 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. 2018ஆம் ஆண்டில் உறுப்பினர்களுக்கும் அவர்களது சட்ட ரீதியான வாரிசுகளுக்கும் செலுத்தப்பட்ட மீளளிப்புக்களின் மொத்தத் தொகை ரூ.108.0 பில்லியனாகக் காணப்பட்ட போதிலும் 2018ஆம் ஆண்டிற்கான மொத்தப் பங்களிப்புக்கள் 8.8 சதவீதத்தினால் ரூ.145.0 பில்லியனுக்கு அதிகரித்தன. இது 2017ஆம் ஆண்டைவிட 8.0 சதவீதம் கொண்ட ஒரு குறைவைக் காட்டியது. இதற்கேற்ப, தேறிய பங்களிப்பானது முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட ரூ. 15.8 பில்லியனுடன் ஒப்பிடும்போது ரூ.37.0 பில்லியனாகக் காணப்பட்டது. நிதியத்தின் ஆண்டு இலாபமானது முன்னைய ஆண்டின் ரூ.202.9 பில்லியனிலிருந்து 2018இல் ரூ.190.6

வரைபடம் 8.17
2018 திசெம்பர் 31இல் உள்ளவாறு முதலீட்டுச் சொத்துப் பட்டியலின் உள்ளடக்கம்



*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

பில்லியனுக்கு 6.1 சதவீதத்தினால் குறைவடைந்துள்ளது. இது முதன்மையாக 2017இன் 24ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின்படி நிதியத்தின் வருமான வரி செலவினங்களின் அதிகரிப்பு மற்றும் 2018ஆம் ஆண்டில் நிதிக் கருவிகளின் புதிய கணக்கீட்டு நியமங்களை ஏற்றுக்கொண்டதன் மூலம் பதிவுசெய்யப்பட்ட பங்கு முதலீடுகளில் இருந்தான சந்தைப்படியான இழப்புக்கள் என்பவற்றால் ஏற்பட்டது..

(ஆ) **நிதியங்களின் முதலீடும் வருமானமும்: நிதியத்தின் மொத்த முதலீட்டுச் சொத்துப் பட்டியல் (ஏட்டுப் பெறுமதி) 2017இன் இறுதியில் ரூ.1,992.4 பில்லியனிலிருந்து 2018இன் இறுதியில் ரூ.2,298.8 பில்லியனுக்கு 15.4 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்துள்ளது.** நிதியத்தினுடைய மீளளிப்புக் கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய செலவுகளை எதிர்கொள்வதற்கான போதியளவு திரவத்தன்மையின் அளவைப் பேணுவதையும் நிதியத்தினுடைய பாதுகாப்பையும் உறுதிசெய்கின்ற அதேவேளை நிதியத்தின் முதலீட்டுக் கொள்கையானது உறுப்பினர்களுக்கு நீண்டகால நேர்க்கணிய உண்மை வருவாய் வீதம் ஒன்றினை வழங்குவதை நோக்கியதாகவுள்ளது. இதற்கிணங்க, 2018இன் இறுதியில், முதலீட்டுச் சொத்துப் பட்டியலானது 92.2 சதவீதமான அரச பிணையங்களையும், 3.3 சதவீதமான பங்குகளையும், 1.9 சதவீதமான நிறுவன தொகுதிக் கடன் பத்திரங்கள் மற்றும் நம்பிக்கைப் பொறுப்புச் சான்றிதழ்களையும், 1.5 சதவீதமான நிலையான வைப்புக்களையும் மற்றும் மிகுதியான 1.1 சதவீதமானது நேர்மாற்று மீள்கொள்வனவு ஒப்பந்தத்தையும் உள்ளடக்கியதாக காணப்படுகிறது.

அட்டவணை 8.18
ஊழியர் சேம நிதியத்தின் வருமான தரவுகளின் ஐந்து ஆண்டு சுருக்கம்

ரூ.மில்லியன்

| விடயம் | 2014 | 2015 | 2016 | 2017 | 2018(அ) |
|---|---|---|---|---|---|
| வட்டி மற்றும் மதிப்பிறக்க இலாபம் | 153,395.3 | 169,645.9 | 193,656.3 | 219,635.3 | 229,446.0 |
| பங்கிலாப வருமானம் | 3,321.4 | 3,512.4 | 4,262.6 | 2,993.6 | 3,887.6 |
| கிடைக்கப்பெற்ற மூலதன இலாபம்/(நட்டம்) | 6,359.4 | 1,724.3 | 1,064.0 | - | 7.2 |
| இலாபம்/ நட்டத்தின் ஊடான சீர்மதிப்புப் பெறுமதியில் நிதிக்கூற்றுகளில் இருந்தான தேறிய இலாபம்/ நட்டம் | 89.4 | -394.0 | -842.1 | 1,476.9 | -10,901.3 |
| நிதியியல் சொத்துக்களின் சேத இழப்பு | - | -2,956.6 | -5,231.6 | -1,502.1 | 0.6 |
| மூதலீட்டு வருமானம் | 163,165.4 | 171,532.0 | 192,909.1 | 222,603.7 | 222,440.1 |
| ஏனைய வருமானம் | 708.1 | 323.3 | 162.3 | 588.8 | 403.0 |
| திரண்ட மொத்த வருமானம் | 163,873.5 | 171,855.3 | 193,071.4 | 223,192.5 | 222,843.1 |
| தொழிற்பாட்டுச் செலவீனம் | -1,042.9 | -1,190.6 | -1,487.2 | -1,348.7 | -1,505.3 |
| வருமான வரி | -12,168.7 | -13,727.4 | -15,657.2 | -18,897.1 | -30,720.4 |
| ஆண்டுக்கான இலாபம் | 150,661.9 | 156,937.3 | 175,927.0 | 202,946.8 | 190,617.4 |
| நிறுத்திவைக்கப்பட்ட இலாபம் முன்கொண்டுவரப்பட்டது | 140.7 | 311.3 | 215.6 | 189.3 | 2,471.0 |
| பகிர்ந்தளிக்கக்கூடிய இலாபம் | 150,802.6 | 157,248.6 | 176,142.5 | 203,136.1 | 193,088.4 |

(அ) தற்காலிகமானது
*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

8

**நிதியத்தின் மொத்த முதலீட்டு வருமானமானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 0.1 சதவீதக் குறைவினைப் பதிவுசெய்ததுடன் 2018இல் ரூ. 222.4 பில்லியனாகக் காணப்பட்டது.** மதிப்பிறக்க ஆதாயத்தை உள்ளடக்கிய வட்டி வருமானமானது தொடர்ந்தும் நிதியத்தின் பிரதான வருமான மூலமாகக் காணப்பட்டதுடன், இது 2017இல் ரூ.219.6 பில்லியனிலிருந்து 2018இல் ரூ.229.4 பில்லியனுக்கு 4.5 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்துள்ளது. பங்கிலாப வருமானமும் 2017ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது ரூ.3.0 பில்லியனிலிருந்து 2018இல் ரூ.3.9 பில்லியனுக்கு 29.9 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. இலாபம் அல்லது நட்டத்தின் ஊடான சீர்மதிப்புப் பெறுமதியில் நிதியியல் சாதனங்கள் மீதான தேறிய நட்டம் 2017இல் ரூ.1.5 பில்லியன் நிகர ஆதாயத்துடன் ஒப்பிடுகையில் 2018இல் ரூ.10.9 பில்லியன் இழப்பைப் பதிவுசெய்துள்ளது.

**நிதியமானது 2018இல் முழு மொத்த வருமானமாக ரூ.222.8 பில்லியனை உழைத்து முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 0.2 சதவீதக் குறைவைப் பதிவுசெய்தது.** 2018இல் மொத்த வருமானத்திற்கு தொழிற்பாட்டுச் செலவின விகிதமாக 0.68 சதவீதத்தைப் பேணிய அதேவேளை ஊழியர் சேம நிதியமானது 10.4 சதவீதத்தை முதலீட்டு வருமானமாக உழைக்கக்கூடியதாக இருந்தது. 01.04.2018 இலிருந்து பயனுடையதாகவிருந்த 2017ஆம் ஆண்டு 24ஆம் இலக்க புதிய உள்நாட்டு இறைவரிச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம் நிதியத்திற்கு பிரயோகிக்கப்படுகின்ற வருமான வரி வீதமானது 10 சதவீதத்திலிருந்து 14 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது. இதன் விளைவாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வரி செலவினம் ரூ.12 பில்லியன் அதிகரிப்பை ஏற்படுத்தியுள்ளது. மேலும், 01.04.2018 இலிருந்து முன்னைய வரி விதிமுறைகளின் கீழ் மொத்த வருமானத்தில் ஒரு பகுதியாக அங்கீகரிக்கப்பட்ட திறைசேரி முறி வட்டி வருமானத்தின் மீது அறவிடப்பட்ட 10 சதவீத நிறுத்திவைத்தல் வரியானது தள்ளுபடி செய்யப்பட்டது. அத்துடன் நிதியியல் கருவிகளின் வகைப்படுத்தல் மற்றும் அளவீடுகளுக்காக பிரயோகப்படுத்துகின்ற கணக்கீட்டு நியமமான இலங்கை நிதியியல் அறிக்கை தரநியமம் - 09 ஐ ஊழியர் சேம நிதியம் பின்பற்றியது. இதற்கிணங்க, பட்டியலிடப்பட்ட பங்குக் கருவிகள் சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்பட்டது. தற்போதைய சந்தை நிலவரத்தின் கீழ், 2018ஆம் ஆண்டிற்கான இலாபத்திற்கு எதிராக ரூ.10.9 பில்லியன் சந்தைப்பெறுமதியிடல் இழப்பொன்றை அறவிட்டது. இக்காரணத்தால் பகிர்ந்தளிக்கக்கூடிய இலாபமானது 2017 உடன் ஒப்பிடுகையில் ரூ.10 பில்லியனால் அல்லது 4.9 சதவீதத்தால் குறைவடைந்தது. இருந்தபோதிலும், ஊ.சே. நிதியமானது, இலாபத்திற்கு சமமான ஒதுக்கிலிருந்த நிதியின் பகுதியை பயன்படுத்தி 2018இல் உறுப்பினர் மீதிகளிற்கு 9.5 சதவீத வட்டி வீதத்தை பிரகடனம் செய்யக்கூடியதாக இருந்தது.

**(இ) இடர்நேர்வு முகாமைத்துவம்: 2018இல் முதலீட்டு நடவடிக்கைகளின் பொறுப்புடைமை மற்றும் வெளிப்படைத் தன்மை ஆகியவற்றை மேம்படுத்தும் நோக்குடன் ஊழியர் சேம நிதியத்தின் ஒட்டுமொத்த இடர்முகாமைத்துவக் கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக குறிப்பிடத்தக்க அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.** இதன்விளைவாக, புதிய முதலீட்டுக் கொள்கை அறிக்கை மற்றும் முதலீட்டு வழிகாட்டல்கள் என்பன இத்தேவைப்பாடுகளை உள்ளடக்கி உருவாக்கப்பட்டுள்ளது. இலங்கை மத்திய வங்கியின் ஒட்டுமொத்த இடர்முகாமைத்துவ கட்டமைப்பில் ஊழியர் சேம நிதியம் இருக்கின்ற அதேவேளை, ஊழியர் சேம நிதிய இடர்முகாமைத்துவத்தின் ஆளுகை கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கு பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. நிதியத்தினுடைய முகாமைத்துவத்திற்கான தந்திரோபாயம் மற்றும் கொள்கை வழிகாட்டல்களை வழங்குவதன் மூலம் ஊ.சே.நிதியத்தினுடைய முதலீட்டு நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்கு ஊழியர் சேம நிதிய முதலீட்டு மேற்பார்வைக் குழுவை இது உள்ளடக்கியிருப்பதுடன் ஊ.சே. நிதியத்தின் மேற்பார்வைக் குழுவானது ஊ.சே. நிதியத்தின் நிதி முகாமைத்துவ நடவடிக்கைகளின் தினசரி தீர்மானம் எடுக்கும் தொழிற்பாடு சம்பந்தமான இதனுடைய கடமைகளையும் அதிகாரங்களையும் ஊழியர் சேம நிதிய முதலீட்டுக் குழு என்றழைக்கப்படும் ஒரு திணைக்கள மட்ட குழுவிடம் கையளித்துள்ளது. மேலும், ஊழியர் சேம நிதியத்தின் இடர் மேற்பார்வைச் செயற்பாடுகளை மேற்கொள்ளுவதற்கு பாதுகாப்பின் இரண்டாவது தொடராக இலங்கை மத்திய வங்கியின் இடர் முகாமைத்துவத் திணைக்களம் செயற்படுகின்றது. அத்துடன் ஒரு ஒழுங்கான முறையில், இலங்கை மத்திய வங்கியின் சபை இடர் மேற்பார்வைக் குழுவினூடாக நாணயச் சபைக்கு அறிக்கையிடுகின்றது. ஆகவே, நிதியத்தினுடைய நிதி மற்றும் நிதியல்லாத இடர்கள் இரண்டையும் நிவர்த்தி செய்யும் இடர்க்குறைப்பு நடவடிக்கைகள் தொடர்பான செயற்பாட்டு நடவடிக்கைகளிற்கான உள்ளக கட்டுப்பாடுகளையும் மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் ஆண்டு முழுவதும் தொடர்ந்தன.

## ஊழியர் நம்பிக்கை நிதியம்

**2018இல் ஊழியர் நம்பிக்கை நிதியமானது ஓய்வூதிய நிதியத்தின் மொத்தச் சொத்துக்களின் 11.1 சதவீதத்திற்கு வகைகூறுவதுடன் மொத்தச் சொத்துக்களின் நியதிகளில் ஆரோக்கியமான வளர்ச்சியைப் பதிவுசெய்துள்ளது.** ஊழியர் நம்பிக்கை நிதியம் ஏறத்தாழ 14.6 மில்லியன் கணக்குகளைக் கொண்டிருந்ததுடன் அவற்றுள் 2.6 மில்லியன் செயற்படும் கணக்குகளாகக் காணப்படுகின்றன. 2018இல் பங்களிப்புச் செய்யும் தொழில்தருநர்களின் எண்ணிக்கை 2017இல் 81,515 உடன் ஒப்பிடுகையில் 82,416ஆக அதிகரித்தது. 2018 இறுதியில் ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் மொத்த வெளிநின்ற உறுப்பினர் நிலுவைகள் 2.5 சதவீதத்தால் அதிகரித்து ரூ.281.1 பில்லியனாகக் காணப்பட்டது. அதேவேளையில், 2018இன்

அட்டவணை 8.19
**ஊழியர் சேம நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் செயலாற்றம்**

| விடயம் | ஊழியர் சேமலாப நிதி | | ஊழியர் நம்பிக்கை நிதி | |
|---|---|---|---|---|
| | 2017 (அ) | 2018 (ஆ) | 2017 (அ) | 2018 (ஆ) |
| மொத்தச் சொத்துக்கள் (ரூ. பில்) | 2,066.3 | 2,289.4 | 279.0 | 312.1 |
| மொத்த அங்கத்தவர் மீதி (ரூ. பில்) | 2,020.8 | 2,254.2 | 274.2 | 281.1 |
| அங்கத்தவர் கணக்குகளின் எண்ணிக்கை (மில்) | 18.0 | 18.5 | 12.6 | 14.6 |
| இயங்கு நிலையிலுள்ள அங்கத்தவர் கணக்குகளின் எண்ணிக்கை (மில்) | 2.8 | 2.6 | 2.5 | 2.6 |
| பங்களிப்புச் செய்யும் தொழில்தருநர்களின் எண்ணிக்கை | 76,782 | 78,977 | 81,515 | 82,416 |
| மொத்த பங்களிப்புக்கள் (ரூ. பில்) | 133.4 | 145.0 | 22.8 | 22.3 |
| மொத்த மீளளிப்புக்கள் (ரூ. பில்) | 117.5 | 108.0 | 17.2 | 18.8 |
| மொத்த முதலீடுகளின் சொத்துப்பட்டியல் (ரூ.பில்) | 1,992.4 | 2,298.8 | 262.5 | 291.7 |
| இதில்: அரச பிணையங்கள் (%) | 91.3 | 92.2 | 78.2 | 75.1 |
| மொத்த வருமானம் (ரூ. பில்) | 223.2 | 222.8 | 29.0 | 29.1 |
| பகிர்ந்தளிப்பிற்காக உள்ள இலாபம் (ரூ. பில்) | 203.1 | 193.1 | 17.2 | கி.வி. |
| முதலீடுகளிலிருந்தான வருவாய் (%) | 11.8 | 10.4 | 11.0 | 8.4 |
| அங்கத்தவர் மீதிகளுக்கு வழங்கப்பட்ட வட்டி வீதம் (%) | 10.5 | 9.5 | 9.0 | 9.0 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
கி.வி. - கிடைக்கவில்லை

*மூலங்கள்:* இலங்கை மத்திய வங்கி
ஊழியர் நம்பிக்கை நிதிச் சபை

ஆண்டு காலப்பகுதியில் நிதியத்தின் மொத்தப் பங்களிப்புகள் 2.2 சதவீதத்தால் ரூ.22.3 பில்லியனுக்கு குறைவடைந்த வேளையில் மொத்த உறுப்பினர்கள் நன்மை செலுத்துகைகள் 8.9 சதவீதத்தால் ரூ.18.8 பில்லியனிற்கு அதிகரித்து நிதியத்தின் தேறிய உட்பாய்ச்சல்கள் 36.9 சதவீதத்தால் குறைவடைந்தது. இருந்தபோதிலும், 2018 இறுதியில் நிதியத்தின் மொத்தச் சொத்துக்கள் 11.9 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்து ரூ.312.1 பில்லியனாகியது. 2018 இறுதியில் ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் மொத்த முதலீடு 11.1 சதவீதத்தால் ரூ.291.7 பில்லியனிற்கு அதிகரித்தது. அரச பிணையங்களின் முதலீட்டுப் பங்கு 2017 இறுதியின் 78.2 சதவீதத்திலிருந்து 2018இல் 75.1 சதவீதத்திற்கு குறைவடைந்தது. ஊழியர் நம்பிக்கை நிதியம் அரச பிணையங்களிலிருந்து அகற்றி வருகைகளை தவணை வைப்புக்களில் மாற்று முதலீடாக செய்தது. ஆண்டு காலப்பகுதியில் பங்குரிமை, கம்பனி நிலையான வருமான பிணையங்கள் மொத்த முதலீட்டில் முறையே 4.0 சதவீததத்திற்கும் 1.0 சதவீதத்திற்கும் வகைகூறுயதுடன் நிதியம் தனது முதலீட்டு வருமான வீதத்தை 8.4 சதவீதமாகப் பாதுகாத்து முகாமைப்படுத்தியது.

### ஏனைய ஓய்வுகால நிதியங்கள்

**ஆண்டுகாலப்பகுதியில் ஓய்வுகால நிதியங்கள் துறையில் அரச பணிகள் ஓய்வூதிய நிதியம் 2 சதவீதமாக விளங்கியதுடன் தேறிய பங்களிப்புக்கள் மற்றும் அங்கத்தவர்களின் எண்ணிக்கை நியதிகளில் வளர்ச்சி குறைவடைந்துள்ள அதேவேளையில், சொத்துக்களின் வளர்ச்சி அதிகரித்துள்ளது.** 2018இன் இறுதியில் நிதியத்தின் செயற்படு அங்கத்தவர் 2017இல் இறுதியில் பதியப்பட்ட 228,214 உடன் ஒப்பிடுகையில் குறைந்து 227,816ஆகக் காணப்பட்டனர். 2018இல் நிதியத்தின் மொத்தச் சொத்துத்தளம் 3.1 சதவீதத்தால் வளர்ச்சியடைந்து ரூ.57.2 பில்லியனாகிய அதேவேளையில் நிதியத்தின் முதலீடு 4.5 சதவீதத்தால் அதிகரித்து ரூ.55.3 பில்லியனாகியது. 2018 ஆண்டு காலப்பகுதியில் தேறிய நேர்க்கணியப் பங்களிப்பானது 2017இன் ரூ.843.8 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.381.2 மில்லியனுக்கு குறைவடைந்துள்ளது. மொத்த முதலீட்டில் அரச பிணையங்களின் முதலீடு 48.8 சதவீதத்திற்கு வகைகூறியது. 2018 இற்கான உறுப்பினர் நிலுவைகள் மீதான வருவாயின் பயனுறு வீதம் 13.0 சதவீதமாகும்.


**2018இல் ஒப்புதலளிக்கப்பட்ட தனிப்பட்ட ஓய்வூதிய நிதியங்கள், ஓய்வூதிய நிதியங்கள் துறையில் 5.3 சதவீதத்திற்கு வகைகூறியதுடன் குறைவையும் பதிவு செய்துள்ளது.** 2018 இறுதியில் ஒப்புதலளிக்கப்பட்ட ஓய்வூதிய நிதியங்கள் ஊழியர்களை நிறுத்தியதால், கம்பனி முறிவடைந்தமை மற்றும் மத்திய வங்கிக்கான நிதிய மாற்றம் என்பவற்றால் 26 நிதியங்கள் மூடப்பட்டு 123 ஆக குறைவடைந்தது. அதற்கமைவாக, 2018 இறுதியில் தனிப்பட்ட ஓய்வுகால நிதியங்கள் 2017இன் 169,257 எண்ணிக்கையான அங்கத்தவர்களை உள்ளடக்கியிருந்ததுடன் ஒப்பிடுகையில் அங்கத்தவர்களின் எண்ணிக்கை 134,456 இற்கு குறைவடைந்தது. மேலும், 2018 இறுதியில் ஒப்புலளிக்கப்பட்ட தனிப்பட்ட ஓய்வுகால நிதியங்களின் மொத்தச் சொத்துக்கள் ரூ.149.1 பில்லியனாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இது 2017இல் ரூ.437.3 பில்லியன் சொத்துத்தளத்திலிருந்து 65.9 சதவீதக் குறைவாகும். 2018இல் நிதியத்தின் முதலீட்டுச் சொத்துப்பட்டியல் ரூ.114.8 பில்லியனாக 57 சதவீத எதிர்மறை வளர்ச்சியைப் பதிவுசெய்தது.

## 8.4 நிதியியல் சந்தைகளின் செயலாற்றம்

### பணச்சந்தை

**சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதமானது 2018இன் கொள்கை வீதமாற்றங்களுக்கு சரியான முறையில் பதிலிறுத்துகின்ற விதத்தில் மேம்பட்ட நாணயக்கொள்கை கட்டமைப்பின் தொழிற்பாட்டு இலக்காகச் செயற்பட்டிருக்கிறது.**

வரைபடம் 8.18
2018இல் பணச்சந்தையின் நடத்தை




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

2018ஆம் ஆண்டானது நாணயக் கொள்கை செயன்முறை தொடர்பில் ஒருசில மாற்றங்களைக் கொண்ட ஆண்டாகக் காணப்படுகின்றது. 2018இல் மத்திய வங்கி தனது கொள்கை வட்டி வீதங்களை இரு சந்தர்ப்பங்களில் மாற்றியமைத்து சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதத்தில் அசைவை ஏற்படுத்தியது. 2017 திசெம்பர் இறுதியில் 8.15 வீதத்தில் காணப்பட்ட சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதம் 2018 மாச்சு இறுதிவரை உள்நாட்டு நாணயச் சந்தையில் நிலவிய மிகையான திரவத்தன்மை மட்டத்திற்கு மிக நெருக்கமாக தொடர்ந்தும் காணப்பட்டது. ஏப்பிறல் ஆரம்பத்தில் துணைநில் கடன்வழங்கல் வசதிவீதம் 25 அடிப்படைப்புள்ளிகளினால் குறைக்கப்பட்டதற்கு பதிலளிக்கும் முகமாக சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதம் 8 சதவீதத்திற்கும் கீழே வீழ்ச்சியடைந்தது. வர்த்தக வங்கிகளால் பிடித்துவைக்கப்பட்ட வரி சரிப்படுத்தலின் பாதிப்பின் தவறான விளக்கத்தால் 2018 மாச்சு இறுதிக் காலத்தில் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்பு பணவீதத்தின் நிலையற்ற அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதத்திற்கும் சராசரி நிறையேற்றப்பட்ட மீள்கொள்வனவு வீதத்திற்குமிடையில் நிலவிய பரந்தளவிலான இடைவெளி குறுக்கமடைந்து, 2018 ஏப்பிறலிலிருந்து அரச பிணையங்களின் கொடுக்கல்வாங்கல்கள் மீதான உத்தேச வரி அகற்றப்பட்டதுடன் இரண்டு வீதங்களும் ஒன்றையொன்று நோக்கி நகர்ந்திருப்பதாகத் தோன்றுகிறது. 2018 ஏப்பிறலிருந்து சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்பு வீதம் கொள்கை வீதங்களின் வீச்சிற்குள் காணப்பட்டிருந்ததுடன் 2018இன் மத்தியில் வீச்சின் உயர் எல்லைக்கு உயர்ந்தும் இருப்பதுடன் யூலை தொடக்கம் செத்தெம்பர் வரையான காலப்பகுதி ஆண்டின் எஞ்சிய காலப்பகுதியில் தவிர்ந்த அதே மட்டத்தில் காணப்பட்டது. 2018 நவெம்பர் இலிருந்து துணைநில் வைப்பு வசதிவீதம் 75 அடிப்படைப் புள்ளியினால் 8.00 சதவீதத்திற்கும் துணைநில் கடன் வழங்கல் வசதிவீதம் 50 அடிப்படைப் புள்ளியினால் 9.00 சதவீதத்திற்கும் அதிகரிக்கப்பட்டமையின் காரணமாக சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதமும் சராசரி நிறையேற்றப்பட்ட மீள்கொள்வனவு வீதமும் வட்டிவீத வீச்சின்மேல் எல்லையை நோக்கி நகர்ந்தன. அதற்கமைவாக, சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதமும் சராசரி நிறையேற்றப்பட்ட மீள்கொள்வனவு வீதமும் முறையே 8.95 சதவீதமாகவும் 9.00 சதவீதமாகவும் காணப்பட்டன. 2018இல் காணப்பட்ட கொள்கை வீத மாற்றங்களின் விளைவாக கொள்கைவீத வீச்சின் பருமன் 150 அடிப்படைப் புள்ளிகளிலிருந்து 100 அடிப்படைப் புள்ளிகளுக்கு குறுக்கமடைந்தது. சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதம், 2019 பெப்புருவரி வரை கொள்கை வட்டிவீத வீச்சின் உயர் எல்லைக்கு கிட்டியதாகவிருந்தது. சந்தைக்கு திரவத்தை வழங்கும் நோக்குடன் மத்திய வங்கியால் 2019 மாச்சு 01ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் குறைக்கப்பட்ட நியதிச்சட்ட ஒதுக்குகள் மற்றும் உள்நாட்டு

அட்டவணை 8.20

**பணச் சந்தை கொடுக்கல் வாங்கல்கள்**

| சந்தை | அளவு (ரூபா பில்.) | | நிறையேற்றப்பட்ட சராசரி வட்டி வீதம் (குறைந்தது - உச்சம்) - % | |
|---|---|---|---|---|
| | 2017 | 2018 | 2017 | 2018 |
| அழைப்புப் பணம் | 3,900.4 | 4,196.2 | 7.95 - 8.75 | 7.76-9.00 |
| வங்கிகளுக்கிடையிலான மீள்கொள்வனவு | 4,205.6 | 2,761.2 | 7.50 - 9.14 | 7.48-9.00 |
| மத்திய வங்கி மீள்கொள்வனவு | 3,327.7 | 1,530.3 | 7.25 - 7.75 | 7.25-8.33 |
| மத்திய வங்கி நேர்மாற்று மீள்கொள்வனவு | 1,049.6 | 3,385.7 | 8.47 - 8.75 | 7.85-8.98 |
| துணைநில் வைப்பு வசதி | 3,954.9 | 4,502.9 | - | - |
| துணைநில் கடன்வழங்கல் வசதி | 2,129.5 | 3,057.5 | - | - |

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி


பணச் சந்தைக்கு திரவத்தை வழங்குவதற்காக மத்திய வங்கியின் பண நடவடிக்கை என்பவற்றினை தொடர்ந்து கீழ்நோக்கிய சரிப்படுத்தலைக் குறித்துக்காட்டியது.

## சந்தைத் திரவத்தன்மை

**2018 செத்தெம்பர் நடுப்பகுதிவரை கலப்பின செயலாற்றமொன்றினைக் காட்டிய உள்நாட்டு பணச்சந்தையில் காணப்பட்ட திரவத்தன்மை அதன்பின்னர் 2018இன் இறுதிக் காலப்பகுதியில் தொடர்ச்சியான எதிர்மறை மட்டமொன்றிற்குத் திரும்பியது.** திரவத்தன்மை நிலைமை உயர்ந்தமட்ட பற்றாக்குறைக்கு உறுதியாக மாற்றமடைந்தமைக்கு இலங்கை மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியுடன் தொடர்பான கொடுக்கல்வாங்கல்களே முக்கிய காரணமாகும். எனினும், இவ்வாண்டுப் பகுதியில் காணப்பட்ட திரவத்தன்மை வேறுபாடுகளுக்கு மத்திய வங்கியுடனான அரசாங்கத்தின் கொடுக்கல்வாங்கல்களே முக்கியமாக வழிவகுத்தன. அரச பிணையங்களின் கொள்வனவு திரவத்தன்மையினை அதிகரித்த வேளையில் அத்தகைய பிணையங்கள் முதிர்ச்சியடைந்தமையானது திரவத்தன்மையினைக் குறைவடையச் செய்தது. இதேபோன்று இலங்கை மத்திய வங்கியுடன் திறைசேரியினால் முன்னெடுக்கப்பட்ட முன்னோக்கிய கொடுக்கல்வாங்கல்கள்

அட்டவணை 8.19

**2018இல் பணச்சந்தை திரவத்தன்மையின் நாளாந்த மாற்றங்கள்**




*மூலம்:* கொழும்பு பங்கு பரிவர்த்தனை

சந்தையின் திரவத்தன்மையினை உயர்த்திய வேளையில் இம்முன்னோக்கிய கொடுக்கல்வாங்கல்கள் மாற்றமடைந்ததும் சந்தையின் திரவத்தன்மை குறைவடைந்தது. உந்து ஊர்திகள் மற்றும் அத்தியாவசியமல்லாத நுகர்வுப்பொருட்களின் இறக்குமதிக்கான நாணயக் கடிதத்திற்கெதிராக 2018 செத்தெம்பரில் அளவுத் தேவைப்பாடுகள் விதிக்கப்பட்டன. அத்தகைய அளவுகளின் மீது 100 சதவீத ஒதுக்குத் தேவைப்பாடு விதிக்கப்பட்டமையானது இலங்கை மத்திய வங்கியுடன் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் பேண வேண்டிய தேவையான ஒதுக்கினைக் கணிசமாக அதிகரித்ததுடன் அதேஅளவினால் உள்நாட்டுப் பணச்சந்தையின் திரவத்தன்மை குறைவடையவும் வழிவகுத்தது. வர்த்தக வங்கிகளின் ரூபா வைப்புப் பொறுப்புகளுக்கு ஏற்புடைத்தான நியதிஒதுக்கீட்டு விகிதம் 2018 நவெம்பர் 16ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் 7.50 சதவீதத்திலிருந்து 6.00 சதவீதத்திற்கு 1.5 சதவீதத்தால் குறைக்கப்பட்டது. நியதி ஒதுக்கீட்டு விகிதம் குறைக்கப்பட்டதன் விளைவாக, பணச்சந்தை, திரவத்தன்மை மீதான அழுத்தத்தினைக் குறைத்தன்மையின் மூலம் ஏறத்தாழ ரூ.90 பில்லியன் பெறுமதியான திரவத்தன்மை சந்தைக்கு உள்ளீடு செய்யப்பட்டது. நாணயக் கொள்கை நிலைமையுடன் இசைந்து செல்லும் விதத்தில் கொள்கைவீத வீச்சின் மட்டத்தில் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதத்தினைப் பேணும் நோக்குடன் மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட திரவத்தன்மை முகாமைத்துவ தொழிற்பாடுகள் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதத்தின் பாரிய தளம்பல்களைத் தவிர்த்ததுடன் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமையின் சுமூகமான தொழிற்பாடுகளுக்கு வசதியளிக்கும் விதத்தில் சந்தையில் போதுமான திரவத்தன்மையும் பேணப்பட்டது. இதற்கமைய இலங்கை மத்திய வங்கி, தற்காலிக அடிப்படையில் திரவத்தன்மையினை உள்ளீடு செய்வதற்காக ஓரிரவு குறுங்கால மற்றும் நீண்டகால நேர்மாற்று மீள்கொடுப்பனவு ஏலங்களையும் நிரந்தர அடிப்படையில் சந்தைக்கு திரவத்தன்மையினை உள்ளீடு செய்வதற்காக உடனடி திறைசேரி உண்டியல் கொள்வனவு ஏலங்களையும் நடத்தியதன் மூலம் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளில் தீவிரமாக ஈடுபட்டது. உள்நாட்டு பணச் சந்தையில் திரவத்தன்மை தொடர்ந்தும் உயர் பற்றாக்குறையுடன் காணப்பட்டதால் 2019 மார்ச் 01ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் இலங்கை மத்திய வங்கி நியதி ஒதுக்கீட்டு விகிதத்தை மேலும் 1.00 சதவீதத்தால் குறைத்து 5.00 சதவீதமாக்கியது.

**2018ஆம் ஆண்டுப் பகுதியில் நாணயக்கொள்கையினை நடைமுறைப்படுத்தும் செயன்முறையின்போது ஒருசில பிரச்சனைகள் எதிர்நோக்கப்பட்டன.** துணைநில் கடன்வழங்கல் வசதிவீதத்திற்கும் முதலாந்தரச் சந்தை 91 நாள் 182 நாள் மற்றும் 364 நாள் விளைவினைக்கொண்ட திறைசேரி உண்டியல்களுமிடையிலான வீச்சு தொடர்ந்தும் அதிகரித்து 2018 இறுதியில் முறையே 101 அடிப்படைப்புள்ளிகளாகவும் 87 அடிப்படைப் புள்ளிகளாகவும் 170 அடிப்படைப் புள்ளிகளாகவும் விளங்கின. உயர்ந்த வீச்சு, திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் மற்றும் துணைநில் வசதிகளிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட நன்மை காரணமாக சந்தைப் பங்கேற்பாளர்கள் வணிக இலாபங்களைப் பெறவழிவகுத்தது. உயர்ந்த சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதம் காணப்பட்டபோதும், குறைந்தபட்ச திரவத்தன்மை சொத்து விகிதத்தினைப் பேணுகின்ற தேவைப்பாடுகளுடன் இசைந்துசெல்லும் பொருட்டு திறந்த சந்தைத் தொழிற்பாட்டு ஏலங்களிலும் பார்க்க உயர்ந்த வீதத்தில் அழைப்புப் பணச் சந்தையிலிருந்து பிணையுறுதிகள் இல்லாமல் நிதிகளைக் கடன்படுவதற்கு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் நிர்ப்பந்திக்கப்பட்டன. சந்தையில் காணப்பட்ட உயர்ந்த திரவத்தன்மைப் பற்றாக்குறை தொடர்ச்சியான கட்டுப்பாடற்ற கடன்பாடுகள் குறிப்பாக உள்நாட்டு வங்கிகளினால் தூண்டப்பட்ட வேளையில் கணிசமான திரவத்தன்மை வெளிநாட்டு வங்கிகளில் குவிந்து காணப்பட்டது. சந்தைப் பங்கேற்பாளர்களிடையே திரவத்தன்மையின் மீள்பங்கீடு பலயீனமாகக் காணப்பட்டமையும் இலங்கை மத்திய வங்கியிலிருந்து ஒரு சில பங்கேற்பாளர்கள் தொடர்ந்தும் கடன்பட வழிவகுத்தது. வங்கியல்லா முதனிலை வணிகர்கள் திறந்த சந்தை தொழிற்பாட்டு வசதிகளில் மிகையாக தங்கியிருந்தமையானது திறந்த சந்தைத் தொழிற்பாடுகளினது சமிக்ஞையின் தாக்கத்தின் வினைத்திறனைப் பாதித்தது. 2018 செத்தெம்பர் 25 முதல் மட்டுப்படுத்தப்பட்ட திறந்த சந்தைத் தொழிற்பாட்டு வசதிகளின் விளைவாக வங்கியல்லா முதனிலை வணிகர்களால் துணைநில் கடன்வழங்கல் வசதியூடாகவும் நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதியூடாகவும் நிதிகளைத் தொடர்ந்தும் கடன்படக்கூடியதாக இருந்தது.

**பணச்சந்தை கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான துல்லியமான தகவல்களை அதேநேரத்திலும் பெற்றுக்கொள்வது பணச்சந்தையில் விலைகண்டறியும் செயன்முறைக்கு வசதியளிப்பதில் மிக முக்கியமானதாகும்.** இதன்படி, அழைப்புப் பணம் வெளிநாட்டு செலாவணி மற்றும் அரச பிணையங்கள் சந்தைகள் என்பனவற்றிலிருந்து தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக 2018 மாச்சு 01ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் ஒருங்கிணைக்கப்பட்ட சந்தைக் கண்காணிப்பு மையம் அறிமுகப்படுத்தப்பட்டது. வங்கித்தொழில் முறையிலுள்ள நாளாந்த திரவத்தன்மை மதிப்பீட்டினைத் தயாரிப்பதற்காக ஒவ்வொரு வேலை நாளன்றும் 08.30இற்கு முன்னதாக உயர்ந்தமட்ட துல்லியத் தன்மையுடன் திரவத்தன்மை மதிப்பீடுகளை அறிக்கையிடுமாறு ஒருங்கிணைக்கப்பட்ட சந்தைக் கண்காணிப்பு மையம் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளையும் முதனிலை வணிகர்களையும் கேட்டுக்கொண்டது.

## உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை

**ஆண்டு காலப்பகுதியின் போது இலங்கை ரூபா ஐ.அ.டொலருக்கெதிராக கணிசமானளவு பெறுமானத் தேய்வடைந்தது.** கடுமையான மூலதன வெளியேற்றத்தினையும்

உயர்வான இறக்குமதியாளர் கேள்வியினையும் விளைவித்த ஐக்கிய அமெரிக்க, நியூயோர்க் பெடரல் வங்கி மூலமான தொடர்ச்சியாக நான்கு வட்டி வீத அதிகரிப்புகள் ஐ.அ.டொலருக்கெதிராக இலங்கை ரூபா மீது கணிசமான பெறுமானத் தேய்வினைத் தோற்றுவித்தன. ஆண்டின் இறுதி மூன்று மாதங்களின் போது நிலவிய நீண்ட அரசியல் உறுதியின்மையின் காரணமாக இவ்அழுத்தம் தீவிரமடைந்தது. மேலும், ஆண்டின் போது நிகழ்ந்த கணிசமான படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் மிக முக்கியமாக பன்னாட்டு நாணய நிதியத்திடமிருந்து விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் தொகுதியை இழந்தமையின் ஊடாக தோற்றுவிக்கப்பட்ட எதிர்மறையான மனப்பாங்கு என்பனவும் செலாவணி வீதத்தில் உச்சளவான அழுத்தத்திற்குப் பங்களித்தன. அதற்கமைய, ஐ.அ.டொலருக்கெதிராக இலங்கை ரூபா 2017 இன் இறுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.152.85 இலிருந்து 2018இன் இறுதியில் ரூ.182.75 ஆக 16.36 சதவீதத்தினால் தெளிவான விதத்தில் பெறுமானத் தேய்வடைந்த அதேவேளை 2017இல் பதிவுசெய்யப்பட்ட தொடர்புடைய பெறுமானத் தேய்வானது 2 சதவீதம் மாத்திரம் காணப்பட்டது. ஐ.அ.டொலருக்கெதிரான இலங்கை ரூபாவின் ஒட்டுமொத்த பெறுமானத் தேய்விற்கிணங்க 2018 இறுதியில் உள்ளவாறான தந்தி மாற்றல்களுக்கான வர்த்தக வங்கிகளின் சராசரி ஐ.அ.டொலர் கொள்வனவு மற்றும் விற்பனை செலாவணி மாற்று வீதங்கள் முறையே ரூ.180.72 ஆகவும் ரூ.184.70 ஆகவும் பதிவு செய்யப்பட்டிருந்த அதேவேளை 2017இன் இறுதியில் உள்ளவாறான ஒப்பீட்டுத் தொகைகள் 151.31 ஆகவும் 155.15 ஆகவுமிருந்தன.

**ஆண்டு காலப்பகுதியின் போது ஐ.அ.டொலருக்கு எதிரான பெறுமானத் தேய்விற்கு இசைவாக ஏனைய பிரதான நாணயங்களுக்கெதிராகவும் இலங்கை ரூபா பெறுமானத் தேய்வடைந்தது.** 'பிரித்தானியாவின் வெளியேற்றம்' இலிருந்து தோன்றிய நிச்சயமின்மைகள் ஐ.அ.டொலருக்கெதிராக ஸ்ரேலிங் பவுண் பெறுமானத் தேய்வடைவை ஏற்படுத்திய போதிலும் ஐ.அ.டொலருக்கெதிரான இலங்கை ரூபா மீதான அழுத்தமானது ஐ.அ.டொலருக்கெதிரான ஸ்ரேலிங் பவுணின் பெறுமானத் தேய்வினை விஞ்சியிருந்தது. இதன் விளைவாக 2018இன் போது இலங்கை ரூபா, ஸ்ரேலிங் பவுணுக்கெதிராக 11.35 சதவீதத்தினால் பெறுமானத் தேய்வடைந்தது. இதேபோன்று வலுப்படுத்தப்பட்ட டொலரில் இருந்து உருவான ஐ.அ.டொலருக்கெதிரான யூரோவின் பொதுவான பெறுமானத் தேய்வானது இலங்கை செலாவணி வீதத்தில் பாதகமான தாக்கத்தினை வெற்றிகொள்ளுவதற்கு போதாமையாக இருந்ததனால் யூரோவிற்கெதிராக இலங்கை ரூபா 12.68 சதவீதத்தினால் பெறுமானத் தேய்வடைந்தது. ஐக்கிய அமெரிக்காவிற்கும் சீனாவிற்கும் இடையிலான வர்த்தகப் போர், பூகோள அரசியல் சார்ந்த நிச்சயமின்மை காரணமாக சந்தைத் தளம்பல்களின் போது பெறுமதி இழக்காத சொத்தாக ஜப்பானிய யென் மீது தோற்றுவிக்கப்பட்ட மிதமிஞ்சிய கேள்வி மற்றும் ஐ.அ.டொலருக்கெதிராக இலங்கை ரூபாவின் பொதுவான பெறுமானத் தேய்வு என்பவற்றின் காரணமாக 2018 ஆண்டு காலப்பகுதியில் இலங்கை ரூபா 18.06 சதவீதத்தினால் ஜப்பானிய யென்னுக்கெதிராகவும் 8.72 சதவீதத்தினால் இந்திய ரூபாவிற்கெதிராகவும் பெறுமானத் தேய்வடைவதற்கு வழிவகுத்தது.

**2018இல் மத்திய வங்கியானது உள்நாட்டு வெளிநாட்டு செலவாணிச் சந்தையில் தேறிய விற்பனையாளரொருவராகவிருந்தது.** 2018இன் போது இலங்கை மத்திய வங்கியானது பிரதானமாக ஆண்டின் முதல் மூன்று மாதங்களின் போது சந்தையில் இருந்து ஐ.அ.டொலர் 557 மில்லியனை உள்ளீர்த்தது. எனினும், செலாவணி வீதம் மீதான தொடர்ச்சியான அழுத்தத்தினைத் தோற்கடிப்பதற்கும் மிதமிஞ்சிய தளம்பலினைத் தடுப்பதற்கும் அத்துடன் மூலதன உட்பாய்ச்சல்களை வசதிப்படுத்தும் பொருட்டும் இலங்கை மத்திய வங்கியானது சந்தைக்கு ஐ.அ.டொலர் 1,676 மில்லியனை நிரம்பல் செய்தது. அதற்கமைய இலங்கை மத்திய வங்கியானது ஆண்டுகாலப்பகுதியில் தேறிய அடிப்படையில் உள்நாட்டு வெளிநாட்டு செலாவணிச் சந்தைக்கு ஐ.அ.டொலர் 1,120 மில்லியன் நிரம்பல் செய்திருந்தது.

2018இன் போது உள்நாட்டு வெளிநாட்டு செலாவணிச் சந்தையில் வர்த்தக அளவுகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 12.70 சதவீத குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தது. உள்நாட்டு வங்கிகளுக்கிடையிலான சந்தையில் வெளிநாட்டுச் செலாவணி கொடுக்கல்வாங்கல் அளவுகள் 2017இல் ஐ.அ.டொலர் 16,451 மில்லியனிலிருந்து 2018இல் ஐ.அ.டொலர் 17,402 மில்லியனாக அதிகரித்தது. இதற்கு இசைவாக வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டுச் செலாவணி சந்தை நாளாந்த சராசரி அளவுகளும் 2017இல் பதிவாகிய ஐ.அ.டொலர் 68 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2018இல் ஐ.அ.டொலர் 73 மில்லியனாக அதிகரித்தது.

## அரச பிணையங்கள் சந்தை

**ஆண்டின் முதற்காலாண்டுப் பகுதியில் காணப்பட்ட உயர்ந்த படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் மற்றும் இறுக்கமான அரச காசுப் பாய்ச்சல் தேவைப்பாடுகள் என்பனவற்றை பிரதிபலிக்கின்ற விதத்தில், 2017ஆம் ஆண்டின் பின்னரைப் பகுதியிலிருந்து அவதானிக்கப்பட்ட திறைசேரி முறிகளின் விளைவு வீதங்களில் செய்யப்பட்ட கீழ்நோக்கிய சீராக்கம் 2018இன் தொடக்கப்பகுதியிலிருந்து மாற்றமடையத் தொடங்கியது.** எனினும், துணைநில் கடன் வழங்கல் வசதி வீதம் 2018 ஏப்பிறல் 4ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் 25 அடிப்படைப் புள்ளிகளினால் 8.50 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டமையானது திறைசேரி உண்டியல் விளைவு வீதங்கள் மீதான மேல்நோக்கிய அழுத்தங்களை மிதமாக்குவதற்கு பங்களித்ததுடன் அதன்

அட்டவணை 8.21
திறைசேரி முறிகளின் முதன்மைச் சந்தை வழங்கல்கள்

| ஆண்டு | வழங்கப்பட்ட தொகை (ரூ.பில்) | | |
|---|---|---|---|
| | ஏலம் | முன்வைக்கப்பட்டது | மொத்தம் |
| 2016 | 654 | 9 | 664 |
| 2017 | 536 | 13 | 549 |
| 2018 | 763 | - | 763 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

பின்னர் இது 2018 செத்தெம்பர் இறுதிவரை பெருமளவிற்கு உறுதியாகக் காணப்பட்டது. எனினும், அரசியல் மற்றும் வெளிநாட்டுச் சூழல்களில் காணப்பட்ட அபிவிருத்திகளிலிருந்து முக்கியமாக தோன்றிய நிதியியல் சந்தைகளின் நிச்சயமற்ற தன்மையானது 2018 ஒத்தோபர் இறுதியில் திறைசேரி உண்டியல் விளைவு வீதங்களை மேல்நோக்கி உயர்த்தியதுடன் அதன் பின்னர் விளைவு வீதங்கள் 2018 இறுதியளவில் ஒப்பீட்டு ரீதியில் உயர்ந்த மட்டங்களில் உறுதியடைந்தன. குறிப்பாக ஆண்டின் முதல் மூன்று காலாண்டுப் பகுதியிலும் உறுதியானதும் தாழ்ந்ததுமான வட்டிச் சூழலொன்றினை பேணுகின்ற வடிவத்தில் இவ்வாண்டு காலப்பகுதியில் பின்பற்றப்பட்ட படுகடன் முகாமைத்துவ உபாயங்கள், வெளிநாட்டு மூலதன சந்தையை அணுகுதல் தொடர்பான எதிர்பார்ப்புக்களினால் உருவாக்கப்பட்ட சாதகமான சந்தை உத்வேகம், சுமுகப்படுத்தப்பட்ட திறைசேரி உண்டியல்களின் மீள்வழங்கல் செயன்முறை, திறைசேரி உண்டியல் மற்றும் திறைசேரி முறிகளுக்காக முன்கூட்டியே அறிவிக்கப்பட்ட ஏலக் கலண்டர் பின்பற்றப்பட்டமை மற்றும் எதிர்கால ஒழுங்குகள் மற்றும் பேரண்ட பொருளாதார அபிவிருத்திகள் தொடர்பில் சந்தைப் பங்கேற்பாளர்களுடன் தொடர்ச்சியாக இடம்பெற்ற பேச்சுவார்த்தைகள் என்பன ஆதரவாக அமைந்தன. மேலும், 2018 ஏப்பிறலில் ஐ.அ.டொலர் 2,500 மில்லியனுக்கான நாட்டிற்கான பன்னாட்டு முறிகளை வழங்கியதன் மூலம் இலங்கை பன்னாட்டு மூலதனச் சந்தைகளை வெற்றிகரமாக அணுகியது. எனினும், ஐக்கிய அமெரிக்காவின் வட்டி வீதங்கள் இயல்பு நிலைக்குத் திரும்பியதன் முக்கிய காரணமாக இலங்கை உள்ளிட்ட தோற்றம் பெற்றுவருகின்ற சந்தைப் பொருளாதாரங்களிலிருந்து வெளிநாட்டு முதலீடுகள் மீளப்பெறப்பட்டமை மற்றும் உள்நாட்டு சவால்கள் அதேபோன்று ஆண்டின் பிற்பகுதியில் நிலவிய உலகளாவிய பொருளாதார நிலைமைகள் அரச பிணையங்களின் விளைவு அமைப்பின் மீது மேல்நோக்கிய அழுத்தமொன்றிற்கு பங்களித்தது மட்டுமன்றி 2017 இறுதியுடன் ஒப்பிடுகையில் 2018 இறுதியில் திறைசேரி உண்டியல் மற்றும் திறைசேரி முறிகளின் வெளிநாட்டு உடைமைகள் குறைவடையவும் வழிவகுத்தது. இதன்படி, 2017 இறுதியுடன் ஒப்பிடுகையில் 2018 இறுதியில் 364 நாள் திறைசேரி உண்டியல்களின் அடித்தள அளவுக் குறியீட்டு விளைவு வீதம் 230 அடிப்படைப் புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. மேலும், 2018 திசெம்பர் இறுதியில் 91 நாள், 182 நாள் மற்றும் 364 நாள் முதிர்ச்சியைக் கொண்ட திறைசேரி உண்டியல்களின் விளைவு வீதங்கள் முறையே 10.01 சதவீதமாகவும் 9.99 சதவீதமாகவும் 11.20 சதவீதாகவும் காணப்பட்டன. இதற்குமேலாக, 2018இன் இறுதிப்பகுதியில் குறுங்கால வட்டி வீதங்களின் மேல் நோக்கிய சீராக்கமும் நடுத்தரகால திறைசேரி முறிகளின் விளைவு வீதங்களில் பிரதிபலிக்கப்பட்டது.

அட்டவணை 8.22
திறைசேரி உண்டியல்களின் முதன்மைச் சந்தை நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதங்கள்

ஓராண்டுக்கான சதவீதம்

| ஆண்டு | முதிர்ச்சி | | | திரண்ட ஆண்டுச் சராசரி |
|---|---|---|---|---|
| | 91-நாட்கள் | 182-நாட்கள் | 364-நாட்கள் | |
| 2014 | 6.58 | 6.57 | 6.73 | 6.68 |
| 2015 | 6.32 | 6.50 | 6.60 | 6.46 |
| 2016 | 8.26 | 9.23 | 10.20 | 9.38 |
| 2017 | 9.01 | 9.80 | 10.07 | 9.77 |
| 2018 | 8.40 | 8.58 | 9.68 | 9.36 |

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

**திறைசேரி முறிகள் மற்றும் திறைசேரி உண்டியல்களில் காணப்பட்ட வெளிநாட்டு முதலீடுகளின் மொத்த தேறிய வெளிப்பாய்ச்சல் ஐ.அ.டொலர் 990.7 மில்லியனாக விளங்கியதுடன் திறைசேரி உண்டியல்களில் ஐ.அ.டொலர் 96.4 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலையும் திறைசேரி முறிகளில் ஐ.அ.டொலர் 893.6 பில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலையும் 2018 ஆண்டுப்பகுதியில் உள்ளடக்கியிருந்தது.** 2018 இறுதியில் திறைசேரி முறிகள் மற்றும் திறைசேரி உண்டியல்களில் காணப்பட்ட வெளிநின்ற வெளிநாட்டு உடைமைகள் 2017 இறுதியின் ரூ.322.6 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.158.6 பில்லியனாக விளங்கி, 50.8 சதவீதங் கொண்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சியைப் பதிவுசெய்தது.

**சந்தை நிலைமைகளின் அநுகூலங்களைப் பெற்றுக்கொள்ளும்பொருட்டு முதிர்ச்சியடைகின்ற ஐ.அ.டொலர் 2,304.2 மில்லியன் கொண்ட தொகைக்கு எதிராக 2018ஆம் ஆண்டுப்பகுதியில் இலங்கை அபிவிருத்தி முறிகளை**

அட்டவணை 8.23
அரச பிணையங்களின் விளைவு வீதங்கள்

ஆண்டுக்கான சதவீதம்

| விடயம் | முதலாந்தரச் சந்தை | | இரண்டாந்தரச் சந்தை | |
|---|---|---|---|---|
| | 2017 | 2018 | 2017 | 2018 |
| திறைசேரி உண்டியல்கள் | | | | |
| 91 நாட்கள் | 7.69 - 9.73 | 7.75 - 10.07 | 7.65 - 9.70 | 7.61 - 9.93 |
| 182 நாட்கள் | 8.30 - 10.79 | 7.95 - 10.03 | 8.30 - 10.68 | 7.93 - 10.44 |
| 364 நாட்கள் | 8.90 - 11.11 | 8.80 - 11.25 | 8.89 - 11.03 | 8.78 - 11.15 |
| திறைசேரி முறிகள் | | | | |
| 2 ஆண்டுகள் | 9.83 - 12.30 | - | 9.33 - 11.98 | 9.05 - 11.36 |
| 3 ஆண்டுகள் | - | 9.55 - 11.88 | 9.59 - 12.44 | 9.32 - 11.61 |
| 4 ஆண்டுகள் | 11.13 - 11.94 | - | 9.81 - 12.69 | 9.37 - 11.82 |
| 5 ஆண்டுகள் | 10.09 - 12.89 | 9.44 - 11.69 | 9.96 - 12.73 | 9.45 - 11.87 |
| 6 ஆண்டுகள் | 11.21 - 11.49 | - | 10.01 - 12.84 | 9.53 - 11.97 |
| 10 ஆண்டுகள் | 9.90 - 12.21 | 10.20 - 12.23 | 10.14 - 12.94 | 9.72 - 12.25 |
| 15 ஆண்டுகள் | - | 10.05 - 10.88 | 10.32 - 13.07 | 9.97 - 12.37 |
| 30 ஆண்டுகள் | - | - | 10.62 - 13.33 | 10.29 - 12.39 |

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

**வழங்கியதன் மூலம் இலங்கை மத்திய வங்கி ஐ.அ.டொலர் 1,492.1 மில்லியனை திரட்டிக் கொண்டது.** இது உள்நாட்டு ரூபாச் சந்தை நிதியிடலின் மீதான அழுத்தத்தினை விடுவித்து 2018இன் முதல் மூன்று காலாண்டுப்பகுதிகளிலும் உள்நாட்டு வட்டி வீதங்கள் ஒழுங்காகப் பேணப்படுவதனை இயலுமைப்படுத்தியது.

**2018ஆம் ஆண்டுப்பகுதியில், ஒட்டுமொத்த உள்நாட்டுப் பொத்துப் படுகடனின் முதிர்ச்சிக்கான சராசரிக் காலம் அதிகரித்து, 2017 இறுதியில் 5.78 ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் 2018 இறுதியில் 5.91 ஆண்டுகளைப் பதிவுசெய்தது.** 2018 இறுதியில் வெளிநின்ற திறைசேரி முறிகளின் முதிர்ச்சிக்கான சராசரிக் காலம் 2017 இறுதியின் 6.72 ஆண்டுகளிலிருந்து 6.88 ஆண்டுகளுக்கு அதிகரித்தது. முதிர்ச்சிக்கான சராசரிக் காலத்தில் ஏற்பட்ட மேல்நோக்கிய சீராக்கத்திற்கு முக்கியமாக 2018 இன் முதலரைப்பகுதியில் நிலவிய தூண்டுதலளிக்கும் சந்தைச் சூழலின் கீழ் நீண்டகால முதிர்ச்சியைக் கொண்ட திறைசேரி முறிகள் வழங்கப்பட்டமையே காரணமாகும்.

## கம்பனிப் படுகடன் பிணையங்கள் சந்தை


**வர்த்தகப் பத்திரத்திற்கான சந்தையின் சுறுசுறுப்பு மட்டம் தொடர்ந்தும் குறைவாகக் காணப்பட்டது.** 2018 காலப்பகுதியில் 2017இல் வழங்கப்பட்ட ரூ.6.5 பில்லியன் பெறுமதியுடைய 15 வர்த்தகப் பத்திரங்களுடன் ஒப்பிடுகையில் ரூ.1.9 பில்லியன் பெறுமதியுடைய 6 வர்த்தகப் பத்திரங்கள் வங்கிகளின் உதவியுடன் வழங்கப்பட்டுள்ளன. வர்த்தகப் பத்திரங்கள் தொடர்பான வட்டி வீதங்கள் 2017இல் 13.75 - 16.50 சதவீத வீச்சில் காணப்பட்ட வேளையில் 2018இல் 13.10 - 15.00 சதவீத வீச்சில் காணப்பட்டது. 2018இல் 3 மாதங்கள் வரையிலான முதிர்ச்சியைக் கொண்ட வர்த்தகப் பத்திரங்களே வழங்கப்பட்டுள்ளன. 2018 இறுதியில் வர்த்தகப் பத்திரத்தின் மொத்த வெளிநின்ற தொகை 2017இன் ரூ.1.7 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.1.2 பில்லியனாக இருந்தது.

**2018இல் கம்பனி முறிகள் சந்தையின் நடவடிக்கை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஓரளவு சுறுசுறுப்பாக இருந்தது.** 2017இன் 5 தொகுதிக் கடன் பத்திர வழங்கல்களின் ரூ.20.0 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2018 காலப்பகுதியில், 11 வழங்கல்களின் மூலம் ரூ.55.9 பில்லியன் திரட்டப்பட்டுள்ளது. வங்கிளிற்கான புதிய பாசல் III தேவைப்பாடு காரணமாக பெரும்பாண்மையான வங்கிகள் பாசல் III இணங்கியெழுகும் தொகுதிக் கடனூடாக மூலதனத்தைத் திரட்டியமையால் 2018இல் கம்பனிப் படுகடன் சந்தைகளின் நடவடிக்கை உயர்த்தியது. குறிப்பிட்ட காலப்பகுதியில் பட்டியலிட்ட 11 நிறுவனங்களில் 8 நிறுவனங்கள் வங்கிகள் அல்லது ஏனைய நிதியியல் நிறுவனங்களாக இருந்திருக்கின்றன. 2018இல் பட்டியலிடப்பட்ட கம்பனிப் படுகடனின் வழங்கல்களில் மிக உயர்ந்த தொகையான ரூ.10.0 பில்லியனை கொமர்ஷல் வங்கியினாலும் அதனைத் தொடர்ந்து ரூ.7.5 பில்லியன் பெறுமதியான பட்டியலிடப்பட்ட கம்பனிப் படுகடன் சம்பத் வங்கி பிஎல்சி இனாலும் வழங்கப்பட்டுள்ளன. குறிப்பிட்ட காலப்பகுதியில் வழங்கப்பட்ட தொகுதிக் கடன் பத்திரங்களில் ஒரு மாறும் வட்டிவீதத் தொகுதிக்கடன் பத்திரமும் ஒரு பூச்சியக் கூப்பன் தொகுதிக்கடன் பத்திரமும் இருந்தன. இம்முறிகளின் நிலையான வட்டிவீதங்கள் 2017இன் 11.95 - 15.00 சதவீத வீச்சுடன் ஒப்பிடுகையில் 2018இல் 12.00 - 14.75 சதவீத வீச்சில் காணப்பட்டது.

## பங்குரிமைச் சந்தை

**2018இல் கொழும்பு பங்குப் பரிவர்த்தனை 2017இல் அடையப்பட்ட வளர்ச்சிக்கு மாறாக குறைந்துசெல்லும் போக்கினைப் பதிவுசெய்துள்ளது.** 2018 இறுதியில் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் அனைத்துப் பங்கு விலைச்சுட்டெண் மற்றும் ஸ்ரான்டட் அன்ட் புவர்ஸ் இலங்கை 20 சுட்டெண்கள் உலக மற்றும் உள்ளூர் பாதகமான அபிவிருத்திகளிற்கு பதிலளிக்கும் முகமாக குறைவடைந்தன. 2018 இறுதியில் அனைத்துப் பங்கு விலைச்சுட்டெண் முன்னைய ஆண்டின் 2.3 சதவீத வளர்ச்சிப் பதிவுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்களவு 5.0 சதவீதத்தால் 6,052.4இற்கு குறைவடைந்துள்ளது. 2018 ஒத்தோபரில் மிகவும் குறைவான அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண் 5,761.1ஐ அடைந்து ஆண்டு காலப்பகுதியில் 9.6 சதவீத குறைவைப் பதிவுசெய்தது. இந்தியா தவிர்ந்த தாய்லாந்து, மலேசியா, பிலிப்பைன்ஸ் போன்ற அநேகமான ஆசிய நாடுகளின் அனைத்து பங்குரிமை மூலதன சுட்டெண்களின் குறைவுடன் ஒப்பிடுகையில் அனைத்து பங்கு விலைச் சுட்டெணின் குறைவுத்தன்மை குறைவாகக் காணப்பட்டதுடன் இதற்குச் சந்தையின் அளவு மற்றும் உலக சந்தைக்கான இலங்கையின் குறைவான சம்மந்தமும் காரணமாகும். அதேவேளையில், 2018 காலப்பகுதியில் ஸ்ரான்டட் அன்ட் புவர்ஸ் இலங்கை 20 சுட்டெண்கள் 2017இன் 5.0 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 14.6 சதவீதமாக வீழ்ச்சியைப் பதிவுசெய்தது.

வரைபடம் 8.20
அனைத்து பங்கு விலைச் சுட்டெண், எஸ் அன்ட் பி எஸ் எல் 20 சுட்டெண் மற்றும் கொழும்புப் பங்குப்பரிவர்த்தனையில் நாளாந்தப்புரள்வு





8

**சந்தை மூலதனமாக்கல், சந்தை விலை வருவாய் விகிதம் மற்றும் சந்தைப் புரள்வு என்பவற்றின் அடிப்படையில் சந்தையானது எதிரான வளர்ச்சியைப் பதிவுசெய்துள்ளது.** 2018 காலப்பகுதியில் சராசரி நாளாந்த புரள்வு 2017இன் ரூ.915.3 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.833.6 மில்லியனாகக் குறைவடைந்தது. சந்தை மூலதனமாக்கல் மற்றும் பதிவுசெய்யப்பட்ட கம்பனிகளின் எண்ணிக்கை தொடர்ந்தும் குறைவாகக் காணப்பட்டது. 2018இல், சந்தைப் புரள்வு விசை (மொத்த சந்தைப் புரள்வுக்கும் சராசரி சந்தை மூலதனத்திற்குமான விகிதம்) 2017இன் 7.5 சதவீதத்திலிருந்து 6.9 சதவீதத்திற்கு குறைவடைந்தது. குறைவான சந்தைப் புரள்வு வேகமானது வியாபாரக் கட்டணத்தின் உயர் தாக்கம், உயர் முதலீட்டாளர் பங்களிப்பு மட்டம் மற்றும் குறைவான திரவத்தன்மை என்பவற்றை குறிக்கும். அதேவேளையில் சந்தை மூலதனவாக்கம் 2017இன் இறுதியில் பதிவுசெய்த ரூ.2,899.3 பில்லியனிலிருந்து 2018இன் இறுதியில் ரூ.2,839.5 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. 2018 இறுதியில் சந்தை மூலதனவாக்கம், மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 2017இன் 24.5 சதவீதத்திலும் பார்க்க 21.4 சதவீதமான குறைவைப் பதிவைப் பதிவுசெய்தது. 2018இல் சந்தை விலை வருவாய் விகிதம் 2017இன் இறுதியின் 10.6 உடன் ஒப்பிடுகையில் 9.7ஆகக் காணப்பட்டது. ஆண்டுகாலப்பகுதியில் இவ்விகிதம் ஏப்பிறல் 2018இல் தனது உயர் பெறுமதியான 11.5 ஐயும் ஒத்தோபர் 2018இல் தனது குறைவான பெறுமதியான 9.0 ஐயும் அடைந்தது.

**2018 ஆண்டுகாலப்பகுதியில், கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் தொடர்ச்சியான வெளிநாட்டு வெளிப் பாய்ச்சல்கள் காணப்பட்டது.** இரண்டாந்தரச் சந்தையில், தேறிய அடிப்படையில் வெளிநாட்டு முதலீடுகள் 2017இன் இறுதியின் ரூ.17.7 பில்லியன் தேறிய வெளிநாட்டு உட்பாச்சலுடன் ஒப்பிடுகையில் 2018இல் ரூ.23.1 பில்லியன் தேறிய வெளிநாட்டு வெளிப்பாச்சலாக பதிவுசெய்திருந்தது. அவையாவன வெளிநாட்டு செலாவணி மீது ஏற்பட்ட அதிகரித்த அழுத்தம்

வரைபடம் 8.21
பங்கு மூலதனச்சந்தையில் வெளிநாட்டு பங்கேற்பு




*மூலம்:* கொழும்பு பங்குச் சந்தை

அட்டவணை 8.24
பங்குச்சந்தையின் தேர்ந்தெடுக்கப்பட்ட குறிகாட்டிகள்

| விடயம் | 2017 | 2018 |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டெண் (1985=100) (அ) | 6,369.3 | 6,052.4 |
| ஆண்டுக்கு ஆண்டு மாற்றம் (%) | 2.3 | -5.0 |
| எஸ் அன்ட்பி எஸ் எல் 20 சுட்டெண் (17.12.2014 = 1000) (அ) | 3,671.7 | 3,135.2 |
| ஆண்டுக்கு ஆண்டு மாற்றம் (%) | 5.0 | -14.6 |
| சந்தை மூலதனவாக்கம் (ரூ.பில்) (அ) | 2,899.3 | 2,839.5 |
| மொ.உ.உ.யின் சதவீதமாக (%) | 24.5 | 21.4 |
| சந்தை விலை வருவாய் விகிதம் (அ) | 10.6 | 9.7 |
| சந்தை மூலதனவாக்கத்திற்கான மொத்தப் புரள்வு (%) | 7.6 | 7.0 |
| சராசரி நாளாந்தப் புரள்வு (ரூ. மில்) | 915.3 | 833.6 |
| வர்த்தகம் செய்யப்பட்ட பங்குகளின் பெறுமதி (ரூ. பில்) | 220.6 | 200.1 |
| வர்த்தகம் செய்யப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை (மில்) | 8,468.3 | 6,000.7 |
| பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் எண்ணிக்கை | 296.0 | 297.0 |
| அறிமுகம் செய்யப்பட்டவை (ஆ) | 1.0 | 1.0 |
| பொது மக்களுக்கான ஆரம்ப பங்கு வழங்கல்களின் எண்ணிக்கை/ விற்பனைக்கான வழங்கல்கள் (ஆ) | 2.0 | 2.0 |
| உரிமைப்பங்கு வழங்கல்களின் எண்ணிக்கை | 15.0 | 16.0 |
| உரிமைப்பங்கு வழங்கல்கள் ஊடாகவும் ஆரம்ப பொது வழங்கல் ஊடாகவும் திரட்டப்பட்ட தொகை (ரூ.பில்) | 51.6 | 44.2 |

(அ) ஆண்டு முடிவில்
(ஆ) பட்டியலிடுவதினை பெற்றுக் கொள்ளுவதற்கு 3 முறைகள் உள்ளன:
அதாவது பொதுமக்களுக்கான வழங்கலினைத் தேவைப்படுத்தாத ஒரு அறிமுகம், ஏற்கனவே உள்ள பங்குகளை பொதுமக்களுக்கு வழங்குகின்ற விற்பனைக்கான வழங்கல் மற்றும் புதிய பங்குகளை பொதுமக்களுக்கு வழங்குகின்ற உதவு தொகைக்கான வழங்கல்கள் என்பன அவையாகும்.

*மூலம்:* கொழும்பு பங்குப் பரிவர்த்தனை

அரசியல் நிச்சயமற்ற தன்மை மற்றும் உலக அபிவிருத்தியால் ஏற்பட்ட முதலீட்டாளர்களின் மனோபாவம் மாற்றம் போன்ற காரணிகளால் சமீபத்திய காலத்தின் சந்தையின் தேறிய வெளிநாட்டு வெளிப்பாய்ச்சல்கள் காணப்பட்டன. இதற்கு மேலதிகமாக பரந்துபட்ட முதலீட்டு சந்தர்ப்பங்கள் காணப்பட்டமையாலும் கொழும்பு பங்குச் சந்தையில் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் பங்களிப்பு 2017இல் பதிவுசெய்த 46.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2018இல் 44.3 சதவீதமாக சிறிதளவில் குறைவடைந்தது.

**முதலாந்தரச் சந்தை தொடர்ந்தும் குறைந்தளவிலான செயற்படாவிருந்தது.** 2018இல் இரண்டு ஆரம்பப் பொது வழங்கல் மூலம் ரூ.2.0 பில்லியன் திரட்டப்பட்டது. அதேவேளை 2017இல் ஒரு ஆரம்ப பொது வழங்கல் மூலம் ரூ.1.0 பில்லியன் திரட்டப்பட்டது. மேலும், 2017இல் 15 உரிமை வழங்கல்கள் மூலம் 50.6 பில்லியன் திரட்டப்பட்ட அதேவேளையில் 2018இல் 16 உரிமை வழங்கல்கள் மூலம் ரூ.42.2 பில்லியன் திரட்டப்பட்டுள்ளது.

**2018இல் அநேகமான உப துறைகளின் விலைச் சுட்டெண்களின் செயலாற்றம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் பலவீனமடைந்து காணப்பட்டது.** கட்டவாக்கம் மற்றும் பொறியியல் (40.9 சதவீதம்), உற்பத்தி (27.7 சதவீதம்), தகவல் தொழில்நுட்பம் (25.9 சதவீதம்), பெருந்தோட்டம் (24.5

சதவீதம்), தொலைத்தொடர்பு (20.9 சதவீதம்) மற்றும் வர்த்தகம் (20.2 சதவீதம்) போன்ற உப துறைகள் குறிப்பிடத்தக்களவு குறைவைப் பதிவுசெய்துள்ளன. ஆண்டுகாலப்பகுதியில் 20 உபதுறைகளுள் இரண்டு உப துறைகள் மட்டுமே வளர்ச்சியைப் பதிவுசெய்துள்ளன. அவையாவன, களஞ்சியம் மற்றும் விநியோகம், குடிவகை மற்றும் உணவுடன் புகையிலை என்பன முறையே 3.1 சதவீதம் மற்றும் 5.3 சதவீதத்தால் அதிகரித்துள்ளன.

**2018 காலப்பகுதியில், பங்குரிமைச் சந்தையின் நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கும் மென்மைப் படுத்தவதற்கும் பல ஒழுங்குமுறைப்படுத்தல் அளவீடுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.** 2017 நவெம்பரில் வெளியிடப்பட்ட பிணையங்கள் பரிமாற்றல் சட்டவரைபிற்கு பங்குதாரர்களிடமிருந்து பெறும் கருத்துக்களை மீள்பார்வை செய்வதற்கு பிணையங்கள் மற்றும் பரிமாற்றல் ஆணைக்குழு அதற்குள் அடங்கலாக பிரிவுபட்ட குழுமை நிறுவியுள்ளன. இதற்கு மேலாக, பிணையங்கள் மற்றும் பரிமாற்றல் ஆணைக்குழு உலக வங்கியின் பிரிதிநிதிகளிடம் சிறப்பித்துக்காட்டப்பட்ட சில பிரச்சனைகள் சம்மந்தமாக கலந்துரையாடல்களை நடத்தியுள்ளன. மேலும், பங்குச் சந்தை நடவடிக்கையை ஆரோக்கியமான முறையில் நடத்துவதற்கு வசதியளிக்கும் முகமாக பிணையங்கள் மற்றும் பரிமாற்றல் ஆணைக்குழு பொதுமக்களின் குறைந்தளவு வைத்திருக்கும் தேவைப்பாடு மற்றும் கொழும்பு பங்குச் சந்தையின் பட்டியலிடப்படும் தேவைப்பாட்டை மீறியதற்கு பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனிகள் மீது எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக விதிகள் விதிக்கப்பட்டுள்ளன. கொழும்புப் பங்குச் சந்தையினூடாக சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களிற்கு மூலதனத்தை உயர்த்தவதற்கு சிறிய மற்றும் நடுத்தர நிறுவன சபை தொடங்கப்பட்டுள்ளது

## 8.5 நிதி அபிவிருத்தியும் நிதி வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கான வழிகளும்

### அபிவிருத்தி நிதி மற்றும் நிதி வசதிகளைப் பெறுதல்

**நாட்டில் காத்திரமான கொடுகடன் வழங்கல் மற்றும் நிதியியல் ரீதியாக உட்சேர்த்தல் என்பன ஊடாக உட்சேர்க்கின்ற மற்றும் சமநிலையான பொருளாதார வளர்ச்சியினை அதிகரிப்பதன் மீது மத்திய வங்கியின் அபிவிருத்திக் கொள்கை உபாயங்கள் பிரதானமாக மையப்படுத்தியிருந்தன.** மேற்குறித்த குறிக்கோளினை அடையப்பெறுவதற்கு மத்திய வங்கியானது பல்வேறு மீள்நிதியிடல், வட்டி உதவுதொகை மற்றும் கொடுகடன் உத்தரவாதங்கள் போன்றவற்றை ஒருங்கிணைத்து வசதிப்படுத்திய அதேவேளை நாடுபூராகவுமுள்ள தனிப் பட்டவர்கள் மற்றும் சிதறிக் காணப்படுகின்ற நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கு பல்வேறு வகையான கடன் துணைப் பணிகளைத் தொடர்ந்தும் வழங்கியது.

**2018இல் மத்திய வங்கி, இலங்கை அரசாங்கம், பன்னாட்டு கொடையாளி முகவராண்மைகள் மற்றும் பங்கேற்கின்ற நிதியியல் நிறுவனங்கள் போன்றவற்றிடமிருந்தான நிதியளித்தலுடன் மத்திய வங்கி பல்வேறு கடன் திட்டங்களை நடைமுறைப்படுத்தியது.** அதற்கமைய, மத்திய வங்கியானது பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் ஊடாக 11 மீள்நிதியிடல், வட்டி உதவுதொகை, கடன் உத்தரவாதத் திட்டங்கள் போன்றவற்றை நடைமுறைப்படுத்தியதுடன் ரூ.16,435.4 மில்லியன் தொகைக்கான சலுகைக் கடன் வசதிகளை நாடுபூராகவுமுள்ள 105,874 நலன்பெறுநர்களுக்கு பங்கேற்பு நிதியியல் நிறுவனங்களூடாக வழங்கியது. அதேவேளை வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிக் கருத்திட்டம் II - சுழலும் நிதியம், அட்டவணைப்படுத்தப்பட்டவாறு 2018 யூலையில் வெற்றிகரமாக நிறைவுசெய்யப்பட்டது.

**2018இல் வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்துடன் இணைந்து இலங்கை அரசாங்கம் பெறுமதிச் சங்கிலி பங்குடமைகளை அபிவிருத்தி செய்வதற்கும் ஈடுபடுகின்ற அனைத்து தரப்பினர்களுக்குமான பலன்களை மேம்படுத்துவதற்கும் அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர் பங்குடமைகள் மாதிரியின் கீழ் சிறுஉடமையாளர் வேளாண்வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தினை நிறுவியது.** சிறுஉடமையாளர் வேளாண்வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் கடன் கூறினை பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் அமுல்படுத்துகின்ற அதேவேளை சிறுஉடமையாளர் வேளாண்வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் கருத்திட்ட முகாமைத்துவ அலகானது சிறுஉடமையாளர் வேளாண்வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னணி நிகழ்ச்சித்திட்ட முகவராண்மையாக செயல்படுகின்ற சனாதிபதி செயலகத்தின் கீழான நிகழ்ச்சித்திட்டத்தினை நடைமுறைப்படுத்துகின்றது. அதற்கமைய 2018 மார்ச்சில் சிறுஉடமையாளர் வேளாண்வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக இலங்கை அரசாங்கத்திற்கும் வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்திற்கும் இடையில் நிருவாக உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டதுடன் 2018 ஏப்பிறலில் சிறுஉடமையாளர் வேளாண்வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஆறு புதிய கடன் திட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கு பங்கேற்பு நிதி நிறுவனங்களுக்கு தொழிற்படுத்தல் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. சிறுஉடமையாளர் வேளாண்வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்திற்கு வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியம் மற்றும் இலங்கை அரசாங்கம் ஆகிய இரண்டின் மூலமும் நிதியளிக்கப்படும். வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்தினால் வழங்கப்படும் கொடுகடன்களுக்கான கடன்பெறுகைகள், அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர் பங்குடமைகள் மூலதனம், அரசாங்க - தனியார் - உற்பத்தியாளர் பங்குடமைகள் பருவகால மற்றும் இளையோர் கடன் திட்டங்கள் என்பவற்றின் நிதியளித்தலுக்காக பயன்படுத்தப்படுகின்றது.

இலங்கை அரசாங்கமானது சிறுஉடமையாளர் வேளாண்வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் சூழல் நிதிய கடன் திட்டங்களை அதாவது சூழல் நிதிய மூலதன கடன் திட்டம், சூழல் நிதிய பருவகால கடன் திட்டம் மற்றும் சூழல் நிதிய வருமானம் உழைக்கும் கடன் திட்டம் என்பவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு சிறுஉடமையாளர் வேளாண்வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்திற்கான இணைத்தரப்பு நிதியளித்தலை வழங்குகின்றது. இவ்விடயம் தொடர்பில், இலங்கை அரசாங்கமானது வறள்வலய வாழ்வாதார உதவி மற்றும் பங்குடமை நிகழ்ச்சித்திட்டம் - சூழல் நிதியம், சிறுஉடமையாளர் பெருந்தோட்ட மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் தேசிய வேளாண்வியாபார அபிவிருத்திக் கருத்திட்டம் ஆகிய ஏற்கனவே வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியம் நிதியளித்த நிதியியல் தொடர் கொடுகடன்களில் கடன் அறவீடுகளைப் பயன்படுத்தி சிறுஉடமையாளர் வேளாண்வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் திரட்டு சூழல் நிதியமொன்றினை நிறுவியது. திரட்டு சூழல் நிதியமானது சூழல் நிதிய கடன்திட்டங்களின் கீழ் தமது நிதித் தேவைப்பாடுகளை நிறைவுசெய்வதற்கு அனைத்து முன்னைய மற்றும் தற்போதைய வேளாண்மை அபிவிருத்திற்கான பன்னாட்டு நிதியம் நிதியளித்த கருத்திட்ட நலன்பெறுநர்களுக்குமென பயன்படுத்தப்படுகிறது. மேலும், பருவகால வேளாண்மை நடடிவக்கைகளில் ஈடுபட்டுள்ள விவசாயிகளின் தேவைகளுக்கு செவிசாய்த்து, 2018 திசெம்பரில் சிறுஉடமையாளர் வேளாண்வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் பருவகால கடன்கள் தொடர்பில் உயர்ந்தபட்ச மீள்கொடுப்பனவுக் காலமும் சலுகைக் காலமும் முறையே 12 மாதங்கள் மற்றும் 6 மாதங்களிலிருந்து 30 மாதங்கள் மற்றும் 18 மாதங்களாக அதிகரிக்கப்பட்டன. 2018 ஒத்தோபரில் சிறுஉடமையாளர் வேளாண்வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்ட கடன்திட்டங்களின் தொடக்கத்துடன் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் கடன்திட்டங்களின் தொழிற்பாடுகளைத் தன்னியக்கப்படுத்துவதற்கு தன்னியக்க முறைமையொன்றினை உருவாக்குவதற்கு சிறுஉடமையாளர் வேளாண்வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்ட கருத்திட்ட முகாமைத்துவ பிரிவுடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டது.

**2018 ஆண்டு காலப்பகுதியில் “என்டபிரைஸ் ஸ்ரீலங்கா” என்ற நிகழ்ச்சித்திட்டத்தை அறிமுகப்படுத்தி நாட்டில் அபிவிருத்தி நிதி மற்றும் நிதி வசதிகளைப் பெற்றுக்கொள்ளல் என்பவற்றை மேலும் மேம்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் பங்களித்தது.** அதற்கமைய, நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு, இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 15 கடன் திட்டங்களை அறிமுகப்படுத்தியது. “என்டபிரைஸ் ஸ்ரீலங்கா” நிகழ்ச்சித்திட்டமானது 2020ஆம் ஆண்டளவில் தலைக்குரிய வருமானத்தினை ஐ.அ.டொலர் 5,000 வரை உயர்த்துதல், ஒரு மில்லியன் புதிய தொழில்வாய்ப்புகளை உருவாக்குதல், ஏற்றுமதிகளை இரட்டிப்பாக்குதல் மற்றும் பொருளாதார வளர்ச்சியினை 5 சதவீதத்திற்கு மேல் நிலைபெறச் செய்தல் ஆகிய அரசாங்கத்தின் நடுத்தரகால அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு உற்பத்தி பொருளாதாரமொன்றில் அனைத்து இலங்கையர்களையும் பங்காளர்களாக ஆக்குகின்ற குறிக்கோளுடன் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக பொருளாதார அபிவிருத்தியினைச் செலுத்துகின்ற சக்தியாக இனங்காணப்பட்ட இளையோர், பெண்கள் மற்றும் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரவிலான தொழில்முயற்சியாளர்கள் போன்றவர்களுக்கு சலுகை நிதியியல் மற்றும் நிதிசாரா உதவிகளை வழங்குவதனூடாக நாட்டின் வேளாண்மை, கைத்தொழில் மற்றும் பணிகள் துறையினை மேம்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது.

**என்ரபிறைஸ் ஸ்ரீலங்கா நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட மொத்தக் கடன்கள் முன்னைய ஆண்டின் 9 மாதங்களுடன் ஒப்பிடுகையில் தொழிற்பாடுகளின் முதல் முழு ஆண்டான 2018இல் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது.** 2018இல் என்டபிரைஸ் ஸ்ரீலங்கா நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட கடன்களின் மொத்த எண்ணிக்கையும் வழங்கப்பட்ட பெறுமதியும் முன்னைய ஆண்டின்போது பதிவுசெய்யப்பட்ட 6,460 கடன்களுடனும் வழங்கப்பட்ட ரூ.16,381 மில்லியன் பெறுமதியுடனும் ஒப்பிடுகையில் 34,476 ஆகவும் ரூ.65,364 மில்லியன் பெறுமதியாகவும் அதிகரித்தது. 2018இல் வழங்கப்பட்ட மொத்தக் கடன்களில் 51.4 சதவீதம் கொண்ட பெரும்பாலான பகுதி (மொத்த கடன்களின் எண்ணிக்கையில் 42 சதவீதம்) 6 மாவட்டங்களில் (அதாவது கம்பஹா, கொழும்பு, குருநாகல், களுத்துறை, அம்பாந்தோட்டை மற்றும் காலி) பகிர்ந்தளிக்கப்பட்டிருந்த அதேவேளை எஞ்சிய 48.6 சதவீதம் (மொத்தக் கடன்களின் எண்ணிக்கையில் 58 சதவீதம்) 19 மாவட்டங்களில் வழங்கப்பட்டிருந்தன இது நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பின்னடைந்த மாவட்டங்களுக்கு கடன் வழங்குவதன் மீது அதிக கவனம் செலுத்தவேண்டிய தேவையினைக் குறித்துக்காட்டுகின்றது. 2018இல் கடன்களின் மொத்தப் பெறுமதியில் 30.4 சதவீதமானவை தயாரிப்புக் கைத்தொழில்களுக்கும் 26.0 சதவீதமானவை வேளாண்மைத் துறைக்கும் 20.2 சதவீதமானவை சுற்றுலாக் கைத்தொழிலுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டன என்பது மேலும் அவதானிக்கப்பட்டது. மேலும், என்டபிரைஸ் ஸ்ரீலங்கா நிகழ்ச்சித்திட்டத்தின் “ரன் அஸ்வென்ன” “கொவி நவோதய” “ஜய இசுற” “திரி சவிய” மற்றும் “பசுமைக் கடன்” ஆகிய கடன்திட்டங்களின் கீழ் வழங்கப்பட்ட கடன்களுக்காக பங்கேற்பு நிதி நிறுவனங்களுக்கு மத்திய வங்கியூடாக அரசாங்க உத்தரவாதங்களை வழங்குவதற்கு 2018இல் கொடுகடன் உத்தரவாத திட்டமொன்றை அறிமுகப்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டது. கொடுகடன் உத்தரவாதத் திட்டமானது இலங்கையில் நுண்பாக, சிறிய

மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் தொழிற்படுகின்ற மேற்குறித்த திட்டங்களின் கீழ் வழங்கப்படும் கடன்களுக்கான இடர்நேர்வை பகிர்கின்ற கருவியொன்றாக கருத்திற்கொள்ளப்படுகின்றது. அதற்கமைய, 2019 சனவரியில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சிற்கும் இலங்கை மத்திய வங்கிக்குமிடையில் உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டது.

**2018 ஆண்டு காலப்பகுதியின் போது கைத்தொழில், வர்த்தக மற்றும் நீண்டகாலமாக இடம்பெயர்ந்த ஆட்களை மீளக்குடியமர்த்தல் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு, நுண்பாக அல்லது சிறியளவிலான தயாரித்தல் அல்லது கைத்தொழில் தொழில்முயற்சிகளுக்காக சலுகை நிதியளித்தலினை வழங்குவதற்கு சிறிய மற்றும் நுண்பாகக் கைத்தொழில் தலைவர் மற்றும் தொழில்முயற்சி ஊக்குவிப்பு கருத்திட்டம் கட்டம் III - சூழலும் நிதியத்தினை தொடர்ந்தும் முன்னெடுத்தது.** இக்குறைந்த வட்டி வீதக் கடன்கள் புதிய தொழில்முயற்சிகளை நிறுவுவதற்கு அல்லது உற்பத்தித் திறனை அல்லது தொழிற்பாடுகளின் மட்டத்தினை அதிகரிப்பதற்கு, வழங்கப்படும் உற்பத்தியின் தரத்தினை மேம்படுத்துவதற்கு, தற்போது காணப்படுகின்ற தொழில்முயற்சியாளர்கள் மூலமான நிறுவனசார் இயலளவினையும் உற்பத்தி அபிவிருத்தியினதும் மேம்படுத்தலினை அதிகரிப்பதற்கும் வழங்கப்பட்டன. இக்கடன்கள் இரு பிரதான கடன் திட்டத்தின் கீழ் அதாவது பொதுக்கடன் திட்டம் மற்றும் தொழில்நுட்ப பரிமாற்று உதவி கடன்திட்டம் என்பவற்றின் கீழ் வழங்கப்பட்டன. மீள்நிதியளித்தல் மற்றும் வட்டி உதவுதொகை கடன்திட்டங்களை அத்துடன் ஏனைய தொடர்புடைய துணைச் சேவைகளை நடைமுறைப்படுத்திய மேற்குறித்த நிறுவனங்களுக்கு மேலதிகமாக வேறு பல அரசாங்க மற்றும் அரசுசாரா நிறுவனங்களும் நாடு முழுவதும் அபிவிருத்தி நிதி மற்றும் நிதி வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கான வழிகள் என்பவற்றை அதிகரிக்கும் நோக்குடன் தொழிற்பாடுகளைக் கொண்டு நடாத்தின. இந்நிறுவனங்களின் முயற்சிகள் நாட்டில் நிதி மற்றும் நிதியியல் உட்சேர்த்தலுக்கான அணுகும்தன்மை மேம்படுத்தலுக்கு வழிவகுக்கின்றது.

**முன்னைய ஆண்டில் இடப்பட்ட தளத்தின் மீது தேசிய நிதியியல் உட்சேர்த்தல் உபாயமொன்றை நிறுவுவதற்கான அதன் தூண்டுதலை மத்திய வங்கி மேலும் வலுப்படுத்தியது.** அதற்கமைய, 2018 சனவரியில் இலங்கைக்கென தேசிய நிதியியல் உட்சேர்த்தல் உபாயமொன்றினை உருவாக்குவதற்கான தொழில்நுட்ப உதவியினை கையேற்பதற்கு உலக வங்கி குழுமத்தின் உறுப்பினரான பன்னாட்டு நிதியியல் கூட்டுத்தாபனத்துடன் ஒத்துழைப்பு உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டது. டிஜிட்டல் நிதி மற்றும் கொடுப்பனவுகள், நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி, நிதி நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் இயலளவைக் கட்டியெழுப்புதல் ஆகிய விடயப்பரப்புகள் மீது நான்கு சாத்தியமான கொள்கைத் தூண்கள் இனங்காணப்பட்டு நான்கு பணியாற்று அணிகள்/ குழுக்கள் உருவாக்கப்பட்டன. அதேவேளை, பன்னாட்டு நாணயக் கூட்டுத்தாபனத்தின் உதவியுடன் பிரதேச அபிவிருத்தித் திணைக்களமானது தேசிய நிதியியல் உட்சேர்த்தல் உபாயக் கருத்திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் நிதியியல் உட்சேர்த்தல் மட்டங்களுக்கான பொது நோக்கு மற்றும் பொதுவான தோற்ற அமைப்பு பற்றி புரிந்துகொள்வதற்கு நிதியியல் உட்சேர்த்தல் அளவீடொன்றினை நடாத்துவதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்தது. இந்நோக்கத்திற்காக தெரிவுசெய்யப்பட்ட பிரத்தியேக அளவீட்டு நிறுவனமொன்றினூடாக அனைத்து மாவட்டங்களிலும் 480 கிராம சேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கி நாடளாவிய அடிப்படையில் நிதியியல் உட்சேர்த்தல் அளவீடு நடாத்தப்பட்டது. தேசிய நிதியியல் உட்சேர்த்தல் உபாயமானது எதிர்காலத்தில் நிதியியல் உட்சேர்த்தலில் உயர்மட்டங்களை அடைவதற்கான வலுவான மற்றும் துரிதமான தேசிய முயற்சிகளுக்கு பணியாற்றக்கூடியதாகும்.

**மத்திய வங்கியானது வேறுபட்ட ஆர்வலர் குழுக்கள் மற்றும் கிராமிய சமூகங்கள் மத்தியில் நிதியியல் அறிவு, நிதியியல் உட்சேர்த்தல்தன்மை, மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி என்பவற்றை ஊக்குவிப்பதற்காக விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களையும் செயலமர்வுகளையும் தொடர்ந்தும் நடாத்தியது.** ஆண்டின்போது மத்திய வங்கியானது முறையான நிதியியல் துறைக்கு அணுகுவழிகளைக் கொண்டிராதவர்கள் மீது விசேட கவனம் செலுத்தி நிதியியல் அறிவு, தொழில்முயற்சி அபிவிருத்தி மற்றும் திறன் அபிவிருத்தி என்பன தொடர்பாக 154 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியது. இந்நிகழ்ச்சித்திட்டங்களில் 2018இன் போது பின்தங்கிய பிரதேசங்களிலுள்ள பாடசாலை விட்டு விலகியோர், அரசாங்க அலுவலர்கள், விவசாயிகள் மற்றும் புதிய அத்துடன் ஏற்கனவே உள்ள தொழில்முயற்சியாளர்கள் போன்றோரை பங்கேற்பாளர்களாகக் கொண்டிருந்தது.

## 8.6 நிதியியல் உட்கட்டமைப்பு

### கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமை

**மத்திய வங்கியானது தனிப்பட்டவர்களினதும் நிறுவனங்களினதும் கொடுப்பனவுத் தேவைகளை நிறைவேற்றும் பொருட்டும் நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளுக்குக் காத்திரமான வசதிப்படுத்தல்களை வழங்குவதற்கும் நாட்டில் பாதுகாப்பானதும் வினைத்திறன் மிக்கதுமான கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு உட்கட்டமைப்பினை தொடர்ந்து உறுதிசெய்தது.** தேசிய கொடுப்பனவு முறைமையின் ஒழுங்குமுறைப்படுத்துநராக மத்திய வங்கியானது கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளுடன் இணையப்பெற்ற இடர்நேர்வுகளை காத்திரமான முறையில் தணிப்பதன் மூலம் நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டினையும் ஆற்றல்வாய்ந்த

8

தன்மையினையும் உறுதிசெய்யும் குறிக்கோளுடன் ஒழுங்கு முறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகளை மேலும் விரிவுபடுத்தியது.

**நாட்டில் ஒரேயொரு பாரிய - பெறுமதி இலத்திரனியல் கொடுப்பனவு முறைமையான அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையினையும் பத்திரங்களற்ற அரசாங்கப் பிணையங்கள் தீர்ப்பனவு முறைமையான லங்கா செகுயர் முறைமையினையும் லங்கா செட்டில் முறைமை உள்ளடக்குகின்றது.** மீளாய்வுக்குட்பட்ட ஆண்டின் அதேநேரக் கொடுப்பனவு முறைமை 7.39 அதிகரிப்பொன்றினை பதிவுசெய்து ரூ.405,200 கொடுக்கல்வாங்கல்களை தீர்ப்பனவு செய்துள்ள அதேவேளை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமைக் கொடுக்கல்வாங்கல்களின் மொத்தப் பெறுமதி 8.85 சதவீத அதிகரிப்பொன்றை பதிவுசெய்து அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை ரூ.100,473.1 பில்லியன் தொகையாகவிருந்தது பெறுமதி நியதிகளில் 2018இல் மொத்தக் காசல்லா கொடுப்பனவுகளில் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு கொடுக்கல்வாங்கல்களின் பங்கு 86.3 சதவீதத்திற்கு வகைகூறியது. முறைமையின் திரவத்தன்மை இடர்நேர்வினைக் குறைப்பதற்கு மத்திய வங்கியானது பங்கேற்கின்ற நிறுவனங்களுக்கு நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதியினை தொடர்ந்தும் வழங்கியது. ஆண்டு காலப்பகுதியின் போது அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை பங்கேற்பாளர்களினால் பயன்படுத்தப்பட்ட நாளாந்த சராசரி நாளுக்குள்ளான திரவத்தன்மை பெறுமதி 55 பில்லியன் தொகையாகவிருந்தது. 2018 இறுதியில், லங்கா சிகுயரில் வைத்திருக்கப்பட்ட பத்திரங்கற்ற பிணையங்களின் மொத்தப் பெறுமதி ரூ. 5,103 பில்லியனாக விளங்கி (முகப்புப் பெறுமதி) ரூ. 758.8 பில்லியன் திறைசேரி உண்டியல்களையும் ரூ. 4,344.2 பில்லியன் கொண்ட திறைசேரி முறிகளையும் உள்ளடக்கியிருந்தது.

**லங்கா கிளியர் (பிறைவேற்) லிமிடெட்டினால் தொழிற்படுத்தப்படும் நாட்டின் காசோலை தீர்ப்பனவு முறைமை ஆய்விற்குரிய ஆண்டுப்பகுதியில் சீராக தொழிற்படுத்தப்பட்டதுடன் காசோலை தீர்ப்பனவு முறைமையினூடாக தீர்ப்பனவு செய்யப்பட்ட காசோலைகளின் மொத்தப் பெறுமதி 2018இல் நாட்டின் காசல்லாக் கொடுப்பனவுகளின் மொத்தப் பெறுமதியில் 20.5 சதவீதத்திற்கு வகைகூறியது.** 2017 உடன் ஒப்பிடுகையில், காசோலைத் தீர்ப்பனவு முறைமையினூடாக தீர்ப்பனவு செய்யப்பட்ட காசோலைகளின் மொத்த அளவு 3.10 சதவீதமான எதிர்மறையான வளர்ச்சியை பதிவுசெய்த அதேவேளை தீர்ப்பனவு செய்யப்பட்ட காசோலைகளின் மொத்தப் பெறுமதி 2018இல் 0.44 சதவீதத்தால் சிறிதளவு வளர்ச்சியடைந்தது.

அட்டவணை 8.25

**கொடுப்பனவு முறைமையினூடான கொடுக்கல்வாங்கல்கள்**

| கொடுப்பனவு முறைமை | 2017 (அ) | | 2018 (ஆ) | |
|---|---|---|---|---|
| | அளவு ('000) | பெறுமதி (ரூ. பில்.) | அளவு ('000) | பெறுமதி (ரூ. பில்.) |
| பாரிய பெறுமதி கொடுப்பனவு முறைமைகள் | | | | |
| அதேநேர மொத்த தீர்ப்பனவு முறைமை | 377 | 92,303 | 405 | 100,473 |
| சில்லறைப் பெறுமதி கொடுப்பனவு முறைமைகள் | | | | |
| பிரதான காசோலை கொடுத்து தீர்த்தல் முறைமை | 51,963 | 10,482 | 50,352 | 10,528 |
| இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை | 30,018 | 1,725 | 32,943 | 1,972 |
| கொடுகடன் அட்டைகள் | 36,964 | 199 | 43,600 | 24.2 |
| வரவு அட்டைகள் | 46,964 | 135 | 56,595 | 158 |
| இணைய வங்கி | 23,066 | 2,101 | 26,979 | 2,933 |
| தொலைபேசி வங்கி | 3,809 | 32 | 8,176 | 143 |
| தபால் கருவிகள் | 1,308 | 7 | 1,022 | 6 |
| மொத்தம் | 194,469 | 106,983 | 220,072 | 116,457 |
| ஐ.அ.டொலர் காசோலை கொடுத்து தீர்த்தல் முறைமை | 56 | 74 | 51 | 36 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

**சம்பளங்கள் மற்றும் ஓய்வூதியங்கள் போன்ற சில்லறை மொத்தக் கொடுப்பனவுகளை பிரதானமாக வசதிப்படுத்துகின்ற இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை 2018இன் போது சீராகத் தொடர்ந்தும் தொழிற்பட்டது.** இலங்கை வங்கிகளுக்கிடையிலான தீர்ப்பனவு முறைமையின் தொழிற்பாடுகள் முன்னைய ஆண்டினை விட முறைமையினூடாக செயன்முறைப்படுத்தப்பட்ட அளவு மற்றும் கொடுப்பனவுகளின் பெறுமதி ஆகிய இரண்டிலும் வளர்ச்சிப் போக்கொன்றினைப் பதிவுசெய்தது. இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை ஊடாக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளின் அளவும் பெறுமதியும் முறையே 33 மில்லியனாக 9.75 சதவீதத்தினாலும் 1,972 பில்லியனாக 14.33 சதவீதத்தினாலும் வளர்ச்சியடைந்தன.

**"லங்காபே" என்ற வர்த்தக நாமத்தின் கீழ் தொழிற்படும் பொதுவான அட்டை மற்றும் கொடுப்பனவு ஆளி, இதுவரை ஆரம்பித்து வைத்த மூன்று துணை ஆளிகளான பொதுவான தன்னியக்க கூற்றுப் பொறி ஆளி, பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி மற்றும் பகிரப்பட்ட தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆளி என்பவற்றில் அதிகரிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல் அளவுகளுடன் 2018இல் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினைப் பதிவுசெய்தது.** உறுப்பினர் நிதியியல் நிறுவனங்களின் தன்னியக்கக் கூற்றுப் பொறிகளை இணைக்கின்ற பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆளி அதன் வலையமைப்புடன் இணைக்கப்பட்டுள்ள ஏதேனும் தன்னியக்கக் கூற்றுப் பொறியிலிருந்து பணத்தை மீளப்பெறவும் மீதிகளின் விசாரணைகளையும் மேற்கொள்வதற்கும் அத்தகைய நிதியியல் நிறுவனங்களின் வாடிக்கையாளர்களை இயலச்செய்கிறது. 2018இல், பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆளியின் கொடுக்கல்வாங்கல்களின் அளவும் பெறுமதியும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் முறையே 40.5 மில்லியனாக 22.9 சதவீதத்தினாலும் 344.6 பில்லியனாக 30.5 சதவீதத்தினாலும் அதிகரித்தது. மீளாய்விற்குரிய காலப்பகுதியின் இறுதியில் உள்ளவாறு, தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆளி வலையமைப்புடன் இணைக்கப்பட்ட நிதியியல் நிறுவனங்களின் மொத்த எண்ணிக்கை 28 ஆக பதிவுசெய்யப்பட்டிருந்தது. தமது சொந்த அட்டை முகாமைத்துவ முறைமையினை தொழிற்படுத்துவதற்கு

8

இயலுமையினைக் கொண்டிராத நிதியியல் நிறுவனங்களுக்கு அட்டை முகாமைத்துவ மற்றும் தன்னியக்கக் கூற்றுப் பொறி கொடுக்கல்வாங்கல் வழிப்படுத்தல் சேவைகளை வழங்குவதற்கு 2015இல் ஆரம்பிக்கப்பட்ட பகிரப்பட்ட தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆளி இரண்டு உறுப்பினர்களைக் கொண்டிருந்ததுடன் மீளாய்வு காலப்பகுதியின் போது அதன் தொழிற்பாடுகளை சீராக முன்னெடுத்தது.

**உறுப்பு நிறுவனங்களுக்கு மத்தியில் அதேநேர சில்லறை நிதிய மாற்றல்களை வசதிப்படுத்துவதற்கு பொதுவான அட்டை மற்றும் கொடுப்பனவு ஆளியின் இரண்டாம் கட்டமான பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி 2015இல் ஆரம்பிக்கப்பட்டது.** முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி கொடுக்கல்வாங்கல் அளவு 128.7 சதவீதத்தினால் 7.2 மில்லியனாக குறிப்பிடத்தக்களவு அதிகரித்த அதேவேளை, பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி கொடுக்கல்வாங்கல் பெறுமதி, 2018இல் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி கொடுக்கல்வாங்கல்களில் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றமொன்றினைப் பதிவுசெய்து 141.2 சதவீதத்தினால் 660.3 பில்லியனாக வளர்ச்சியடைந்தது. அதேவேளை, அரசாங்க நிறுவனங்களுக்கான இணைய வழி மூலமான கொடுப்பனவுகளை வசதிப்படுத்துவதற்கு மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட அனுமதிக்கமைவாக முதலாவதாக இலங்கை சுங்கத்திற்கு இணையவழி மூலமான அதேநேரக் கொடுப்பனவுகளை வசதிப்படுத்துவதற்கு லங்கா பே (பிறைவேட்) லிமிடெட், லங்கா பே இணையவழி கொடுப்பனவுத் தளத்தினைத் தொடங்கியது. 2018இன் இறுதியிலுள்ளவாறு அதேநேர கொடுப்பனவு வசதிகளை வழங்குவதற்கு 08 உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் லங்கா பே இணையவழிக் கொடுப்பனவுத் தளத்துடன் இணைந்ததுடன் 2018ஆம் ஆண்டின் போது ரூ.12 பில்லியன் கொண்ட மொத்தப் பெறுமதியுடன் கூடிய 15,431 கொடுக்கல்வாங்கல்கள் லங்கா பே இணையவழி கொடுப்பனவுத் தளத்தினூடாக செயன்முறைப்படுத்தப்பட்டன. 2018ஆம் ஆண்டின் போது, இணையவழி அதேநேர கொடுப்பனவு வசதிகளை வழங்குவதற்கு மூன்று வேறு அரசாங்க நிறுவனங்களுடன் இணைவதற்கு மத்திய வங்கி லங்கா பே (பிறைவேட்) லிமிடெட்டிற்கு அனுமதி வழங்கியது.

**2018 ஒத்தோபரில் பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆளி, பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி என்பவற்றுக்கான வேலை நாளொன்றுக்கான தீர்ப்பனவுச் சுழற்சிகளின் எண்ணிக்கை பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆளி, பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி என்பவற்றுக்கான கொடுக்கல்வாங்கல்களின் விரைவான தீர்ப்பனவையும் கொடுத்துத் தீர்த்தலையும் இயலச்செய்யும் பொருட்டு இரண்டிலிருந்து நான்காக அதிகரிக்கப்பட்டன.** அதற்கு மேலதிகமாக இம்முறைமைகளின் சீரான தொழிற்பாடுகளை உறுதிசெய்யும் பொருட்டு முதனிலைப் பங்கேற்பாளர்களுக்காக பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆளி, பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி என்பவற்றின் குறைந்தபட்ச பொறுப்பு வரையறைகளை மத்திய வங்கி விதித்தது.

**உள்நாட்டு கொடுப்பனவு அட்டை கொடுக்கல்வாங்கல்கள் மீது அட்டைகள் வைத்திருப்பவர்களுக்கும் வணிகர்களுக்கும் ஏற்படுகின்ற செலவுகளைக் குறைக்கும் நோக்குடன் தேசிய அட்டைத் திட்டமொன்றினை நடைமுறைப்படுத்துவதற்கு லங்கா கிளியர் (பிறைவேட்) லிமிடெட்டிற்கு மத்திய வங்கி அனுமதி வழங்கியது. தேசிய அட்டைத் திட்டத்தின் கீழ் ஒரு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் தன்னியக்க கூற்றுக் பொறி இயந்திர அட்டைகளை வழங்குவதற்கு ஆரம்பித்ததுடன் 2018இல் தேசிய அட்டைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.** வழங்கப்படும் கொடுப்பனவு அட்டையொன்றினைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் கொடுக்கல்வாங்கல்களின் வழியமைத்தலினை வசதிப்படுத்தும் பொருட்டு மத்திய வங்கி பொதுவான விற்பனை மையங்களுடன் இணைகின்ற உரிமம்பெற்ற நிதியியல் கையேற்பவர்களின் முன்னேற்றத்தினைக் கண்காணித்தது.

**2013ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க கொடுப்பனவு அட்டைகள் மற்றும் செல்லிட தொலைபேசிக் கொடுப்பனவு முறைமைகளின் ஒழுங்குவிதிகளின் நியதிகளுக்கமைய கொடுப்பனவு அட்டைகள் மற்றும் செல்லிடத் தொலைபேசிக் கொடுப்பனவு முறைமைகள் தொடர்பில் மத்திய வங்கி அதன் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகளை தொடர்ந்தும் முன்னெடுத்தது.** அதற்கமைய, ஒழுங்குவிதிகளின் நியதிகளுக்கமைய பற்று அட்டைகள் வழங்குநர்களாகத் தொழிற்படுவதற்கு உரிமம் அளிக்கப்பட்ட இரு நிதியியல் நிறுவனங்கள் கடனட்டைகள் வழங்குநராகத் தொழிற்படுவதற்கு அனுமதி வழங்கப்பட்ட அதேவேளை, அட்டைக் கொடுப்பனவுகளின் நிதியியல் கையேற்பாளரொருவராகத் தொழிற்படுவதற்கு மற்றுமொரு நிதியியல் நிறுவனத்திற்கு உரிமம் வழங்கப்பட்டது.

**தேசிய கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமையின் இடர்நேர்வுகளைக் குறைக்கும் பொருட்டு மத்திய வங்கி அதன் மேற்பார்வைத் தொழிற்பாட்டினை தொடர்ந்தும் முன்னெடுத்ததுடன் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினை மேலும் வலுப்படுத்தியது.** 2018ஆம் ஆண்டின் போது, கொடுப்பனவு அட்டைகள் மற்றும் செல்லிடத் தொலைபேசிக் கொடுப்பனவு முறைமைகளுடன் இணையப்பெற்ற இடர்நேர்வுகளைக் குறைப்பதற்கு மத்திய வங்கி மேற்பார்வை நடவடிக்கைகளை தொடர்ந்தும் முன்னெடுத்தது. அதற்கமைய, கொடுப்பனவு அட்டைகள் மற்றும் செல்லிட தொலைபேசிக் கொடுப்பனவு முறைமைகள் சேவை வழங்குநர்கள் ஒழுங்குவிதிகளுடன் இணங்குவதனை உறுதிசெய்வதற்கு தலத்திலான மற்றும் தலத்திற்கு வெளியேயான மேற்பார்வைகள் கொண்டு நடாத்தப்பட்டன.

**இதற்கு மேலதிகமாக, கொடுப்பனவு முறைமை அபிவிருத்திகளைக் கருத்திற்கொண்டு, சேவை வழங்குநர்கள் ஊடான கொடுப்பனவு அட்டை அடிப்படையிலான இலத்திரனியல்**

8

**வணிகக் கொடுக்கல்வாங்கல்களை கையேற்றல் மீதும் செல்லிட தொலைபேசி செயலிகளுடன் தொடர்புபட்ட கொடுப்பனவு மீதும் ஒழுங்குவிதிகளை வழங்குவதன் மூலம் 2018இல் மத்திய வங்கி அதன் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினை விரிவுபடுத்தியது.** இலத்திரனியல் வணிக கொடுக்கல்வாங்கல்களில் மூன்றாம் தரப்பு கொடுப்பனவுத் தள வழங்குநர்களின் ஈடுபடுவதிலுள்ள இடர்நேர்வினைக் கருத்திற்கொண்டு, கொடுப்பனவுத் தள வழங்குநர்கள் ஊடான கொடுப்பனவு அட்டை அடிப்படையிலான கொடுக்கல்வாங்கல்களை கையேற்றலின் மீது நிபந்தனைகளை குறித்துரைப்பதற்கு வழங்கப்பட்ட சேவை வழங்குநர்கள் ஊடான கொடுப்பனவு அட்டை அடிப்படையிலமைந்த இலத்திரனியல் வணிகக் கொடுக்கல்வாங்கல் கையேற்றல் மீதான பணிப்புரை 2018 சனவரி 18 அன்று வழங்கப்பட்டது. மத்திய வங்கியானது நிதியியல் நிறுவனங்களினால் பயன்படுத்தபடும் செல்லிடத் தொலைபேசி செயலிகளுக்கான குறைந்தபட்ச இணங்குவித்தல் தர நியமங்களை நிர்ணயிப்பதற்கு கொடுப்பனவுடன் தொடர்புடைய செல்லிடத் தொலைபேசி செயலிகளுக்கான குறைந்தபட்ச இணங்குவித்தல் தரநியமங்கள் மீதான வழிகாட்டலினை 2018 சனவரியில் வழங்கியது.

**கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளின் அபிவிருத்திக்கான புதிய தொழில்நுட்பங்களைப் பின்பற்றுவதிலுள்ள உலகளாவிய போக்கினைக் கருத்திற்கொண்டு கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் மீதான ஆலோசனைக் குழுவான தேசிய கொடுப்பனவுகள் சபையானது நிதியியல் தொழில்நுட்பத்** (பின்டெக்) துறை மற்றும் டிஜிட்டல் பேரேட்டு தொழில்நுட்பம் என்பவற்றிலுள்ள அபிவிருத்திகளை ஆய்வுசெய்வதற்கு இரண்டு குழுக்களை நியமித்தது. பின்டெக் குழுவினால் ஆக்கப்பட்ட பரிந்துரைகளுக்கமைவாக உள்நாட்டுக் கொடுப்பனவுகளுக்காக தேசிய உடனடி பதிலிறுத்தல் குறியீட்டினை நிறுவுவதற்கு தீர்ப்பனவு மற்றும் கொடுப்பனவுத் திணைக்களம் 2018இன் 06ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சுற்றறிக்கையினை வெளியிட்டது. இதற்கு மேலதிகமாக, பின்டெக் குழுவினால் ஆக்கப்பட்ட மற்றுமொரு பரிந்துரைக்கமைவாக, நாட்டில் நிதியியல் தொழில்நுட்ப புதுமைப் படைப்புக்களுக்கு ஆதரவளித்து ஊக்குவிக்கின்ற அதேவேளை பொருத்தமான ஒழுங்குமுறைப்படுத்தல் தர நியமங்களைப் பேணுகின்ற சூழலொன்றினை ஏற்படுத்துவதற்கு பின்டெக் ஒழுங்குமுறைப்படுத்தல் பரிசோதனைக் கட்டமைப்பொன்றினை நிறுவுவதற்கு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. நிதியியல் துறையில் டிஜிட்டல் பேரேட்டுத் தொழில்நுட்பத்தினை மேலும் ஆய்வுசெய்வதற்கு டிஜிட்டல் பேரேட்டு தொழில்நுட்பத்தின் மீதான குழுவின் பரிந்துரைக்கமைவாக நியமிக்கப்பட்ட பணிக்குழுவானது வங்கித்தொழில் துறையில் பயன்படுத்தப்படுவதற்கான பகிரப்பட்ட உமது வாடிக்கையாளர்களை தெரிந்துகொள்ளுங்கள். டிஜிட்டல் பேரேட்டுத் தீர்வு பற்றிய சாத்தியப்பாட்டினை மதிப்பிடுகின்றது.

**உள்நாட்டு நிதியியல் சந்தைக் கொடுக்கல் வாங்கல்களில் தற்பொழுது காணப்படும் வர்த்தகப்படுத்தல் மற்றும் தீர்ப்பனவு முறைமைகளில் இயல்பாகவே காணப்படும் வரையறைகளைக் கட்டுப்படுத்துவதற்காக, பன்னாட்டு நியமங்கள் மற்றும் சிறந்த நடைமுறைகளின் அடிப்படையில் அதிநவீனத்துவம் வாய்ந்த நிதியியல் சந்தை உட்கட்டமைப்பினை நிறுவுவதற்கும் இலங்கையில் சட்டம் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினை இயலுமைப்படுத்துவதற்கும் மத்திய வங்கி திட்டமிட்டிருக்கிறது.** இலத்திரனியல் வர்த்தகம் மற்றும் உள்நாட்டு நிதியியல் சந்தையில் காணப்படும் நேரடிச் செயல்முறைக் கொடுக்கல்வாங்கல்களை வசதிப்படுத்துவதற்கு அரச பிணையங்கள் மற்றும் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களை முக்கியமாக வலியுறுத்தும் இலத்திரனியல் வர்த்தகப்படுத்தல் தளம், மத்திய இணைத்தரப்பு தீர்ப்பனவு மற்றும் கொடுத்துத் தீர்த்தல் முறைமை மற்றும் மத்திய பிணையங்கள் வைப்பு முறைமை என்பன இம்முறைமையின் கீழ் நிறுவப்படுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. இம்முன்மொழிவுடன் இசைந்து செல்லும் விதத்தில், அரச பிணையங்கள் கொடுக்கல்வாங்கல்களிலுள்ள முதலாந்தர மற்றும் இரண்டாந்தர சந்தைத் தொழிற்பாடுகளின் வெளிப்படைத்தன்மையினையும் வினைத்திறனையும் வசதிப்படுத்துவதற்காக இலத்திரனியல் வர்த்தகப்படுத்தல் தளம் மற்றும் மத்திய இணைத்தரப்பு தீர்ப்பனவு மற்றும் கொடுத்துத் தீர்த்தல் மீதும் புதிய தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு அறிமுகப்படுத்தப்படும். இது அரச பிணையங்கள் சந்தையின் அபிவிருத்திக்கும் அரச படுகடன் முகாமைத்துவத்தின் நவீனமயப்படுத்தலுக்கும் இன்றியமையாததாகும்.

## பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல்

**பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல், நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டிற்கு செல்வாக்குச் செலுத்தும் அத்தகைய இரு முக்கிய காரணிகளாக காணப்படுகின்றன.** 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டத்தின் நியதிச் சட்ட ஏற்பாடுகளின் நியதிகளில், நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டினை பேணுவதற்கு மிக இன்றியமையாததாக விளங்குகின்ற நாட்டின் பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒடுக்குதல் அமைப்பினை இலங்கை நிதியியல் உளவறிதல் பிரிவு தொடர்ந்தும் வலுப்படுத்தி வருகின்றது. 2018ஆம் ஆண்டுப் பகுதியில் நிதியியல் உளவறிதல் பிரிவு சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் உட்பட, பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான நிதியியல் தகவல்களைப் பெற்றுக்கொள்ளுதல், சட்ட நடைமுறைப்படுத்தல் முகவர்களுக்கு ஒழுங்குமுறைப்படுத்துனர்கள் மற்றும் தொடர்பான நிறுவனங்களுக்கு பகுப்பாய்வுப் பெறுபேறுகளைப் பகுப்பாய்வுசெய்தல் மற்றும் பரப்புதல் வகிபாகத்தினை ஆற்றியிருக்கின்றது. மேலும், இவ்வாண்டுப் பகுதியில், நிதியியல் உளவறிதல் பிரிவு ஏனைய ஆர்வலர்களின் ஒத்துழைப்புடன் நிதியியல் நடவடிக்கைச் செயலணிக் குழுவினால் பணம்

8

## சிறப்புக்குறிப்பு 11
## இலங்கையின் தேசிய கொடுப்பனவு முறைமையின் பரிணாமம்

### தேசிய கொடுப்பனவு முறைமையினை நவீனமயப்படுத்தல்

இலங்கை அதன் பொருளாதாரத்திற்கு இலத்திரனியல் கொடுப்பனவு முறைமைகளை அறிமுகப்படுத்துவதில் முன்னோடியாக இருந்துவருவதுடன் பல அபிவிருத்தியடைந்த ஆசிய மற்றும் மேற்கத்தேய பொருளாதாரங்களுடன் ஒப்பிடத்தக்கதாக விளங்குகின்றது. தேசிய கொடுப்பனவு முறைமையானது[1] பொருளாதாரத்தின் இயக்கவாற்றல்மிக்க கொடுப்பனவுத் தேவைகளுக்கு பதிலிறுத்தும் பொருட்டு படிமுறையான வளர்ச்சிக்கு நெகிழ்ந்துகொடுக்கும் விதத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது. டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட பொருளாதாரமாக படிப்படியாக மாறுதலடையும் நோக்குடன் மத்திய வங்கி 2002இல் தேசிய கொடுப்பனவு முறைமையினை நவீனமயப்படுத்தத் தொடங்கியது.

நவீனமயப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் முதற்படியொன்றாக நவீனப் பொருளாதாரம் ஒன்றிற்கான கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளின் முக்கியத்துவத்தினை அங்கீகரிக்கின்ற சட்டவாக்க மாற்றங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. அதற்கமைய, 1949இன் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டமானது (திருத்தப்பட்டவாறான) பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாடு அத்துடன் நிதியியல் முறைமை உறுதிப்பாடு என்பவற்றை அடைவதற்கு நாணய, நிதியியல், கொடுப்பனவு முறைமைகள் என்பவற்றிற்கிடையில் உள்ளார்ந்த தொடர்புகளை தாபித்து 2002இல் திருத்தம் செய்யப்பட்டது. இதனூடாக இலங்கையில் கொடுப்பனவு முறைமைகளை நிருவகித்து ஒழுங்குமுறைப்படுத்தி மேற்பார்வை செய்வதற்கு அதிகாரப் பொறுப்புடையதாக இலங்கை மத்திய வங்கி ஆக்கப்பட்டதுடன் அதன் பொறுப்புடைமையினை நிறைவேற்றுவதற்கு பரந்த அடிப்படையில் அதிகாரமளிக்கப்பட்டது. நாட்டின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளுக்காக 2005இன் 28ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சட்டத்தின் வாயிலாக பிரத்தியேகமான சட்டவாக்கம் அறிமுகப்படுத்தப்பட்டது. கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைச் சட்டமானது கொடுப்பனவு, தீர்ப்பனவு மற்றும் கொடுத்துத்தீர்த்தல் முறைமைகள், பணச் சேவைகள் என்பவற்றை ஒழுங்குமுறைப்படுத்தி, மேற்பார்வை செய்து கண்காணிப்பதற்கான கட்டமைப்பினை வழங்கியதுடன் காசோலைகளின் இலத்திரனியல் ரீதியான சமர்ப்பித்தலை வசதிப்படுத்துகின்றது. மேலும், கொடுப்பனவு முறைமைகளின் படிப்படியான வளர்ச்சியில் புதிய கொடுப்பனவு முறைகள் மற்றும் தொழில்நுட்பங்களின் அபிவிருத்தியினையும் அனைத்துப் பங்கேற்பாளர் மத்தியில் முன்னேற்றகரமான ஒத்துழைப்பினையும் இது இயலச்செய்துள்ளது. கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமைச் சட்டமானது இலங்கையில் தொழிற்படுகின்ற கொடுப்பனவுச் சேவைகள் பாதுகாப்பானதும் ஆற்றல்மிக்கதாகவும் காணப்படுகி. என்பதை உறுதிசெய்வதற்கு இலங்கை மத்திய வங்கிக்கு அதிகாரங்களை வழங்கியது. சட்டவாக்க மாற்றங்கள், இலங்கை மத்திய வங்கியும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளும் இணைந்து சொந்தமாக்கியுள்ள லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட் நிறுவனத்திற்கு அதன் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் நடவடிக்கைகளை இலங்கை மத்திய வங்கி உரிமை மாற்றம் செய்வதையும் இயலச்செய்தது.

### இலங்கையில் முக்கிய இலத்திரனியல் கொடுப்பனவு, தீர்ப்பனவு மற்றும் கொடுத்துத்தீர்த்தல் முறைமைகள்

#### தீர்ப்பனவு உட்கட்டமைப்பு

இலங்கை மத்திய வங்கிக்குச் சொந்தமான மற்றும் அது தொழிற்படுத்தப்படுகின்ற அதேநேர மொத்த தீர்ப்பனவு முறைமையானது மொத்த அடிப்படையில் வங்கித்தொழில் முறைமையினூடாக அதிக பெறுமதிமிக்க நிதிய மாற்றல்களின் அதேநேரத் தீர்ப்பனவிற்காக 2003இல் அறிமுகப்படுத்தப்பட்டது. அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமைக்கு முன்னர் வங்கிகளுக்கிடையிலான அனைத்து கொடுப்பனவுகளும் பிற்போடப்பட்ட தேறிய தீர்ப்பனவு அடிப்படையில் தீர்ப்பனவு செய்யப்பட்டன. அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமைச் செயன்முறையின் கீழ் அதேநேரத் தீர்ப்பனவினை இயலச்செய்வதற்கு பங்கேற்பாளர்கள் இலங்கை மத்திய வங்கியுடனான தங்களுடைய கணக்கில் போதிய நிதியங்களைப் பேண வேண்டும். அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் திரவத்தன்மை இடர்நேர்வினை தணிக்கும் வழிமுறையொன்றாக இலங்கை மத்திய வங்கியானது நாளின் போது திரவத்தன்மைப் பிரச்சினைகளை எதிர்கொள்கின்ற பங்கேற்பாளர்களுக்கு நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதியினை வழங்குகின்றது. அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையானது முறைமை செயலிழக்கும் சந்தர்ப்பத்தில் ஒட்டுமொத்த பொருளாதாரத்திற்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தக்கூடியதாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது. பொருளாதார வளர்ச்சியானது பாரிய பெறுமதி நிதி மாற்றல்களின் அதேநேரத் தீர்ப்பனவிற்கான கேள்வியினை அதிகரித்து, இலங்கையில் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையினை கொடுப்பனவு உட்கட்டமைப்பில் இன்றியமையாதவொன்றாக தோற்றம் பெறச்செய்துள்ளது.

#### முக்கிய வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள்

இலத்திரனியல் வங்கிகளுக்கிடையிலான முறைமையில் இலங்கையின் பயணம் 1994இல் இணையத்தொடர்பற்ற இலத்திரனியல் நிதியியல் மாற்றல் முறைமையான இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமையின் அறிமுகத்துடன் தொடங்கியது. இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமையானது சம்பளங்கள் பொதுப்பயன்பாட்டுப் பட்டியல் கொடுப்பனவுகள் போன்ற காலமுறையான மொத்தக் கொடுப்பனவுகளுக்காக கைகளினால் காசோலை வழங்குகின்ற செயன்முறையினை மாற்றீடு செய்து கொடுப்பனவுகளைத் தன்னியக்கப்படுத்தியது. இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவுகளில் இரண்டு வகைகள் காணப்படுகின்றன. அவை, கொடுகடன் மாற்றல்கள் மற்றும் நேரடிப் பற்று என்பனவாகும். இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை

---

1 "கொடுப்பனவு முறைமையானது" சாதனங்கள், வங்கித்தொழில் நடைமுறைகள் மற்றும் வழமையாக பணச் சுற்றோட்டத்தினை உறுதிசெய்கின்ற வங்கிகளுக்கிடையிலான நிதிய மாற்றல் முறைமைகள் போன்றவற்றின் தொகுதியொன்றினை உள்ளடக்குகின்றது. (கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமை மீதான குழு, 2003). கொடுப்பனவு முறைமைகளானவை i கொடுப்பனவு சாதனங்கள் ii கொடுப்பனவு உட்கட்டமைப்பு (தீர்ப்பனவு மற்றும் கொடுத்துத்தீர்த்தல் பொறிமுறைகள்): iii ஏனைய துணைச் சேவைகள் (சந்தைச் செயற்பாட்டாளர்கள் மற்றும் நிறுவனம் சார் கட்டமைப்பு). iv கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை ஏற்பாடுகள் v சட்டம் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு ஆகியவற்றை உள்ளடக்குகின்றது (ஜயமஹா 2004 ப.5)

தேசியக் கொடுப்பனவு முறைமையானது இலங்கை மத்திய வங்கி, உரிமம்பெற்ற வங்கிகள், வங்கியல்லா நிதி நிறுவனங்கள், அட்டை வலையமைப்புக்கள், செல்லிடத் தொலைபேசி இயக்குநர்கள் போன்ற ஆர்வலர்களை இடை இணைக்கின்ற மத்தியமயப்படுத்தப்பட்ட முறைமைகள் அதேபோன்று ஆர்வலர்களினால் சுயாதீனமாகத் தொழிற்படுத்தப்படுகின்ற தனியுரிமை முறைமைகள் இரண்டினையும் உள்ளடக்குகின்றது

8

2010இல் முழுமையாக இணையத்தளமூடாகச் செயற்படுகின்ற விதத்தில் தரமுயர்த்தப்பட்டு, தீர்ப்பனவுக் காலத்தை T+0 என்ற அடிப்படையாக (அதேநாள் ஆனால் அதேநேரமல்ல) குறைத்தது. 2003இல் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை தொடங்கப்படும் வரை இலங்கையில் ஒரேயொரு இலத்திரனியல் வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறையாக இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமையே காணப்பட்டது.

காசோலை பிம்பப்படுத்தல் மற்றும் சுற்றோட்டக் குறைப்பு முறைமை, 2006இல் தொடங்கப்பட்டதுடன் இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமையொன்றாகவும் பெயர் குறிக்கப்பட்டிருந்தது. முன்னணிப் பொருளாதாரங்களுடன்[2] ஒப்பிடுகையில் காசோலை பிம்பப்படுத்தல் மற்றும் சுற்றோட்டக் குறைப்பு முறைமையினை ஒப்பீட்டளவில் முன்கூட்டியே பின்பற்றிய நாடாக இலங்கை விளங்குகின்றது. வங்கிகளினால் இலத்திரனியல் ரீதியாக மாற்றல் செய்யப்பட்ட காசோலை பிம்பங்களைப் பயன்படுத்தி காசோலைகள் லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட்டினால் தீர்ப்பனவு செய்யப்படுகின்றமையினால் இம்முறைமை காசோலைத் தேறுவதற்கான 5 - 7 நாட்கள் வரையான காலத்தை அடுத்த நாளில் தேறுகின்ற (T+1) அடிப்படையில் குறைத்துள்ளது.

### தேசிய கொடுப்பனவு ஆளி

2013இல் பொதுவான அட்டை மற்றும் கொடுப்பனவு ஆளியினை ஆரம்பித்தமை இலங்கையில் இலத்திரனியல் சில்லறைக் கொடுப்பனவுக் கட்டமைப்பின் படிப்படியான வளர்ச்சியில் முக்கிய மைற்கல்லொன்றினை அடையாளப்படுத்தியுள்ளது. பொதுவான அட்டை மற்றும் கொடுப்பனவு ஆளியென்பது ஐந்து துணை ஆளிகளை அதாவது, பொதுவான தன்னியக்கக்கூற்றுப் பொறி ஆளி, பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி, பகிரப்பட்ட தன்னியக்கக் கூற்றுப்பொறி ஆளி, பொதுவான விற்பனை மையங்கள் ஆளி மற்றும் பொதுவான செல்லிடத்தொலைபேசி ஆளி என்பவற்றை உள்ளடக்குகின்ற பல்துறை ஆளி வசதியொன்றாகும். பொதுவான அட்டை மற்றும் கொடுப்பனவு ஆளியானது "தேசிய கொடுப்பனவு ஆளியாக" வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் 'லங்காபே' என்ற வர்த்தக நாமத்தின் கீழ் லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட்டினால் தொழிற்படுத்தப்படுகின்றது. பொதுவான அட்டை மற்றும் கொடுப்பனவு ஆளியானது கட்டம் கட்டமாக ஆரம்பிக்கப்பட்டதுடன் மூன்று கட்டங்கள் ஏற்கனவே நிறைவுசெய்யப்பட்டுள்ளன.

பொதுவான அட்டை மற்றும் கொடுப்பனவு ஆளியின் முதற்கட்டமான பொதுவான தன்னியக்கக்கூற்றுப் பொறி ஆளி 2013 யூலையில் நேரலைத் தொழிற்பாடுகளை ஆரம்பித்தது. இது, லங்காபே வலையமைப்பில் ஏதேனும் தன்னியக்கக்கூற்றுப்பொறி இயந்திரத்தினைப் பயன்படுத்துவதற்கு தன்னியக்கக்கூற்றுப் பொறி அட்டை உரிமையாளர்களை இயலச்செய்கின்ற நாட்டின் தன்னியக்கக்கூற்றுப் பொறி உட்கட்டமைப்பினை ஒருங்கிணைத்துள்ளது. பகிரப்பட்ட தன்னியக்கக்கூற்றுப் பொறி ஆளியானது தமது சொந்த தன்னியக்கக்கூற்றுப் பொறி ஆளியின் அல்லது அட்டை முகாமைத்துவ முறைமையில் முதலீடு செய்ய இயலாத வங்கிகள் மற்றும் வங்கியல்லா நிதி நிறுவனங்கள் போன்ற குறைந்த செலவில் பொதுவான தன்னியக்கக்கூற்றுப் பொறி ஆளியுடன் லங்காபே ஊடாக இணைவதற்கு அனுமதிக்கின்றது. பகிரப்பட்ட தன்னியக்கக்கூற்றுப் பொறி ஆளியானது அத்தகைய நிதியியல் நிறுவனங்களின் வாடிக்கையாளர்களுக்கு தன்னியக்கக்கூற்றுப் பொறி வசதிகளை வழங்குகின்றது.

2015இல் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியின் அறிமுகம், இலங்கையின் சில்லறைக் கொடுப்பனவு முறைமையில் புரட்சியொன்றினை ஏற்படுத்தியுள்ளது. இணையத்தளம் மற்றும் செல்லிடத்தொலைபேசி வாயிலான வங்கித்தொழில், தன்னியக்கக்கூற்றுப் பொறி அல்லது கருமபீட வழிகள் போன்றவற்றைப் பயன்படுத்தி பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி வங்கிகளுக்கிடையில் அதேநேர நிதிய மாற்றல்களை வசதிப்படுத்துவதனால் கொடுப்பனவுப் புத்தாக்கங்களுக்கான மாபெரும் வாய்ப்புக்களை அது தோற்றுவித்துள்ளது. அதன் பல்துறை ஆற்றலானது இலங்கையில் பல கொடுப்பனவு உட்கட்டமைப்புப் புத்தாக்கங்களுக்கான தளமாக பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியினை ஏற்படுத்தியுள்ளது.

2017இல் அறிமுகப்பட்ட லங்காபே இணையத்தளத்தினூடான கொடுப்பனவுத் தளமானது, பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியினைப் பயன்படுத்தி அரசாங்க நிறுவனங்களுக்கான இணையத்தளமூடான அதேநேரக் கொடுப்பனவுகளை இயலச்செய்தது. லங்காபே இணையத்தளத்தினூடான கொடுப்பனவுத் தளமானது அரசாங்க அரசிறை சேகரித்தலினை சீரமைத்தது. அதற்கமைய, கொடுப்பனவுகளுக்காக லங்காபே இணையத்தளத்தினூடான கொடுப்பனவுத் தளத்தினைப் பயன்படுத்துகின்ற முதலாவது அரசாங்க நிறுவனமாக இலங்கைச் சுங்கம் விளங்கியது. அதனைத் தொடர்ந்து, லங்காபே இணையத்தளத்தினூடான கொடுப்பனவுத் தளத்திற்கு மேலும் நான்கு அரசாங்க நிறுவனங்களை ஒருங்கிணைப்பதற்கு இலங்கை மத்திய வங்கியினால் அனுமதி வழங்கப்பட்டது. 2018 திசெம்பர் 31இல் உள்ளவாறு எட்டு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் லங்காபே இணையத்தளத்தினூடான கொடுப்பனவுத் தளத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

2017இல் ஆரம்பிக்கப்பட்ட ஜஸ்ட்பே என்பது வங்கித்தொழில் வலையமைப்புக்களைப் பாதுகாப்பாக இணைப்பதற்கு செல்லிடத்தொலைபேசி செயலிகள் போன்ற செல்லிடத்தொலைபேசி அடிப்படையில் அமைந்த பின்டெக் புத்தாக்கங்கங்களுக்கு துணையளிக்கின்ற முக்கிய உட்கட்டமைப்புப் புத்தாக்கமொன்றாகும். இது, பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி நேரடிப் பற்று வசதியினைப் பயன்படுத்தி வாடிக்கையாளர் கணக்குகளிலிருந்து நேரடியான குறைந்த பெறுமதிக் கொடுப்பனவுகளை வசதிப்படுத்துகின்றது.

பொதுவான அட்டை மற்றும் கொடுப்பனவு ஆளியின் நான்காம் கட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பான, பொதுவான விற்பனை மைய ஆளி, தேசிய அட்டைத் திட்டத்தின்கீழ் கொடுக்கல்வாங்கல்களை ஆளிப்படுத்தல் மற்றும் தீர்ப்பனவு செய்வதனை வசதிப்படுத்துவதற்கு செயற்பாட்டிலுள்ளது. பொதுவான செல்லிடத்தொலைபேசி ஆளி, இலத்திரனியல் பணப்பைகளுக்கிடையிலான ஒன்றுக்கொன்று இடையிலான இயங்குதன்மையினை இயலச்செய்வதுடன் பணப்பைகளிலிருந்து பணப்பைகளுக்கான மாற்றலுக்குத் துணையளிக்கும்.

2 காசோலை பிம்பப்படுத்தல் மற்றும் காசோலைச் சுற்றோட்டக் குறைப்பு முறைமையினை நடைமுறைப்படுத்திய பொருளாதாரத்திற்கு உதாரணங்கள்: நியுசிலாந்து - 1995 ஐக்கிய அமெரிக்கா 2004 இந்தியா 2008 ஐக்கிய இராச்சியம் 2017 (மூலம்: தொடர்புடைய மத்திய வங்கிகளின் வெப்தளங்கள்)

### கொடுப்பனவு அட்டைகளும் இலத்திரனியல் பணமும்

கொடுப்பனவு அட்டைகள், இலத்திரனியல் பணம் போன்ற வேறுபல சில்லறைக் கொடுப்பனவு முறைகளை இலங்கை கொண்டுள்ளது. நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினை எய்தும்பொருட்டு அவற்றின் பாதுகாப்பான மற்றும் ஆற்றல்வாய்ந்த தன்மையை உறுதிசெய்வதற்காக இவை, 2005இன் 28ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுச் சட்டம் மற்றும் வங்கித்தொழிற்துறையுடன் தொடர்புபட்ட ஏனைய சட்டங்களூடாக ஒழுங்குமுறைப்படுத்தப்படுகின்ற தனியுரிமை முறைமைகளாகும். இலங்கையில் இலத்திரனியல் பணச் சேவைகளை வழங்குவதற்கு உரிமம் அளிக்கப்பட்ட இரண்டு செல்லிடத்தொலைபேசி வலையமைப்பு தொழில்படுத்துநர்கள் காணப்படுகின்றனர்.

இலங்கை மத்திய வங்கியின் வழிகாட்டல் மற்றும் மேற்பார்வையின்கீழ் லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட், தேசிய அட்டைத் திட்டத்தினை நிறுவுவதற்கு பன்னாட்டுக் கொடுப்பனவு அட்டை வலையமைப்பான யப்பான் கொடுகடன் பணியகத்துடன் உபாயப் பங்காண்மையொன்றினை கைச்சாத்திட்டுள்ளது. தேசிய அட்டைத் திட்டமானது லங்காபேயின் பொதுவான தானியக்கக்கூற்றுப்பொறி ஆளி மற்றும் விற்பனை மைய வலையமைப்புகளூடாக உள்நாட்டிலும் யப்பான் கொடுகடன் பணியகம் வலையமைப்பினூடாக பன்னாட்டு ரீதியிலும் செயன்முறைப்படுத்தப்படும். லங்காபே - யப்பான் கொடுகடன் பணியகம் இணைந்த வர்த்தக நாம பற்று அட்டைகளை வழங்குவதற்கு வங்கிகளையும் நிதியியல் நிறுவனங்களையும் இயலச்செய்யும். தேசிய அட்டைத் திட்டக் கருத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள் உள்நாட்டு ரீதியாக வழிப்படுத்தப்படுகின்ற அட்டைக் கொடுப்பனவுகளூடாக அனைத்துப் பங்கேற்பாளர்களுக்குமான அதாவது, அட்டை உரிமையாளர்கள், வணிகர்கள், வழங்குநர்கள் மற்றும் கையேற்பவர்களுக்கான அட்டைக் கொடுக்கல்வாங்கல் செலவினை குறைப்பதாகும்.

### QR குறியீட்டின் அடிப்படையில் அமைந்த கொடுப்பனவுகள்

தோற்றம் பெறுகின்ற டிஜிட்டல் கொடுப்பனவு முறைகள் மற்றும் சில்லறைக் கொடுப்பனவுகளின் அதேநேரத் தீர்ப்பனவு என்பவற்றுக்கான தேவைக்கு பதிலிறுத்தி இலங்கை மத்திய வங்கி 2018இல் LANKAQR குறியீட்டு நியமத்தினை அறிமுகப்படுத்தியது. இந்நியமமானது, வேறுபட்ட கொடுப்பனவுப் பொறிமுறைகளின் ஒன்றுக்கொன்று இடையிலான இயங்குதன்மையினை வசதிப்படுத்துகின்ற அத்துடன் பல QR குறியீடுகளை கொண்டிருக்க வேண்டிய தேவையினை இல்லாதொழிக்கின்ற "கொடுப்பனவு முறைமைகளுக்கான EMV QR குறியீடு விபரங்கள்" அடிப்படையில் அமைந்ததாகும். LANKAQR குறியீட்டினைப் பின்பற்றுவதன் மூலம் நிதியியல் நிறுவனங்கள் குறைந்த செலவு டிஜிட்டல் கொடுப்பனவுகளுக்கு வாடிக்கையாளர்களுக்கும் வணிகர்களுக்கும் அணுகுவழியினை வழங்கக்கூடியதாகவும் வாடிக்கையாளர் சௌகரியத்தினை அதிகரிக்கக்கூடியதாகவும் இருக்கும்.

### எதிர்காலத்தை முன்னோக்கி

இலங்கை மத்திய வங்கியானது குறைந்தளவு காசு பயன்படுத்தும் சமூகமொன்றின் தேவைகளை நிறைவு செய்வதற்கு டிஜிட்டல் கொடுப்பனவு முறைமைகளை ஊக்குவித்து வருவதுடன் புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதனை முன்னேற்றுகின்ற சூழலொன்றினை தோற்றுவிப்பதற்கு தொழிற்துறையுடன் தொடர்ந்தும் பணியாற்றுகின்றது. அதற்கமைய, தேசிய பயண அட்டை மற்றும் திறந்த பிரயோக செய்நிரலாக்கம், இடைமுகத் தளங்கள் போன்ற பின்டெக் தீர்வுகளை நடைமுறைப்படுத்துவதற்கு தொழிற்துறைக்கிடையிலான கூட்டு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட புதிய முன்னுரிமைகளுக்கு மத்தியில் காணப்படுபவையாகும். மேலும், உமது வாடிக்கையாளரை அறிந்து கொள்ளுங்கள் செயன்முறைகள் மற்றும் நிதியியல் பணிகளின் பாதுகாப்பு மற்றும் வினைத்திறனை மேம்படுத்துவதற்கான வர்த்தக நிதி போன்ற விடயப் பரப்புகளில் டிஜிட்டெல் பேரேட்டுத் தொழில்நுட்பத்தினை பின்பற்றுவதன் சாத்தியப்பாட்டினை கண்டறிவதற்கு தொடர்புடைய ஆர்வலர்களுடன் நெருங்கிப் பணியாற்றுவதற்கு இலங்கை மத்திய வங்கி ஆரம்பித்தது. மெய்நிகர் வங்கித்தொழில் மற்றும் இலத்திரனியல் ரீதியாக உமது வாடிக்கையாளரை அறிந்துகொள்ளுங்கள் செயன்முறைகளைப் பின்பற்றும் பொருட்டு இலங்கை மத்திய வாங்கியானது தேசிய இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை செயற்றிட்டத்துடன் ஒருங்கிணைக்கும் சாத்தியப்பாட்டினை மதிப்பிடுகின்றது. இது, அடையாள சரிபார்த்தலின் டிஜிட்டல் வழமுறைகளை வேண்டுகின்ற அத்துடன் நிறுவனசார் சமூகமயமாக்கல் செலவுகளைக் குறைப்பதன் மூலம் நிதிக்கான அணுகுவழிகளை அதிகரிக்கின்ற பல பின்டெக் புத்தாக்கங்களை அறிமுகப்படுத்துவதனை இயலச்செய்யும். இலங்கை மத்திய வங்கியானது, புதிய தொழில்நுட்பங்களை பின்பற்றுகின்ற அதேவேளை, தரவு பகிர்தல் தொடர்பிலான இடர்நேர்வுகள் பற்றியும் அதிக அவதானமிக்கதாக விளங்குகின்றது. எனவே, இலங்கை மத்திய வங்கியானது வாடிக்கையாளர் நிதியங்கள் மற்றும் தகவல்களின் பாதுகாப்பினை உறுதி செய்வதற்கும் அதன் ஒழுங்குமுறைப்படுத்தும் கட்டமைப்பினை வலுப்படுத்தியுள்ளது. மேலும், இலங்கை மத்திய வங்கியானது, தகவல் பாதுகாப்பு மீதான வலுவான சட்டவாக்கக் கட்டமைப்பொன்றினை இலங்கைக்கென உருவாக்குவதற்கு தொடர்புடைய தேசிய முகாவராண்மைகளுடன் கூட்டிணைகின்றது. இம்முற்செயற்பாடுமிக்க வழிமுறைகளுடன் இலங்கையின் தேசிய கொடுப்பனவு முறைமையானது டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட பொருளாதாரம் ஒன்றின் படிப்படியாக வளர்ச்சியடைந்துவரும் கொடுப்பனவுத் தேவைகளை தொடர்ந்தும் நிறைவேற்றுமென எதிர்பார்க்கப்படுகின்றது.


**உசாத்துணைகள்:**

1. Central Bank of Sri Lanka, Annual Reports, 2015, 2017 & 2018
2. Committee on Payment and Settlement Systems. (2003). A glossary of terms used in payments and settlement systems. Basel.
3. Jayamaha, R. (2014). The Money Pipeline. Colombo: Triad.
4. Payments and Settlements Department, Payments Bulletin, 2005, 1st Quarter, Vol 5:1
5. Wijesinghe, D. S (2009) "Intraday Liquidity facility. Does it have an impact on Monetary Policy", Central Bank of Sri Lanka Staff Studies. Vol 37: 1&2 pp 1-7

தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒடுக்குதல் செயற்பாடுகளில் அடையாளம் காணப்பட்ட உபாயக் குறைபாடுகளை கட்டுப்படுத்துவதற்காக இலங்கைக்கு வழங்கப்பட்ட நேரக் கட்டமைப்புடன்கூடிய நடவடிக்கைத் திட்டத்தினை வெற்றிகரமாக நிறைவுசெய்வதனை நோக்கிய பணியில் தீவிரமாக ஈடுபட்டது. நிதியியல் நடவடிக்கைச் செயலணிக் குழுவானது பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒடுக்குதல் நடவடிக்கைகளுக்கான உலகளாவிய நியமங்களின் வடிவமைப்பாளராகும்.

**இவ்வாண்டுப் பகுதியில் நிதியியல் உளவறிதல் பிரிவு அறிக்கையிடுகின்ற நிறுவனங்கள், சட்டத்தினை நடைமுறைப்படுத்தும் முகவர்கள் மற்றும் பொதுமக்களிடமிருந்து 1,022 சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கைகளைப் பெற்றுக்கொண்டதுடன் பகுப்பாய்வு மற்றும் மதிப்பிடல் நடவடிக்கைகளின் பின்னர் 317 சந்தேகத்திற்குரிய கொடுக்கல் வாங்கல் அறிக்கைகளை மேலதிக புலனாய்வுகளுக்காக சட்ட நடைமுறைப்படுத்தல் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரிகளுக்கு பாரப்படுத்தியது.** அறிக்கையிடும் நிறுவனங்களும் நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் பிரிவு 6 இன்படி, ஆரம்ப மட்டமான ரூ.1.0 மில்லியனை அல்லது அதற்குச் சமமான வெளிநாட்டு நாணயங்களை விஞ்சுகின்ற காசுக் கொடுக்கல்வாங்கல்களையும் இலத்திரனியல் நிதிய மாற்றங்களையும் (இலத்திரனியல் நிதிய மாற்றல் - உள்முக மற்றும் வெளிமுக) தொடர்ந்து அறிவித்தன. இக்காலப்பகுதியில், அறிக்கையிடல் நிறுவனங்கள் முறையே 5.6 மில்லியன் காசுக் கொடுக்கல்வாங்கல்களையும் 6.3 மில்லியன் இலத்திரனியல் நிதிய மாற்றல்களையும் அறிவித்திருந்தன.

## இணங்குவிப்புக் கண்காணிப்பு மற்றும் சட்டவாக்க அபிவிருத்திகள்

**நாட்டின் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒடுக்குதல் கட்டமைப்பிற்கு இணங்குவது உள்நாட்டு அதேபோன்று உலகளாவிய பொருளாதாரம் மற்றும் நிதியியல் முறைமைகளின் உறுதிப்பாட்டிற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தக்கூடிய பணம் தூயதாக்கல், பயங்கரவாதத்திற்கு நிதியிடலையும் அதனுடன் தொடர்பான நிதியியல் குற்றச் செயல்களைத் தடுப்பதற்கும் மிக இன்றியமையாததாகும்.** இவ்வாண்டுப் பகுதியில், நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்திற்கும் அதன்கீழ் விடுக்கப்பட்ட விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கும் நிதியியல் நிறுவனங்கள் இணங்கியொழுகுவதனை மதிப்பிடுவதற்காக 19 இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட தலத்திலான பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், இவ்வாண்டுப் பகுதியில், நிதியியல் உளவறிதல் பிரிவு பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒடுக்குதல் மேற்பார்வைச் செயன்முறையினையும் நிறுவன ரீதியான இணங்குவிப்பினையும் வலுப்படுத்துவதற்காக சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல், பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடல் இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் நிதியியல் நிறுவனங்களுக்கான பயனாளி உரிமையாளரை அடையாளம் காணுதல் என்பன மீது வழிகாட்டல்களை விடுத்தது.

**2018 சனவரியில், 2018ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரம் (வாடிக்கையாளரை நுணக்கமாக கண்காணித்தல்) விதிகள் வழங்கப்பட்டதுடன் நிதியியல் உளவறிதல் பிரிவு குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரம் மற்றும் தொழில்சார் நிறுவனங்களுக்கு அதன் நிறுவன ரீதியான இணங்குவிப்பு மதிப்பீடுகளை விரிவாக்கிக் கொண்டது.** இதன்படி, நிதியியல் உளவறிதல் பிரிவு, பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒடுக்குதல் வழிமுறைகளை காத்திரமான முறையில் நடைமுறைப்படுத்தப்படுவதனை பரீட்சிப்பதற்காக பணம் தூயதாக்குவது தொடர்பில் உயர் இடர்நேர்வுத் துறைகளாக அங்கீகரிக்கப்பட்ட நிதியல்லா வியாபாரம் மற்றும் தொழில்சார் நிறுவனங்களுக்கு 27 முன்னேற்ற மீளாய்வு விஜயங்களை மேற்கொண்டது. இவ்வாண்டுப் பகுதியில், நிதியியல் உளவறிதல் பிரிவானது பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒடுக்குதல் இணங்குவிப்புக் கடப்பாடுகள் மீது துறைகள் குறித்துரைக்கப்பட்ட வழிகாட்டல்களை விடுத்ததன் மூலம் குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரம் மற்றும் தொழில்சார் நிறுவனங்களை வலுப்படுத்தவதற்கான வழிமுறைகளை மேற்கொண்டது.

**2018ஆம் ஆண்டுப் பகுதியில், நிதியியல் உளவறிதல் பிரிவு காப்புறுதித் துறை மற்றும் பிணையங்கள் துறை ஆகிய இரண்டிலும் முக்கிய கவனம் செலுத்தும் விதத்தில் அனைத்தையுமுள்ளடக்கிய இடர்நேர்வுகளின் அடிப்படையில் கண்டறியப்பட்ட மேற்பார்வை தொடர்பான தகவல்களை பகிர்ந்து கொள்வதற்கான கட்டமைப்பினை நிறுவுவதற்காக இத்துறைகளின் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை நிறுவனங்களாக விளங்கும் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு மற்றும் இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு இரண்டுடனும் இரண்டு புரிந்துணர்வு ஒப்பந்தங்களைச் செய்திருக்கிறது.** மேலும், நிதியியல் உளவறிதல் பிரிவின் பகுப்பாய்வுத் தொழிற்பாட்டினை உயர்த்தும் நோக்குடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று உந்து ஊர்திகள் போக்குவரத்துத் திணைக்களத்துடனும் மேற்கொள்ளப்பட்டது.

## நிதியியல் நடவடிக்கைச் செயலணியின் பட்டியற்படுத்தலும் இணங்குவித்தலினை மேம்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட வழிமுறைகளும்

**நிதியியல் நடவடிக்கைச் செயலணிக் குழுவானது ஆசிய பசுபிக் குழு போன்ற அதன் பிராந்திய அமைப்புக்களூடாக பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை**

8

## சிறப்புக்குறிப்பு 12
## இலங்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரம் மற்றும் தொழில்களுக்கான பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் கடப்பாடுகள்

### பொதுநோக்கு

முன்னேற்றம் கண்ட தொழில்நுட்பத்தின் மூலம் வலுவூட்டப்பட்ட உலகமயமாக்கல், நாடுகளின் பொருளாதார வளர்ச்சியையும் அபிவிருத்தியையும் விரைவுபடுத்தியிருக்கின்ற போதும் இது உலகளாவிய பொருளாதாரத்திற்கு புதிய ஆபத்துக்களையும் அறிமுகப்படுத்தியிருக்கிறது. பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் ஆகிய இரண்டும் முக்கிய ஆபத்துக்களாக அடையாளம் காணப்பட்டிருக்கின்றது. சட்டத்திற்கு மாறான நடவடிக்கைகளிலிருந்து பெறப்பட்ட பெறுகைகளை உள்ளீடு செய்வதற்கு அல்லது பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு நிதியினை வழிப்படுத்துவதற்கு துவாரங்களேதுமில்லாத ஆரோக்கியமான உலகளாவிய நிதியியல் முறைமையொன்று இருக்குமாயின் உலகமயமாக்கலின் நன்மைகள் பெறப்படுவதனை உறுதிப்படுத்திக் கொள்ளவும் உயர்ந்தமட்ட நன்மைகளை அடைந்து கொள்ளவும் முடியும். பணம் தூயதாக்குவோரும் பயங்கரவாதத்திற்கு நிதியளிப்போரும் பல்வேறுபட்ட நாடுகளிலும் காணப்படும் பலயீனமான மற்றும் காத்திரமற்ற கட்டுப்பாடுகளைப் பயன்படுத்திக் கொண்டு நிதியியல் நாணய முறைமைகளுக்குள் நுழைந்து கொள்வதுடன் இறுதியில் உலக நிதியியல் முறைமையினை துவம்சம் செய்து விடுகின்றனர். ஆகவே பன்னாட்டு நிதியியல் முறைமையினை பாதுகாத்துக் கொள்வதற்கு நாடுகளின் மட்டத்தில் வலுவான பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் அமைப்பொன்று அவசியமாகவுள்ளது. இத்தேவைப்பாட்டினை விளங்கிக் கொண்டதன் காரணமாக, பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் என்பனவற்றை தடை செய்வதற்காக நிதியியல் நடவடிக்கை செயலணிக் குழு[1] உலகளாவிய நியமங்களை ஏற்படுத்தியிருக்கிறது. வழமையாக பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை கூடியளவிற்குக் கவரக்கூடிய தன்மையினை வங்கிகள், நிதியியல் நிறுவனங்கள், கடன்வழங்கல் நிறுவனங்கள், பணம் மற்றும் நாணய மாற்றுப் பணிகள் கொண்டிருப்பதனால் ஆரம்பத்தில் இந்நியமங்கள் இவற்றின் மீது அதிகளவு கவனத்தினைச் செலுத்தின. எனினும், குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரம் மற்றும் தொழில்கள்[2] பணம் தூயதாக்குவோரினாலும் பயங்கரவாதத்திற்கு நிதியிடுவோரினாலும் பயன்படுத்துவதற்கான உயர்ந்த உள்ளார்ந்த வளத்தினைக் கொண்டிருப்பதனை அங்கீகரிக்கும் விதத்தில் செயற்பரப்பானது குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரம் மற்றும் தொழில்களுக்குப் படிப்படியாக விரிவாக்கப்பட்டது. இலங்கையின் பின்னணியிலும் கூட, குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் மற்றும் தொழில்கள் பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல்[3] தொடர்பில் அதிகரித்த அச்சுறுத்தலைக் கொண்டிருந்தமையினை பதிவேடுகள் காட்டுகின்றன. ஆகவே, 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் சட்டவாக்கத்தின் கீழ், இலங்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரம் மற்றும் தொழில்களுக்கு இவ்வுலகளாவிய நியமங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

### குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரம் மற்றும் தொழில்களினூடாக பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கர வாதத்திற்கு நிதியிடல்

பணம் தூயதாக்குவோர் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடுவோர் அவர்களது குற்றவியல் தொடர்பான பெறுகைகளையும் பயங்கரவாதத்திற்கான நிதியிடல்களையும் சட்டத்திற்கு மாறான அவற்றின் மூலத்தினை மறைப்பதற்கான வழிவகைகளை எப்போதும் தேடிக் கொண்டிருப்பர். குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரம் மற்றும் தொழில்கள் துறை பணம் தூயதாக்குவோருக்கும் பயங்கரவாதத்திற்கு நிதியளிப்போருக்கும் மிக்க கவர்ச்சிகரமானதொன்றாக மாறி வருகின்றது. இதற்கு அத்தகைய இடர்நேர்வுகளைத் தணிப்பதற்குச் சரியான கட்டுப்பாடுகள், கொள்கைகள் அல்லது நடைமுறைகள் இல்லாமலிருப்பதே முக்கிய காரணமாகும். குறிப்பாக, பெரும்பாலான குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரம் மற்றும் தொழில்கள் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் தொடர்பான தேவைப்பாடுகளை அறியாதனவாக அல்லது அவற்றை நடைமுறைப்படுத்துவதற்குப் பங்களிக்க விரும்பாதனவாகக் காணப்படுகின்றன. அத்துடன் பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் என்பன தந்தி மாற்றல்கள் மற்றும் அதேநேரக் கொடுப்பனவு வசதிகள் என்பனவற்றைப் பயன்படுத்தி நிதிகளை மாற்றல் செய்வது போன்ற முன்னேற்றம் கண்ட தொழில்நுட்பவியலுடன் சேர்ந்த வளர்ச்சியைக் கொண்டிருப்பதனால் அவை எந்த வழியில் எவ்வாறு நடைபெறுகின்றன என்பதனை மதிப்பிடுவது மிகவும் இடர்ப்பாடானதாகும்.

சட்டத்திற்கு மாறான பணத்தினைக் குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரம் மற்றும் தொழில்களினூடாகப் பல்வேறு வழிகளில் சட்ட பூர்வமான பணத்திற்கு மாற்றிக் கொள்ள முடியும். உதாரணமாக, உண்மைச் சொத்துக் கொடுக்கல்வாங்கல்களை பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் நோக்கங்களுக்காக, சொத்துக்களை வாங்குவதற்காக சட்டத்திற்கு மாறாக உழைத்த பணத்தினை (உ-ம்: போதைப்பொருள் பெறுகைகள்) முதலீடு செய்தல் மற்றும் பணத்தின் சட்டத்திற்கு மாறான மூலத்தினை மேலும் மறைத்துக் கொண்டு அல்லது

1 நிதியியல் நடவடிக்கை செயலணிக்குழு என்பது உள்ளக அரசாங்க ரீதியானதொரு சபையாகும். இது பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலுக்கெதிரான உலகளாவிய கொள்கையினை உருவாக்குவதற்காக 1989இல் ஏற்படுத்தப்பட்டதாகும். நிதியியல் நடவடிக்கை செயலணிக்குழுவினால் விடுக்கப்பட்ட உலகளாவிய நியமங்கள் பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் மற்றும் பெருமளவு சேதங்களை விளைவிக்கும் ஆயுதப்பெருக்கம் என்பனவற்றினை ஒழிப்பதற்கான “விதந்துரைப்புக்கள்” எனப் பொதுவாக அழைக்கப்படுகின்றன (www.fatf-gafi.org). தற்பொழுது பணம் தூயதாக்கல், பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் பெருமளவு சேதங்களை விளைவிக்கும் ஆயுதப்பெருக்கம் என்பனவற்றிற்கெதிரான 40 அத்தகைய விதந்துரைப்புக்கள் காணப்படுகின்றதுடன் ஒவ்வொரு நாடும் அதற்கு இணங்கியொழுகுதலும் வேண்டும்.

2 குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரம் மற்றும் தொழில்கள் என்பது மற்றையவர்களுடன் கசினோக்கள், சூதாட்ட இல்லங்கள் அல்லது லொத்தர்கள், உண்மைச் சொத்து முகவர்கள், பெறுமதிமிக்க உலோகங்களின் வணிகர்கள், பெறுமதிமிக்க கற்கள், ஓரளவு பெறுமதிமிக்க கற்களின் வணிகர்கள், சட்ட அறிஞர்கள், நொத்தாரிசுகள், கணக்காளர்கள், நம்பிக்கைப் பொறுப்பாளர் அல்லது கம்பனிப் பணி வழங்குவோர் ஆகியோரை உள்ளடக்குகிறது.

3 இலங்கை தொடர்பான தேசிய பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் இடர்நேர்வு மதிப்பீடு - 2014

8

கணக்காய்வுச் சுவடுகளை சிக்கலாக்கி அதனை மீளவிற்றல், சட்டத்திற்கு மாறான அல்லது பயங்கரவாத நடவடிக்கைகளின் விரிவாக்கத்திற்காகச் சொத்துக்களைக் கொள்வனவு செய்தல், சட்டத்திற்கு மாறான பணத்தினைப் பயன்படுத்தி சொத்துக்களுக்காக ஆரம்ப வைப்புக்களை மேற்கொள்ளுதல் மற்றும் அதன் பின்னர் குறிப்பிட்ட வங்கியொன்றின் கணக்கிற்கு மீளளிப்புக்களைச் செய்யுமாறு கோருதல் மூலம் சட்டத்திற்கு மாறான நிதியினை வழமையான நிதியியல் முறைமை மாற்றுதல் போன்ற பல்வேறு வழிமுறைகளின் மூலம் தவறாகப் பயன்படுத்திக் கொள்ள முடியும். மேலும் பணம் தூயதாக்குவோரும் பயங்கரவாதத்திற்கு நிதியளிப்போரும் தனியாளுக்குச் சொந்தமான சொத்துக்களாக நாடுகளுக்கிடையே சுலபமாகக் கொண்டு செல்லத்தக்க சிறிய பொருட்களான தங்கம், இரத்தினக்கல் மற்றும் ஆபரணம் போன்ற பண்டங்களில் பெரும் தொகைகளை முதலீடு செய்வதற்கு எப்பொழுதும் விரும்புவர். அத்துடன், அவர்கள் அவர்களது சட்டத்திற்கு மாறான பணத்தினை சட்ட ரீதியான பணமாக மாற்றுவதற்கு சூதாட்ட வெப்தளங்களையும் மெய்நிகர் சூதாட்டத் தளங்களையும் பயன்படுத்துகின்றனர். மேலும், கணக்காய்வாளர்கள், சட்ட அறிஞர்கள், நொத்தாரிசுகள் மற்றும் கம்பனி பணி வழங்குவோர் போன்ற தொழில்சார் பணிகளிலுள்ளோரைப் பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடலுக்காக அவர்களுக்குத் தெரிந்தோ அல்லது தெரியாமலோ பயன்படுத்திக் கொள்ள முடியும். பணம் தூயதாக்கல் பின்னணியில் தொழில்சார் நிபுணர்களின் நல்லெண்ணத்தினைப் பணம் தூயதாக்குவோர் பணம் தூயதாக்கும் செயன்முறையில் தம்மை மறைத்துக் கொள்ளப் பயன்படுத்துவதனால் தொழில்சார் பணிகளை வழங்குவோர் "வாயில் காப்போர்" எனக் குறிப்பிடப்படுகின்றனர்.

இலங்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரம் மற்றும் தொழில்களுக்கான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பும் பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் கடப்பாடுகள்

இலங்கையின் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கர வாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் கட்டமைப்பு நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டம் மற்றும் 2005ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒடுக்குதல் மீதான சமவாயச் சட்டம் மற்றும் 2006ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க பணம் தூயதாக்கலைத் தடுத்தல் சட்டம் ஆகிய இரண்டு சட்டவாக்கங்களை உள்ளடக்கிய மூன்று சட்டவாக்கங்களை கொண்டிருக்குகிறது. இலங்கையின் நிதியியல் உளவறிதல் பிரிவிடம் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் சட்டத் தேவைப்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்காக நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்ட ஏற்பாடுகளின் கீழ் ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் அத்தகைய தேவைப்பாடுகள் மத்திய வங்கியின் ஆளுநரைத் தலைவராகக் கொண்ட பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் தேசிய இணைப்புக் குழுவினூடாக இணைப்புச் செய்யப்படுகின்றன.

நிதியில் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் நியதிகளில் (ஆட்களைக் கொண்ட நிறுவகம் உட்பட இயற்கையான/ சட்ட ஆட்கள்) ஏதேனும் நிதியியல் வியாபாரம் மற்றும் குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள அல்லது மேற்கொள்கின்ற ஆள்/ ஆட்கள் அத்தகைய சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மற்றையவர்களுடன் நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் 33ஆம் பிரிவில் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு கசினோ உண்மைச் சொத்து முகவர்கள், பெறுமதிக்க உலோகங்கள், பெறுமதிமிக்க கற்களின் வணிகர்கள், சட்ட அறிஞர்கள், நொத்தாரிசுகள், கணக்காளர்கள் மற்றும் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் அல்லது கம்பனிப் பணி வழங்குவோர் ஆகியோர் உடனடியாக நடைமுறைக்குவரும் விதத்தில் பணம்/ தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் கடப்பாடுகளை பிரயோகிப்பது தொடர்பில் முன்னுரிமை வழங்கப்பட்டிருக்கின்றனர். நிதியியல் நடவடிக்கை செயலணிக்குழுவின் விதந்துரைப்புக்களை பரிசீலனையில் கொண்டு நிதியியல் உளவறிதல் பிரிவு - இலங்கை நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் கீழ் குறித்துரைக்கப்பட்ட நிதியியல் அல்லா வியாபாரம் மற்றும் தொழில்களுக்கு விதிகளையும் வழிகாட்டல்களையும் விடுத்திருக்கிறது[4]. இதற்கமைய, பின்வருவன முக்கியமான பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் கடப்பாடுகளாக விளங்குவதுடன் இவை இலங்கையிலுள்ள குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரம் மற்றும் தொழில்களினால் இணங்குவிக்கப்படுதலும் வேண்டும்.

**வாடிக்கையாளர்களை நெருக்கமாகக் கவனித்தல் மற்றும் பதிவேடுகளைப் பேணுதல்**

நிதியியல் நடவடிக்கை செயலணிக்குழுவின் விதந்துரைப் புக்களின்படி வாடிக்கையாளரை உரிய விழிப்புக் கவனம் வழிமுறைகள், பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் இடர்நேர்வுகளைத் தடுக்கின்ற வழிமுறையொன்றாகப் பிரயோகிக்கப்படுதல் வேண்டும். இதனை வியாபார உறவு முறைகளை நிறுவுகின்ற போது, இருந்திட்டொன்றான கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ளும் போது ஏதேனும் பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் சந்தேகம் எழும் போது அத்துடன் வாடிக்கையாளர் அல்லது நன்மைபெறும் சொந்தக்காரர்[5] தொடர்பிலும் முன்னர் பெறப்பட்ட அடையாளம் தொடர்பில் ஏதேனும் சந்தேகம் எழும் போது செய்தல் வேண்டும்.

நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் பிரிவு 2, வாடிக்கையாளரை அடையாளம் காணுகின்ற தேவைப்பாட்டினைக் குறித்துரைக்கிறது. மேலே குறிப்பிடப்பட்ட வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவன விதியின்படி, நிதியின் மூலம் மற்றும்

4 2018ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவன விதி, 2018ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல், கசினோ மற்றும் சூதாட்ட இல்லங்களுக்கான இணங்குவிப்புக் கடப்பாடுகள் மீதான வழிகாட்டல்கள் மற்றும் 2018ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க உண்மைச் சொத்து, பெறுமதிமிக்க உலோகங்கள், பெறுமதிமிக்க மற்றும் ஓரளவு பெறுமதிமிக்க கற்களின் வணிகர்களுக்கான பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் இணங்குவிப்புக் கடப்பாடுகள்.

5 பயன்பெறும் சொந்தக்காரர் என்பது குறிப்பிட்ட கொடுக்கல்வாங்கல்களிலிருந்து நன்மைகளைப் பெற்றுக்கொள்ளும் இறுதியான இயற்கையான ஆள் எனப் பொருள்படும்.

கொடுக்கல்வாங்கலின் நோக்கம் என்பன உட்பட முழுப்பெயர், நிரந்தர முகவரி, தொழில், அலுவல்சார் தனிப்பட்ட அடையாள இலக்கம் என்பன பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும் என்பதுடன் ஆளின் அடையாளம் தேசிய அடையாள அட்டை, கடவுச்சீட்டு அல்லது ஓட்டுநர் உரிமப்பத்திரம் போன்ற செல்லுபடியாகக்கூடிய அடையாள ஆவணங்களைப் பயன்படுத்தி சரிபார்க்கப்படுதலும் வேண்டும். அதன் பின்னர் வாடிக்கையாளர்கள் பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் இடர்நேர்வு மட்டங்களின் அடிப்படையில் வகைப்படுத்தப்படுதல் வேண்டும். மேலும், குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் மற்றும் தொழில்கள் "உயர் இடர்நேர்வு" எனவும் வியாபார உறவுமுறைகள் அல்லது கொடுக்கல்வாங்கல்கள் உயர் இடர்நேர்வுகடன் தொடர்புபட்டதாக (உ-ம்: வாடிக்கையாளர் அரசியல் ரீதியாக முகம் கொடுக்கப்படும் ஆளாக இருக்கும் பொழுது அல்லது வாடிக்கையாளருடன் நேருக்குநேர் சந்தித்திராத உறவினைக் கொண்டிருக்கம் பொழுது) இருப்பவை எனவும் வகைப்படுத்தப்பட்ட இரண்டு வாடிக்கையாளர்களுக்கான உயர்ந்த வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவன வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்பட்டனர். அத்துடன் வாடிக்கையாளரொருவர் சட்ட ஆளாக அல்லது சட்ட ஒழுங்கேற்பாடாக இருக்குமிடத்து வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவனம் சட்டத்தின் மூலம் குறித்துரைக்கப்படல் வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேற்குறிப்பிட்டவற்றிற்குப் புறம்பாக, நிதியியல் நடவடிக்கை செயலணிக்குழுவின் விதந்துரைப்புக்களின்படி, கொடுக்கல்வாங்கல் தொடர்பான அனைத்து அவசியமான பதிவேடுகளும் குறைந்தபட்சம் ஐந்தாண்டு காலப்பகுதிக்காவது பேணப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுகிறது. எனினும், நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் பிரிவு 4 இனால் கேட்டுக்கொள்ளப்பட்டவாறு குறித்துரைக்கப்பட்ட பதிவேடுகள் நிதியியல் உளவறிதல் பிரிவினால் தேவைப்படுத்தப்படும் பொழுது அல்லது கேட்டுக்கொள்ளப்படும் பொழுது தரவுகளை மீண்டும் இலகுவாகவும் விரைவாகவும் பெறத்தக்க விதத்தில் குறைந்தபட்சம் 6 ஆண்டுகளுக்கும் வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

### சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல்

நிதியியல் நடவடிக்கை செயலணிக்குழுவின் விதந்துரைப் புக்களின்படி, குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் மற்றும் தொழிலொன்று நிதிகள் குற்றவியல் நடவடிக்கைகளுடன் தொடர்பானவை அல்லது பயங்கரவாத நிதியிடலுடன் தொடர்புபட்டவை என்பதற்கு நியாயமான காரணங்கள் இருக்குமிடத்து அது பற்றி நாட்டின் நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு அறிவிக்கப்படுதல் வேண்டுமெனச் சட்டத்தினால் தேவைப்படுத்தப்படல் வேண்டும்.

இதன்படி, நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் 7ஆவது பிரிவு, பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் நடவடிக்கைகள் தொடர்பில் சந்தேகம் உருவாகுமிடத்து அல்லது அது பற்றிய தகவல் கிடைக்குமிடத்து அதன் பின்னர், அதிலிருந்து இரண்டு வேலை நாட்களுக்கிடையில் அது பற்றி இலங்கை நிதியியல் உளவறிதல் பிரிவுக்கு சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல்களை அறிவித்தல் வேண்டுமென தேவைப்படுத்துகின்றது. சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கையினைக் கடிதம் மூலம் அல்லது தொலைபேசி மூலம் சமர்ப்பிக்கலாமென்பதுடன் அதனைத் தொடர்ந்து இருபத்து நான்கு மணித்தியாலங்களுக்கிடையில் எழுத்து மூலம் சமர்ப்பித்தல் வேண்டும். இதற்கமைய, நிதியியல் உளவறிதல் பிரிவு, "2017ஆம் ஆண்டின் சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல்கள் (படிவம்) ஒழுங்குவிதிகள்" பற்றியும் இதில் குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் மற்றும் தொழில்களுக்கான "அட்டவணை ஏ" இன்படி சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல்களை நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு அறிவித்தல் வேண்டும் என்பது பற்றி விரித்துரைக்கின்றது. மேலும், நிதியியல் உளவறிதல் பிரிவு "சிவப்புக் கொடி" என அழைக்கப்படுகின்ற பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் பற்றிய சந்தேகத்திற்குரிய குறிகாட்டியினைக் குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் மற்றும் தொழில்களுக்கு வழங்குதல் வேண்டும்.

### குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரம் மற்றும் தொழில்கள் பற்றிய ஒழுங்குவிதிகள் மற்றும் மேற்பார்வை

நிதியியல் நடவடிக்கை செயலணிக் குழுவின் விதந்துரைப்புக்கமைய குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரம் மற்றும் தொழில்களில் தேவையான பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் வழிமுறைகள் காத்திரமான விதத்தில் நடைமுறைப்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்துகின்ற அனைத்தையுமுள்ளடக்கிய ஒழுங்கு முறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை அமைப்பொன்று இருத்தல் வேண்டுமென்பதுடன் அவர்கள் நாட்டில் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதனை கண்காணிப்பதற்கும் அதனை உறுதிப்படுத்துவதற்குமான காத்திரமான முறைமைகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.

இதற்கமைய நிதியியல் உளவறிதல் பிரிவு - இலங்கை, இலங்கையின் குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் மற்றும் தொழில்களுக்கான பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தலைக் கண்காணிக்கின்ற நிறுவனமாக தொழிற்படுகின்றதுடன் தொடர்பான குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் மற்றும் தொழில்களைக் கண்காணிப்பதற்கு இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறையினையும் பிரயோகிக்கின்றது. குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் மற்றும் தொழில்கள், நிறுவன மட்டங்களில் இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்டதொரு இணங்குவிப்பு நிகழ்ச்சித்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு இணங்குவிப்பு அலுவலரொருவரை நியமிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன. தேவையான விழிப்புணர்வு, பயிற்சி மற்றும் தொழில்நுட்ப உதவிகள் நிதியியல் உளவறிதல் பிரிவினால் வழங்கப்படுகின்றன. இணங்குவிப்பு அலுவலரினூடாக சேகரிக்கப்பட்ட தகவல்களுக்கெதிராக ஒவ்வொரு குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரம் மற்றும் தொழில்களுக்காக தலத்திற்கு

8

வெளியேயான பரீட்சிப்பு நடத்தப்படுவதுடன் அதனைத் தொடர்ந்து தலத்திற்கு வெளியேயான பரீட்சிப்பின் இடர்நேர்வு வகைப்படுத்தலை அடிப்படையாகக் கொண்டு தலத்திலான பரீட்சிப்புக்கள் நடத்தப்படுகின்றன. இணங்கிக் கொள்ளாமையினை சரிசெய்வதற்கான நடவடிக்கைகள் நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்திற்கிணங்க நிதியியல் உளவறிதல் பிரிவினால் எடுக்கப்படுகின்றன.

**குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரம் மற்றும் தொழில்களுக்கான ஏனைய தொடர்பான பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் வழிமுறைகள்**

மேற்குறிப்பிட்டவற்றிற்குப் புறம்பாக, குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் மற்றும் தொழில்கள், பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் இடர்நேர்வுகளைக் காலாந்தர ரீதியில் மதிப்பிடல், பணம் தூயதாக்கலுக்கெதிரான பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் கொள்கைகளையும் நடைமுறைகளையும் ஆவணப்படுத்தல் மற்றும் நடைமுறைக்கிடல், ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபைத் தீர்மானங்களினால் குறித்துரைக்கப்பட்ட ஆட்கள் மற்றும் நிறுவனங்களுக்கெதிராக வாடிக்கையாளர்களை நுண்ணாய்விற்கு உட்படுத்தல், தொடர்பான அனைத்து ஊழியர்களுக்கும் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் பயிற்சியினை நடத்துதல், ஊழியர்களை வாடகைக்குப் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் அவர்களை நுண்ணாய்விற்கு உட்படுத்தல் மற்றும் நிறுவன ரீதியான பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் கட்டமைப்பு மீது சுயாதீனமான கணக்காய்வினை நடத்துதல் போன்ற பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் வழிமுறைகளைப் பிரயோகிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டன.

குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் மற்றும் தொழில்கள் துறைக்கு இவ்வழிமுறைகளை அறிமுகப்படுத்துகையில், இலங்கை நிதியியல் உளவறிதல் பிரிவு தொடர்பான ஒழுங்கு முறைப்படுத்துநர்கள், உரிமம் வழங்குகின்ற சபைகள் தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை, இலங்கை இரத்தினக்கல் மற்றும் ஆபரண விற்பனையாளர் சங்கம், கூட்டுறுதித் தொடர்மாடிமனை முகாமைத்துவ அதிகாரசபை, கூட்டுறுதித் தொடர்மாடிமனை அபிவிருத்தியாளர் சங்கம், நகர அபிவிருத்தியாளர் அதிகாரசபை, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, இலங்கை வர்த்தக சம்மேளனம் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகம் மற்றும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் போன்ற ஏனைய முக்கிய நிறுவனங்களையும் மிக நெருக்கமாகக் கண்காணித்து வருகின்றது.

**பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தலில் பன்னாட்டு நியமங்களுடன் இணங்கிக் கொள்ளாமையினால் ஏற்படும் இழப்பு**

பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் பொருளாதாரத்தின் மீது அது ஏற்படுத்தும் விரிவான விளைவுகள் காரணமாக உலகளாவிய நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டிற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறது. பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலின் சில பாதகமான விளைவுகளாக மூலவள ஒதுக்கீட்டில் சமமற்ற தன்மை, இலகுவாக பணத்தினை உருவாக்கிக் கொள்ள வேண்டுமென்ற இளம் சந்ததியினரின் மனப்பான்மை, உலக சமாதானத்திற்கு ஆபத்துக்களை ஏற்படுத்தல், சட்ட முறைமைகளின் ஊழல், சொத்துக்களின் விலைகளில் ஒழுக்கமற்ற அதிகரிப்புக்கள் மற்றும் நாட்டின் மேன்மை சேதப்படுத்தப்படல் என்பன காணப்படுகின்ற வேளையில், நிதியியல் மோசடிகள் போன்றவற்றிற்கான உயர்ந்த இடர்நேர்வினைக் கொண்ட நாடொன்று என்ற மனோபாவத்தினை உருவாக்குகின்றது. எனவே, அத்தகைய குற்றங்கள் காரணமாக ஏற்படும் பொருளாதார மற்றும் சமூக இழப்புக்களும் குற்றப் பெறுகைகளை தூய்மைப்படுத்திக் கொள்வதும் மிக உயர்வாக இருக்குமென்பது பளிங்கு போன்று மிகத் தெளிவானதாகும். ஆகவே, ஒவ்வொரு நாடும் உலகளாவிய நிதியியல் முறைமைகளின் சட்ட ரீதியான காசுப்பாய்ச்சலுடன் சேர்த்து சட்டத்திற்கு மாறான அல்லது குற்றச்செயலுடன் தொடர்பான பெறுகைகள் ஒருங்கிணைக்கப்படுவதற்கான தடைகளை உலகளாவிய மட்டத்தில் உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு ஒவ்வொரு நாடும் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் வழிமுறைகளைப் பின்பற்றுதல் வேண்டும். அத்துடன் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழிப்பதற்கு இணங்கிக் கொள்வது பன்னாட்டு சமூகங்களிடையே அதன் நன்மதிப்பினை உயர்த்தும். அவ்வாறின்றி இணங்கியொழுகத் தவறுவது, பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலுக்கெதிராக பன்னாட்டு சமூகத்தினராலும் பன்னாட்டுக் கொள்கை வகுப்போரினாலும் விதிக்கப்படும் பொருளாதார மற்றும் அரசியல் தடை விளைவுகளை எதிர்நோக்க வேண்டியிருக்கும். அத்தகைய குறைபாடுகளைச் சரிசெய்து கொள்வதற்கான வழிமுறைகள் பாரதூரமானவையாக இருப்பதனால் அவற்றைக் கட்டுப்படுத்துவதற்காக ஏற்படும் செலவும் மிக உயர்வாகவே இருக்கும். இலங்கை தற்பொழுது பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தலில் பன்னாட்டு நியமங்களில் நடைமுறைப்படுத்துவதற்கு உயர் கடப்பாட்டுடன் பணியாற்றுகின்றது. ஆகவே, பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியிடுவது தொடர்பில் பூஜ்ய சகிப்புத்தன்மையுடன் கூடிய நாடு என்ற ரீதியில் இலங்கையின் நன்மதிப்பினை உயர்த்துவதற்கு அனைத்து ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்களின் ஆதரவு தேவைப்படுகிறது.

**உசாத்துணை நூல்கள்**

Bureau of International Narcotics and Law Enforcement Affairs (2004), Money Laundering and Terrorist Financeing: A Global Threat, International Narcotics Control Strategy Report.

FATF (2012-2018), International standards on Combating Money Laundering and the Financing of Terrorism & Proliferation, FATF, Paris, France

**ஒடுக்குதல் நியமங்களுடன் இணங்கிச்செல்கின்றமையினை தொடர்ச்சியாக கண்காணிப்பு செய்வதுடன் இதற்காகவே பரஸ்பர மதிப்பீடும் நடத்தப்படுகின்றது.** இலங்கையின் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒடுக்குதல் பன்னாட்டு ரீதியான பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒடுக்குதல் நியமங்களுடன் இணங்கிச்செல்கின்றமையினை மதிப்பிடும் நோக்குடன் இலங்கை மீதான இரண்டாவது பரஸ்பர மதிப்பீடு ஆசிய பசுபிக் குழுமத்தினால் 2014/15இல் நடத்தப்பட்டது. 2015 யூலையில் மேற்கொள்ளப்பட்ட பரஸ்பர மதிப்பீட்டு அறிக்கை ஆசிய பசுபிக் குழுமத்தின் விரைந்து அதிகரிக்கப்பட்ட பின்தொடர் செயன்முறைகளின் கீழ் இலங்கையினால் நடைமுறைப்படுத்துவதற்கென ஒரு தொகுதி நடவடிக்கைகளை விதந்துரைத்தது. 2016 ஒத்தோபரில் நிதியியல் நடவடிக்கை செயலணிக் குழு பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒடுக்குவதில் அடைந்த காத்திரமான முன்னேற்றத்தினை மதிப்பிடுவதற்காக நிதியியல் நடவடிக்கை செயலணிக்குழுவின் பன்னாட்டு ஒத்துழைப்பு மீளாய்வுக் குழுவின் மீளாய்விற்கு உட்படுத்தப்படும் என அறிவித்தது. பல கலந்துரையாடல்கள் மற்றும் முன்னேற்ற அறிக்கைகளின் பின்னர், இலங்கை நான்கு விடயப்பரப்புக்களில் அதாவது பன்னாட்டு ஒத்துழைப்பு மேற்பார்வை, சட்ட ரீதியான ஆட்கள் மற்றும் ஒழுங்குகள் ஆயுதப் பெருக்கம் (வட கொரியா மற்றும் ஈரான்) மீதான இலக்கிடப்பட்ட நிதியியல் தடைகள் என்பனவற்றில் போதியளவு முன்னேற்றம் அடையப்படவில்லை என நிதியியல் நடவடிக்கை செயலணிக்குழு அறிவித்தது. இதன் விளைவாக, 2017 ஒத்தோபரில் ஆர்ஜென்டீனாவின் புவனஸ் அயர்சில் நடைபெற்ற அதன் முழுநிறைவான சமவாயத்தில் நிதியியல் நடவடிக்கை செயலணிக்குழுவானது, நிதியியல் நடவடிக்கைச் செயலணிக் குழுவின் இணங்குவிப்பு ஆவணத்தில் உபாய பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒடுக்குதல் முறைப்பாடுகளுடன்கூடிய ஆட்சிப் பிரதேசமாக இலங்கையினை அட்டவணைப்படுத்தியது. இவ்வாவணம் பொதுவாக "சாம்பல் பட்டியல்" (கிறே லிஸ்ட்) என அறியப்படுகின்றது. பட்டியலிடப்பட்டமையினைத் தொடர்ந்து அடையாளம் காணப்பட்ட உபாயக் குறைபாடுகளை தீர்ப்பதற்காக நேரக் கட்டமைப்புடன்கூடிய நடவடிக்கைத் திட்டமொன்று இலங்கைக்கு வழங்கப்பட்டது. 2017 நவெம்பரில் பட்டியலிடப்பட்டதனைத் தொடர்ந்து இலங்கை அதிகாரிகள், 2018ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க நம்பிக்கைப் பொறுப்புக் கட்டளைச் (திருத்தம்) சட்டம், 2018ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க குற்றவியல் விடயங்கள் தொடர்பில் பரஸ்பர உதவிகள் (திருத்த) சட்டம் என்பனவற்றை நிறைவேற்றியமை உட்பட, கொரிய சனநாயக சோசலிசக் குடியரசு மற்றும் ஈரான் மீதான ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவது மீதான ஒழுங்குவிதிகள்/ பணிப்புரைகள்/ வழிகாட்டல்களை வழங்குதல், வாடிக்கையாளரை நுணுக்கமாகக் கவனித்தல் விதிகளை விடுத்ததன் மூலம் குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் மற்றும் தொழில்சார் விடயங்களுக்கு பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒடுக்குதல் உள்ளடக்கத்தினை விரிவாக்கியமை, நிதியியல் மற்றும் குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரம் மற்றும் தொழில்சார் நிபுணத்துவத் துறையின் இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒடுக்குதல் மேற்பார்வையினை நடத்தியமை, அவதானிக்கப்பட்ட இணங்குவிப்புக்களின்மை மீது நடைமுறைப்படுத்தல் நடவடிக்கைகளை நடைமுறைக்கிடும் நடவடிக்கைகள் மற்றும் நிறுவனங்கள் மற்றும் குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரம் மற்றும் தொழில்சார் விடயங்களைச் சென்றடையும் தன்மை உட்பட நிதியியல் நடவடிக்கைகள் செயலணிக் குழுவின் நடவடிக்கைத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு காத்திரமானதும் புலனாகக்கூடியதுமான நடவடிக்கைகளை மேற்கொண்டது.

**ஆசிய பசுபிக் இணைந்த குழு ஊடாக செயற்பாட்டுத் திட்டத்தினை நடைமுறைப்படுத்தல் தொடர்பில் இலங்கையின் செயல்திறனை நிதியியல் நடவடிக்கை செயலணிக்குழு மதிப்பிட்டது. 2018இன் சனவரி, மே மற்றும் செத்தெம்பர் மற்றும் 2019 சனவரி காலப்பகுதியில் இலங்கையால் மேற்கொள்ளப்பட்ட முன்னேற்றம் தொடர்பில் ஆசிய பசுபிக்கினை குழுவிற்கு நான்கு செயல்முறை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதுடன் நேருக்கு நேரான கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன.** நிதியியல் நடவடிக்கை செயலணிக்குழுவினால் வழங்கப்பட்ட செயற்றிட்டமானது இலங்கையால் பெருமளவில் திறக்கப்பட்டதுடன் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை காட்டியுள்ளது என ஆசிய பசுபிக் இணைக்குழு குறிப்பிட்டுள்ளது. இதன்பிரகாரம் 2019 நடுப்பகுதியிலிருந்து இலங்கை சாம்பல் பட்டியலிலிருந்து வெளிவரமுடியும் என எதிர்பார்க்கிறது.

## நிதியியல் துறை தொடர்பான சட்ட சீர்திருத்தங்கள்

**2018 காலப்பகுதியில் இலங்கை மத்திய வங்கியின் மீது உரித்தளிக்கப்பட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை அதிகாரங்களை வலுப்படுத்தி அதிகரிக்கும் நோக்குடன் ஏற்கனவே இருக்கும் சட்டங்களிற்கான திருத்தங்கள் மற்றும் புதிய சட்டங்கள் உள்ளடங்கலாக பல சட்ட மறுசீரமைப்புக்கள் 2018இல் மேற்கொள்ளப்பட்டன.** அவையாவன 1949இன் 58ஆம் இலக்க நாணய விதிச்சட்டம், 1988இன் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டம், 2011 இன் 42ஆம் இலக்க நிதித் தொழில் சட்டம், 1937இன் 7ஆம் இலக்க பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம் மற்றும் 2005இன் 28 ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சட்டம் என்பவற்றிற்கான திருத்தங்களை ஆரம்பிப்பதன் மூலம் மத்திய வங்கிக்கு ஏற்புடைய சட்ட கட்டமைப்பிற்கான பல மறுசீரமைப்புகளை மேற்கொண்டது. மேலும், படுகடனை மீளஅறவிடுதல் சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட துரிதமான நடைமுறைகளிலிருந்து பயன்பெறுவதற்கு இதன் ஊடாக

8

கடன் மீள் அறவீட்டு வினைத்திறனை அதிகரிப்பதற்கும் வங்கித்தொழில் சட்டத்தின் உரிமமளிக்கப்பட்ட அனைத்து சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளையும் இயலச்செய்வதற்கு 1990இன் 2ஆம் இலக்க படுகடன் அறவீட்டு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்திற்கான திருத்தங்கள் பிரேரிக்கப்பட்டுள்ளன. இதற்குமேலாக, ஆண்டுகாலப்பகுதியில் பொதுப்படுகடன் தொடர்பான செயற்படு முகாமைத்துவச் சட்டக் கட்டமைப்பினை வசதிப்படுத்தும் பொருட்டு 2018இன் 8ஆம் இலக்க செயற்படு முகாமைத்துவச் சட்டம் இயற்றப்பட்டது. நிதியியல் துறை ஒழுங்குமுறைப்படுத்துனர்களுக்கு மத்தியில் தகவல்களை பகிர்கின்ற சட்டமூலமொன்றின் வரைவினை ஆரம்பிப்பதற்கு சட்டவரைஞர் திணைக்களத்துடன் கூட்டிணைந்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன இது நாட்டில் உறுதியான மற்றும் உத்வேகமிக்க நிதியியல் முறைமையொன்றிற்கான தொடர்புடைய நியதிச்சட்ட குறிக்கோள்களைப் பின்பற்றுவதற்கான நிதியியல் துறை ஒழுங்குமுறைப்படுத்துனர்களின் இணைந்த முயற்சிகளின் மைற்கல்லொன்றாக இருக்கும்.

## பலவீனமான நிதி நிறுவனங்களின் தீர்மானங்களும் நடைமுறைப்படுத்தல்களும்

**சென்றல் இன்வெஸ்ட்மென்ட அன்ட் பினான்ஸ் பிஎல்சி மற்றும் ஸ்டான்டட் கிறடிற் பினான்ஸ் லிமிடெட் ஆகிய இடர்பாட்டு நிலையிலுள்ள இரு உறுப்பு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட உரிமத்தை முறையே 2018.03.05 மற்றும் 2018.07.25 இருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் இரத்து செய்வதற்கான ஒப்புதலை நாணயச் சபை வழங்கியது.** அதற்கிணங்க இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்ட ஒழுங்குவிதிகளின் பிரகாரம் 2018 ஓகத்து 27 இருந்து சென்றல் இன்வெஸ்ட்மன்ட அன்ட் பினான்ஸ் பிஎல்சி வைப்பாளர்களுக்கான இழப்பீட்டுக் கொடுப்பனவு ஆரம்பமானது. 2018.12.31இல் உள்ளவாறு செலுத்தப்பட்ட மொத்த இழப்பீட்டுக் கொடுப்பனவு ரூ.597.6 மில்லியனாக விளங்கியது.

**2018 இறுதியில் உள்ளவாறு, இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித்திட்டத்தின்கீழ் ஏறத்தாழ ரூ.53 பில்லியன் (கணக்காய்வு செய்யப்படாத) மொத்த நிதியத்தோடு மத்திய வங்கியால் உரிமம் வழங்கப்பட்ட 75உறுப்பு நிறுவனங்களைத் திட்டம் உள்ளடக்கியுள்ளது. உடனடியாக கடந்துசென்ற நிதியியல் ஆண்டின் முடிவில் மூலதனப் போதுமாந்தன்மை விகிதம் 14 சதவீதத்தினை அல்லது அதற்குமேல் பேணும் உரிமம்பெற்ற வங்கிகள், அனைத்துத் தகுதிவாய்ந்த வைப்புக்களின் மொத்தப் பெறுமதியில் ஆண்டிற்கு 0.10 சதவீத கட்டணம் ஒன்றைச் செலுத்துமாறு வேண்டப்படுகின்றனர்.** மேலும் ஏனைய வங்கிகளுக்கு வருடாந்தம் 0.125 சதவீத கட்டணம் அறவிடப்படுகிறது. உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கான பிரயோகிக்கத்தக்க கட்டணம் ஆண்டிற்கு 0.15 சதவீதமாகும். உறுப்பு நிறுவனங்களிடமிருந்தான வருடத்துக்கான கட்டணங்கள் மற்றும் தண்டப்பணங்கள் ரூ.8.8 பில்லியன்களாக அமைந்தது. 2018 சனவரி 01 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் வைப்பாளரொருவருக்கான காப்புறுதி உள்ளடக்கம் ஒரு நிறுவனமொன்றிற்கு ரூ.600,000 ஆகும்.

**தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களம் இலங்கை மத்திய வங்கியால் உரிமம் அளிக்கப்பட்ட நிதி நிறுவனங்களுக்கான அனைத்தையுமுள்ளடக்கிய தீர்மானக் கட்டமைப்பொன்றை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளது.**

## கொடுகடன் தகவல்

**கொடுகடன் அறிக்கைகளுக்கான கேள்வியானது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து 9.2 சதவீதம் என்கின்ற அதிகரிப்பினை 2018 காலப்பகுதியில் பதிவு செய்ததன் மூலம் கொடுகடன் தகவல் பணியகமானது ஓர் கணிசமான வளர்ச்சியினை தொடர்ச்சியாகப் பதிவு செய்துள்ளது.** 2018 காலப்பகுதியில் கொடுகடன் தகவல் பணியகமானது மொத்தமாக 9.9 மில்லியன் கொடுகடன் அறிக்கைகளை தொழில்துறைக்கு விநியோகித்ததுடன் அவற்றுள் 96 சதவீதம் நுகர்வோர் கொடுகடன் அறிக்கைகளாக காணப்பட்டது. 2017 உடன் ஒப்பிடுமிடத்து வர்த்தக கடன் வசதிகளுக்கான கேள்வி 12 சதவீதத்தால் அதிகரித்தது.

**சுயவிசாரணைக் கொடுகடன் அறிக்கைகளுக்கான கேள்வி 2018இல் தொடர்ச்சியாக அதிகரித்தது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து தகவல் பணியகத்திலிருந்து தங்களுடைய கொடுகடன் அறிக்கைகளை கோருகின்ற வாடிக்கையாளர்களது எண்ணிக்கை அதிகரித்தது.** சுயவிசாரணைக் கொடுகடன் அறிக்கைகளிற்குள் உள்ளடக்கியுள்ள தகவல்களுக்கு எதிரான முறைப்பாடுகளின் எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் குறைவடைந்துள்ளது. பணியகமானது தகவல் சமர்ப்பிப்பு தரங்களினை உயர்த்துதல் மற்றும் தகவல்களின் தரங்களினை மேம்படுத்துதல் போன்றவற்றிக்காக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. பணியகத்தின் தரவுத் தளமானது மாதாந்தம் 11 மில்லியனுக்கும் அதிகமான கொடுகடன் வசதிகளின் தகவல்களை பெற்று வருகின்றது.

**கொடுகடன் தகவல் பணியகத்தால் பேணப்பட்டு வருகின்ற கொடுகடன் தகவல் முறைமை, தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு மற்றும் பணியக பிரயோக முறைமை என்பவற்றின் மூலம் கொடுகடன் தகவல் சேவைகளுக்கான அதிகரித்துவரும் கேள்வியினை நிவர்த்திசெய்ய இயலுகின்றது.** எவ்வாறாயினும் அதிகரித்துள்ள இயலுமை மற்றும் விரைவுத்தன்மைக்கேற்ப கொடுகடன் தகவல் சேவைகளுக்கான எதிர்கால கேள்விகள் மற்றும் வளர்ந்துவரும் சந்தைத் தேவைகள் என்பவற்றை நிவர்த்தி செய்யும் பொருட்டு கொடுகடன் தகவல் பணியகமானது அதனுடைய வியாபார மாதிரியை மீள்நிர்ணயிக்கும் பொருட்டு இவ்வுட்கட்டமைப்புக்களை மீள புதுப்பிக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளது. இது தொடர்பில்

பணியகத்தின் அடுத்த அபிவிருத்தி முன்னெடுப்புக்களை முன்கொண்டு செல்லும் பொருட்டு 2018 காலப்பகுதியில் புதிய தொழில்நுட்ப பங்காளரை தெரிவு செய்ய முடிந்துள்ளது. அனைத்து அக்கறையுடைய தரப்பினருக்கும் செயற்பாட்டு வினைத்திறனையும் சேவைகளையும் வழங்கும் அதேநேரம் புதிய அபிவிருத்தி வழிகாட்டலுக்கு இணங்க சேகரிக்கப்படும் தகவல்களுக்கு அதிக பெறுமதியினை சேர்க்க கொடு கடன் தகவல் பணியாகத்தால் இயலும். பணியகத்தின் அபிவிருத்தி தேவைகளை பூர்த்தி செய்யும் பொருட்டு கொடுகடன் தகவல் பணியகமானது தற்போது ஐந்து வருட அபிவிருத்தி வழிகாட்டல் திட்டத்தினை உருவாக்கியுள்ளது.

**2018 காலப்பகுதியில் தகவல் பணியாக்கத்தால் பேணப்படும் ஓர் இலத்திரனியல் பதிவேடாகிய பிணையங்கள் உரிமைப்பதிவு செயற்பாடுகள் தொடர்வதற்கு முறைமையில் தற்போது செயற்பட்டுக்கொண்டிருக்கிற அங்கத்துவ நிறுவனங்களின் அறிக்கையிடப்பட்ட 13,713 கொடுக்கல்வாங்கல்களை பதிவு செய்துள்ளது.** பிணையங்கள் பரிமாற்று அறிக்கையிடும் சட்டத்தில் காணப்படுகின்ற சட்ட வரையறைகள் காரணமாக தொடக்கத்திலிருந்து பதிவுச் செயற்பாடுகள் எதிர்பார்க்கப்பட்டதைவிட குறைவான மட்டத்திலேயே காணப்படுகின்றது. எவ்வாறாயினும் கொடுகடன் தகவல் பணியகத்தின் ஏனைய அக்கறையுடைய தரப்பினர்களுடன் இணைந்து பாதுகாக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் சட்டக் கட்டமைப்புகளை பலப்படுத்தும் செயற்பாட்டில் ஈடுபட்டு வருகிறது. ஆண்டுக் காலப்பகுதியில் கொடுகடன் தகவல் பணியகமானது உலக வங்கியின் வியாபார கணக்கெடுப்பு நிகழ்ச்சித்திட்டத்தை அமைச்சரவையால் உருவாக்கப்பட்ட “கொடுகடன்கள் பெற்றுக்கொள்வோம்” செயலணியில் பங்குபற்றியது.

அட்டவணை 8.26

வங்கிகள், உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் விசேட குத்தகைக்குவிடும் கம்பனிகள் மீது அண்மைக்காலத்தில் இலங்கை மத்திய வங்கியால் எடுக்கப்பட்ட முக்கிய முன்மதியுடைய அளவீடுகள்

| திகதி | முன்மதியுடைய அளவீடுகள் |
|---|---|
| 2015 சனவரி 01 | இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டத்தின் கீழ் ஒரு நிறுவனத்தின் ஒரு வைப்பாளருக்கான வைப்புக் காப்புறுதி உள்ளடக்கமானது ரூ.200,000 இலிருந்து ரூ.300,000 இற்கு அதிகரிக்கப்பட்டது. |
| 2015 மாச்சு 31 | 2015 ஏப்பிறல் 01 இலிருந்து பாசல் III திரவத்தன்மை நியமங்களின் கீழ் திரவத்தன்மைக் காப்பீடு விகிதத்தினை நடைமுறைப்படுத்தவதற்கு வழிகாட்டல்கள் உரிமம்பெற்ற வங்கிகளிற்கு வழங்கப்பட்டன. |
| 2015 செத்தெம்பர் 14 | 2015 செத்தெம்பர் 15 இலிருந்து நடைமுறைக்குவரும் வகையில், உந்து ஊர்திகளின் கொள்வனவு செய்தல் அல்லது பாவனை நோக்கத்திற்காக வழங்கப்பட்ட முற்பணங்கள் மற்றும் கடன்கள் மீதான அதிகூடிய கடன் பெறுமதியில் 70 சதவீத விகிதத்திற்கு பேணுவதற்கு உரிமம்பெற்ற வங்கிகள், உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகள் மற்றும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக் கம்பனிகளுக்கு பணிப்புரைகள் வழங்கப்பட்டன. |
| 2015 ஒத்தோபர் 29 | அதிகூடிய கடன் பெறுமதியில் 70 சதவீதத்திற்கு ஏற்புடைய 2015 திசெம்பர் 01 இலிருந்து நிர்ணயமாக நடைமுறைக்குவரும் என்பதனை அறிவிப்பதற்கு உரிமம்பெற்ற வங்கிகள், உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகள் மற்றும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக் கம்பனிகள் போன்றவற்றிற்கு பணிப்புரைகள் வழங்கப்பட்டன. |
| 2015 ஒத்தோபர் 30 | உந்து ஊர்திகள் இறக்குமதிக்கான வணிக வங்கிகளில் திறக்கப்பட்ட நாணயக் கடிதத்திற்கெதிராக 100 சதவீதம் குறைந்தபட்ச காசு எல்லைத் தேவைப்பாடு 2015 திசெம்பர் 01 வரைக்கும் அமுல்படுத்தப்பட்டது. |
| 2016 சனவரி 18 | உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் புதிய கிளைகள் மற்றும் தன்னியக்கக்கூற்றுப் பொறிகளை ஆரம்பித்தல், கிளைகள் மற்றும் பணிநிலையங்களை மூடிவிடுதல் மற்றும் வேறு இடங்களில் அமைத்தல் என்பன தொடர்பில் ஏற்கனவே உள்ள கொள்கைகளையும் நடைமுறைகளையும் வலுப்படுத்தல் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்துவதற்கான பணிப்புரைகள் வழங்கப்பட்டன. |
| 2016 ஒத்தோபர் 28 | உரிமமளிக்கபட்ட நிதிக் கம்பனிகளால் வழங்கப்படக்கூடிய வைப்புக்கள் மற்றும் படுகடன் சாதனங்கள் மீதான உயர் வட்டிவீதங்கள் தொடர்பான பணிப்புரை திருத்தியமைக்கப்பட்டது. |
| 2016 திசெம்பர் 29 | உரிமம்பெற்ற வங்கிகள் மொத்த இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்கள் தொடர்பான குறைந்தளவு மூலதன விகிதங்கள் மற்றும் தாங்கியிருப்புகளைப் பேணுவதான பாசல் III தேவைப்பாட்டிற்காக 2017 யூலை 01 இலிருந்து ஆரம்பிக்கும் முகமாக பணிப்புரைகள் வெளியிடப்பட்டன. |
| 2017 சனவரி 13 | 2017 சனவரி 16 இலிருந்து ஊர்திகளின் கொள்வனவு மற்றும் பயன்பாட்டு நோக்கத்திற்காக உரிமம்பெற்ற வங்கிகளினால் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளிற்கான கடன் பெறுமதி விகிதத்தை அறிவிக்கும் முகமாக பணிப்புரைகள் உரிமம்பெற்ற வங்கிகளிற்கு வெளியிடப்பட்டன. |
| 2017 சனவரி 13 | 2017இற்கான பாதீட்டு பிரேரனைகளுக்கு இணங்க வந்து ஊர்திகளுக்கான கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கு கடன் தொழிலில் அனுமதியளிக்கப்பட்ட நிதிக்கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளுக்கு பணிப்புரைகள் வழங்கப்பட்டன. |

8

| | |
|---|---|
| 2017 பெப்புருவரி 23 | உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளிற்கான குறைந்தளவு மைய மூலதனத்தினை 2021 ஆரம்பமளவில் ரூ.2.5 பில்லியனுக்கு படிப்படியான அடிப்படையில் அதிகரிப்பதற்கான பணிப்புரை வெளியிடப்பட்டது. |
| 2017 மாச்சு 22 | 1998 செத்தெம்பர் 07ஆம் நாள் விடுவிக்கப்பட்ட அடகுபிடித்தல் நிபந்தனைகளைத் திருத்துகின்ற விதத்தில் வர்த்தக வங்கிகளிற்கு நிர்ணயமொன்று விடுக்கப்பட்டது. |
| 2017 ஒத்தோபர் 26 | உரிமம்பெற்ற வங்கிகளிற்கான குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாட்டு அதிகரிப்பு மீதான பணிப்புரைகள் விடுவிக்கப்பட்டன. |
| 2017 நவெம்பர் 29 | 2018 சனவரி 01 இலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் உரிமம்பெற்ற வங்கிகளிற்கு நிதியியல் பெறுதிகள் தொடர்பான புதிய கொள்கைகள் மீதான வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் வழங்கப்பட்டன. |
| 2017 திசெம்பர் 12 | 2018 சனவரி 01 இலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் உரிமம்பெற்ற வங்கிகளிற்கு வெளிநாட்டு நாணயக் கடன் பெறுகை தொடர்பாக வங்கியியல் சட்டப் பணிப்புரைகள் வழங்கப்பட்டன. |
| 2018 சனவரி 05 | இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு வைப்பாளர்களிற்கும் ஒவ்வொரு நிறுவனத்திற்குமான வைப்புக் காப்புறுதி ரூ 300.000 இலிருந்து ரூ. 600.000 ஆக அதிகரிக்கப்பட்டது. |
| 2018 சனவரி 16 | உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளிற்கு வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்பு தொடர்பாக நிதியியல் வியாபாரச் சட்டம் 2018இன் இல 01 இற்கமைவாக பணிப்புரை வழங்கப்பட்டது. |
| 2018 பெப்புருவரி 08 | 2018 சனவரி 01இலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் முதற்பதிவின் பின்னர் ஒரு வருடத்திற்கும் குறைவாக இலங்கையில் பயன்படுத்தப்பட்ட பதிவு செய்யப்பட்ட ஊர்திகள், மின்சார, கலப்பு மற்றும் ஏனைய பதிவு செய்யப்படாத ஊர்திகள் தொடர்பிலான கொடுகடன் வசதிகளுக்குப் பொருந்தத்தக்க கடனுக்கான அதி கூடிய கடன் பெறுமதி விகிதம் 70% தொடக்கம் 90% வீச்சில் குறித்துரைத்து அனைத்து உரிமம் பெற்ற வங்கிகள், அனைத்து உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்கு விடும் கம்பனிகளுக்கும் ஆக பணிப்புரைகள் விடுக்கப்பட்டன. |
| 2018 மாச்சு 13 | 2018 ஒத்தோபர் 01ஆம் திகதியில் அனைத்து உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகளும் கடன் மதிப்பீடு பெறப்படுதல் தொடர்பாக வழிமுறைகள் வழங்கப்பட்டன. |
| 2018 யூன் 06 | புதிய மூலதனப் போதுமாந்தன்மைக் கட்டமைப்பானது, பாசல் உடன்படிக்கையில் கிடைக்கத்தக்கதாகவுள்ள அடிப்படை அணுகுமுறையின் கீழ் கொடுகடன் மற்றும் தொழிற்பாட்டு இடர்நேர்வுகள் என்பனவற்றை உள்ளடக்கிய கூடியளவிற்கு இடர்நேர்வு உணர்திறனில் கவனம் செலுத்தும் மூலதனப் போதுமாந்தன்மை விகிதத்தினைப் பேணுவதற்கு உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளிற்கும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கும் தேவைப்படுத்தப்பட்டது. |
| 2018 ஓகத்து 21 | உரிமம் பெற்ற வங்கிகளுக்கு பெறுதிகள் பரிமாற்றலின் இடர் முகாமைத்துவத்தை மேலும் வலுப்படுத்துவதற்கு நிதியியல் பெறுதிகள் தொடர்பில் பணிப்புரைகள் வழங்கப்பட்டுள்ளன. |
| 2018 செத்தெம்பர் 28 | முதலாவது பதிவின் பின்னர் ஓராண்டிற்கும் குறைவாக இலங்கையில் பயன்படுத்தப்பட்டிருக்கும் பதிவுசெய்யப்பட்ட மற்றும் பதிவுசெய்யப்படாத கலப்பின ஊர்திகளின் கொள்வனவு நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதத்தினை 50 சதவீதத்திற்குக் குறைப்பதற்கு உரிமம் பெற்ற வங்கிகளுக்கு பணிப்புரைகள் வழங்கப்பட்டுள்ளன. |
| 2018 ஒத்தோபர் 01 | முதலாவது பதிவின் பின்னர் ஓராண்டிற்கும் குறைவாக இலங்கையில் பயன்படுத்தப்பட்டிருக்கும் பதிவுசெய்யப்பட்ட மற்றும் பதிவுசெய்யப்படாத கலப்பின ஊர்திகளின் கொள்வனவு நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதத்தினை 50 சதவீதத்திற்குக் குறைப்பதற்கு உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளுக்கும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளுக்கும் பணிப்புரைகள் வழங்கப்பட்டுள்ளன. |
| 2018 ஒத்தோபர் 11 | இறக்குமதிகளையும் அதன் மூலம் செலாவணி விகிதத்தின் மீது ஏற்படும் மோசமான தாக்கத்தினையம் கட்டுப்படுத்தும் நோக்குடன் ஏற்பு நியதிகளுக்கெதிரான ஆவணத்தின் மீதான இறக்குமதிகளுக்கெதிராக அத்தியாவசியமல்லாத நுகர்வுப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு 100 சதவீத காசு அளவுத் தேவைப்பாட்டினை விதிப்பது பற்றி உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு சுற்றறிக்கையொன்று விடுக்கப்பட்டது. |
| 2018 நவெம்பர் 21 | பாசல் III திரவத்தன்மை நியமங்களின் கீழ், தேறிய உறுதியடைந்த நிதியிடல் விகிதம் தொடர்பில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிளுக்குப் பணிப்புரைகள் வழங்கப்பட்டுள்ளன. |
| 2018 நவெம்பர் 30 | உரிமம் பெற்ற வங்கிகளின் வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகள் மீதான புதிய கொள்கையொன்றிற்கு பணிப்புரைகள் வழங்கப்பட்டன. |
| 2018 திசெம்பர் 03 | வாடிக்கையாளர்கள் அளவுக்கதிகமான வட்டி வீதங்களினால் பாதிக்கப்படுவதிலிருந்து பாதுகாக்கும் நோக்குடன் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்காக நுண்பாக நிதிக் கடன்களின் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதங்களின் மீது பணிப்புரையொன்று வழங்கப்பட்டுள்ளது. |
| 2018 திசெம்பர் 28 | பாசல் III இன் கீழான முடுக்கி விகிதம் தொடர்பில் 2019 சனவரி 01ஆம் நாள் தொடக்கம் உரிமம் பெற்ற வங்கிகள் ஏற்புடைத்தானதாகவிருக்கக்கூடிய குறைந்தபட்சம் 3 சதவீதம் கொண்ட முடுக்கி விகிதத்தினைப் பேண வேண்டுமென உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளைக் கேட்டுக் கொள்கின்ற பணிப்புரைகள் வழங்கப்பட்டன. |
| 2018 திசெம்பர் 31 | நிதியியல் சாதனங்கள் மீது இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9 இனைப் பின்பற்றுவது தொடர்பில் உரிமம் பெற்ற வங்கிளுக்கு வழிகாட்டல்கள் தொடர்பில் சுற்றறிக்கை விடுவிக்கப்பட்டது. |